௧

முகவுரை

சிவபக்த சிரோன்மணிகளான [illegible]க்கு அன்ய தேவதா பாத்வப்ராந்தியை [illegible]யர்களுக்கு மனமகிழ்ச்சியைத் தருவதாகிய [illegible]மியம் என்னும் அரிய நூல் நாராயணமூர்த்தியின் அவதாரரான ஸ்ரீஸுதர்சனாசாரியசுவாமிகளென்னும் ஹரதத்தாசாரிய சுவாமிகளால் ஆரியபாஷையில் பண்டைக்காலே அமைக்கப்பட்டுளது. இதனைத் தமிழில் மொழிபெயர்ப்புடன் அச்சிட்டு வெளியிடுவதாகப் பலர் பிரசுரஞ்செய்திருந்தனர். பிரசுரமாத்திரமேயன்றி நூலை வெளியிட்டாரில்லை.

பொன்னைச்சொல் தவறுதவரும், ஸ்டார் ஆப் இந்தியா என்னும் அச்சுயந்திரசாலைக்கும், பிரபஞ்சமித்திரனுக்கும் தலைவருமாகிய ம-௱-௱-ஸ்ரீ, தா - குப்புசாமிநாயகர் அவர்கள் என்னை இந்நூலைத் தமிழிலாக்குமாறு தூண்டினமையால், நான் இது நமது சைவநண்பர்களுக்குற்சாகத்தையும், நமக்குப் பதிபுண்ணியத்தையும், நாயகர் அவர்கட்குக் கீர்த்தியையும் விளைப்பது என்று துணிந்து சிவபராக்கிரம மெழுதி முடித்ததற்குப் பின்பு இந்நூலை எழுதி முடித்தேன்.

இது ஒரு அரிய பெரிய நூலாதலால், வேண்டிய இடங்களில் பிரமாணங்களை [illegible]

௧

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

DHARMAPURA ADHINAM LIBRARY
தருமபுர ஆதீனம்

உ

முகவுரை

சிவபத்த சிரோன்மணிகளான மேலோர்ட் சாதகர்களுக்கு அன்ய தேவதா பரத்வப்ராந்தியை ஒழிப்பதும், ஸாத்யர்களுக்கு மனமகிழ்ச்சியைத் தருவதுமான ஹரிஹரதாரதம்மியம் என்னும் அரியநூல் நாராயணமூர்த்தியின் அவதாரரான ஸ்ரீஸுதர்சனசாரியசுவாமிகளென்னும் ஹரதத்தாசாரிய சுவாமிகளால் ஆரியபாஷையில் பண்டேதானே அமைக்கப்பட்டுளது. இதனைத் தமிழில் மொழிபெயர்ப்புடன் அச்சிட்டு வெளியிடுவதாகப் பலர் பிரசுரஞ்செய்திருந்தனர். பிரசுரமாத்திரமேயன்றி நூலை வெளியிட்டாரில்லை.

சொன்னசொல் தவறுதவரும், ஸ்டார் ஆப் இந்தியா என்னும் அச்சுயந்திரசாலைக்கும்,பிரபஞ்சமித்திரனுக்கும் தலைவரும் ஆகிய ம-ா-ா-ஸ்ரீ, தா - குப்புசாமிநாய்கர் அவர்கள் என்னை இந்நூலைத் தமிழிலாக்குமாறு தூண்டினமையால்; நான் இது நமது சைவநண்பர்களுக்குற்சாகத்தையும், நமக்குப் பதிபுண்ணியத்தையும், நாயகர் அவர்கட்கு கீர்த்தியையும் விளைப்பது என்று துணிந்து சிவபராக்கிரம மெழுதி முடித்ததற்குப் பின்பு இந்நூலை எழுதி முடித்தேன்.

இது ஒரு அரிய பெரிய நூலாதலால், வேண்டிய இடங்களில் பிரமாணங்களுடனும், பதம்-பொழிப்பு-விதப்பு-தாத்பரி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

யம்-தாரதம்மியம் - மொழிபெயர்ப்பு என்னும் பகுப்புகளு-னும் இயற்றியிருக்கின்றேன்; இந்நூலாசிரியரது சரிதமுணர்ந்தாலன்றி, இந்நூலின் மகிமை நன்கு விளங்காதென்று கருதி நாராயுணரான கிரந்தகர்த்தாவின் அவதார சரித்திரத்தையும், சிவரகஸ்யத்திலிருந்து எடுத்து இதிலெழுதியிருக்கின்றேன்.

சரிதம் தெளிவாய் விளங்கும்வண்ணம் எட்டுப்படங்களையும் அமைப்பித்து இந்நூலை அச்சிடுவித்திருக்கின்றேன். இந்நூல் வேண்டியவர்கள் மேற்குறித்த நாயகரவர்கட்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்,
தத்புருஷசிவன்
என்று தீக்ஷாநாமம்பெற்ற
ஸ்ரீ ம-தி-பா-நுகவி.

908

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

DHARMAPURA ADHINAM LIBRARY

ஸ்ரீ ஹரதத்தாசாரியசுவாமிகள்
சரித்திரம்

இவரது சரிதத்தைச் சிவரகசியமானது இவ்வண்ணமுரைக்கின்றது.

“முன்னொருகால் பிருகுமுனிவர் விஷ்ணுவைச் சபித்தமையால், அவர் மனம்நொந்து பூமியிலே அநேக அவதாரஞ் செய்தாரென்று உபமன்னியமுனிவன் சொல்லத் தொடங்கும்போது, முனிவர்கள் அரி பிருகுசாபம் அடைந்தபின்னர், மந்தரமலையை அடைந்தாரென்று கேள்வியுற்றோம்; அதனையும் எங்களுக்குக் கூறியருளல் வேண்டும் என்று கேட்ப, உபமன்னியு இவ்வாறு கூறுகின்றார். பிருகுமுனிவர் சபித்தபோது திருமால் நடுநடுங்கி உருத்திரரும், மகேசுவரரும், கணங்கள் புடைசூழப்பெற்றவரும், புகல் அடைந்தோரைக் காப்பவருமாகிய அம்பிகாசமேத வரனைத் தமது இருதயகமலத்திலே சிந்தித்து, கருடன்மீதிவர்ந்து தேவர்கள் வாசஞ்செய்வதாயும் மனோகரமான குகைகளையுடையதும், கின்னரர்கள் உறையும் வனங்களை யுடையதும், ஒலிக்கின்ற பற்பல அருவிகளையுடையதும், பற்பல கணங்களுக்கு உறையுளாகிய உத்தியானங்களை யுடையதும், சப்திக்கின்ற பற்பல பறவைகளையுடையதும், பலவகை விருக்ஷம் கொடி செடி என்பவற்றை அளாவிய பரிமள

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வாயுவையுடையதும், மனதிற்கு இனிமையும் இன்பமும் விளைப்பனவாகிய பாரிஜாதங்களையுடையதும், பற்பல அரதனக்குவியல்களையுடையதும், சுவர்ணப்பிரகார தோரணங்களையுடையதும், ஸ்ரீகைலாசம்போல இலங்கும் அநேகாயிர பிராசாதங்களையுடையதுமாகிய மந்தரமலையை அடைந்து, அங்கே சுவர்ணக் குகையொன்றிலே சடையுடையராயும், முண்டிதராயும், மேகலையுடையராயும், பஸ்மநிஷ்டராயும் அமர்ந்து, அக்கினியை ஓம்பி, தினந்தோறும் திரிகாலங்களிலும் ஸ்நானஞ் செய்து, கிருச்சிரசாந்திராயண விரதாதிகளை அநுஷ்டித்துத் தேகத்தைவாட்டியும், ஆயிரம் தேவவருஷம் வாயுபக்ஷணஞ் செய்துந் தவம் இயற்றுவாராயினர்.

இவ்வாறு இருக்குங்கால், சிவபிரானது வாயிற்காவலாளரும், கபிமுகத்துக்குச் சமானமாகிய பிரகாசத்தையுடையவரும், அயோநிசரும், தபசிலே சித்தியுடையவரும், சாலங்காயனகோத்திரருமாகிய நந்தியெம்பெருமான் கொடுந்தபசு செய்பவராகிய விஷ்ணுவைப்பார்த்து வந்து, சிவபிரானை நமஸ்கரித்து, சுவாமி! உமது ஸ்தானத்திலே விஷ்ணுவானவர் "நான் என்செய்வேன்! என்று மனசிலே மெலிவுகொண்டு எப்பொழுதும் கவற்சியோடு அநேக கோடி வருஷங்களாக உக்கிரமாகிய தபசு செய்துகொண்டிருக்கின்றார்" என்று விஞ்ஞாபனஞ் செய்தார். இதனைச் சிவபெருமான் கேட்டு முகமலர்ச்சிகொண்டு உமாசமேதராய், இடபாரூடராய், பிரமதகணங்கள் புடைசூழப் பெற்றோராய், பிரமாதி தேவர்கள் துதிப்ப, தேவர்களெல்லாம் வணங்க, விஷ்ணு தபசு செய்யும் ஸ்தானத்துக்கு எழுந்தருளி, அவ்விஷ்ணுவை நோக்கி, "குழந்தையே! உனது தபசுகண்டு பிரீதிகொண்டு உனக்கு வரங்கொடுக்குமாறு வந்தேம், எமது பக்தருக்குத் துரோகஞ் செய்தவை சந்தேகமில்லாது எமக்குச் செய்ததுபோலாயிற்று. இப்போது நீ செய்த தபசினாலே எமக்குச்செய்த துரோகம் நீங்கிப்போயிற்று. எமது அன்பராகிய பிருகுவுக்குச் செய்த துரோகம் இருந்தபடியே இருப்பதாயிற்று. நீ தபஞ்செய்து அத்துரோகத்தை நீக்குதற்குரிய ஸ்தலத்தை இப்போது சொல்கின்றோம் கேள்: பூலோகத்திலே காவேரிக்கு வடகரையிலே கஞ்சாபுரம் எனப் பெயரிய பரமபாவனமாகிய க்ஷேத்திரம் ஒன்றுளது. நீ அங்கேயுள்ள கஞ்சாபுரீசுவரரை உத்தேசித்து நெடுங்காலந் தபசு செய்வாயேல், உன் சாபம் நீங்கிவிடும் என்று திருவாய் மலர்ந்தருளி அந்தர்த்தானமாயினர்.

விஷ்ணுவானவர் உடனே சிவபிரானை வணங்கிக்கொண்டு கஞ்சாபுரத்தை மகிழ்வினோடு அடைந்து அப்பிருகு முனிவரிட்ட சாபம் நிவாரணமாகும்பொருட்டு, திரிகாலமும் கஞ்சாபுரீசுவரரைப் பூசை செய்து, பஞ்சயஞ்ஞங்களையுஞ் செய்துகொண்டிருந்தார். (அதுவன்றி) திரிகாலமும் ஸ்நானஞ்செய்து வற்கலையை உடுத்தவராயும், சடாதரராயும், விபூதியை உத்தூளனமாகவும் திரிபுண்டரமாகவுந் தரித்தவராயும், ருத்திராக்ஷமாலை அணிந்தவராயும், பஞ்சாக்ஷரசெபஞ் செய்பவராயும், கந்தமூலபலங்களையும், ஜீர்ணபர்ணத்தையும், சாகைகளையும், சலத்தையும், வாயுமுதலியவற்றையும் பக்ஷணஞ் செய்பவராயும், ஜிதேந்திரியராயும், போஜனஞ் செய்யாதவராயும், சூரியனைப்பார்த்த பார்வையுடையராய்க் கிரீஷ்மகாலத்திலே பஞ்சாக்கினிமத்தியிலே நிற்பவராயும், மழைக்காலத்திலே வெளியிலே நிற்பவராயும், ஏமந்தகாலத்திலே காவேரிநதியிலே கழுத்தளவினதாகிய சலத்திலே நிற்பவராயுங்கொண்டு, கைகள் இரண்டையும் நிராலம்பமாக உயர்த்தி, உச்சுவாசமின்றிக் கஞ்சாபுரீசுவரருடைய திருவருளைப் பெறுமாறு மகா தபசு செய்வாராயினர். இவ்வாறு இவர் உக்கிரதபசு செய்யுங்கால் நெடுங்காலஞ் சென்றுபோய்விட்டது. அவருடைய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிரமரந்திரத்தினின்றும் உண்டாகிய அக்கினியானது மூன்று லோகத்தையுந் தகிக்கத் தொடங்கிவிட்டது. தொடங்கவே, மூவுலகத்துமுள்ள தேவர் அசுரர் மனிதராயினோரெல்லாம் அவ்வக்கினிச் சுவாலையினாலே வருந்திக் கவலையுற்றார். அப்போது தேவர்களெல்லாம் ஒருங்குகூடி பிரமனை அடைந்து பூசித்துத் துதித்து வணங்கித் தங்கள் விருத்தாந்தத்தை விண்ணப்பித்தார்கள். அப்போது பிரமன் தேவர்களை அழைத்துக்கொண்டு ஸ்ரீகைலாசத்தை அடைந்து, சிவபிரானைப் பன்முறையும் நமஸ்கரித்து, விஷ்ணுவுடைய தபாக்கினிச் சுவாலையினாலே உலகம் அனைத்தும் வருந்துகின்றது. "சுவாமீ! எங்களை ரக்ஷிக்க" என்று வேண்டினான். அதனைக் கேட்டுக்கொண்டு அக்கினிதுல்லியராகிய சிவபிரான் இடபாரூடராய்ப் பிரமாதி தேவர்கள் சூழ்ந்து செல்ல விஷ்ணு தவஞ்செய்யுந் தானத்தை அடைந்து "விஷ்ணுவே! எழுந்திரு, உன்தபசினாலே பிரீதிகொண்டோம், உனக்கு வேண்டியவரத்தைக் கேள்" என்று கம்பீரமாகிய திருவாக்கினாலே உரைத்தருளினார். அது கேட்டு விஷ்ணு எழுந்து நின்று, சிவபிரானை நமஸ்கரித்து, சிரேஷ்டப் பிரமாணமாயுள்ள சுருதிகளை மூலமாயுடைய வாக்கியங்களினாலே ஸ்தோத்திரஞ் செய்து, உரோமாஞ்சங் கொண்டு, ஆனந்தக் கண்ணீர் வார, வாக்குத் தழுதழுப்ப, பூமியிலே விழுந்து, சுவாமீ! யான் இந்திரனுடைய சொல்லுக்கிசைந்து பிருகுமுனிவருடைய பத்தினியாரை வதைத்து விட்டேன். அப்பத்தினியார் வதை செய்யப்பட்டமையை உணர்ந்த பிருகுமுனிவரானவர் கோபங்கொண்டு மற்ச, வராக, கூர்ம முதலிய அநேக இழியோனிகளிலே நான்போய்ப் பிறக்குமாறும், அநேக சென்மங்களிலே ஸ்திரீவியோகம் எய்துமாறும் என்னைச் சபித்துவிட்டார். சுவாமீ! அந்தப்பிருகுமுனிவரிட்ட சாபத்தினாலே மிகவும் கஷ்டம் அடைந்துவிட்டேன். இதுவன்றி,

பிரபுவே! என்னை உபாசிக்கும் ஏகதண்டியுந் திரிதண்டியுமாம் இரு சந்நியாசிகளைத் தரிசித்தவர்களும் பாஷண்டிகளாய்ப் போமாறு சபித்துவிட்டார். அந்தச் சந்நியாசிகளுக்குச் சயனம் ஆசனம் வஸ்திரமுதலிய உதவி ஆதரிக்கின்றவர்களையும் மகாரௌரவாதி நரகங்களிலே போமாறு சபித்தார். பஞ்சபூதங்கள் அழியுங்காலவரையும் நான் பத்துவகைப்படும் கொடிய நரகவேதனை அடையுமாறு கோபாவேசத்தோடு அதட்டிச் சபித்துவிட்டார். ஆதலால் யான் வேறுகதி ஒன்றும் காணேன். உமது பாதாரவிந்தங்களையே சரணென்று அடைந்தேன். இன்று என்னை இந்தத் துன்பசாகரத்தினின்று கரையேற்றியருளல் வேண்டும் என்று விஞ்ஞாபிக்கும்போது, சிவபிரான் அவரை அணைத்து மீட்டும் மீட்டும் உச்சிமோந்து அஞ்சற்க! அஞ்சற்க!! எனது பத்தனுடைய சாபத்தைக் கடத்தல் யாவர்க்கும் அரிது. எம்மாலும் மாற்றுதல் அரிது, அங்ஙனமாயினும்; எமது அருளினால் உனக்கு அநேக சென்மம் எய்தாதொழிக. மற்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், தன்வந்திரி, மோகினி, நாரதர், பிருது, சனற்குமாரர், விராட்டு என்னும் இப்பத்து அவதாரமும் உனக்கு ஆவிர்ப்பாவமாகுக. பார்க்கவர், ராமர், பரசுராமர், கிருஷ்ணர், வியாசர், பலபத்திரர், கபிலர், நரநாராயணர், யஞ்ஞர், வாமனர், தத்தாத்திரேயர், விருஷபர், புத்தர், கற்கி, சுதர்சனர் என்னும் இப்பதினைந்து அவதாரமும் உனக்கு யோனிசமாகுக. அம்முனிவரிட்ட சாபம் உனக்குத் தடையின்றி நிகழும் என்று கூறிப் பின்னரும் சொல்லுகிறார். எமது ஆச்சிரமத்துள்ள சாதுக்களை வெறுப்பவர்கள் கீழோராவர். எமது பத்தர்களைப் பாதுகாப்பவர்கள் உனக்கும் நிஷ்களங்கமாக அன்பர்களாவார்கள். அப்படிப்பட்டவர்களுடனே பேசுந்தோஷமும் மனிதருக்குக் கொடிய பாபத்தை விளைப்பதாகும். சிவாகமங்களையுணர்ந்த பிரமசாரி, கிருகஸ்தன், வானப்பிர

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸ்தன், சந்நியாசி என்னும் நான்கு ஆச்சிரமத்தாரையும், பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என்னும் நான்கு வருணத்தாரையும் துவேஷிக்கின்றவர்கள் நிச்சயமாகவே பாஷண்டராவார்கள். அப்படிப்பட்டவர்கள்பொருட்டுக் கொடுக்கும் கொடையும், செய்யும் ஓமமும், செபமும், தியானமும, ஸ்நானமும், பூசையுமாகிய வெல்லாம் சாம்பலிலே இட்ட ஆகுதிபோலே நிஷ்பலமாய்ப்போம். எமது ஆச்சிரமத்துள்ளவர்களை நிந்திப்பவர் எம்மையே நிந்திப்பவராகின்றார். நம்முடைய ஆச்சிரமத்துள்ளவர்களைத் தோத்திரஞ் செய்பவர் நம்மையே தோத்திரஞ் செய்பவராவார்கள் என்றார்.

இவற்றைக் கேட்ட திருமால், சுவாமீ! நால்வகை ஆச்சிரமங்களிலும் உமது பக்தர்கள் உளர் என்று திருவாய் மலர்ந்தருளினீரன்றோ, அவர்கள் இலக்ஷணம் என்னை? பெருமை என்னை. அவை இவை என்று எனதீ பக்தர்கள் அறிந்து கோடற்பொருட்டு எனது பரமநாதரும், பரமாசாரியருமாகிய நீவிரே சொல்லியருளல்வேண்டுமென்று வேண்டினர். அப்போது சிவபிரான் நான்கு ஆச்சிரமத்துக்குந் தனித்தனி இலக்ஷணம் வெவ்வேறும். இந்நான்கு ஆச்சிரமத்துக்கும் தனித்தனி பிரவர்த்தகர்கள் ததீசி, கௌதமர், அகஸ்தியர், துருவாசர் என்னும் நான்கு இருடிகளேயாவர். பிரமசரியத்தை நிறுத்தினர் ததீசி முனிவர். கிருகஸ்தாச்சிரமத்தை நிறுத்தினர் கௌதமமுனிவர். வானப்பிரஸ்தாச்சிரமத்தை நிறுத்தினர் அகஸ்தியமுனிவர். சந்நியாச ஆச்சிரமத்தை நிறுத்தினர் துர்வாசமுனிவர். மலமாயை கன்மம் என்னும் முப்பாசத்தை நீக்குவதும், சிவசம்பந்தமுள்ளதும், மேலானதுமாகிய தீக்ஷையைத் தவிர மனிதர்களுக்கு எந்த ஆச்சிரமத்திலிருந்தாலும் உத்கிருஷ்டம் எய்துவதில்லை. எந்த ஆச்சிரமத்திலிருந்தாலும் சிவதீக்ஷையினாலே தான் பாசவிமோசனம் எய்துவதாகும்.

எவ்வெவருந் தாந்தாம் விரும்பியபடி அந்தந்த ஆச்சிரமத்தைப் பூர்வோத்தரமாக அநுஷ்டிக்கலாம். அங்ஙனம் அநுஷ்டிக்குமிடத்து தீக்ஷையினாற்றான் மோக்ஷம் எய்தும். ஆச்சிரமங்களினாலும் மற்றைக் கருமங்களினாலும் மோக்ஷம் இன்றாம். திரிகாலமும் ஸ்நானஞ்செய்து, பிக்ஷாகாரஞ்செய்து, கௌபீனந்தரித்து, கிருஷ்ணாசினந் தண்டம் என்பவற்றைத்தாங்கி, சிவாக்கினி பூசைசெய்து, வேதாத்தியயனம்பண்ணி, குடுமியோடு இருப்பவன் பிரமசாரி எனப்படுவான். பருவகாலத்திலே மனைவியைப் புலந்து, ஒழிந்த காலங்களிலே கலந்து, தெய்வம், விருந்து, யாசகர் என்போரை உபசரித்து எவர்க்கும் கருணைபாலிப்பவன் கிரகஸ்தன் எனப்படுவான். சடாதாரியாய் வனவாசஞ்செய்து, பாரியோடுகூடி அத்தியயனஞ் செய்து, பலமூல ஆகாரம் பண்ணி திரிகாலமும் ஸ்நானஞ்செய்து வற்கலை உடுத்து உறைபவன் வானப்பிரஸ்தன் எனப்படுவான். திரிகாலமும் ஸ்நானஞ்செய்து கௌபீனதாரியாய், நிஷ்கள சிவத்தியானஞ்செய்து, தண்டம் பஸ்மம் சடை என்பவைகளையுடையனாய், அக்கினியையும் பாரியையும் விடுத்து, பிக்ஷாகாரஞ்செய்து, கோத்திரம் சந்தானம் என்பவற்றை விடுத்து, அவ்வாறே சர்வகர்மங்களையும் விடுத்து, அபோச்சிய அன்னம் தவிர்த்து, சிவயோகஞ்செய்து, தேகாவசானத்திலே சிவசாயுச்சியம் அடைபவன் சந்நியாசியாவான். நான்கு ஆச்சிரமத்துள்ளாரும் சர்வாநுக்கிரகிகளாயே யிருப்பார்கள். ஓ கேசவ! அதிகஞ் சொல்லியாவதென்! சமுசாரசாகரத்தைக் கடத்தற்கு வாய்ந்த ஓர்புணையைச் சொல்கின்றேன் கேள். பைத்தியத்திலேனும், மோகத்திலேனும், நித்திரையிலேனும் எத்துஷ்டனாயினும், "சிவ" என்னும் இரண்டெழுத்தைச் சிந்தை செய்வானாயின், அவனை எம்மைப்போலக் குருவாக அறிகுதி, அதனால் நாம் அதிக மகிழ்வை அடைவேம்; இதினும் மேலாயது என்! பைத்தியத்தினாலேனும் ஒரு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வன் பிரணவத்தோடிசைந்த ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஒருமுறை உச்சரிப்பானாயின், அவன் எந்நிலையிலிருந்தாலும் எக்காலமும் பூசிக்கற்பாலனே யாவான். ருத்திர, சம்பு, மகாதேவ, சர்வஞ்ஞ, சங்கர, ஸ்ரீவாமதேவ, ஸ்ரீகண்ட, ஸ்ரீநீலகண்ட என்னும் நாமங்களைச்சொல்லி நம்மைத் தியானிக்கின்றவனை எமது ஆஞ்ஞையினால் யான் என்று மதிக்குதி. பிருகு என்பார் எமது பக்தருள்ளே சிரேஷ்டர். அவரிட்ட சாபத்தைக் கடத்தல் யாவர்க்கும் அரிதாகும். ஆதலினால் உனக்கு அந்த இருபத்தைந்து அவதாரமும் எய்தும். இந்த அவதாரம் லோகோபகாரமாயிருக்கும். கவுதமர், ததீசி, கண்ணுவர், சியவனர், பிரமா, நந்தி என்னும் ஷண்முனிவர்களும் ஒவ்வோர் ஏதுவினால் துரோகஞ் செய்த பிராமணர்களை வைதிகநெறி பிறழ்ந்தவர்களாயும், சிவநிந்தாபராயணர்களாயும், நெற்றியிலே யோனி முத்திரையுடையவர்களாயும் போமாறு சபித்தார்கள். கமலக்கண்ணா! இப்படிச் சபிக்கப்பட்ட பிராமணருள்ளே காசியபகோத்திரத்திலே எக்காலமும் வேதநிந்தை செய்பவரும், விபூதி ருத்திராக்ஷங்களை நிந்திப்பவரும், நம்மை நிந்திப்பவரும், வைதிகர்களையும் நமது பக்தர்களையும் நிந்தைசெய்பவரும், எப்போதுந் தப்தமுத்திரையுடையரும், பாஞ்சராத்திரபாராயணருமாகிய வாசுதேவர் என்னும் பெயரோடு இக்கலியுகத்திலே ஒருவர் பிறப்பார். இவர் பாஞ்சராத்திரிகளெல்லோர்க்கும் தேசிகராவர். அவர் உன்னைப் புதல்வனாகப் பெறும்பொருட்டு நெடுங்காலம் தவஞ்செய்யப் போகின்றார். அப்போது நமது ஆஞ்ஞையின்படியே நீ அவருக்குப் புதல்வனாய்ப் பிறக்குதி. மூன்று வயசு தொடுத்து நீ எம்மைச் சிறுபிள்ளை விளையாட்டாய்ப் பூசித்துக்கொண்டுவருங்கால், ஐந்தாம் வயசிலே உனக்கு நாம் சமஸ்தவித்தைகளையும் மனோரதபோகங்களையுந்தந்து, இறுதியிலே எமது சாயுச்சியபதவியையும் அருளுவேம். இருபத்தைந்து அவதார

ங்களுள்ளே ஐந்து அவதாரங்களில் உனது கருவத்தை நாசஞ்செய்து, மற்றைய இருபது அவதாரங்களினும் நீ நம்மைப் பூசிப்ப, நாம் உனக்கு விரும்பியது கொடுப்பேம்; அதனால் நீ திருப்தி பூணக்கடவை; உன்னுடைய அவதாரங்களைச் சனங்களெல்லாம் வழிபடுவார்கள். அப்படி வழிபடுவோர் உனது பதத்தை அடைவார்; இன்னும் ஒரு ரகசியம் சொல்கின்றேம் கேள். அஃதாவது உனது சென்மம் ஒன்றிலே நீ உன்பாரியைப் பிரியப்பெறுவாய் என்றார். நம்மை லிங்கரூபமாகவைத்துப் பூசித்தும், துதித்தும், புகழ்ந்தும், நமஸ்கரித்தும் வருபவர்களுக்குப் போகமோக்ஷங்களை சந்தேகமின்றி யருள்வேம். இந்தக் கஞ்சாபுரத்திலே மூன்று தினம் வாசஞ்செய்து, சிவபக்தர்களாகிய பிராமணர்களைப் பூசை தர்ப்பணங்களால் வழிபட்டு, மகாமந்திரரகசியமாகிய ஸ்ரீபஞ்சாட்சரத்தைச் செபிக்கின்றவர்கள் கோடிசென்மங்களிலே செய்த பாபங்களும் நாசமாக தேகாந்தத்திலே சாயுச்சியத்தை அடைகின்றார்கள் என்று திருவாய்மலர்ந்தருளினார். விஷ்ணு இவற்றைக்கேட்டு, தேவ தேவனே! மகாதேவனே! சந்திரார்த்த சேகரனே! உமது திருவடியை அடைந்தேன். கஞ்சாபுரத்திலே நான் உம்மைப் பூசைசெய்துகொண்டிருக்குங்கால், எனது மனோபீஷ்டமெல்லாம் முற்றுமாறு வரந்தந்தருளல் வேண்டுமென்று வேண்ட, அதற்குச் சிவபெருமான் அங்ஙனமாகுக என்று திருவாய்மலர்ந்தருளி அந்தர்த்தானமாயினார். ஸ்ரீநாயகராகிய விஷ்ணுவும் தமது தானத்தை அடைந்தார்.

இந்தப் புண்ணிய க்ஷேத்திரமாகிய கஞ்சாபுரத்திலே எழுந்தருளியிருக்கின்ற அக்கினீசுவரப் பெருமான்மீது அன்புடமையராய் வைதிக சைவப்பிராமணர்கள் அவர் கருணைக்குப் பாத்திரராயினார். இவர்களை நினைக்கும் நினைவே மகாபாதகங்களையும் நாசஞ்செய்யும். இவர்கள் சாபாலோபநிஷதங்களை உச்சாரணஞ் செய்து, வைதிக சைவ விபூதி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தொண்டு திரிகாலமும் உத்தூளன திரிபுண்டரஞ் செய்பவர்கள், திரிகாலங்களிலும் பக்தியோடு சிவார்ச்சனை செய்பவர்கள், சிவ விரதங்களையும் நக்த விரதங்களையும் அநுஷ்டிப்பவர்கள், வேதாத்தியயனஞ் செய்பவர்கள், சிரௌதாக்கினி வளர்ப்பவர்கள், ஒவ்வோர் கிரகத்திலும் புரோடாச அவ்ய சம்பந்தமாகிய தூமத்தினாலே தூய்மை வாய்ந்தவர்கள்; ருத்திராக்ஷதாரணர்களாயும், ஸ்ரீபஞ்சாக்ஷரசெபஞ் செய்பவர்களாயும், சிவபூசாபாராயணர்களாயும், சிவபுராணார்த்தங்களை ஆராய்பவராயும், சிவநாமத்தையே உச்சரிப்பவர்களாயும், சிவபக்தர்கண்மீது எக்காலமும் அன்புடையராயும், சிவதரிசனம் - சிவநமஸ்காரம் - சிவபூசை முதலியவைகளிலே ஓர்காலும் வழுவாதவராயும், சிவபூசாவிஷயம் பற்றிச் சிவாகமங்களை நன்றாக ஆராய்ந்தறிந்தவர்களாயும், பிரதக்ஷிண நமஸ்காரங்களையும் மற்றைய திருத்தொண்டுகளையும் எக்காலமும் செய்பவர்களாயுமுள்ளார்கள். அவர்கள் மனைவியரும் அவர்களைப்போற் திருத்தொண்டுசெய்பவர்கள், தமது நாயகர்களுக்குத் தொண்டு செய்தும், சிவபூசைசெய்தும், பஞ்சாக்ஷரசெபஞ் செய்தும், சிவகைங்கரியங்கள் செய்தும் வருவார். இவர்கள் அருந்ததியிலும் சிறந்த கற்பினை யுடையார். அங்கே எக்காலமும் வேதசிரசுகளை நன்கு உணர்ந்து, சிவபூசாபாராயணராய், பஸ்மருத்திராக்ஷ தாரிகளாயுள்ள பரமஹம்சஸந்நியாஸிகள் அக்கினீசுவரப்பெருமானைத் தலையன்பினாலே எக்காலமும் சேவிக்குமாறு வாசஞ்செய்கின்றார்கள்.

பின்னர் அந்தக் கஞ்சாபுரத்திலே விஷ்ணுவானவர் கற்பங்கடோறும் தமது சாபநிவாரணத்தின்பொருட்டு அக்கினீசுவரப் பெருமானைப் பூசித்துக்கொண்டு வந்தார். இந்தத் தல விசேஷத்தை நோக்கியே அயன் அரி இந்திரன் அக்கினி என்போர் தத்தம் நாமங்களிலே தனித்தனியே அங்கே தீர்த்தங்கள் அமைத்துச் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்

தார்கள். இப்பொழுதும் தேவர்கள் மகாதேவருக்குத் தொண்டுசெய்துகொண்டு வருகின்றார்கள்.

கௌதம முனிவராலும் நந்திகேசுரராலும் சபிக்கப்பட்ட வைஷ்ணவப் பிராமணர்களிற் சிலர் கஞ்சாபுரத்து விஷ்ணுவாலயத்துக்குச் சமீபத்திலே வாசஞ்செய்கின்றார்கள். அவர்கள் வெள்ளைமண் பூசுபவர்கள், வெள்ளைவஸ்திரம் உடுப்பவர், யஞ்ஞோபவீத தாரணர்கள், தப்தமுத்திரை தரிப்பவர்கள், வேதசார விமுகர்கள், பாஞ்சராத்திர பாராயணர்கள், சிவநிந்தை எக்காலமுஞ் செய்பவர்கள், வைதிகப் பிராமணரைத் தூஷிப்பவர்கள், விபூதி ருத்திராக்ஷந் தரித்தவர்களைக் குரூரதிருஷ்டிகொண்டு பார்ப்பவர்கள், இவர்களுள்ளே வாசுதேவர் என்பவர் ஒருவர் இருந்தார். இந்தப் பிராமணர் ஓர்புத்திரனை வாஞ்சித்து விஷ்ணுவை நோக்கி மெய்யன்போடு உபாசித்தார். சுப்பிரதீகர் என்பவர் ஒருவர் ஓர் புத்திரியை வாஞ்சித்துத் தவஞ்செய்தார். அப்போது விஷ்ணுவானவர் அவ்விருவர்மீதும் பிரீதிகொண்டு இலக்குமியை யழைத்து, பிராணநாயகியே! நீ பூமியின்கண்ணே சென்று சுப்பிரதீகருக்குப் புத்திரியாகப் பிறக்குதியாக, நான் வாசுதேவருக்குப் புதல்வனாகச் செனிப்பேன் என்று இந்தப் பிரகாரஞ் சொல்லிவிட்டு, பாஷண்டமதமாகிய வைஷ்ணவத்தை அநுசரித்திருக்கும் இந்த வைஷ்ணவர்களைச் சர்ப்பசயனரும் உலகரக்ஷகருமாகிய தாம் அருள்நோக்கஞ்செய்து, வைதிகநெறிக்கண்ணே நிறுத்த நினைந்து, கமசாகரப் பெருமானிடத்திலே அருள்பெற்றுக்கொண்ட சிருங்கி வாசுதேவருடைய மனைவி வயிற்றிலே உற்பத்தியாயினர். ஐந்து கிரகங்கள் தத்தம் வீடுகளிலே உச்சத்தானத்தை அடைந்தபோது, உமாதேவியார் கந்தசுவாமியைப் பெற்றாற்போல, சிவபிரானார் திருவடித்தாமரையை மறவாத அப்புதல்வனை அவள் பெற்றாள். அப்போது புஷ்பமழை பொழிந்தது. துந்துபிகள் ஒலித்தன. தேவரம்பை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யர் நடித்தனர். சிவபத்தர்களுக்கு வலத்தோளும் வலக்காலும் வலக்கண்ணும் துடித்தன. வைஷ்ணவர்களுக்கு இடப்புயங்களும் இடக்கால்களும் இடக்கண்களும் துடித்தன. இனிமையோடு தென்றல் வீசிற்று. அக்கினி களங்கமின்றிச் சொலித்தது. திக்குகளெல்லாஞ் சந்தோஷம் மலிந்தது. இங்ஙனம் புதல்வனுடைய சனனத்தைக்கேட்ட பிதாவானவர் மனமகிழ்ந்து சுருதிசாஸ்திரமறிந்தவர்களையும் வேதபாரகர்களையும் அழைத்து அவர்களுக்குக் கோதானம் பூதானம் இரண்ணியதானம் என்பவைகளைச் செய்தார். பின்னர் ஜாதகர்மஞ் செய்தார். பதினோராம்நாள் ஸ்நானஞ்செய்து பிள்ளைக்கு வாய்ப்பாக சுதர்சனர் என்னும் நாமகரணஞ் செய்தார். பாலரும் வளர்பிறைச்சந்திரன் போல மெல்ல வளர்வாராயினர். தமது இரண்டுகைகளினலும் தம்மிரண்டு பாதாங்குஷ்டங்களையும் வாயிலே வைத்துச் சுவை பார்ப்பார். பின்னர்த் தொட்டிலின்கண்ணே ஆடியும், தாயின்பாலைப் பருகியும் முதிர்வார். ஆறும்மாசத்திலே அவர் பந்துமித்திரர்கள் அவருக்கு அன்னப்பிராசனஞ்செய்தார்கள். அவருக்கு அநேக ஆபரணங்களுஞ் சூட்டினர்கள். பாலரும் தமது இனிமையாகிய வார்த்தையினலே தந்தையாரைப் பிரீதிசெய்தார். சிவபத்தர் வழியிலே போம்பொழுது அவர் கொடுத்த விபூதியை வாங்கி அப்பாலர் நெற்றியிலே இட்டார். அதைக்கண்ட தாயார் புதல்வனுக்கு ஸ்நானஞ்செய்து தக்க தக்க தானங்களிலே ஆபரணம் அணிந்து, அரிசூர்ணத்தையும் வெள்ளைமண்ணையும் பூசினள். அப்போது அப்புதல்வனர் வீதியிற் போந்து கஞ்சாபுரத்துப் பிராமணரும் சிவபக்தருமாகிய பசுபதி என்பாரை விபூதி ருத்திராக்ஷம் பிரசாதிக்கும்படி அன்பினேடும் வேண்டி, அவற்றை அவர் கொடுக்கப்பெற்று அவ்வெள்ளைமண் மஞ்சட்பொடிகளை அழித்துவிட்டு, சர்வாங்கமும் விபூதி உத்தூளனஞ்செய்து திரிபுண்டரமாகத் தரித்து,

ஹரிதத்தரை அவர்தந்தையார் தண்டித்தது.

MESNAX SHANMAK PRESS. MYLAPORE. 18..

Center for Shaiva Studies, Pondicherry Collection

உருத்திராக்ஷம் பூண்டு, சிவாலயத்தினுள்ளே போந்து, சிவபெருமானைப் பிரதக்ஷிணஞ்செய்து நமஸ்கரித்து சிவபிரானுக்கு உவப்பாகிய திருத்தொண்டுகளைச் செய்தார். இவற்றைச் சனங்களெல்லாம் நோக்கி முனிவர்களும் செயற்கரிய செய்கையை இப்பாலவைஷ்ணவர் செய்கின்றாரோ, முன்னே மகாதேவனை நேத்திர கமலத்தினாலே பூசித்த மாதவரோ இப்போது சனங்களை இரக்ஷிக்கும்பொருட்டும், வைதிக மார்க்கத்தை நிறுத்தும்பொருட்டும், சிவபக்தியை வளர்க்கும்பொருட்டும் இங்ஙனம் திருவவதாரஞ் செய்தனரோ என்பார். மூன்றாம்வயசிலே இவருக்குச் சௌளகருமமும், ஐந்தாம் வயசிலே உபநயனமுஞ் செய்யப்பட்டன. இதுவரையும் அப்பாலர் விபூதி தாரணமுதலியன செய்தமையைப் பாலக்கிரீடை என்று நினைந்துகொண்டிருந்த பிதாவாகிய வாசுதேவர் அக்குழந்தையை அழைத்து, 'குழந்தையே! நீ சிவன் கோயிலுக்கு ஓர்காலும் போகாதே, ஓர்காலும் விபூதிகொண்டு உத்தூளன திரிபுண்டரதாரணஞ் செய்யாதே, சிவபத்தரோ டிணங்காதே, அவர்களோடு பேசாதே, உருத்திராக்ஷதாரணஞ் செய்யாதே, ஸ்ரீவிஷ்ணுவின் சுத்தமாகிய பாதத்தையே சிந்தைசெய்" என்று புதல்வனுக்கு உபதேசித்தார். இப்படி சொல்லியும் பாலனானவர் விபூதியையும் ருத்திராக்ஷத்தையும் விடாதவராய் சிவபக்தரை வணங்கி அவர் பாததூளியைச் சிரசிலே தரித்து சிவநாமங்களை உச்சரித்து,அக்கினீசுவரராலயத்தை அடைந்து, அதனைப் பன்முறையும் வலம்வந்து வணங்கி, அங்கே திருத்தொண்டு செய்து வருவாராயினார். இவ்வொழுக்கத்தைக் கண்ட பிதாவானவர் அடிக்கடி யான் புத்திபுகட்டியும் என் வார்த்தையைப் பாலன் கேட்கின்றானில்லையே என்று அப்பாலனைக் கயிற்றினாலே கட்டி, கசையினாலே பின்னும் அடித்துத் தம்மதாசாரத்தை உபதேசித்தார். கட்டினின்று விடுபட்டவுடனே புறத்தேபோய்ச் சிவாலயத்தை

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அடைந்து, மனோவாக்குக்காயங்களினாலே சிவபெருமானுக்குப் பிரீதியாகிய திருத்தொண்டுகளைச்செய்தார். பிதாவானவன் தன்மனைவியை நோக்கி "என் புதல்வன் என் வார்த்தையைக் கேட்கும் வரையும் நீ அவனுக்கு அன்னமிடாதே" என்றுசொல்லிப் போயினன். அவன் போன பின்னர்ச் சிவபக்தசிரோமணியாராகிய பாலர் விபூதிருத்திராக்ஷதாரணஞ்செய்து, சிவபெருமானைச் சேவித்துக்கொண்டு போசனம்செய்யுமாறு வீட்டுக்கு மீண்டு வந்து தமது தாயரை நோக்கி "என் இனிய அன்னையே, என்னைப் பசி அதிகமாக வாட்டுகின்றது: எனக் கன்னமிடுவாயாக" என்று கேட்டுத் தன் தாயின் கையைப் பலமாகப்பற்றி யிழுத்து நெருக்கினர். அப்போது தாயானவள் பாலனைப்பார்த்து ஐயோ பாலா! நீ தம்முடைய வார்த்தைக்கமைந்து நடக்கும்வரையும் அன்னமிடல்வேண்டாம்" என்று உன்பிதா சொல்லிப்போயினர். ஆதலால், நீ உன்பிதாவின் சொல்லைக்கேள். உன்பிதாவின் வார்த்தையை ஏன் கேட்கின்றாயில்லை; உன்பிதாவே உனக்கும் எனக்கும் தெய்வம். இப்போது நான் என்செய்வேன்" என்று தன்பாலனோடு அநுதாப முற்றுக் கண்ணீர் வார்ந்தாள்.

இங்ஙனம் தாயார்சொல்லிய வார்த்தையைக் கேட்டவுடனே பாலர் வீட்டினின்றும் புறப்பட்டு வெளியே போந்து அக்கினீசுவரப் பெருமானையும் நந்திகேசுரரையும் சந்தியாகாலத்திலே போய் நமஸ்கரித்து நின்று "சம்புவே நீரோ என்பிதா, உமாதேவியாரோ என் தாயார், உமது புதல்வர்களாகிய விநாயகர் சுப்பிரமணியர் என்னும் இருவரோ என் சகோதரர்கள், உமது ஆப்தர்களே எனது பரிசாரகர்கள். அங்ஙனமாயினும் உமது தரிசனங் கிடையாமையால், இவ்விடத்தே அடியேன் நாயையும் புழுவையும் ஒத்துத் திரிகின்றேன்; சுவாமீ! உம்மை அடியேன் நினையாமலும், உமது பூசையிலே வழுவினவனாயிருந்தாலும் தீனபந்துவா

Center for Shaiva Studies, Pondicherry Collection

கிய நீவிர் உமது திருவருளினால் அடியேனைக் காத்தருளல் வேண்டும். விஷ்ணுமூர்த்தியினாலே உமது திருவடிகளும், பிரமாவினாலே உமது சிரசும் காணப்பட்டிலவாயின், அடியேன் சுவாமியை எவ்வாறு பூசிக்கவல்லேன்! அடியேனாகிய என்னை விசாரித்துக் காத்தருளல்வேண்டும். மழையில்லாது வாடிப்போன பயிர்போல உமது தரிசனங்கிட்டாது வாடிப் போயினேன். கிருபாநிதியே! அடியேனுக்குப் பிரசன்னராகுதிர். இன்று கொசுவுபோலிருக்கு மடியேனிடத்துக் கிருபாவசத்தினாலே எழுந்தருளி பாலர் எம்மிடம் வருகவென்று அடியேனை எப்போது அழைப்பீர். தாயில்லாப்பிள்ளைபோல அடியேனை இகழ்ந்து கைவிடாதீர். அடியார்க்கடியனாகிய பாலன்மீது மிகுதியும் வன்கண்மை செய்யாதீர். அடியேன் அநாதனாகிய தீனன், உமது பாதங்களையே சிந்தைசெய்தேன். உம்மைக்காண்டற்கு இச்சைப்பட்டேன். அடியேனுக்கு இப்போது பிரசன்னராவீர்; அடியேன் பூமியிலேனும் கைலாசத்திலேனும் இருந்தாலும் என்? உம்மையின்றி ஓர் முகூர்த்தமாயினும் அடியேனுக்கு வாழ்வில்லை, மிகுதியுந் தீனனாகிய அடியேனுக்கு நீவிர் பிரசன்னராகாதொழியில் அஃது அநீதியாமன்றோ. பின் எதுதான் உமக்கு நியாயமாய் முடியுமென்று இந்தப்பிரகாரம் அன்பினோடு தோத்திரஞ்செய்தார். அப்போது கிருபாநிதியாகிய சிவபிரான் உமாதேவியாரோடு இருஷபாரூடராய் அவருக்குப் பிரசன்னராய் "குழந்தையே! இனி நீ அஞ்சற்க" என்று தமது திருவுருவத்தைத் தரிசிப்பித்தருளினார். உடனே சுதர்சனர் மிக்க விம்மித மடைந்தும் அநேக ஸ்தோத்திரஞ்செய்தும் பேரானந்தக்கண்ணீர் வார நின்றார். அப்போது சிவபெருமான் அவரைத் தழுவித் தமடித்தலத்திலேற்றி, உச்சிமோந்து, நீ நம்மிடத்து ஆறாத பேரன்புடையை உனக்கு இப்போதுற்ற வருத்தத்தைச் சொல் என்று திருவாய்மலர்ந்தருளினார். அதற்குப் பாலர் சிவ

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிரானைநோக்கி, சுவாமீ! பிரமவிஷ்ணுக்களாலும் காண்டற்கரிய உம தருமைத் திருமேனியானது ஈண்டு பிரசன்னமாங்கால் முடிக்கக்கூடியதாயும், முடிக்கக்கூடாததாயுமுள்ளது யாது என்றார். உனக்கும் உன் தந்தைக்கும் இடையே நேர்ந்த மனவருத்தத்துக்குக் காரணம் யாது? என்று சிவனார் கேட்ப, அதற்குப் பாலர் அண்டமோராணுவாம் பெருமை கொண்ட நீவிரோ ஆன்மாக்களுக்கு அருள்புரியுமாறு அணுவோரண்டமாஞ் சிறுமை கொண்டீராதலின், எம்மிருவர் வினைவெலாம் உமக்கே தெரியுமென்று தலையினாலே அவர் ஆஞ்ஞையை வகித்துச் சொன்னார். சொல்லவே, சிவபெருமான் ஸ்மிருதி இதிகாசாதிகளைப் படிப்பாயாக என்றார். அதற்குப் பாலர் படிக்கற்பாலனவாகிய சாஸ்திரங்கள் எண்ணில்லாதனவன்றோ! அவற்றைப் படித்தற்குள்ள காலம் அற்பமன்றோ. படித்தற்கு எய்தும் இடையூறுகளோ எண்ணிறந்தனவன்றோ. பாலும் நீரும் கலந்தவிடத்து அன்னமானது பாலைமாத்திரங் கொள்ளுதல்போல, சுவாமீ சாரமாயுள்ளதையே அடியேற்கு உபதேசியும் சகல வேதபுராணங்களினாலும் அறியற்பாலர் நீவிரோயாம். ஆதலினால் உம்மை ஒருநெறியாகச் சிந்தைசெய்தல் ஒன்றையன்றி மற்றொன்றும் வேண்டேன் என்றார். அதற்குச் சிவபிரான் சுருதி ஸ்மிருதி முதலியவைகளின்றி எனது சொரூபத்தை அறியவும் அறிந்தபடி அன்புசெய்யவு மியலாய் என்றார். அதற்கு அவர் "சுவாமீ! என்னைப் பாலனென்று எய்க்கப்பார்க்கின்றீர்" ஒருவன் தனக்குச் சிந்தாமணி கிடைத்தபின்னர், பலகலாக்கு ஆசைப்படுவானோ என்றார். அப்போது சிவபெருமான் தமது திருக்கரகமலத்திலே ஓர் யந்திரத்தை எழுதி அப்பாலருடைய சிரசிலே அமைத்து, எல்லாம் அறிந்தவனாகுதி என்று தடவினார். அவ்வேளையில் அச்சிவபிரான் திருவருளால் வேதமுதலிய கலைகளெல்லாம் அப்பாலனுக்கு உதித்தன. அதன் பின்னர்த் தாம்

தக்ஷிணாமூர்த்தியாய் எழுந்தருளியிருந்துகொண்டு, வைதிக சைவ விபூதியை சாபாலோபநிஷத மந்திரங்களினாலே பாலர்மேனியிலே பூசி, அதன்பின்னர்த் திரிபுண்டரமாகத் தரித்து, உருத்திராக்ஷ மாலையணிந்து, பஞ்சாக்ஷரோபதேசஞ்செய்து, உத்தமமாகிய ஸ்படிகலிங்கத்தை அவர்கையிற் கொடுத்து, வேதசிவாகமவிதிப்படி பூசாவிதியும் உபதேசித்து, சுதர்சனாசாரியர் என்ற பெயரைமாற்றி, அரதத்தாசாரியர் என்ற பெயரும் இட்டருளினார். அருளவே; அரதத்தாசாரியர் சிவபிரான் திருவடித்தாமரைகளைத் தமது களினின்று சொரிந்த ஆனந்தபாஷ்பங்களினலாட்டி மயிர்ப்புளகத்தோடு நமஸ்கரித்தார். உடனே சிவபெருமான் தமது அருமைத் திருக்கரத்தினாலே அப்பாலரை எடுத்து பரமப் போதிலே தானே ஆசீர்வதித்து, நீ போசனஞ் செய்யும் பொருட்டுப் போவாயாக என்று சொல்லி ஆஞ்ஞைசெய்து தாம் சிவலிங்கத்திலே அந்தர்த்தானமாயினார்.

அரதத்தாசாரியர் இங்ஙனம் சிவபெருமானிடத்திலே மகாமந்திரமாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரோபதேசம்பெற்று, அவைதிகர்களாகிய வைஷ்ணவர்களை உத்தாரணஞ்செய்யும் பொருட்டு எழுந்தருளிய சிவபிரானை ஒத்தார். குருமூர்த்தியாய்ப் போந்த சிவபிரானை நமஸ்கரித்து, அவரைத் தமது இதய கமலத்தின்கண்ணே இருத்திக்கொண்டு வீட்டுக்குப் போயினார். அவ்வேளையிலே பிதாவானவன் வீட்டினுள்ளே கபாடபந்தனஞ்செய்து சயனித்திருந்தான்; தாயானவள் பாலனுடைய பசிநோயை நினைந்து வருந்திக்கொண்டிருந்தாள். சிவபக்தசிரோன்மணியாகிய அரதத்தாசாரியர் கதவிலே தட்டிப் பசியினால் நொந்தேன், அன்னமிடுதி என்று உரத்து அழுதார்; உள்ளே நித்திரைசெய்த பிதாவானவன் சிவபாதாப்ஜஸ்மரணராகிய அரதத்தாசாரியர் இயல்பை அறியாது அவர் வார்த்தையைக் கேட்டபோது கண்ணினைச் சிவப்பேறக் கோபத்தோடு விழித்து இவ்வாறு சொல்வான்:

Center for Shaiva Studies, Pondicherry Collection

நான் சொல்லும் சொல்லுக்கு அமைவையேல் உனக்கு அன்னமிடுவேன் நீ எப்போதாயினும் சிவனுக்குத் தொண்டுசெய்தால், பாஞ்சராத்திர ஆகமங்களைப்படியாதிருந்தால், வெள்ளெருதேறுவோன் கோயிலுக்கு நீ போனால் உன்னை நான் தண்டிப்பேன்; இங்ஙனம் அமையாது போவையாகில் உன் கால்களைச் சேதிப்பேன் என்று சொன்னான். இதைக் கேட்ட பாலர் சிவநிந்தையில் விருப்புற்ற திருகுலபாலராகிய தந்தையாரைப் புன்சிரிப்போடு நோக்கி, கௌதமமுனிவராலும், ததீசிமுனிவராலும், கண்ணுவமுனிவராலும், உபமன்னியுமுனிவராலும், பிரமனாலும், நந்திகேசுவராலும் சபிக்கப்பட்ட பிராமணருள்ளே நீயும் அகப்பட்டனையன்றோவாதலின், நினக்கு பரமபதியான மஹாதேவருடைய உண்மை யொன்றுந் தெரியாது சொல்வேன் கேள்: அந்தத் தத்துவப்பொருளாகிய சிவபிரானை விஷ்ணுவானவர் நேத்திரகமலங்களினாலே பூசித்து வழிப்பட்டமைபால், சிவபிரான் அவருக்குச் சர்வஞ்ஞத்துவத்தைக் கொடுத்தார் என்றறிகுதி. நீ யென்னை வேதமுதலிய வித்தைகளிலே பரீக்ஷித்துப் பார்க்குதி; பின்னரும் சிவபிரானை விஷ்ணுவானவர் நேத்திரத்தினாலே அர்ச்சித்தாரோ, அன்றோ? சொல் என்று கேட்டார். அதற்குத் தந்தையானவன் உலகத்தை வஞ்சிக்குமாறு பூசித்தாராதலில், இப்பூசை யதார்த்த பூசையாகாது என்றான். அதுகேட்ட சிவபக்தசிரோமணியார் இங்ஙனம் ஒருவாறு உத்தரஞ் சொல்லிய பிதாவைப் பார்த்து, விஷ்ணுவுடைய சர்வேசுரத்துவத்தை வேதாகம முறைப்படி பேசுதி என்று வாதித்தார். பிதாவும் பாலரும் இவ்வாறு வாதிக்கும்போது, அக்கிராமத்திலேயுள்ள வைஷ்ணவர்களும் சிவனடியார்களும் ஒருங்கு கூடினார்கள்.

(உடனே அகர்த்தாவான அரியைக் கர்த்தாவாகக் கருதிய பாஞ்சராத்திரிகளின் மனத்திருளிருந்த அஞ்ஞானவிரு

ளகலுமாறு எழுந்தருளிய ஸ்வாமி யரதத்தனைப்போல ஸூரியனுதையமாயினன். தந்தைக்கு மைந்தனுக்கும் அரி அரர்களைப்பற்றிய தாரதம்மியவாத நடக்கின்றதென்று பிரஸித்தியாயிற்று. இதனால் சைவர்களும் வைணவர்களும் திரளாகச் சேர்ந்தார்கள். அன்றியுள்ள மதவாதிகளும் வந்து நெருங்கினார்கள். தினேதினே வாதம் விருத்தியாகியது. இதையுணர்ந்த ஊராள்வோனும் பிறருங் கூடினார்கள். பின்னரொருநாள் வைணவாதியர் இங்ஙனம் தந்தையும் மைந்தருமாகிய நீவிர் வெறும்வாதஞ் செய்வதாற் பயனில்லை; தீயிலிட்டுப் பழுக்கக்காய்ச்சிய இருப்புப்பீடத்திலேறி நின்று அரியையேனும் அரனையேனும் நியாயமுகத்தால் சிறந்த பொருளென்று தாபித்தால் நாங்களந்த மதத்தை யடைகின்றோமென்றார்கள். உடனே மஹாப்பிரபுவான அரதத்தர் யானவ்வண்ணமே செய்கின்றேனென்றார்; இந்த அரிய விடயத்தைக் கண்டுகளிக்க அநேகர் விரும்புவார்கள்; அதனால் பலதேயத்தினரும் உணர்ந்துவரத்தக்க ஒரு நன்னாளமைப்போமென நாளமைத்தனர்; அத்தினத்திற் திரண்ட சனங்கள் வந்து நெருங்கினார்கள்.) உடனே வைணவர்களைப் பார்த்து, வைதிக சைவவேதியர் முதலியோர் பாஞ்சராத்திரியர்காள் வம்மின் எம்மிறைவனாகிய அக்கினீச்சுரனாலயத்திற்கு அங்கே எங்கள் வைதிகவாரணர் உங்களாலிடப்பட்ட ஒழுகக்காய்ந்த இரும்புப்பீடத்திலேறியிருந்து சிவபெருமானே பரமென்று தாபிப்பாரென்றனர். அதற்குப் பாஞ்சராத்திரிகள் கோபத்துடன் நாங்கள் ஆனை துரத்தினும் ஆலயம் நுழையேம் என்று நியமம்பூண்டவர்கள்; ஆதலால் அவ்வரனாலய மடையேம்; எங்கள் பகவானான ஸ்ரீஹரியின் ஆலயமும் அதிவிசாலமானதே, அதற்குள் வந்திச்சிறுவன் சிவனே பரமென்றுரைத்துத் தாபனஞ்செய்வானாயிற் சரிதானென்று—'வ்யம்ருத்ரகுடிம்வாபி நபச்யமாகதாசந' என்பவனவாதி வாக்கியங்களாலுரைத்தனர். உடனே அரதத்தர்

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அதற்குஞ் சம்மதித்து, அவ்வூரிலுள்ள வரதராஜஸ்வாமி ஆலயத்திற்சென்று, அங்கு வீற்றிருக்கும் சுவாமியான வரதராசனை யன்புடன் வணங்கி நமஸ்காரஞ்செய்து துதித்து,—

" தேவதேவஜகந்நாதஹரபாதாப்ஜசிந்தக।
ஶிவபூஜாஸக்தசித்தசிவபக்தசிரோமணே॥
மஹாவிஷ்ணோமஹாபாகசரணாகதவத்ஸல।
ஸர்வோபநிஷதாம்சாரம்சிததத்யவேத்யதி॥
ததாத்வத்ஸந்நிதௌதப்தலோகபீடமிதம்விபோ।
இமாம்புசிதஸம்பூயாதித்யுக்த்வாதத்பரதக்ஷிணம்॥
க்ருத்வாத்யாத்வாமஹாதேவம்பார்வதீஸஹிதம்விபும்। " என்றுரைத்தாங்கு தேவதேஜகன்னுதி வாக்கியங்களால் அரியை வணங்கி நின்சந்நிதியிலிருந்து சர்வஸாரமான உபநிஷதார்த்தங்களால் சிவபரத்துவஸ்தாபனஞ் செய்யப்போகின்றேன். ஹே ஸ்வாமி! யான் ஏறப்போகின்ற காய்ந்த இரும்பு முக்காலியானது குளிர்ந்த ஜலத்தைப்போல ஆகவேண்டியது. என்றுரைத்து நின்றனர். உடனே வைணவர்கள் தீயிலிட்டு உருகக் காய்ச்சிய பெரிய இரும்பு முக்காலியைக் கொண்டுவந்து கருடனுக்கும் வரதராஜஸ்வாமிக்கும் நடுவில் இட்டார்கள். உடனே அரதத்தாசாரியசுவாமிகள் அதனைப் பிரதக்ஷிணஞ்செய்து, உமாதேவி சமேதராகிய சிவபெருமானைத் தியானித்து, அந்த அயபீடத்திருத்து, சைவ வைஷ்ணவர்களுள்ளே சிவநிந்தகர்களாகிய வைஷ்ணவர்களைநோக்கி தத்துவார்த்தமாகிய சதுர்வேத தாற்பரியசங்கிரகம் என்னும் சுருதிசூக்திமாலையினாலும், அன்றியும் மந்திரசிரோஷ்டமான கத்தாவாக இருத்தலினாலும், தசரதன் பிள்ளையான இராமன் இலிங்கந் தாபித்துப் பூசித்தமையாலும், கண்ணன் ஸ்ரீகைலாயத்தையடைந்து துதிக்க அவற்குப் பிள்ளையை அளித்தமையாலும், நூற்றிதழ்க் கமலமலர்களாலும், தன் கண்மலராலும் பூசிக்க வவற்குச் சக்கர மீந்தமையாலும் பசுபதி சகல தேவர்களுக்கும் முதல்வனாகின்றான்; மன்



ஹரிதத்தா எரிகிற இரும்புநாற்காலியின்மீதுவீற்றிருந்து சைவஸ்தாபனஞ் செய்தல்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மதனை யழித்தமையாலும், ஆலத்தை யுண்டமையாலும், எமனுடைய கர்வபங்கஞ்செய்தமையாலும், அசுரர் வாழ்ந்த முப்புரங்களை யழித்தமையாலும், தக்கனுடைய யாகத்தை யழித்தமையாலும், அருச்சுனனுக்கு தன்பெயருள்ள அம்பினை அளித்தமையாலும், நரசிங்கத்தை வதைத்தமையாலும், கண்ணன்கொண்ட (மோகினி) பெண்ணுருவைக் கலந்து சாத்தனைப் பிள்ளையாகப் பெற்றமையாலும் பசுபதி சகல தேவர்களுக்கு முதல்வனாகின்றான்.

காசியில் வியாசருடைய தோள்களைத் தம்பிக்கு மாறு செய்தமையாலும், முன்னர் திரிபுரஜயகாலத்தி லரியால் இடபவுருக்கொண்டு தாங்கப்பட்டமையாலும், பிரமகபாலாதிகளாலே அலங்கரிக்கப்படுதலாலும், பக்குவர்களுக்கு ஞானோபதேசஞ்செய்தலாலும், உலகிலருச்சித்த வனேகருக்கு வேண்டிய அபீஷ்டங்களை அளித்தமையாலும், பெண்ணுடம்பு கொண்ட அரிக்குப் பாதியுட லீந்தமையாலும், இன்ன மனேக காரணங்களாலும் அரனே முதல்வனென்று குறிக்கின்ற பஞ்சரத்தின மாலையினாலும்,—

காயத்ரீவல்லபத்வாத்தசரததநயஸ்தாபிதாராதிதத்வாச்।
சௌரோ:கைலாஸயாத்ராவ்ரதமுதிததயாபீஷ்டஸந்தாநதாநாத்।
நேதரோணஸ்வேநஸாகம்தசசதகமலைர்விஷ்ணுநாபூஜிதத்வாத்।
தஸ்மைசக்ரப்ரதாநாதபிசபசுபதிஸ்ஸர்வதேவப்ரக்ருஷ்ட:॥

கந்தர்ப்பத்வம்ஸகத்வாத்காளகபளநாத்காலகர்வாபஹத்வாத்।
தைதேயாவாஸபூதத்திரிபுரவிதளநாத்தக்ஷயாகேஜயத்வாத்।
பார்த்தஸ்யஸ்வாஸ்த்ரதாநாந்நரஹரிவிஜயாந்மாதவேஸ்த்ரீசரீரோ।
சாஸ்தஸம்பாதகத்வாதபிசபசுபதிஸ்ஸர்வதேவப்ரக்ருஷ்ட:॥

வாரணஸ்யாஞ்சபாராசரநியமிபுஜஸ்தம்பநாத்ப்ராக்புராணும்।
ப்ரத்வம்ஸேசேசவேநாச்ரிதவ்ருஷவபுஷாதாரிதத்வாரதத்வாத்।
அஸ்தோகைர்ப்ரம்ஹசேர்ஷைர்நிசகளக்ருதாலங்க்ருதாபூஷிதத்வாத்।
தாநாத்ப்ரஜ்ஞாநமுக்த்யோரபிசபிசுபதிஸ்ஸர்வதேவப்ரக்ருஷ்ட:॥

பூமௌலோகைரநேகைஸ்ஸததவிர்சிதாராதநத்வஹீஷா।
மஷ்டைச்வர்யப்ரதாநாத்தசவிதவபுஷாகேசவேநாச்ரிதத்வாத்।

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஹம்ஸக்ரோடாங்கதாரித்ருஹிணமுரஹராங்விஷ்டசிர்ஷாங்க்ரிகீத்வா
ஜந்மத்வம்ஸாத்யபாவாதபிசபசுபதிஸ்ஸர்வதேவப்ரக்ருஷ்ட:॥ [ஜ்।
வைசிஷ்ட்யேயோகிபீடாயிதமுராரிபுச்லிஷ்டபாவேநசம்போஸ்।
ஸ்த்ரீகார்த்தப்ரதிகாயிதஹரிவபுஷாலிங்கிதத்வேநயத்வா।
அப்ரதாந்யாத்விசிஷ்டாத்வயஸமதிகமேதாநவாநாமராதேச்।
சம்போருத்க்ருஷ்டபாவாதபிசபசுபதிஸ்ஸர்வதேவப்ரக்ருஷ்ட:॥என்
னும் பஞ்சரத்தினத்தாலும்,

விஷ்ணுவாதி தேவர்களெல்லாம் முப்புரத்தசுரரைச்
செயிக்க வன்மையிலராய், சிவபிரானைச் சரணடைந்து
வணங்கி, சுவாமீ! நாங்களெல்லாம் பசுக்கள் எங்களுக்கெல்
லாம் ஈசுரர் நீவிரே; அதனால் உம்மைச் சரணடைந்தேம்.
பசுபதியே!. முப்புரத்தசுரரினின்று விரைந்து காத்தருள்
வீர் என்று துதிக்கப்பெற்ற அம்பிகாசமேதராகிய சிவ
பிரானிடத்தில் என்னிதயமானது இனிமையோடு மகிழ்
ச்சி பூண்பதாகும். முப்புரத்தை அழிக்கப்போந்த காலத்
திலே பசுபதியாகிய சிவபிரானுக்கு விஷ்ணு பாணமாகவும்,
பிரமன் சாரதியாகவும், மகாமேரு வில்லாகவும், நாணி
சர்ப்பராசனுகவும், சூரிய சந்திரர் சக்கரங்களாகவும், பூமி
ரதமாகவும் அமையக்கொண்டருளிய அம்பிகாசமேத சிவ
பிரானிடத்திலே என்னிதயமானது இனிமையோடு மகிழ்
ச்சி பூண்பதாகும். ஓர்காலத்திலே நாராயணர் பிருகுமுனி
வருடைய மனைவிமீது தமது சக்கரத்தைப் பிரயோகஞ்செ
ய்து கொன்றுவிடும்போது, அப்பிருகுமுனிவரானவர் சிவ
மந்திரங்கொண்டு தன் மனைவியை எழுப்பிவிட்டுத் தன்
மனைவியைக் கொன்ற லட்சுமீசமேதராகிய அந்த நாராய
ணரை எந்தப்பெருமானுடைய அருளினல் தம் சாபத்து
க்கு இலக்காக்கினரோ, சந்திரசேகரராகிய எந்தப்பெரு
மானை ஆகமாந்தங்களை உணர்ந்தவர் விசுவாதிசர் என்று
புகழ்கின்றார்களோ, அந்த அம்பிகாசமேதராகிய சிவபிரா
னிடத்தில் என்னிதயமானது இனிமையோடு மகிழ்ச்சி

பூண்பதாகும்; எண்ணில்லாத ஆரணங்களையும் புராண
ங்களையும் அருளிய வியாசமுனிவர், ஸ்ரீகாசியிலே ஸ்ரீவிசு
வேசர் சந்நிதியிலே தமது கையை உயர்த்திச் சிவபிரா
னிலும் கேசவரே உயர்ந்தவரென்று கூற, நந்திதேவர்
இட்ட சாபத்தினல் அந்தக்கை நின்றபடியே நிற்குமாறு
எந்தப் பெருமானுடைய அருளினுற் சபிக்கப்பட்டா
ரோ, அந்த அம்பிகாசமேதராகிய சிவபிரானிடத்தில் என்
னிதயமானது இனிமையோடு மகிழ்ச்சி பூண்பதாகும்; ஸ்தா
வர சங்கமங்களையுடைய பூமியைப் படைத்தவராகிய பிர
மனுக்குத் தலைவராயுள்ள விஷ்ணுவானவர் ததீசிமுனிவ
ரோடு ஓர்கால் யுத்தஞ்செய்து, விரைவிலே (எந்தப்பெரு
மானுடைய பக்தராகிய) ததீசியினல் அபசயப்பட்டாரோ
அந்த அம்பிகாசமேதராகிய சிவபிரானிடத்தில் என்னிதய
மானது இனிமையோடு மகிழ்ச்சி பூண்பதாகும்; காதி முத
லிய அசுரர்களை அச்சுறுத்தினவரும், தூணினின்று தோ
ன்றிய இரணியனைக் கொல்லும்பொருட்டு ஸ்தம்பத்திலே
நின்றுதோன்றி இரணியனைக் கொன்றவருமாகிய நரசிம்ம
த்தின் கருவத்தை எந்தப்பெருமானுடைய அம்சரும் லோ
கேசுரருமாயுள்ள சரபமூர்த்தி சிக்ஷித்து அடக்கினரோ
அந்த அம்பிகாசமேதராகிய சிவபிரானிடத்தில் என்னிதய
மானது இனிமையோடு மகிழ்ச்சி பூண்பதாகும்; வைகு
ண்ட லோகத்தின் முதல்வாயிலிலே நின்ற விட்வசேனன் என்
பானுடைய பெரிய மார்பைத் திரிசூலத்தினலே பிளந்து
தாங்கித் தேவர்களிடத்திலே முன்னர் இரத்தப்பிக்ஷை வாங்
கப்பெற்ற பிரமகபாலத்திலே அவன் இரத்தத்தை எந்தப்
பெருமானுடைய அம்சராகிய பைரவமூர்த்தி நிறைக்கப்
போந்தாரோ, அந்த அம்பிகாசமேதராகிய சிவபிரானிடத்
தில் என்னிதயமானது இனிமையோடு மகிழ்ச்சி பூண்பதா
கும்; விஷ்ணுவுடைய புதல்வனுகிய மன்மதனை நெற்றிக்
கண்ணினுற் பொடிசெய்து அவனது சாம்பரைத் தரித்த

Center for Shaiva Studies, Pondicherry Collection

வரும், பிரமனது ஐந்து சிரசுகளில் ஒன்றைச் சிதைத்து
அதனைக் கபாலமாகக் கொண்டவரும், விஷ்ணுமூர்த்தி
யுடைய கண் ஒன்றை மலராகக் கொண்டருளினவருமாகிய
அந்த அம்பிகாசமேதராகிய சிவபிரானிடத்தில் என்னிதய
மானது இனிமையோடு மகிழ்ச்சி பூண்பதாகும்; ஓர் காலத்
துச் சமுத்திரத்திலே தோன்றின ஆலாலவிஷத்தாக் கஞ்சி
விஷ்ணு பிரமன் முதலாயினோர் பெருங்கவலையோடு கை
லாசபதியை யடைந்தபோது, அவர்களை எல்லாம் அஞ்சற்க
என்று அபயஸ்தம் கூறி, அவர்களைத் தத்தம் இடம் சாரும்
படிசெய்து, நஞ்சைத் தமது கண்டத்திலே அடக்கி அருள்
செய்தவராகிய அம்பிகாசமேத சிவபிரானிடத்தில் என்
னிதயமானது இனிமையோடு மகிழ்ச்சி பூண்பதாகும்; சிவ
பெருமான் ஓர்கால் சாத்துவிக ராசச தாமசகுணம் என்ப
வற்றைச் சிருஷ்டித்து அவற்றை மூவர்க்கும் அருளிச்
செய்ய, சாத்துவிக குணம் ராசசகுணம் என்பவற்றை
முறையேயுடைய விஷ்ணுவும் பிரமாவும் தாமசகுண ருத்தி
ரனைத் தனித்தனி தூக்கியெடுக்க வலியிலராய்ப்போக, தாம
சகுணத்தினராகிய ருத்திரர் அந்தப் பிரம விஷ்ணு என்
னும் இருவரையும் எந்தப்பெருமானுடைய அருளினாலே
எடுத்து நடித்தாரோ, அப்படிப்பட்ட அந்த அம்பிகாசமேத
சிவபிரானிடத்திலே என்னிதயமானது இனிமையோடு
மகிழ்ச்சி பூண்பதாகும்; என்னும்—

விஷ்ணுவாத்யாச்சபுரத்ரயம்ஸம்ரணோஜேதுந்நசக்தா:।
ஸ்வயம்சம்புமப்ரணதாவயந்துபசவோஸ்மாகந்த்வமேவமஹேச்வர:।
தேநாஸ்மிஞ்சரணசதாந்பசுபதேபாஹீத்யவோசந்ருதந்தஸ்மிந்।
மேஹ்ருதயம்ஸமோதேநரமதாம்ஸாம்பேபரப்ரஹ்மணி॥

யஸ்யேக்ஷணகமலேக்ஷணபசுபதேரப்ஜோத்பவஸ்ஸாரதிர்।
யஸ்யஜ்யாபணிராமிநோரதபதேயஸ்யேந்துஸூர்யாவுபௌ।
மேருர்யஸ்யசசராஸம்ரதவரோபூமிஸ்துயஸ்யாபவத்தஸ்மிந்।
மேஹ்ருதயம்ஸமோதேநரமதாம்ஸாம்பேபரப்ரஹ்மணி:॥

[ஸாபி:।
யத்பக்தோப்ருகுரிந்த்ராபதிமஹேறாசாடஸ்யலக்ஷ்ய:।
யத்பக்தோப்ருகுரிந்த்ராபதிமஹோசாடஸ்யலக்ஷ்ய:। யஸ்ய ...
ப்ருசம்க்ருத்வாஸ்வாந்தயித்வாம்மிருதாம்ஸ்வமந்பிச்சேஸவைரயுக்தா
யத்தாராதிபகூடமாகம்சிரோவிச்வாதிகம்காயதேதஸ்மிந்।
மேஹ்ருதயம்ஸமோதேநரமதாம்ஸாம்பேபரப்ரஹ்மணி:।

கோவிந்தாததிகம்நதைவதமிதிப்ரோச்சார்யஹஸ்தாவுபா।
வுத்ருத்யாதசிவஸ்யசந்நிதிகதோவ்யாஸோமுநிநாம்புர:।
யஸ்யஸ்தம்பிதபாணிராநதிக்ருதாநந்திச்வரோணுபவத்தஸ்மிந்।
மேஹ்ருதயம்ஸமோதேநரமதாம்ஸாம்பேபரப்ரஹ்மணி:।

விஷ்ணுஸ்தாவரஜங்கமாத்மகஜகத்ஸ்வாமீவிரிஞ்சாதிகோ।
யுத்பந்தேநஸஹாஸமோச்வரரிபுர்யுத்தம்தததேநஸ।
க்ருத்வாதிக்ரமஹோத்விஜாதஜபயந்தஸ்மாத்கதோப்ருசந்தஸ்மிந்।
மேஹ்ருதயம்ஸமோதேநரமதாம்ஸாம்பேபரப்ரஹ்மணி:॥

காதிநாஞ்சபயங்கர:ஸ்வமஹஸாக்ருஷ்ணச்சக்ரத்வய
ப்ருசம்கோபாந்தோஜிததாநவோநரஹரிர்யஸ்யாம்ரபூதேநஸ:।
லோகேசச்சரபேணசிக்ஷிதமதோபூல்லிலயார்த்தசக்திணத்தஸ்மிந்।
மேஹ்ருதயம்ஸமோதேநரமதாம்ஸாம்பேபரப்ரஹ்மணி:॥

விஷ்வக்ஸேநமபீந்திராபதிஸமந்தம்ரக்தபிக்ஷாச்சலாத்।
ஸம்ஹ்ருத்யாதஸபைரவச்சசிதரோயஸ்யாம்சபூதோஜல।
ப்ரஹ்மாத்யமரசிக்ஷகஸ்யபலிநோவிஷ்ணோமதஞ்சாஹரத்தஸ்மிந்।
மேஹ்ருதயம்ஸமோதேநரமதாம்ஸாம்பேபரப்ரஹ்மணி:॥

யேநாபாதிதமங்கஜாங்கபசிதம்திவ்யாங்கராகைஸ்ஸமம்।
யேநாஸ்வீக்ருதமப்ஜஸம்பவசிரஸ்ஸௌவர்ணபாத்ரைஸ்ஸமம்।
யேநஸ்வீக்ருதமப்ஜஸம்பவசிரஸ்ஸௌவர்ணபாத்ராஸ்ஸமம்தஸ்மிந்।
யேநாங்கீக்ருதமச்யுதஸ்யநயநம்பூஜாரவிந்தைஸ்ஸமம்தஸ்மிந்।
மேஹ்ருதயம்ஸமோதேநரமதாம்ஸாம்பேபரப்ரஹ்மணி:॥

விஷ்ணுப்ரஹ்மஸுராதிபப்ரப்ருதயஸ்ஸங்கோபிதேவாப்ருசம்।
ஸம்பூதோஜ்ஜ்வலதேர்விஷாத்புரிபவம்ப்ராப்தாயமேத்யேச்வரம்।
ஸ்வஸ்வஸ்தாந்நியோஜ்ஜிதாகதஸாசஸ்வஸ்தாபபூர்ச்த்ருடாஸ்தஸ்மிந்।
மேஹ்ருதயம்ஸமோதேநரமதாம்ஸாம்பேபரப்ரஹ்மணி:॥

ஸ்ருஷ்ட்வாயஸ்த்ரிகுணாந்விதாக்ருமதுபிச்ஞாயபுத்தேப்யஸ்ஸிவோ।
ததத்வைதாநததாங்க்ரஹீதுமநயோஸ்ஸத்யாபுநர்ஹிநயோ:।
தாப்யாம்ஸாகமஹோகுணத்ரயப்ருதே ருத்ராயஸோம்யம்ததௌ தஸ்மி
[ந்।
மேஹ்ருதயம்ஸமோதேநரமதாம்ஸாம்பேபரப்ரஹ்மணி:॥

என்னும் பொருளைத் தருகின்ற இந்த பத்துசுலோகங்களாலும், அரிஹரதாரதம்மியமென்னு நூலாலும், சிவபரத்துவஸ்தாபனஞ்செய்தனர். இதுநிற்க,

ஸ்ரீசுருதிசூக்திமாலை முதலியவைகளால் மகாதீரராகிய அரதத்தாசாரியர் சிவபெருமானுடைய பரத்துவஞ் சாதித்தபோது, அவருடைய திருவருளினாலே ஒழுகக்காய்ந்த அயபீடமானது சீதளமாகிய சந்தனச்சேற்றை ஒத்துக் குளிர்ந்தது. அவர் இவ்வாறு வேதப்பிரமாணங்கொண்டும், புராணப் பிரமாணங்கொண்டும், ஸ்மிருதிப் பிரமாணங்கொண்டும் சிவபிரானுடைய பரத்துவத்தை ஸ்தாபனஞ்செய்து; பண்டிதர் சபையிலே வைதிகாக்கிரராய் பிரகாசித்தார். சபையிலுள்ள பெரியோரெல்லாம் வாசுதேவர்குமாரராகிய அரதத்தாசாரியரைச் சிவபெருமானேயாமென்று துதித்து, அவருடைய திருவடித்தாமரைகளிலே வீழ்ந்து நமஸ்கரித்துத் தத்தம் கிரகம் சார்ந்தார். பின்னர் அரதத்தாசாரியர் காவேரியிலே போய் ஸ்நானஞ்செய்து, வைதிக சந்தியா கருமங்களை முடித்து, சனங்கள் நாற்புடையிலும் சூழ்ந்து நிற்ப, அன்பினோடுஞ் சிவார்ச்சனை செய்தார். அதன் பின்னர் தாயானவள் தனது புதல்வனைக் கட்டித்தழுவி உச்சிமோந்து, துன்பத்தினாலும் இன்பத்தினாலும் நேர்ந்த கண்ணீரினாலே தன்குமாரனை அபிஷேகித்து, பாலனே! நீ மிகுதியும் பசியினாலே வாடினை! என்கண்மணியே! வீட்டுக்குப் போசனஞ் செய்யுமாறுவருதி என்றாள். இங்ஙனங் கூறிய தம்மினிய தாயாருடைய வசனத்தைக்கேட்டு, அவர் வீடு சார்ந்து சிவபிரானைத் தியானித்துக்கொண்டு சிவநிவேதனத்தை அயின்றார். அக்காலந்தொடுத்து எக்காலமுந் திரிகாலமுஞ் சிவபூசைசெய்து, சிவஸ்தோத்திரஞ் செய்து இன்பத்தோடு வசித்தார். அப்போது அவர் பிதாவாகிய வாசுதேவர் தமது புதல்வருடைய அருள்வாக்கின் வன்மையை வியந்து, அவரை நோக்கி யான் அறியாமையினாலே செய்த

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வைகளை க்ஷமிக்குதிர் என்றார். தப்த முத்திரைகளாகிய
சங்கு சக்கரங்களை யுடையரும், ஊர்த்துவ புண்டர
முடையருமாகிய வைஷ்ணவர்கள், அவரை நோக்கி கா
ருண்ணிய மூர்த்தியே! எங்களுக்குப் பிரயாச்சித்தம் எ
ன்னை, எங்களுக்குப் பரலோககதி எங்ஙனமாகும்? என்று
வேண்டினார்கள். அதற்குப் பாலர் ஸ்மிருதிகளும் பெரியோ
ர்களுஞ் சொல்லிய பிரயாச்சித்தமே உங்களுக்காகும். எங்
ஙனமெனில், உங்கள் தேகத்தைச் சங்கு சக்கரமுத்திரைக
ளினாற் சுட்டமைக்குப் பிராயாச்சித்தம் விபூதி உத்தூளன
திரிபுண்டரமேயாம். எவ்வகைப்பட்ட பாவங்களையும் ஒழி
த்தற்கும், பிராமணர்முதல் சண்டாளர் இறுதியாம் எல்
லோரையும் பாசத்தினின்று முத்தராக்குதற்கும் விபூதியே
சிறந்த சாதனமென்றுகொண்டு பெரியோர் தரித்தார் என்
று திருவாய்மலர்ந்து, சிவபெருமானுடைய செவ்விய ஐந்
தமுகங்களுள்ளே பாவத்தைப் போக்கும் அகோர முகத்
தைத் தியானித்து, முன்னே தமது பிதாவுக்கும், பின்னர்
வைஷ்ணவப் பிராமணர்களுக்கும் சிவத்துவப்பேற்றிற்கு
அறிகுறியாகிய விபூதியிட்டு, திருவருட்பேற்றிற்கு அறி
குறியாகிய உருத்திராக்ஷமுந்தரித்து, பஞ்சாக்ஷரோபதேச
ஞ்செய்து, சிவபூசை எழுந்தருளச்செய்து, சிவபூசாவிதியும்
உபதேசித்தருளினார். அங்ஙனம் உபதேசிக்கப்பட்ட வை
ஷ்ணவப் பிராமணர்களெல்லாம் அரதத்தாசாரிய சுவாமிக
ளால் திரிகாலங்களிலும் உத்தமோத்தம சிவபுண்ணியமா
கிய சிவ்பூசைசெய்யும் பெரும்பாக்கியம் படைத்துக் காலங்
கழிப்பாராயினர்.

அரதத்தாசாரியார் பர்ல்பருகிவரும் பாலியாவஸ்தை
யிலேதானே சிவபெருமானிடத்திலே திருவருட்பிரசாதம்
பெற்றமையும், பிறரொருவரிடத்திலே போய் வித்தை
கல்லாது சிவப்பிரசாதத்தினாலே சகல வேதசாஸ்திரங்களை
உணர்ந்தமையையும் சிவலிங்கபூபதி என்னும் அரசன் கேள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வியுற்றான். கேட்டபோதே சிவபக்தனும், சிவபெருமானுடைய திருவடித்தாமரையேயன்றி மற்றொன்றனையும் மறந்து நினையாதவனுமாகிய அவ்வரசன் விம்மிதமடைந்து, அரதத்தாசாரிய சுவாமிகளை அடைந்து, அவரது திருவடித்தாமரைகளைத் தமது சிரசினால் தாங்கி, எனது நாதரோ! மதுராபுரிநாயகராகிய சுந்தரேசப்பெருமான் பாண்டிநாதனாகிய என்னைக் காக்கும்பொருட்டு இந்த வடிவத்தோடு ஈண்டு எழுந்தருளினாரோ என்று சொல்லித் துதித்தான். அப்போது அங்குநின்ற வித்துவப் பிராமணர்கள் அரசனைநோக்கி, அரசனே! நீவிர் சொல்லியது ஒக்கும். அங்ஙனமில்லையாயின், வேதாதிகளையெல்லாம் ஓதாதுணர்ந்து எல்லோரையும் வாதிலே செயிக்க, அரதத்தாசாரிய சுவாமிகளுக்கு வன்மை எங்ஙனம் உண்டாகும்! என்றார்கள். அந்த வித்துவான்கள் இங்ஙனம் சொல்லியபோது, "நேத்ரகமலத்தினாலே சிவபெருமானை முன்னரோ பூசித்த மகா விஷ்ணுவே லோகத்தைக் காக்கும்பொருட்டும், சிவபக்தியை விளக்கும்பொருட்டும், வைதிக நெறியை நிறுத்தும்பொருட்டும் பின்னரும் பிராமணகுலத்திலே அரதத்தர் என்னும் நாமத்தோடு திருவவதாரஞ் செய்தார்" என்று சிவபெருமானுடைய திருவருளினாலே அசரீரிவாக்கு அங்கு எழுந்தது. சனங்கள் அந்த வார்த்தையைக்கேட்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியுமெய்தி வேதசொரூபியாகிய அவருடைய பாதயுகளங்களிலே வணங்கினார்கள். அந்நகரத்துப் பிராமணர்களும் அவரைத் தன்னியரென்று வணங்கினார்கள். அதன்பின்னர் அரசனும் அவரைச் சிவபிரானே என மதித்து வணங்கி மண் பொன் வஸ்திரம் என்பவற்றை உபகரித்து, சுவாமீ! உம்மையன்றி எனக்கு மற்றோர் தெய்வமில்லை; ஆதலில், அடியேன்மீது நாதராகிய நீவிர் திருவருள் பாலித்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தான். அப்போது ஆசாரிய சுவாமிகள் அவனைநோக்கி, அரசரே! உம்மை ஒத்தார்

திரிபுவனங்களிலும் இல்லை. நீவிர் சிவகிருபையை எய்தப்பெற்றீராதலில், சைவராதற்குரிய அருள்பூண்டீராயினீர் என்று திருவாய்மலர்ந்து, அவருக்கு ஸ்ரீபஞ்சாக்ஷரோபதேசஞ் செய்து, ஸ்படிக லிங்கபூசை யெழுந்தருளச்செய்து கொடுத்தார். அரசர் அதுகண்டு மகிழ்ந்து அவருடைய திருவடிகளிலே சுவர்ண புஷ்பங்களை வேண்டியமட்டும் இறைத்தார். சிவபெருமான் குபேரனோடு சிநேகம் பெற்றாற்போல், ஆசாரியசுவாமிகளும் சிவலிங்கபூபதி என்னும் அரசனோடு சிநேகமுற்றிருந்தார். ஆசாரியர் அரசனுக்கு நெற்றியிலே விபூதிதரித்து, அரசரே! நீர் சிவபூசை செய்து, சிவகைங்கரியஞ் செய்துகொண்டிருக்குதிரென்று ஆஞ்ஞை செய்தருளினார். அரசனும் அதற்கியைந்து அன்பினோடு அவரைப் பிரதக்ஷிணஞ் செய்து ‘நமஸ்கரித்து அநுமதி பெற்றுக்கொண்டு தனது சேனையோடு அரண்மனை சார்ந்தான்.

வெள்ளிய பல்லும், வெள்ளிய கோவணமும், வெள்ளிய பூணூலுமுடையராய், தண்டகமண்டலம் - கிருஷ்ணாசனம்-மௌஞ்சிமாலை-உருத்திராக்ஷப்-தர்ப்பை - பவித்திரம் என்பவைகளைத் தரித்து, அரதத்தாசாரியசுவாமிகள் பிரதமாச்சிரமமாகிய பிரமசரியத்தை அநுஷ்டிப்பாராயினார். காலை மாலைகளிலே சமிதாதானஞ் செய்வார். தமது லோககுருவாகிய தக்ஷிணாமூர்த்தி சந்நிதானத்திலே எப்பொழுதும் எழுந்தருளியிருந்து, வேதாத்தியயனத்தினாலே முனிவர் கடன் கழித்தார். பிதுர்க்கடன் தீர்க்கும் கிரகஸ்தாச்சிரம விரதந் தொடங்குதற்கு முன்னே கோதானஞ் செய்து பிரமசரியவிரதங்களைச் சமாப்திசெய்தார். இதுநிற்க.

அந்தக் கம்சாபுரத்திலே சதாசாரமுடையரும், சாந்தரும், பஞ்சயஞ்ஞம் செய்பவரும், அன்பினோடு திரிகாலமும் சிவபூசை செய்பவரும், வைதிக விபூதியினாலே உத்தூளனஞ் செய்பவரும், உருத்ராக்ஷதாரணஞ் செய்பவரும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பஞ்சாக்ஷர செபஞ் செய்பவரும், சிவசந்நிதியிலே பிரதக்ஷி
ண நமஸ்காரஞ் செய்பவரும், சிவனடியார்க்குத் திருத்
தொண்டு செய்பவருமாகிய சுப்பிரதீகர் என்னும் பிராம
ணர் ஒருவர் இருந்தார். வாதுலகோத்திரம் என்னுஞ் சமு
த்திரத்துக்குக் கமலாக்ஷி என்னுஞ் சந்திரன் அவருக்கு
மனைவியாய் உதித்தது. இக்கமலாக்ஷி என்பார் தமது நாய
கரை மிகுதியும் பிரீதிசெய்து, அருந்ததி அனசூயை என்
போர் கற்பினிற்சிறந்து, அதி சௌந்தரியமுடையராய் நா
யகருக்குத் திருத்தொண்டு செய்தலில் மிகு பற்றுடையரா
யொழுகினர். பூமிதேவியானவள் இரத்தினந் தரித்தாற்
போல, இவ்வம்மையார் திருவயிற்றிலே ஓர் கர்ப்பம் எய்
திற்று. இவருடைய லட்சுமீகரமாகிய உதரமானது பெரு
க்கு மியல்பு பூண்டது; அவர் நாயகரும் சீமந்தாதி வைதிக
கன்மங்களைச்செய்தார். பின்னர் மகா சௌந்தரியமான
பெண்குழந்தை ஒன்று லட்சுமீகரத்தோடு பிறந்தது. அப்
பெண்குழந்தை பிறந்ததினத்திலே பிதாவாகிய சுப்பிரதீகர்
மங்களோற்சவம் நடத்தினர். சிவபக்தர்களுக்கும் பிராமணர்
களுக்கும் தனதான்னியங்களை வேண்டியவாறு அளித்
தார். தமது புதல்வியாரை வளர்த்துச் சாதகருமம் நாம
கருமம் முதலியன செய்தார். புதல்வியாருக்குக் கமலவல்லி
என்று நாமகரணஞ்செய்தார். அக்கமலவல்லியும் பூஷணங்
களால் அலங்கரிக்கப்பட்டுத் தவழ்ந்துசென்றும், சிறுபெ
ண்களோடு மண்விளையாட்டயர்ந்தும், மழலை வார்த்தை
பேசியும் தமது தந்தை தாயரைப் பிரீதிசெய்து வந்தாள்.
இரத்தின மாணிக்க மேகலையினாலும், பலவித சித்திரமா
கிய பட்டுவஸ்திரங்களினாலும், புஷ்பமாலைகளினாலும் சிற
ந்து, கண்டோர் யாரும் அதிசயமுறும்படி அக்குழந்தை
விளங்கினள்.

அக்காலத்திலே சிவலிங்கபூபதியானவர் கஞ்சாபுரத்துக்
கு மீட்டும் வந்து ஆசாரியசுவாமிகளை நமஸ்கரித்து ஸ்தோத்

திரஞ்செய்து அவர் தந்தையாராகிய வாசுதேவரைநோக்கி,
எமது ஆசாரியருக்கு விவாகஞ் செய்தற்குரிய காலஞ் சமீ
பித்ததே என்று சொல்ல, சமீபத்திலே ஆங்கிருந்த சுப்பி
ரதீகர் அரசனை நோக்கி, தாம் தமது புத்திரியை விவாகஞ்
செய்து கொடுப்போம் என்றும், அதுநோக்கித் தாமசஞ்
செய்யவொண்ணாதென்றும் அறிவித்தார். உடனே விவாக
மகோற்சவஞ்செய்ய ஆரம்பித்து, சோதிடரை வருவி
த்து; முகூர்த்தஞ் நிச்சயித்து, பிதா முதலாயினரோடு தம
து பந்துக்கள் யாவரும் வரும்பொருட்டு விவாகபத்திரம்
அனுப்பிவிட்டு விரதாதிகளையும் கோதானாதிகளையும் நடா
த்தி, கஞ்சாபுரத்து வீதிகளை வாழை கமுகுகள் நாட்டி,
தோரணங்களையும் கொடிகளையும் தூக்கி அலங்கரித்தார்.
அன்றியும் கம்சாபுரத்தார் தத்தம் கிரகங்களைச் சிறப்பித்து
கோலங்களிட்டு சித்திரித்து அலங்கரித்தார்கள். பந்துக்க
ளெல்லாம் பட்டுக்களையும்,பீதாம்பரங்களையும், விலையுயர்ந்த
மற்றைய பரிசுகளையுங்கொண்டு கல்யாண வீட்டுக்கு வந்
தார்கள். நானாதேசங்களினின்றும் போந்துவந்த ஜனங்க
ளினாலே கல்யாணமண்டபம் நிறைந்து போயிற்று. மகா
யாகங்களிலே எவ்வளவு சம்பாரங்கள் வேண்டப்படுமோ
அவ்வளவு பொருள்களினாலும் கல்யாண மண்டபத்தைச்
சிவலிங்கபூபதி நிறைப்பித்தார். கம்சாபுரத்திலுள்ள கிரகங்
களெல்லாஞ் சிறப்பினால் வாய்ந்தன. பிராமணர்களெல்லாம்
ஒருங்கு குழுமிய விடத்திலே விவாகத்தின் பொருட்டுப்
புத்திரர் அங்குரார்ப்பணஞ்செய்தார். அவர் தந்தையாகிய
வாசுதேவரும் பற்பல இடங்களினின்றும் போந்த பந்துக்
கள் முதலாயினோரை யெல்லாம் பற்பல உபசாரங்களி
னாலே மகிழ்வித்தார்.

சுப்பிரதீகரும் புதல்வியின் விவாகத்தின் பொருட்டுத்
தமது கிரகத்தை அலங்காரஞ்செய்து முத்துச்சரங்களினா
லும், தீபஸ்தம்பங்களினாலும், பூரணகும்பங்களினாலும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சந்தன அகிற்புகைகளினாலும், விவாகசாலையை மேன்மை
வாய்ப்பச் சிறப்பித்தார். இவருடைய பந்துக்களெல்லாம்
நானாவித வஸ்திராபரணாதிகளால் அலங்கரித்துக்கொண்டு
வந்தார்கள். விவாகசாலையின்கண்ணே பலவகை வாத்தியங்
களும் வேதங்களும் கோஷிக்க, வேதோக்தமாகப் பிராம
ணர்கள் புண்ணியாகவாசனஞ் செய்தார்கள்.

விவாகத்துக்கு முதற்றினத்திலே ஆசாரிய சுவாமிக
ளுக்கு இரக்ஷாபந்தனமும், அங்குரார்ப்பணமும், சமாவர்த்
தனமும் விதிப்பிர்காரஞ் செய்து பிராமணர்களுக்குத் திர
வியங்களை இறைத்தார்; விவாகசபை மிகவும்பிரகாசித்தது.
அக்கினியை ஓம்ப, அது வளர்ந்து வலஞ்சுழித்து ஓங்கிவா
ய்ந்தது. புஷ்பதூளிகளெல்லாம் மலிந்தன. விபூதி ருத்தி
ராக்ஷ தாரணர்களாகிய சிவபக்தர்கள் பிரகாசித்தார்கள்.
தென்றல் மந்தமாய் வீசிற்று. பிராமணர்கள் அறுசுவையோ
டும் போசனஞ் செய்து வந்திருந்து, இதற்கு முன்னர் இப்
படிப்பட்ட இனியாசங்களை புசித்ததேயில்லை என்று புகழ்
ந்து பாராட்டினார்கள். அவரெல்லாம் மிக திருப்திகாமு
டையராய் அர அர அர என்று முழக்கினார்கள். சிவபக்
தர்களை உபசரித்தார்கள். வதூவரன் என்னும் இருவரும்
அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்ட பாலிகையைச் சல முத
லிய பிரயோகஞ்செய்து வளர்த்தார்கள். வாசுதேவரும் சுப்
பிரதீகரும் முறையே தத்தம் புதல்வர் புதல்வியருடைய
அங்குரார்ப்பண பாலிகையைக்கண்டு மகிழ்ந்தார்கள்.
வாசுதேவர் தமது புதல்வரை விவாகோற்சவத்திற்கு உசி
தமாகிய உயர்ந்த வஸ்திரங்களினால் அலங்கரித்து, கல்யா
ணவேதி மத்தியிலிடப்பட்ட திவ்ய ஆசனத் திருத்தி, பரி
மள திரவியங்கள் கலந்த சந்தனம் பூசி, சுகந்த ஜாதி புஷ்ப
மாலைகள் சூட்டி, பாதரசம் கடிசூத்திரம் முத்தாரம் நக்ஷ
த்திராகார மாலை என்பவைகளால் அலங்கரித்து, சுவர்ன
மும் முத்தும் கலந்து அமைக்கப்பட்ட உருத்திராக்ஷமாலை

களைச் சிரசிலும் உரத்திலும் புயத்திலும் பொருந்த அணி
ந்து, விரல்களை மோதிரங்களினாலும், காதுகளை இரத்தின
குண்டலங்களினாலும் அலங்கரித்து, நெற்றியை நல்ல
வெள்ளிய விபூதியினாலே விளங்கச்செய்து, பொன்னாற்
செய்து முத்துக்களால் நிருமித்து அமைக்கப்பட்ட கிரீட
த்தைச் சிவபெருமானால் ஞானபிஷேகஞ் செய்யப்பட்ட
அரதத்தாசாரியசுவாமிகள் சிரசிலே சூட்டினார்கள். அவ்
வாறு மணக்கோலஞ் செய்யப்பட்ட ஞானமூர்த்தி அழகு
க்கு அழகு செய்தாலொப்ப விளங்கினமையைப் பந்துக்க
ளானோரெல்லாங் கண்டு மகிழ்ந்தார்கள். சபையினரால்
திருஷ்டி தோஷம் விளையாவண்ணம் விபூதியையே அவரு
க்குப் பின்னும் அணிந்தார்கள். குருமூர்த்திகளாகிய ஆசா
ரியருடைய திருமேனியை தரிசித்துப் பல்லோர் பணிந்
தார்; பல்லோர் துதித்தார்; பல்லோர் சேவித்தார். இங்ங
னம் நிகழ; ஆசாரியர் அக்கினீசுவரப் பெருமானைத் தரிசி
க்குமாறு பாதசாரியாய்ச்சென்று, ஆலயத்தைப் பிரதக்ஷி
ணஞ்செய்து, சுவாமியை நமஸ்கரித்துக்கொண்டு கிரகத்து
க்கு மீண்டார். அப்போது அவரைப் பின்னர் முத்துச்சி
விகையில் எழுந்தருளச்செய்து கிராமப்பிரதக்ஷிணஞ் செய்
யத்தொடங்கினார்கள். அப்போது பந்துக்களாயினோரெல்
லாம் தத்தம் வாகனங்களிலிவர்ந்து சென்றார்கள். சங்கம்-
காகளம்-பேரி-மிருதங்கம்-சின்னமுதலிய வாத்தியகோஷ
ங்களால் திக்குகளெல்லாம் நிறைந்தன; பட்டுக்கொடிகள்
ஆகாயத்திலே மலிந்தன; அநேககோடி சாமரங்கள்
யாண்டும் அசைந்தன; சோமயாசிகளெல்லாம் அக்கி
னிகோத்திர சகிதராய் மனைவியரோடு புறப்பட்டார்கள்;
அநேக கானங்கள் யாண்டுமெழுந்து செவிகளிற் புகுந்து
சுவைத்தன; புருடரும் பெண்களும் சிவசோபையோடு விள
ங்கினார்கள்; சிவலிங்கார்களும் ஆண்டே குழுமினார்கள்;
சாமரங்களும் விசிறிகளும் சிறக்க நாகவாகனத்தின்மீது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வெண்கொற்றக்குடை விளங்குவது சமுத்திரத்தில் சந்திரோதயம் விளங்கினமையை நிகர்த்தது; வெண்சாமரங்களும் முத்துமாலைகளும் பல்லக்குச் சாளரங்களும் வாயுவினாலே அசைந்து சமுத்திர அலைகளை ஒத்தன; ஆசாரிய சுவாமிகள் வீதியிலே எழுந்தருளும்போது நகரவாசிகள் தத்தம் வீடுகளிலிருந்து பழங்களும் நாளிகேரங்களுங்கொண்டு உபசரித்துச் சிறப்பித்தார்கள்; ஆசாரியர் பந்துக்கள் சிவனடியார் முதலாயினாரோடு சுப்பிரதீகருடைய விவாக சாலையை நோக்கி எழுந்தருளினார். அப்போது சுப்பிரதீகரும் தமது பந்துசனங்களோடு அவரை எதிர்கொண்டு உபசரிக்க, அவர் கிரகத்தினுள்ளே பிரவேசித்து, பூஷணங்களுக்கெல்லாம் அழகை விளைக்கும் பிரகாசத் திருமேனியையுடைய அவ்வாசாரியர் முத்துப்பல்லக்கினின்றும் இழிந்தருளி, பட்டுநடைப் பாவாடையின்மீது நடந்து போந்து விவாகமண்டபத்தை அடைந்து, வேதிகையி லிடப்பட்ட சுவர்ணாசனத்தின்மீது எழுந்தருளினார்.

சுப்பிரதீகரும் தமது புத்திரியைச் சுவர்ணபூஷணாதிகளால் அலங்கரித்து ஊஞ்சல் மஞ்சத்திலிருத்தினார். வதுவரர் இருவரும் தம்முள் மாலை மாற்றிக்கொண்டார்கள்; ஆசாரியரோடு அவர் மனைவியாரையும் உடன் அமரச்செய்து இருவர் வம்சாவளிநாமங்கள் சொல்லி ஊஞ்சல் ஆட்டினார்கள்; மாமி முதலாயினோர் வதுவரர் பாதங்களைப் பால்கொண்டு பிரக்ஷாளனஞ்செய்து அவ்விருவருக்கும் நீராஞ்சனஞ் சமர்ப்பித்துப் பிரதக்ஷிணஞ் செய்தார்; அதினின்றும் இறங்கிச் சபையின்கண்ணே நானாவித வாத்தியங்கள் கோஷிக்கக் கல்யாணமண்டபஞ்சார்ந்து நவரத்தின ஆசனத்தின்மீது வீற்றிருந்தார்கள். தமது மனைவியாரோடு அவ்விடத்தே சென்று சுப்பிரதீகர் தமது புத்திரியினுடைய வலக்கையைத் தமது கையினாலே பிடிப்ப, மனைவியார் கரகத்தினின்று தீர்த்தஞ்சொரிய, பழ முதலியவற்றோடு

தமது புத்திரியைப் பரமசிவரூபமாய் எழுந்தருளிய உமக்குத் தந்தேம். என்று தமது கோத்திரத்தைச்சொல்லி ஆசாரியர் கையிலேகொடுத்து, அவர் வலப்புறத்திலே கமலவல்லியை இருத்தினார். பவளக்கொடிகளெல்லாம் நாட்டப்பட்ட கல்யாணமண்டபம் மிகுந்த சோபையுற வாத்திய கோஷங்களால் விளங்கிற்று. சங்குகள் எங்குந் தொனித்தன. வேதங்கள் கோஷித்தன. வரர் அக்கினியிலே ஓமஞ்செய்து அதனை வளர்த்தார். வதுவரர் இருவரும் தம்மிரு கரங்களினால் பொரியை அக்கினியிலிட்டார்கள். வரர் தமது கையினால் வதுவின் கையைப்பற்றி அஷ்டமூர்த்தியாகிய சிவாக்கினியைப் பிரதக்ஷணஞ்செய்து, பின்னரும் தமது பாரியாரோடும் சிவபிரான் திருவடிகளை அடைவேன் என்னுந் தியானத்தோடு எஞ்சிய கன்மங்களையு முடித்தார். இங்ஙனம் மகானாகிய அரதத்தாசாரியருடைய விவாகம் மிகு விமரிசையோடு முற்றியது.

கல்யாணத்துக்கு வந்தோர் அனைவரும் இந்தப்பெருமான் சமஸ்த லோகத்தையும் ரக்ஷிக்கும் பொருட்டே எழுந்தருளினாரென்று களிப்பினோடும் ஆரவாரித்துப் புகழ்ந்தார்கள். பின்னர் வதுவரர் இருவரும் வீதிவலம் வருவாரெனக்கொண்டு நகரவாசிகள் தத்தம் கிரகங்களை அலங்கரித்தார்கள். கன்னியர் கர்ப்பூரம் பச்சைக்கர்ப்பூரம் பொரிமுதலியவற்றைக்கொண்டு புறப்பட்டார்கள். வீதிகளைத் தூய்மைசெய்து சந்தனக்குழம்பு தெளித்து, சூரியகிரணங்கள் வீழாவண்ணம் விதானங்கள் அமைத்தார்கள். தேவர்கள் புஷ்பமழை வருஷித்தார்கள். வாயு சந்தனப்புஷ்ப சுகந்தங்கொண்டு யாண்டுஞ் சேவித்தான். பூருவபுண்ணியம் ஞானிகளை உபசரித்தல்போல, நகரத்தார் ஆசாரிய சுவாமிகளை மங்களத்தோடு உபசரித்தார்கள். அரதத்தாசாரியரும் அவர் மனைவியாரும் ஊஞ்சல் விட்டிறங்கி விவாகசாலைக்கு வெளிநீங்கி, வாகனத்திலிவர்ந்து கிராமப்பிரதக்ஷிணஞ்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

செய்து, பின்னர் அக்கினீசுவரர் ஆலயத்தை வலம்போந்து வணங்கி, உமாதேவியாருக்கும் சிவபெருமானுக்கும் புஷ்பாஞ்சலி எடுத்து, திருவருள் பெற்று ஆலயத்துக்குப் புறத்தே வந்து, வாகனமேற்கொண்டு வாத்திய கோஷங்களோடு தமது கல்யாணமண்டபம் நோக்கி வந்து, 'ஆராத்திரிகம் நீராஞ்சன முதலியன பெற்று, ஔபாசனாக்கினியோடு கிரகப்பிரவேசஞ்செய்து, பிராமணர்களுக்கு விருந்து முதலாயின நடத்தி, அவர் ஆசீர்வாதம் பெற்று, அவர்களிஷ்டப்படி சுவர்னதானாதிகளைக்கொடுத்து மகிழ்வித்தனுப்பினார். இங்ஙனம் அரதத்தாசாரியர் கமலவல்லியாராகிய மனைவியோடமர்ந்து சிவாராதன முதலிய செய்து இல்லறம் நடாத்துவாராயினார்.

அரதத்தாசாரியர் உதயகாலத்தில் எழுந்து சிவத்தியானஞ்செய்து, தந்த தாவனமுதலியனசெய்து, ஸ்நானஞ்செய்து, சந்தியாவுபாசித்து, காயத்தரி செபம் ஓமம் சிவபூசை முதலியன செய்து, கிரகஸ்தாச்சிரம விஷயத்தை விசாரித்துக்கொண்டு, மௌனத்தோடு போய் அக்கினீசுவரரை வணங்கி, பின்னர்த் திருக்கோடிகா, திருவாலங்காடு, திருவாவடுதுறை, ஆபத்சகாயேசுரம், பிராணேசுராலயம், ஆம்மிரவனேசுரம், அக்கினீசுரம் என்னும் எழுஆலயங்களையும் வணங்கி, மாத்தியான்னிகம் பிரமயஞ்ஞும்முடித்து, மத்தியான சிவபூசைசெய்து, வைசுவதேவஹோமஞ்செய்து, துவாரத்து அதிதிகளை நோக்கி உபசரித்து, பிராணாகுதி வாயிலாகச் சிவநிவேதனம் அயின்று, பிராமணர்களுக்குத் தாம்பூலம் அளித்து, சாத்துவிக சிவபுராணங்களைப்படித்து, தியானத்தோடு மாலையிலிருந்து, அக்காலையில் சந்தியை உபாசித்து, காயத்திரி செபம் ஓமம் முதலியனசெய்து, சிவாலயதரிசனஞ் செய்துகொண்டு, கிரகத்துக்கு வந்து சிவபூசை வைசுவதேவஹோமஞ் செய்து, அவர்களுக்குத் தாம்பூலம் கொடுத்து, தாமும் தாம்பூலம் சுவீ

கரித்து, சிறிதுபோது பிராமணர்களோடு சிவகதைகளைச் சொல்லிச் சிந்தனை செலுத்தி, இதயபத்திலே உமாதேவியாரோடு சிவபெருமானைத் தியானித்து, இராத்திரி சூக்தத்தையும் படித்துச் சயனஞ்செய்வார். இருது காலங்களிலே பத்தினி கமனஞ்செய்து, சிவ பாவனையோடு கிரகஸ்தாச்சிரமத்தை நடாத்துவாராயினார்.

இதுநிற்க, ஒருநாள் அக்கினீசுவரர் ஆலயத்துக்குத் திருத்தொண்டு செய்யும் சில கணிகையர் ஓர்நாள் இராத்திரி கோவிற்றிருத்தொண்டுக்கு வராமையால் கோயிலதிகாரிகள் அவர்களை மறுநாட்காலையில் வருத்திக் கோவில் மண்டபத்தின்மேலே வெய்யிலிலே நிறுத்தி மலசல மோசனமின்றிப் பசியோடு வருந்தும்படி பிடித்தார்கள். மத்தியானமாயும் விடுபோகப்பெறாமல் இங்ஙனம் பிடிக்கப்பட்டு அவர்கள் அழும்போது, வழக்கமாய்த் தாம் வரும் காலந்தப்பி மத்தியானத்துக்குப்பின் அரதத்தாசாரியர் ஆலயசேவையின்பொருட்டு அங்கே எழுந்தருளினார். அந்தக்கணிகையர் ஆசாரியரைத் தரிசித்து அத்துன்பத்தினின்று தங்களை விடுவிக்கும்பொருட்டு அழுது பிரார்த்தித்தார்கள். அப்பொழுது அவர் பக்கத்தினின்றவர்கள் வாயிலாக அக்கணிகையர்க்கு நிகழ்ந்த சமாசாரத்தைக்கேட்டுத் தாம் பூமியிலே வீழ்ந்து தம்முடைய வயிற்றிலே அடிக்கடிமோதி, சிரசிலும் மோதி அழுது மூர்ச்சையினாலே நிலத்திலே விரைவில் வீழ்ந்தார். சிலர் அவர் நிலைமை நோக்கிப் பரிகசித்தார். வேறு பலர் இவர் இங்ஙனஞ்செய்தலை நிச்சயித்தறிதற்கு நமக்கு வன்மையில்லை என்றார்கள். அப்போது கோவிலதிகாரிகள் அங்குவந்து நீங்கள் ஏன் இப்படி வருந்துகின்றீர்களென்று அவரைப் பிரார்த்திப்ப, அதற்கு அவர் கோவிலுக்குவந்து சேவிக்குமாறு தண்டிக்கப்பட்ட கணிகையருடைய பாக்கியமன்றோ பாக்கியம்! இந்தப்பிரகாரம் ஆலயசேவைக்கு என்னை வந்திலை என்று

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிடித்து என்னைக் கண்டிக்க எனக்கு அதிகாரி ஒருவருமில்லையே என்று வருந்துகின்றேன் என்றார். இந்த வார்த்தையைக் கேட்டு அதிகாரிகள் அக்கணிகையரை விடுதலை செய்தார்கள். அக்கணிகையரெல்லாம் அரதத்தாசாரியரை மிக மகிழ்வினோடு வாழ்த்தினார்கள். ஆசாரியரும் சிவதரிசனஞ் செய்துகொண்டு கிரகஞ்சார்ந்து சிவபூசை செய்ய ஆரம்பித்தார்.

அப்போது இருஷிகள் உபமன்யு முனிவரைநோக்கி, அரதத்தாசாரியசுவாமிகள் பிராதக்காலத்தில் சிவசேவைக்கு எழுந்தருளியிருப்பாரேல், கணிகையர் தம் விருத்தாந்தத்தை அவருக்கு விஞ்ஞாபனஞ் செய்திருப்பாரே. அங்ஙனம் அன்றைக்கு அவர் வாராமைக்குக் காரணம் என்னை என்று கேட்டார்கள். ஆசாரியரைக் கணிகையர் காலைப்போதிலே தரிசித்தும் தங்களை அதிகாரிகள் விரைவிலே விடுதலை செய்வார்களென்றெண்ணி அதைக்குறித்து அவருக்கு விண்ணப்பஞ்செய்திலர் என்று முனிவர் சொன்னார். அங்ஙனமாயின் திருவிடைமருதூரைத் தரிசித்துக்கொண்டு சீக்கிரத்தில் அக்கினீசுவரர் ஆலயத்துக்கு வாராது அவர் காலந் தாழ்த்து மத்தியானத்துக்குப் பின் வரவேண்டிய காரணம் என்னை என்று இருஷிகள் கேட்ப, முனிவர் சொல்வாராயினர்.

பௌர்ணமாசைகாலத்திலே அரதத்தாசாரியர் பிரமகத்திநிவாரணஞ்செய்யும் காவேரி தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்து, மத்தியார்ச்சுனேசுவரரையும் ஆஞ்ஞாகணேசரையும் கற்பநாயகியையும் பிறரையுந் தரிசித்துக்கொண்டு மத்தியானப்போதிலே தமது கிரகத்துக்குவந்து, மாத்தியான்னிகஞ்செய்து சிவலிங்கப்பெருமானுக்குப் பூசைசெய்யத் தொடங்கி, அவருக்கு அபிஷேகஞ்செய்யும்போது, நாயொன்று தாகமேலீட்டினாலே அந்தத்தாராபிஷேகசலத்தை வந்திச்சாப்பிடுமாறு நாக்கை நீட்டிற்று. அப்போது ஆசாரியர்

அந்தச் சங்காபிஷேகசலத்தை அந்த நாயின் நாவிலே விட்டு எஞ்சிய சலத்தைச் சிவலிங்கப்பெருமானுடைய சிரசின்மீது அபிஷேகஞ்செய்தார். சமீபத்திலே நின்றோர் ஆச்சரியத்தோடு அதனைநோக்கி இங்ஙனஞ் செய்யலாமா? இங்ஙனஞ் செய்தற்குக் காரணம் யாது என்று கேட்டார்கள். அதற்கு ஆசாரியர் என்மாட்டுள்ள அன்பினாலே சிவபெருமானே இந்த நாயுருவத்தோடு எழுந்தருளினால் யான் என் செய்யத்தக்கது! என்று சொல்ல, அவர்கள் ஆசாரியருக்குச் சிவபெருமானிடத்திலே திடமான அன்பு இருந்தவாறு என்னை! என்னை!! என்று சொல்லி சிவபூசாதரிசனஞ் செய்துகொண்டு தத்தம் வீடு சார்ந்தார்கள்.

அரணியில் அக்கினி அமைந்தாற்போல அவருடைய பத்தினியார் கர்ப்பமுடையராயினர். அக்கருப்பம் மாசந்தோறும் விருத்தியாக, ஆறும்மாசத்திலே சீமந்தாதி கருமங்கள் நடத்தப்பட்டன. உமாதேவியார் சுப்பிரமணியரைப் பெற்றாற்போல, அவர் பத்தினியார் ஓர் குழந்தையைப்பெற்றெடுப்ப, அக்குழந்தைக்கு அக்கினீசுரன் என்று நாமகரணஞ் செய்தார். அதன்பின்னர் அவருக்குப் பின்னரும் எழுபுத்திரர்கள் பிறந்தார்கள். அவர்களுக்கு முறையே மகாதேவர், நீலகண்டர், சங்கரர், சந்திரசேகரர், சம்பு, மத்தியார்ச்சுனேசுவரர், கோவடு நாயகர் என்று நாமகரணஞ் செய்தார். அவர்களோடு கற்பகை மீனாட்சி என்னும் இரு புதல்விகளும் பிறந்தார்கள். அவர்களெல்லாஞ் சிவநேசச் செல்வர்களாய், விபூதி உருத்திராக்ஷ தாரணர்களாய், சிவலிங்கார்ச்சனர்களாய், சதாகாலமும் ருத்திரசெபஞ் செய்பவர்களாய், பஞ்சாக்ஷர செபப்பிரியராய், பிதாவுக்குத் தொண்டு செய்யுங் காதலுடையராய், சற்கன்ம நிரதராய், வேதசாஸ்திர பாடகர்களாய் ஒழுகினார்கள். இவர்களோடு ஆசாரியர் கிரகஸ்தாச்சிரமத்தில் ஒழுகிப் புத்திரர்களை வைதிக நெறியிலே சிவாஞ்ஞையினாலே செலுத்தி, இருகன்னியர்களை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யும் விரதமுஞ் செய்துகொடுத்து அன்பினோடு மூன்று காலமுஞ் சிவார்ச்சனை செய்துகொண்டு வந்தார்.

ஓர் நாள் சிவலிங்க பூபதியானவர் அக்கினீசுவரப் பெருமானுக்குச் சமர்ப்பிக்கும் பொருட்டு மிக விலையேறப்பெற்ற பீதாம்பரம் ஒன்றை ஆசாரியர் சமுகத்துக்கு ஓர் பிராமணர் வாயிலாக அனுப்பினார். பிராமணர் பீதாம்பரங் கொண்டுவந்த காலம் ஆசாரியர் அக்கினியிலே ஓமஞ் செய்யுஞ் சமயமாயிருந்தது; அப்பிராமணர் வந்து அவர் பாதயுகளங்களிலே வணங்க, ஆசாரியர் அவரை எழுந்திருக்குமாறு செய்து ஆசீர்வாதஞ்செய்து அவர் இருக்குமாறு ஆசனங் கொடுத்தார். அவர் ஆசனத் திருந்துகொண்டு பீதாம்பரத்தை எடுத்து ஆசாரியர் கையிலே கொடுத்து, அரசர் இதனை அக்கினீசுரருக்கு அர்ப்பணஞ்செய்யச்சொன்னார் என்றுரைத்தீந்தனர். அப்போது ஆசாரியர் அக்கினீசுவரப் பெருமானை அவ்வக்கினியிலே தானே சிந்தித்துக்கொண்டு அதனை அவ்வக்கினியிலே ஆகுதி செய்துவிட்டார். அவ்வக்கினியிலே இட்ட க்ஷணப்போதிலேதானே பீதாம்பரம் பஸ்மீகரமாய்ப் போய்விட்டது அதைக் கண்ட விப்பிரர் அவரிடத்திலே விடைபெற்றுக்கொண்டு அவ்விடம் விட்டு நீங்கி, இராசாவை அடைந்து நடந்த சமாசாரத்தை அறிவித்தார். இதைக்கேட்ட அரசன் நமது ஆசாரியர் சர்வஞ்ஞரன்றோ. யாது காரணத்தினால் தகித்தாரோ என்று சிந்தித்து, அதன் உண்மை அறியும்பொருட்டு ஆசாரியரிடத்தில் வந்து, அவருடைய திருவடிகளிலே சுவர்ண புஷ்பங்களினால் அர்ச்சித்து, ஆனந்தபாஷ்பம் வார நிற்ப வீழ்ந்து நமஸ்கரித்தார். அவ்வரசரை ஆசாரியர் தம்முடைய திருக்கரத்தினால் எடுத்து அவர் தம்மைப் பூசித்த மகிழ்வினால் அவர் க்ஷேமத்தை விசாரிக்க, பூபாலர் ஆசாரியரை நோக்கி, சுவாமி தங்களுடைய தர்மாதிகளுக்கெல்லாம் பயனும், பாவங்களாகிய வறுமையைத் தகிப்ப

தாயுமுள்ள தங்களுடைய கருணாசாகரத்தில் அமிழ்ந்தின; எனக்குத் துக்கமென்னவாறு! அடியேன் கொடுத்தனுப்பிய வஸ்திரம் பரமேசுரனுக்கு அர்ப்பணஞ் செய்யப்பட்டதா என்றார். அதற்கு ஆசாரியரும், பரமேசுரனுக்கு அர்ப்பணஞ்செய்தேமென்று அரசனுக்குச் சொல்லி, அவரைக் கோவிலுக்கு அழைத்துக்கொண்டுபோய்ச் சிவலிங்கப் பெருமான்மீது அவர் வஸ்திரம் தரிக்கப்பட்டிருத்தலை அரசனுக்குத் தரிசிப்பித்தார். அரசரும் தான் கொடுத்த வஸ்திரமே அங்ஙனம் அலங்கரிக்கப்பட்டதென்று கண்டு ஆச்சரியமுற்று, ஆசாரியருடைய பாதங்களிலே விழுந்து வணங்கி, எனது அபராதத்தை க்ஷமித்தருள வேண்டும் என்று பன்முறை பிரார்த்தித்தார். பாலிய தசையிலே தங்களுடைய மகிமையைக் கண்டிருந்தும் மயங்கிப்போனேனே என்று ஆனந்தக்கண்ணீரோடு பாராட்டினார். அப்போது ஆசாரியர் அரசனை நோக்கி. நமக்கு ஆசாரியர் மீதும் சிவபிரான் மீதும் அன்பானது சமமாய் உளதாக என்று ஆசிகூறி, அவர் நெற்றியிலே விபூதி தரித்து, நீவிர் நமது பட்டணஞ் செல்வீராக என்றுசொல்லி விடைகொடுத்தார். அப்போது அரசரும் மகிழ்வினோடு குருவினுடைய பாதாரவிந்தங்களிலே அநேக இரத்தினாபரணங்களையும் வஸ்திரங்களையும் சமர்ப்பித்து நமஸ்கரித்து விடைபெற்றுத் தன் நகரமடைந்தார். ஆசாரியர் கணபதி சுப்பிரமணியரோடு, அம்பிகாபதியாகிய சிவபெருமானைச் சிவபூசாதி சற்கருமங்களினாலே வழிபட்டுக்கொண்டு வருவாராயினார்.

பின்னர் சிலநாட்கழித்து, ஓர் பிராமணன் அக்கிராமத்திலே பசுக்களைப் பரிபாலனஞ் செய்துக்கொண்டு வருவானாயினன். ஓர்நாள் அவன் வைக்கோற் கட்டொன்றைக் கொண்டுவந்து உட்புறத்திலே அதனைப் போடும்போது, அவ்வுட்பக்கம் அவனுக்குத் தெரியாமையால் அவ்வைக்கோற்கட்டு அபுத்திபூர்வமாக இளங்கன்றொன்றின்மீது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விழ, அந்தக் கன்று இறந்துபோயிற்று. இறந்துபோன கன்றைக் கண்டு பிராமணன் துக்கித்தான். அதை அறிந்த அக்கிராரத்து மற்றப் பிராமணரெல்லாரும் வந்து பார்த்து, அவன் கோகத்தி செய்தானென்று அவனைத் தூஷித்து, அவன் முகாவலோகனஞ் செய்தல் கூடாதென்று தவிர்த்தார்கள். தான் செய்த தீச்செயலை நோக்கி வருந்துகின்ற பிராமணனுக்குச் சனங்கள்கூறும் நிந்தாவார்த்தைகள் புண்ணிலே உப்புநீர் சொரிந்தாற்போல இருந்தன. தனது பாவநிவாரணத்தின் பொருட்டுப் பிராமணர் ஒருங்கு கூடிச் சந்தியா செபம் செய்யும் மடத்துக்குப்போய் அபுத்திபூருவமாகப் பசுவின் கன்றைக்கொன்ற பாவத்தை அடைந்தேனே! இதற்குப் பிராயச்சித்தஞ் செய்யவேண்டுமென்று அவர்களை நமஸ்கரித்துப் பிரார்த்தித்தான். இதைக்கேட்ட பிராமணர்கள் உதாசீனமாக அவனைப்பார்த்து உன்முகத்தை நாம் பார்க்கமாட்டோம்; நீ இவ்விடம் விட்டுப் போய்விடு என்று அவனைப்போக்கி, உனாத்து அவனைப்பார்த்த தோஷம் நீங்குமாறு சூரியதரிசனஞ் செய்தார்கள். தன்னைப் பிராமணர்கள் குற்சிதமாக நிந்தித்தமையால், அவன் அதிக துக்கமடைந்து பிசாசு பிடித்தவன்போலாயினான். அவன் போகும் மார்க்கத்தில் அக்கினீசுவரர் ஆலயத்தைத் தரிசித்துப் பிரதக்ஷிணஞ்செய்து நமஸ்கரித்தான்; அப்பெருமானைத் தரிசித்த விசேடத்தினாலே கலக்குண்ட அவனது மனசு சிறிது தெளிவுகொண்டு அதனால் நிர்மலபுத்தியுடையனாய், அரதத்தாசாரியரைச் சரண்புகுவேனாயின், உறுதியாக அவர் தனது பாவநிவாரணத்திற்கு ஓர்வழி காட்டுவாரென்று கொண்டு, சிவபிரானிடத்திலே பாலியாவஸ்தையிலே அவர் ஞானம் பெற்றமையும், ஒழுகக்காச்சிய அயாசனத்திலிருந்து பிரசங்கித்தமையும் எவர்களாலுஞ் செய்தற்கு எளியனவல்லவே என்று நிச்சயித்து, அவருடைய கிரகத்துக்குள்ளே வந்து பிரவேசித்தான்; பிரவேசித்தபோ

து, துவாரத்து வாசற்படி அவன் தலையிலே இடிக்க, உடனே "சிவசிவ" என்று சொல்லியிருந்தான். "சிவசிவ" என்று சொல்லிய சப்தம் கிரகத்தினுள்ளே இருந்த அரதத்தாசாரியசுவாமிகள் திருச்செவியில் எய்திற்று. எய்தியவுடனே, தாம் செய்த காரியத்தை விடுத்து ஆனந்தசாகரத்தில் மூழ்கி, யாரோ பெரியவர் இவ்வேளையிலே சிவநாமத்தை உச்சரித்துக்கொண்டு வந்தாரென்று நினைந்து வாசலிலே வந்து அவனை எதிர்கொண்டார். அவர் எழுந்தருளி வந்தபோது, அப்பிராமணன் ஆசாரியருடைய திருவடிகளிலே தண்டாகாரமாக வீழ்ந்து வணங்கினான். அப்போது ஆசாரியர் அவனைத் தமது திருக்கரத்தினால் எடுத்தணைத்து ஆலிங்கனஞ்செய்தார். "சிவபக்தசிரேட்டரே! நீவிர் எனது கிரகத்துக்கு எழுந்தருளினமையால், நான் தன்னியனாயினேன்; எனது கிரகமும் தன்னியமாயிற்று" என்று இங்ஙனஞ்சொல்லி, அவனை ஆசனத்தின்மீதிருத்தி உபசரித்தார். ஆசாரியர் தமக்கு இத்துணை மரியாதை செய்தமையால் மிகுதியும் ஆனந்தமடைந்து, அப்பிராமணன் பின்னர் இங்ஙனம் ஆலோசிப்பானாயினான். ஐயோ! நான் இருமுறை "சிவசிவ" என்று சொன்னமையால் இந்த மரியாதை கிடைத்ததே! என்னிடத்தில் மற்றோர் துக்கம் நிகழ்ந்துகொண்டிருக்கின்றதே! அதனை இவரிடம் விஞ்ஞாபனஞ் செய்யாதொழியில் தனக்குப் பிராயச்சித்தம் கிடையாதென்றெண்ணி, ஆசாரியசுவாமிகளே! அடியேன் அபுத்திபூருவமாகக் கோகத்தி செய்துவிட்டேன் உமது பாதங்களையே சரண் என்று அடைந்தேன் அடியேனைப் பாதுகாத்தருளுதிர் என்று வேண்டி, ஆனந்தபாஷ்பஞ் சொரிய அவர் திருவடிகளிலே வீழ்ந்து நமஸ்கரித்தான். இப்படிச் சொல்லிய பிராமணனைக் காருண்ணியசாகரராகிய ஆசாரியர் நோக்கி, "நீர்செய்த கோகத்திக்குப் பிராயச்சித்தம் முடிந்துபோய்விட்டது. உமக்கு மோக்ஷமும் எய்தியது"

Center for Shaiva Studies, Pondicherry Collection

என்றார். சுவாமீ! அடியேனுக்குப் பிராயச்சித்தம் எப்படிப்போந்தது? மோக்ஷம் எப்படி எய்திற்று? திருவாய்மலர்ந்தருளல் வேண்டும் என்றாள். அப்போது அவர் நீவிர் முதற்சொல்லிய "சிவ" சப்தத்தினால் கோகத்திக்குப் பிராயச்சித்தம் எய்திற்று; இரண்டாவது "சிவ" சப்தத்தால் முத்தியும் எய்திற்று என்றார். கிருபாமூர்த்தியுடைய அமிர்தவார்த்தையைக்கேட்டு, இருநிதியடைந்த வறியோன் போல ஆனந்தமடைந்து, அந்த அமிர்தவார்த்தையைக் கேட்ட ஆராமையினாலே மீட்டும் மீட்டும் ஆசாரியசுவாமிகளை நமஸ்கரித்து ஆனந்தக்கூத்தாடினான். இதயத்திலேயுள்ள தாபம் அவனுக்குச் சாந்தியாயிற்று. அவனது முகமும் பிரசன்னமாயிற்று. இங்கு நிகழ்ந்தவனைத்தையுங் கண்டுகொண்டிருந்த பார்ப்பான் ஒருவன் அப்பிராமணனை நோக்கி, அதிகுரூரமாகிய கோகத்திபாவம் சிவநாமத்தினாலே நிவாரணமாகுமா? இரும்பைத்தின்று சுக்குகஷாயஞ் சாப்பிட்டால் ஜீர்ணமாய்விடுமா? பாவஞ்செய்யாதவராலே சிவன் துதிக்கற்பாலர். பாவிகள் அந்த நாமத்தினாலே எப்படிப் பரிசுத்தராவார்! என்றான். அதைக் கேட்ட ஆசாரியர் தம்மோடிருந்த பிராமணனை நோக்கி, சிவபிரானுடைய மாயை பிரம விஷ்ணுக்களையும் மயக்கிவிடுமே, இவனையா அது தப்பவிடும் என்றார். சிவநாமத்தினாலே ஒழிக்கத்தக்க பாவத்தைச் செய்பவர் இவ்வுலகிலே இல்லையாமாதலின், ஸ்மிருதிகளிலே இந்தச்சிவநாமம் பிராயச்சித்தமாக எடுத்துச் சொல்லப்படாது; அவ்வப்பாவங்களுக்கு இயைந்த பிராயச்சித்தங்கள் ஆங்குச்சொல்லப்பட்டுள்ளன. பாசுபதாஸ்திரத்துக்குக் கொசுகுகள் இலக்கில்லையாமாறு போல, சிவநாமத்துக்குச் சர்வபாவசமூகங்களும் இலக்கில்லையாமென்க. இவ்விஷயத்திலே எவனுக்குச் சந்தேகமுளதோ அவனுக்கு இன்பம் இல்லையாம் என்று இங்ஙனம் சொல்லிவிட்டு, இதைக்குறித்து விவாதஞ் செய்பவனைப்

பார்த்தல் பாவமாய் முடிதலின், அதுபற்றி இவ்விடத்திலே யாதும் அறியாது குதர்க்கஞ்செய்கின்ற உன்னை நோக்குதல் எமக்கு இகழ்ச்சியாமாதலின், நீ இவ்விடம் விட்டுப் போய்விடு என்று சொன்னார். சிவநாமத்திலே சந்தேகங் கொண்டமையால், ஆசாரியரால் உடனே திரஸ்கரிக்கப்பட்டு, அவன் அதிக பாவமும் பயமும் எய்தி தன் வீடு நோக்கிப்போயினான். கோகத்தி பாவத்தினின்று நீங்கிய பிராமணனை நோக்கி, நீர் எப்போதும் சிவநாமகீர்த்தனஞ் செய்யுமென்று சொல்லி, அவனை கிரகத்துக்குப்போகுதிர் என்று ஆஞ்ஞாபித்தார். இங்ஙனஞ் சந்தோஷத்தோடு சிவநாமகீர்த்தனஞ் செய்துகொண்டு போகும்பொழுது, அவன் பிராமணர்களை நோக்கி, சிவனுடைய கிருபையினாலே சர்வஞ்ஞாதி குணங்களையுடைய அரதத்தாசாரியர் என்து பாவங்களெல்லாம் ஒழிந்து போய்விட்டன என்று சொன்னார் என்றான். அதைக்கேட்டுப் பிராமணர்கள் உனக்கு மகாபாதகமானது எப்படி விமோசனமாயிற்று என்று கேட்டார்கள். அதற்கு அவன் அவர்களை நோக்கி, நான் அவர் வாயிலில் நுழைந்தபோது, இருதரஞ் சிவநாமஞ்சொன்னேன், அவர் என்னை உபசரித்து, பக்தருடைய பீடையைப் போக்கும் சிவனுடைய நாமம் இருமுறை உச்சரிக்கப்பட்டபோதே, உமது கோகத்தி சந்தேகமின்றி நாசமாயிற்று. நீரும் சம்சாரத்தினின்று முக்தராயினீர் என்று சொன்னார் என்றான். இதைக்கேட்ட பிராமணர்கள் நன்று! நன்று!! நீ சிவநாமத்தை உச்சரித்தமாத்திரத்தினாலே மகாகொடிய பாவம் எப்படி நீங்கும்! என்று பரிகசித்தார்கள். உடனே அவர்கள் சொல்லிய வார்த்தையைக் கேட்ட பிராமணன் ஆசாரியர் கிரகத்துக்கு வந்து அவர்கள் சொல்லிய வார்த்தையை அவருக்கு விண்ணப்பஞ் செய்தான். அதைக்கேட்ட ஆசாரியர் அவனைப்பார்த்து, ஓ பிராமணனே! நீ அந்தப் பிராமணனிடத்திலே மீட்டும்

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

போய் என்னசெய்தால் பாவம் நீங்கினமையையுற்று அவ
ருக்குத் திருப்தியுண்டாகுமென்று கேட்டுவந்து எனக்
குத் தெரிவி என்றார். அப்போது அவர் பின்னும் அங்கு
நின்றும் போய்ப் பிராமணர்களை நோக்கி, தமது ஆசாரியர்
சொன்னமொழியைச் சொல்லி, உங்கள் மனசு திருப்தியா
தற்குத் தாம் யாதுசெய்தல் வேண்டும் என்று கேட்டார்.
அதற்கு அவர்கள் அக்கினீசுரர் சன்னிதானத்தி லுள்ள
சிலாவிடபதேவர் நீர் கொடுக்கும் அறுகம்புல்லைச் சாப்பிடு
மாயின், உமது சிவநாமத்தால் பிராயச்சித்தம் எய்தியது
நிச்சயந்தான் என்றார்கள். அப்போது அவர் விரைந்து
ஆசாரியரிடத்தில் வந்து சிவசொரூபமாய் விளங்கும் ஆசா
ரியரை நமஸ்கரித்து, அவர்கள் சொல்லிய வார்த்தையைச்
சொன்னார். ஆசாரியர் அவரைநோக்கி நீவிர் சிவபிரானைத்
தியானித்துக்கொண்டு அறுகிருக்குமிடஞ் சென்று, அதனை
எடுத்து நன்றாகத் தீர்த்தங்கொண்டு கழுவிக் கொண்டுபோ
ய்க் கொடுக்குதிர், சந்தேகிக்கவேண்டாம் என்று ஆஞ்ஞா
பிப்ப, அவர் அப்போது போய், அறுகெடுத்து அதனை நன்
றாகக் கழுவிச் சுத்திசெய்து அப்பிராமணர்களையும் அழைத்
துக்கொண்டு அக்கினீசுவரர் ஆலயத்துக்குப் போந்து, அக்
கினீசுவரப்பெருமானை நமஸ்கரித்து, இடபதேவருக்கு வல
ப்புறத்திலே அறுகம்புல்லைப் பிடித்துக்கொண்டு நின்று,
அஷ்டமூர்த்தியாகிய சிவபிரானை வகிப்பவரே! தயாநிதியே!
சிவநாமோச்சாரணத்தினால் என் பாவம் விமோசன மா
னால், இந்தப் புல்லைச் சாப்பிட்டு என்னை எப்போதும்
ரக்ஷித்தருளுக என்று பிரார்த்திப்ப, அவ்விர்ஷபதேவர்
தமது நாக்கை வலப்புறமாக நீட்டி, அவர் கையிலிருந்த
புல்லைக் கிரகித்து சாப்பிட்டார். அப்போது அங்கு நின்ற
பிராமணர் அனைவரும் ஆச்சரியமும் ஆனந்தமும் அடை
ந்து, அவ்வானந்த மேலீட்டினாலே அரதத்தாசாரியரைத்
தோத்திரஞ் செய்து, அவரைநோக்கி பிராமணரே! இப்

படிப்பட்ட சமாசாரம் எவ்விடத்துண்டு என்று வாழ்த்
தி, உமது பாவமெல்லாம் போய்விட்டன, நீர் கிருதார்த்
தராயினீர் என்றார்கள். அந்தப் பிராமணரெல்லாம் பின்னர்
ஆசாரியரிடத்திலே வந்து அவரைச் சங்கரசொரூபி என்
றும், அவருக்கும் சிவனுக்கும் பேதமில்லை என்றும் துதி
த்து வணங்கினார்கள். சிவபெருமான் சித்தவடிவராகிப் பா
ண்டியன் காணக் கல்லானைக்குக் கரும்பு கொடுத் துண்பித்
தாரென்று சொல்லப்படுமாறுபோல, உமது ஆஞ்ஞையினா
லே இந்த இடபமும் புல்லை வாங்கி உண்டுவிட்டது. உமக்
குஞ் சிவபிரானுக்கும் பேதமில்லை; உமது பெருமையை
யார் புகழ்ந்து முடித்தல் கூடுமென்று துதித்தார்கள். அப்
போது சுவாமிகள் அவர்களைத் தத்தம் கிரகத்துக்குப் போ
மாறு ஆஞ்ஞைசெய்ய, அவர்கள் சிவநாமத்துக்கு இத்துணை
மகிமையுளதோ என்று வியந்து வீடு சார்ந்தார்கள். அறு
கூட்டிய பிராமணர் நேத்திரங்களிலே நின்று ஆனந்தபாஷ்
பஞ் சொரியச் சம்சாரபந்தத்தினின்றும் விமோசனராகி
ஆசாரியர் சந்நிதியிலே நமஸ்காரஞ்செய்து, சுவாமீ! மகா
பாதகனாகிய நான் உமது கிருபைக்குப் பாத்திரனாயினேன்
என்றார். அப்போது ஆசாரியர் அவரைநோக்கி, இன்று
முதல் சிவநாமோச்சாரணஞ்செய்து சிவபூசை முடித்துச்
சிவாலயதரிசனஞ்செய்து வருதியென்று கூறி அவரைக் கிர
கத்துக்கு அனுப்ப, அவர் சந்தோஷத்தோடு வீடுசார்ந்து
சிவத்தியானாதி செய்துகொண்டு ஆசாரியர் நெறிபற்றி ஒழு
குவாராயினார்.

பின்னர், அந்த கஞ்சாபுரக் கிராமத்திலே வேதங்களை
அத்தியயனஞ் செய்தவரும், தனமில்லாமையினால் வறுமை
யுற்றுப் பீடிக்கப்பட்டவருமாகிய பிராமணர் ஒருவர் இருந்
தார். அவர் பிராமணர்கள் பாராயணஞ்செய்யும் சந்தியாமண்
டபத்திலே போய், நான் தரித்திரத்தினாலே வருந்துகின்

Center for Shaiva Studies, Pondicherry Collection

றேன் என்றார். அதற்கு அவர்கள் சாஸ்திரங்களை ஆராய்ந்து சொல்வார்களாயினார்: தானப்பிரகரணத்திலே சொல்லப்பட்ட தானங்கள் அனைத்தையும் எவன் பிராமணர்களுக்குச் செய்கின்றானோ, அவனுக்குச் சகலசம்பத்துகளும் எய்தும்; அதற்குச் சக்தியில்லையாயின், இயன்றவாறு சிறிது கொடுத்தாலும் சம்பத்து உண்டாகும் என்றார்கள். இதைக் கேட்ட பிராமணர் இந்தத் தானத்தை எவரிடத்திற் கொடுப்பதென்று ஆலோசித்து, சிவபக்தாக்கிரராகிய அரதத்தாசாரியருக்குத் தானசமர்ப்பணம் பண்ணுவதினாலே புண்ணியம் அக்ஷயமாய்ப் பலிக்குமென்று நினைந்து, இந்தச் சதாசிவர் என்னும் பிராமணர் அரதத்தாசாரியருடைய கிரகம் அடைந்து, அவரை வணங்கி, தமது கிரகத்துக்குப் போசனத்துக்கு எழுந்தருளல் வேண்டும் என்று பிரார்த்தித்தார். அதற்கு ஆசாரியர் "ஓம் வருகின்றோம்" என்று உத்தரமளித்தார். அந்தச் சதாசிவர் தமது கிரகத்துக்கு வந்து பஞ்சமகா யஞ்ஞமுதலியன செய்து, சிவார்ச்சனை செய்து, ஆசாரியரைத் தமது கிரகத்துக்கு அழைத்துவந்து, பாதப்பிரக்ஷாளனஞ்செய்து, அந்தத் தீர்த்தத்தை உள்ளும் பூரித்துப் புறத்தும் புரோக்ஷித்து, ஆசனங்கொடுத்து, அவர் முன்னே கதலிபத்திரத்தை யிட்டு, அதிலே மிளகு-சாலியன்னம் - பருப்பு-வியஞ்சனம்-சாகபாகாதிகள் - அபூபாதிகள் - க்ஷீரான்னம் - பாயசம் - பழமுதலியன படைத்துப் போசனம் பண்ணுவித்து, போசனம் முடிந்த பின்னர் நமஸ்காரஞ்செய்து, அவருக்குத் தமது அபிப்பிராயத்தைச் சொல்வாராயினார். அரதத்தரே! சிவபாதாப்ஜ சிந்தகரே! அநேக புத்திரரோடுகூடத் தாரித்திரத்தினாலே வருந்துகின்றேன். இப்படிப்பட்ட என்னைக் கிருபாதிருஷ்டிசெய்து ரக்ஷிக்க என்று வேண்டினார். இங்ஙனம் பிரார்த்தித்தபோது, ஆசாரியர் ஆசிகூறி, மங்களாக்ஷதையும் விபூதியுங் கொடுத்து அனுக்கிரகம்பண்ணி, தமது கிரகஞ்சார்ந்தார்.

அவ்வேளையிலே சிவலிங்கபூபதியானவர் அப்பிராமணரை அழைத்துவரும்படி ஒரு தூதனை அனுப்ப, அப்பிராமணர் தன்னை அரசர் யாதுகாரணத்தினால் அழைக்கின்றார்! யான் யாதாயினும் அபராதஞ் செய்தேனோவென்று திகில்டைந்துகொண்டு போனார். அரசர் இப்பிராமணர் வரவை நோக்கி, இவர் சிவபிரானே யாமென விளங்கக்கண்டு எழுந்து வணங்கி, அவர் காலைக் கழுவி, அத்தீர்த்தத்தைப் புரோக்ஷித்துக்கொண்டு அர்க்கியங்கொடுத்து, சுவர்ணமுங் குங்குமமுங்கொண்டு அவர் பாதங்களிலே அர்ச்சித்து, திவ்ய வஸ்திரங்கள், பீதாம்பரங்கள், தனாதிகள், தானியபூமிகள் முதலியவைகளையும், பால்கறக்குங் கோக்களையும் கொடுத்துபசரிக்க, அவர் அவற்றையெல்லாம் பெற்றுக்கொண்டு வீடு சார்ந்தார்.

ஒருகாலத்தில் சிவலிங்கபூபதியானவர் நானூறுதானிய அரிசிப்பொதிகளை இருநூறுகாளைகளின் மேலிட்டுத் தமது குருவாகிய அரதத்தாசாரியருக்கு அனுப்பினார். இதற்குள்ளே பசுபதி என்னும் பிராமணச் சிவபக்தசிரேஷ்டர் ஒருவர் அரதத்தாசாரியருடைய தாயாரிடத்திலே பதக்குநெல்லுத் தானியங் கொடுத்திருந்தார். அவ்வம்மையார் அதனை வாங்கி வெய்யிலிலே உலருமாறிட, ஓர் காளை புறப்பட்டுவந்து வழியிலே கிடந்த அந்த நெல்லைச் சாப்பிட்டது, அப்போது சமீபத்திலிருந்த அரதத்தாசாரியர் அந்தக்காளையின் சமீபத்திலே போய், நெல்லைக் கூட்டிக்கூட்டி அந்தக்காளைக்கு உபசாரமாகக்கொடுத்து உண்பித்தார். அதைக்கண்ட தாயார் ஓடிவந்து தண்டத்தினாலே காளையைப்புடைத்து அதனை வெருட்டியோட்டினாள். அவ்வாறு ஓட்டிய தாயாரை அரதத்தாசாரியர் பார்த்து, பசியோடு வந்த காளையை நீயேன் அடித்து ஓட்டினை என்று கேட்க, அதற்கு அவள் சிவபூஜா நிவேதனத்துக்கு ஒன்றுமில்லையே இதைக்கொண்டே அது நடத்தல் வேண்டுமாதலில், அஃதனஞ் செப்

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தேன் என்று சொல்லி, வீட்டுக்குள்ளே போய் வாளா
விருந்தாள். இந்த வேளையிலே அரசனாலே அனுப்பப்
பட்ட பிராமணதூதர்கள் ஓடிவந்து ஆசாரியரை நமஸ்
கரித்து, அஞ்சலியஸ்தராய் நின்று, சுவாமி! சிவலிங்க
பூபதியானவர் தங்களுக்கென்று அனுப்பிய அரிசிமூட்டை
கள் நானூற்றிலே. இருநூறுமூட்டைகள் நதிப்பிரவாகத்தி
லே போய்விட்டன. இருநூறுமூட்டைகள்தான் வந்து
சேர்ந்தன என்றார்கள். அதைக்கேட்டுப் பின்னர்த் தமது
தாயாரை அழைத்து, நீ காளையை உண்ணவொட்டாது
அடித்து ஓட்டிய தீச்செய்கையினாலன்றோ நானூறு அரிசி
மூட்டைகளுள்ளே பாதிமூட்டைகள் சேதமாயின என்றார்.
இதைக்கேட்ட தாயார் வியாகுலமுடையராயினர்.

அரதத்தாசாரியருடைய மனைவியார் ஓர்நாள் அரிசி
கழுவும்போது நெருப்பணைந்தது கண்டு அதனை எரிக்கப்
போயிருந்தார். அந்தவேளையில், நாயொன்று வந்து அந்த
அரிசியைத் தின்றது. இதைக் கண்ட மனைவியார் அரி
வாளை யெடுத்து எறிந்துவிட, அதுபோய் நாய்மீது வீழ்
ந்து, அதன் கழுத்தை வெட்டிவிட, நாய் மூர்ச்சையாய்
வீழ்ந்தது. இது தெரியாது நேர்ந்ததே என்று பஞ்சா
க்ஷரத்தைச் செபித்தார். அப்போது மாத்தியான்னிகஞ்
செய்துவந்த அரதத்தாசாரியர் இது மூர்ச்சையாய் கிட
த்தலைக்கண்டு, தமது மனைவியை இஃதென்னை என்று
கேட்க, அவர் நடந்த சமாச்சாரஞ்சொல்ல, அதனால் சிறிது
வருத்தமுற்று அவரைநோக்கி நீ வாயிலை அடைத்துவை
யாமையினால் இது நேர்ந்தது, அதனால் இது உன்மேற்
றோஷமேயன்றி இந்நாயின்மேற் குற்றமில்லையென்று கன்
டித்துச்சொல்லி, அந்த நாயைத் தமது மடித்தலத்திலெடு
த்து வைத்து, அதற்கு உருத்திராக்ஷம் தரித்து, விபூதியை
அதன் சரீரமெங்கும் பூசி, பஞ்சாக்ஷரோபதேசஞ் செய்
தார். அப்போது கோடிசூரியப்பிரகாசமுடைய இரதமொ



ஸ்ரீஹரதத்தர் இறந்தநாயை ஸ்வர்க்கத்திற்கு அனுப்பினது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ன்று கைலாசத்திலிருந்து வர, இதைக்கண்ட நாய் தனது பூதசரீரத்தை யொழித்து, தேவசரீரத்தை யெடுத்துக் கொண்டு கைலாசத்தை அடைந்தது. அதற்குச் சிவபெருமான் கணபத்தியத்தைக் கொடுத்தார். அந்த நாய் கைலாசமடைந்தமை அறிந்து அரதத்தர் மிகவும் களிப்புடையராயினர்.

நமது கிரகத்திலே நமது தாயாரும் பாரியும் காளையை அடித்து வெருட்டித் தண்டத்தாற் புடைத்தும், நாயை அரிவாளால் வெட்டியும் துஷ்டகாரிய மிரண்டு செய்தார்களே. இவர்களை இப்பாபத்தினின்றும் விமோசனஞ் செய்தல் வேண்டுமென்று ஏகாந்தத்திலே யிருந்து சிந்தித்தார். அப்போது அவர் ஓர் பத்திரிகையைக் கையிலெடுத்துத் தெரிந்துந் தெரியாதுஞ்செய்த மகாபாபங்களுக்கு—

ஞாநாஞ்ஞாநப்ரயுக்தாநாம்பாபாநாம்மஹதாமபி।

என்னும் கருத்தையுடைய இப்பாதிச் சுலோகத்தை எழுதிக் கிரகத்திலே வைத்துவிட்டு, மனுடர்களுடைய பாபங்களை ஒழிப்பதும், மகா புண்ணியம் வாய்ந்ததும், இருஷீசுவரர்களாற் சேவிக்கப்பட்டதுமாகிய காவேரிக்குஸ்நானத்துக்குப் போயிருந்தார். அப்போது அக்கினீசுவரப்பெருமான் அரதத்தாசாரியர் வடிவு பூண்டு அவர் வீட்டுக்கு வந்து, அப்பத்திரத்தை அவர் மனைவியார் வாயிலாகப்பெற்று ஏகாந்தத்திலே யிருந்து சிவநாமத்தை உச்சரித்தலே பிராயச்சித்தமாம் என்னுங் கருத்தையுடைய—

ஏகாந்தஶிவஷ்க்ரதிச்சம்போஸ்ஸகிர்தேவஹிகிர்த்தநாத்।

இந்த மற்றைப் பாதிச்சுலோகத்தை எழுதிப் பத்திரிகை அவர் கையிலே கொடுத்துவிட்டு அந்தர்த்தானமாயினர். அரதத்தாசாரியர் ஸ்நானஞ்செய்துவந்து சிவாராதனம்பண்ணி, பஞ்சயஞ்ஞம் வைசுவதேவம் முதலிய செய்து அதிதி பிராமணர்களுக்குப் போசனங்கொடுத்து, தாமும் புத்திரர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சனோடு போசனஞ்செய்து, ஆசனத்திருந்து பத்திரிகையை எடுத்துப்பார்த்தார், பார்த்தபோது உத்தரார்த்தம் எழுதப்பட்டிருப்பதுகண்டு தமது பாரியை அழைத்து, இப்பத்திரிகையை யார்கையிலெடுத்துக்கொடுத்தனை என்றார். அதற்கு அவர் ஸ்நானஞ்செய்யப்போந்த் நீவிரே மீண்டுவந்து பத்திரிகையைக்கேட்டு எழுதித் தந்துவிட்டுப்போயினீர் என்றார். சிவநாமத்தின் மகிமையறிந்த அரதத்தாசாரியர் நாம் இருதயத்திலே சிந்தித்தபிரகாரம் சங்கரே இங்ஙனஞ் செய்தாரென்று கண்களிலே நின்று ஆனந்தபாஷ்பம் பொழியப் பரவசராயினர்.

ஓர்நாள் அவர் வைசுதேவஞ்செய்து தமது கிரகத்துவாயிலிலே வந்து அதிதிகள் வருகின்றார்களாவென்று பார்க்குமிடத்து, ஒரு சிவபக்தர் ஆங்குவந்தார். அவரை அழைத்துக்கொண்டுபோய் அறுசுவையோடு போசனஞ் செய்வித்து, தாமும் போசனஞ்செய்து அவரோடு தாமும் தாம்பூலஞ் செய்துகொண்டிருக்குங்கால், அந்த அதிதிப் பிராமணர் ஆசாரியரைநோக்கி, சுவாமீ! தங்களுக்கு க்ஷேத்திரமிருக்கின்றதா? தாங்கள் செய்யும் உபசாரம் ராஜோபசாரமாயிருக்கின்றதே! என்று கேட்ப, அதைக்கேட்ட ஆசாரியர் எனக்குள்ள க்ஷேத்திரம் உழப்படாததும், சலம் பாய்ச்சப்படாததும், தீர்வைகொடுக்கப்பெறாததும், இருபோகமின்றி ஒருபோக முடையதும், குளிர்ச்சியாகிய முளையுடைய நதிப்பிரவாக முடையதும், எப்பொழுதும் உபாதியின்றி போகமுடையதாயுமுள்ள க்ஷேத்திரமேயாம். என்று—

அந்யேவநக்ஷேத்ரமர்கிஷ்டபச்யமநர்க்கபாகத்விதீயோபபந்நம்।
ஸஷ்பௌஷதேசாம்குழமுந்நதிமேத்யத்ஸதாபோகமுபாதிசூந்யம்॥

என்னும் இந்த சுலோகத்தை சொல்லக்கேட்ட பிராமணர் ஆச்சரியமடைந்து, பின்னரும் அநேக சிவகதைகளை ஆசாரியர்வாயிலாகக்கேட்டு, தாம் கிருதார்த்தராயினேமென்று சந்தோஷத்தோடு விடைபெற்றுக்கொண்டு தம் வீடு சார்ந்தார்.

அரதத்தாசாரியர் ஓர்நாள் சிவத்தியானபராயணராய் பிரமயஞ்ஞத்தின் பொருட்டுக் காவேரி தீர்த்தத்துக்குப் போயிருந்தார். அப்போது ஆங்குவந்த சண்டாளன் சண்டாளி என்னும் இருவருள்ளே சண்டாளியானவள் காவேரியைப் பரிசிக்கும்பொருட்டுப்போக, புருஷன் அவளைநோக்கிக் காவேரி சலத்தைத்தொடாதே என்றான். அதைக் கேட்ட நாயகி ஸ்நானஞ்செய்தலினாலும் தரிசித்தலினாலும் காவேரி மகாபாபங்களையெல்லாம் போக்குகின்றாளென்று சொல்லப்படுகின்றதே, பிராணநாயகரே! இங்ஙனம் நீவிர் சொல்லி என்னைத் தடுக்கவேண்டியது என்னை என்றாள். அதற்கு அவன் அவளை நோக்கிக் காவேரி தீரத்திலே எவ்வளவு மணலுண்டோ அவ்வளவுஞ் சிவலிங்கரூபமாம். நாம் கையினாலே பரிசிக்கப்படாது என்றான். இந்த வார்த்தையைக் கேட்ட ஆசாரியர் சமீபத்திலே நின்ற அச்சண்டாளனுடைய பாதத்திலே வீழ்ந்து வணங்கி, அவன் கழற்றிவிட்ட செருப்பைத் தமது தலையிலேவைத்து, ஆனந்தக்கூத்தாடி, உலகத்திலே சிலர் ஞானத்தை அவலம்பனஞ்செய்கின்றார், வேறுசிலர் கன்மத்தை அவலம்பிக்கின்றார், நாமோ சிவபக்தருடைய பாதரக்ஷையை அவலம்பிக்கின்றோம்,—

ஞாநாவலம்பிநகேசித்கேசித்கர்மாவலம்பிந:।
வயந்துசிவபக்தாநாம்பாதரக்ஷாவலம்பிந:॥

என்னுங் கருத்தையுடைய இந்த சுலோகஞ் சொல்லிச் சமஸ்தப்பிராணிகளையும் சிவசொரூபமாகப் பாவித்து வருவாராயினர்.

ஓர்நாள் இவருக்குப் பாகஞ்செய்யப்பட்ட சாலையினுள்ளே நாயொன்று பிரவேசித்து அன்னத்தை உண்ண,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இதைக்கண்ட அரதத்தாசாரியர் சிவபிரானே நாய்ரூபமாய் வந்துண்டாரென்று நினைந்து, அதனால் அதனைச் சிவநின் மாலியமாய்க்கொண்டு சிவத்தியானத்தோடு பந்துக்களுடன் அதனைப் புசித்தார்.

மற்றோர்நாள் அரதத்தாசாரியர் அப்பியங்க ஸ்நானஞ் செய்துவிட்டுக் காவேரிக்குப் போயினார். மடிசஞ்சி பாத்திர முதலியன எடுத்துக்கொண்டு போகும்போது சிவபிரான் ஓர் விருத்த சண்டாளனாய்க் கோலை யூன்றிக்கொண்டு தீனவார்த்தை பேசி அவரைச் சமீபித்து, நாதரே! தாகத்துக்குச் சலமில்லை! பசி என்னை வாட்டுகின்றது. அதற்கொரு வழிகாட்டல் வேண்டுமென்று கேட்ப, உடனே அவர் தமது கிரகத்துக்கு வந்து வடித்தகஞ்சி கொண்டுவந்து அவருக்கு வார்த்துவிட, அவரும் அதைக் குடித்துப் பசிதீர்த்தார்.

சோழராஜாவானவர் தக்ஷிணாயன வுத்தராயண புண்ணிய காலங்களிலே சிவபிரானைத் தயிலம் அன்னம் பால் தயிர் பழமுதலிய கொண்டு மிகுதியும் மகாபிஷேகஞ்செய்து வருவாராயினர். அப்போது சிவபிரானும் அவ்வரசருக்கு அபிஷேகஞ்செய்த அன்றிரவு சொப்பனத்திலே தோன்றி, அன்பனே! நீசெய்த மகாபிஷேகத்தினால் மிகவும் உவந்தேமென்று திருவாய்மலர்ந்தருளுவாராயினார்; ஓர்நாள் அக்கினீசுவரப் பெருமானுக்கு மிக விசேஷமாகப் பூசிக்க ஆரம்பித்து பஞ்சாமிர்தம், பஞ்சகவ்வியம், மாம்பழம், பலாப்பழம், இளநீர், கரும்பிரசம், சர்க்கரை, தேன், சந்தனம், எலுமிச்சம்பழம், ஏலம், இலாமிச்சைசேர்ந்த சுத்தோதகம் என்பவைகளால் வாசா மகோசரமாக அபிஷேகஞ்செய்து, பீதாம்பரம் தரித்து, ஆரங்கள் பதக்கங்கள் முதலிய கொண்டு அலங்கரித்து, மல்லிகை நீலோற்பலம் சம்பக முதலிய புஷ்பங்களினால் அர்ச்சித்து, தூபதீபாதிகளினால் ஆராதித்து, சிறுபருப்புப் பொங்கல், சர்க்கரைப் பொங்கல், மாஷான்னம், கடுகன்னம், தேன் அன்னம், பாயசம், சுத்தான்னம், திலோதனம், பாலன்ன முதலிய அன்னபேதங்களை நாநாவித பதார்த்தங்களோடு படைத்து, கட்டித்தயிர், புத்துருக்குநெய், வாழைப்பழம், பேரீச்சம்பழம், வடகம், அதிரசம், இளநீர் முதலியன கொண்டு வாக்குக்கடங்காத பிரகாரம் உபசரித்தார்; நீராஞ்சனம், தாம்பூலம், சத்திரசாமரம், நவரத்தினக்கண்ணாடி, பிரதக்ஷிண நமஸ்காரம், மந்திரபுஷ்பம், ஸ்தோத்திர முதலியவற்றால் உவப்பித்து, பிராமணர்களுக்கும் அந் நைவேத்தியங்கொண்டுபசரித்தார். இராத்திரியிலே பின்னருஞ் சிவபிரானை வணங்கிப் போசனஞ்செய்து நித்திரைக்குப் போயினார். நித்திரையிலே அவருக்குச் சிவபிரான் ஒன்றுஞ் சாதிக்காமை கண்டு, சுவாமி. வந்திலரோ! என்று விசாரமும் துக்கமு முற்று, பின்னரும் நித்திரைசெய்தார். அப்போது சிவபெருமான் சிவனடியாராக ஆங்குக் கனவில்வந்து, உனக்கு முதற்றினத்திலே ஒருவர் செய்த உபசாரத்துக்கு நீசெய்த உபசாரமெல்லா மீடாகா! திருப்தியுமின்றும். பூருவதினத்திலே சண்டாளனாய்ப் போனபோது அரதத்தாசாரியர் எனக்கு எள்ளுப்பிண்ணாக்கும் கஞ்சியுங் கொடுத்தமையினால் மிகத்திருப்திகாமாயினேன் என்று திருவாய்மலர்ந்தருளினார். உடனே சோழராஜா மிக வியந்து ஸ்தோத்திரஞ்செய்து, உதயகாலத்திலே நித்திய கருமமுடித்து, அரதத்தாசாரியர் வீட்டுக்கு வந்து, அவர் பாதத்திலே வீழ்ந்து வணங்கி சொப்பன விருத்தாந்தத்தால் தங்கள் பெருமை அறிந்தேனென்று தோத்திரம் பண்ணினார். அக்கிராமத்தாரெல்லாம் இதனைக் கேட்டு, ஆசாரியருடைய பெருமையை அறிந்து தோத்திரஞ்செய்தார்கள். இதைக்கேட்ட அரதத்தாசாரியர் சிவப்பிரசாதமிவ்வன்மா என்று சொல்லிப் பேரானந்தமுற்றார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலகராய்ச் சமஸ்த தருமங்களினுலும் உலக பரிபாலனஞ் செய்துவந்த சோழமகாராஜா அநேக தீர்த்தயாத்திரை செய்து, பல சிவஸ்தலங்களைப் பணிந்துகொண்டு (அக்கினியின் சாபந் தீர்த்தமையால் அக்கினீசுரனெனப் பெயர்கொண்ட) அக்கினீசுவரத்துக்கு வந்து, கங்கையின் பாபத்தைப் போக்குகின்றதும் நிர்மலமாயுமிருக்கிற காவேரியிலே ஸ்நானஞ்செய்து, கற்பக விநாயகரைத் தரிசித்து, சுவாமி தரிசனஞ்செய்து ஆலயத்தை வலம்வந்தார். அப்போது பஸ்மோத்தூளன திரிபுண்டரதாரியாய் உருத்திராக்ஷதாரணராய் நாசாக்கிர திருஷ்டியோடு நேரிய சிரத்தோடுகூடிய சரீரத்தினராய், சிவதேஜசினுலே சொலிக்கின்றவராய், பதுமாசனத்திருந்து சிவத்தியான பராயணராயிருக்கும் உலகப்பிரசித்திபெற்ற அரதத்தாசாரியரைச் சோழராசாவானவர் தரிசனஞ் செய்து, சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து அடியேனை ரக்ஷிக்க என்ருர். அப்போது ஆசாரியரும் அவரைநோக்கி தமது ராச்சியம் தனகோசம் பந்துவர்க்கமெல்லாம் க்ஷேமமாவென்று வினவ, அதற்கு அரசர் சுவாமிகள் கிருபாதிருஷ்டியினுல் எல்லாம் க்ஷேமமே என்ருர். இங்ஙனஞ்சொல்லி, பின்னரும் அவரை நமஸ்கரித்து, சுவாமி! இந்தச் சரீரத்தோடு நான் கைலாசதுக்குப் போதல்வேண்டும், அதற்கு வேண்டிய உபாயத்தை உபதேசித்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தார். அப்போது அரதத்தாசாரியர் நீவிர் இவ்வக்கினீசுவராலயத்துக்குச் சமீபத்திலேயுள்ள ஏழு தலங்களையும் அரையாமத்தினுள்ளே தரிசித்து வருவீரேல் உமது மனேபீஷ்டம் சித்தியாகும் என்ருர். அரசர் அதற்கியைந்து சில பரிசாரகர்களுடனே சுவேதசத்திரத்தோடு குதிரைமேற்கொண்டு அரையாமத்துக்குள்ளே ஏழுதலங்களையுந் தரிசித்துக்கொண்டு வந்தார். குதிரையையும் சேவகர்களையும் வெளியே நிறுத்தி, அரசர் கோயிலினுள்ளே புகு



ஹரதத்தர் சோழமகாராஜனை உடலுடன் சுவர்க்கத்திற்கு அனுப்பினது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ந்தபோது, ஓடிவந்த வேகத்தினால் குடைபிடித்து வந்தவன் குதிரையோடு கீழேவிழுந்து மூர்ச்சையாயினான். குதிரையும். குடைபிடித்தவனும் தேகத்தோடு ஆங்கு வந்த விமானத்திலேறி ஆகாயமார்க்கமாகக் கைலாசத்துக்குப் போகும்போது, ஆலயத்தைப் பிரதக்ஷிணஞ் செய்துவந்த அரசரோடு ஆசாரியரும் கோபுரவாயிலுக்குவந்து, ஆச்சரியமுற்று அவ்விமானத்தின் மீது சென்ற குதிரையையும் குடைக்காரனையும் சோழராஜாவுக்குக் காண்பிக்க, அரசர் தம்மை மிகவும் நொந்துகொண்டு, ஆசாரியரைப் பார்த்து தமக்கு விமானம் வராமைக்குக் காரணத்தை வினவினார். அதற்கு ஆசாரியர் நீர் எப்படிப் பிரதக்ஷிணஞ் செய்துவந்தீர் என்று கேட்டார். நான் குதிரைமீதேறிவரக் குடைக்காரன் குடைபிடித்துக்கொண்டுவரப் போய்த் தரிசனஞ் செய்துகொண்டு வந்தேன் என்றார். சிரமமடைந்து வந்தபடியால் குதிரைக்கும் குடை பிடித்தவனுக்கும் விமானங் கிடைத்தது; நீரும் பாதசாரியாய் அரையாமத்துக்குள்ளே வருவீராகில் தேகத்தோடு கைலாயம் வாய்ப்பதாகும் என்றார். அதுகேட்ட அரசன் அந்தப் பிரகாரம் ஏழுதலங்களையும் தரிசித்துக்கொண்டு அக்கினீசுவரர் ஆலயத்தை வலம்வந்து புறத்தேபோந்து ஆசாரியரைத் தரிசித்துவணங்கி, சுவாமீ! நீர்சொல்லிய பிரகாரம் செய்து முற்றியது என்று சொல்லி முடித்தற்கு முன்னே, கோடி சூரியப்பிரகாசத்தோடு நானாரத்தினங்களால் அலங்கரிக்கப் பட்டதாய், அநேக வாத்தியகோஷங்களோடு பொருந்தினதாய், ஆகாயத்தினின்றும் போந்த விமானத்திலே விநாயகர் சுப்பிரமணியர் நந்தி முதலியோர்சேவிக்க பிரமவிஷ்ணுக்கள் சயசப்தம் செய்ய, உமாதேவி சமேதராய் இடபவாகன மேற்கொண்ட சிவபெருமானைத் தரிசித்து, அரதத்தாசாரியரும் சோழராசாவும் அங்குள்ளாரும் மகிழ்ந்து துதிக்க, அரசனைமாத்திரம் இறைவர் விமானத்திலெடுத்துவைத்துக்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கொண்டு போம்போது; அரசர் ஆசாரியரை நமஸ்கரித்து; கைலாயத்துக்குப் போய்வருகின்றேன் என்று சொல்லி கைலாயம் அடைந்தார்.

மற்றோர்நாள் சிவபிரான் ஓர் பிராமணவடிவம் பூண்டு, அரதத்தாசாரியர் வீட்டுக்குவந்து, ஓ சாத்திரிகளே! என்று உச்சசுவரத்தோடு அழைத்தபோது, ஆசாரியர் நாம் கவியுமல்லேம், சாஸ்திரியுமல்லேம், பௌராணிக.நாடக சமர்த்தருமல்லேம்; பின்னைச் சிவநாமவாச்சியராகிய சிவானந்தத்திலே அமிழ்த்தினமைபற்றிச் சிவானந்திகளென்று அழைக்கற்பாலேம்.—

நவயம்கவயோநசாஸ்திரிணோவாநசபௌராணிகநாடிகப்ரவீணா:।
சிவநாமநிதேவதாவிசேஷபரமானந்தபயோநிதௌநிமக்நா:॥

என்றுரைத்தார்.

அந்தக்கஞ்சாபுரத்திலே மற்றோர் தேசத்துப் பிராமணன் போந்து விலைமாதொருத்தியின் வீட்டினுள்ளே புகுந்து, தான் அவளைக்கூட நினைந்து, தான் அரதத்தாசாரியர் புத்திரன் என்றும், தான் அவளுக்குப்பொருள் உதவுவேன் என்றும் உரைக்க, அதனைக் கேட்ட அவ்விலைமாது அவனைத் தன் செயற்கையினால் பிரீதிசெய்தாள்; இப்படி நெடுநாட் கலந்திருந்துவிட்டு, அப்பிராமணன் அவளுக்கு யாதுங்கொடாது தன் கிராமத்துக்குப் போய்விட்டான். அவள் பின்னர் அரதத்தாசாரியார் வீட்டுக்கு வந்து சுவாமீ! தங்கள் புத்திரர் நெடுநாளாக என்னோடு கலந்திருந்துவிட்டு, யாதுங்கொடாது போய்விட்டார் என்றாள். ஆசாரியர் சிவபிரானே அவளோடிருந்து போயினாரென்று கொண்டு, அவளுக்குத் தம்மிடத்துள்ள ஆயிரம்கழஞ்சுள்ள சுவர்ணாபரணத்தைக்கொடுப்ப, அவளும் அதனை வாங்கிக் கொண்டுபோயினாள். இவருடைய எட்டுப்பிள்ளைகளும் சன்மார்க்க நெறிபூண்டவர்களென்று முன்னரே அறிந்த அக்கிராமத்தார் அனைவரும் அவளிடத்திலேபோய், "நீ ஆசாரியரிடத்தில் அவ்வாபரணத்தைக் கொண்டுபோய்க்கொடுத்துவிடு என்று கண்டித்தார்கள். அதை அவளறிந்து பயந்து, ஆசாரியரிடத்திலே வந்து பழயபடி அதனை வைத்து மீளவெடுத்துக்கொள்ளும் வண்ணம் பிரார்த்தித்தாள். அப்போது ஆசாரியர் ஓ குமாரி! நான் உனக்குக் கொடுக்கும்போது சிவார்ப்பணமென்றே கொடுத்தேன், நீயே கொண்டு போவாயாக; அதனை நான் மீண்டு எடுக்கமாட்டேன் என்றார். அதனைக் கேட்டபோது, அவளுக்குச் சித்த சுத்தி பிறந்து அவள் அவ்வாயிரங்கழஞ்சு சுவர்ணாபரணத்தையும் சிவார்ப்பணம்பண்ணி கோயில் மண்டபம் விமான முதலியவைகளுக்குச் செலவுசெய்தாள்.

ஓர்காலத்திலே அக்கினீசுவரர் ஆலயத்திலே சர்வசனங்களுக்குங் காட்சி கொடுக்கும் பொருட்டு இரதோற்சவம் நிகழ்ந்தது. சிவபிரான் இரதாரூடராய் எழுந்தருளினார்; அப்போது பேரி முதலிய வாத்தியங்களும் முழங்க, நானாவித கொடிகள் சலிப்ப, அநேகசனங்கள் குழும, சுகந்ததூபம் நறுமணங்கமழ, வீதிகளிலே புரோஷிக்கப்பட்ட சந்தனக்குழம்பு விளங்க, மாலைகளினாலே தெருக்களெல்லாம் பிரகாசிப்ப, தோரணங்கள் தூங்க, ஆச்சிரமிகளெல்லாம் நெருங்க, அம்மையாரும் சுப்பிரமணியரும் விநாயகரும் சண்டேசுரரும் மகாதேவரும் தத்தம் இரதங்களிலே இவர்ந்தருளினார்கள்; கஞ்சாபுரத்திலுள்ள பெண்கள் அனைவரும் உற்சவதரிசனத்தின்பொருட்டு நானாவித ஆபரணங்களால் அலங்காரஞ் செய்துகொண்டு புறப்பட்டார்கள். அப்போது அரதத்தாசாரியருடைய புத்திரிகள் இருவர் உற்சவத்துக்குப் புறப்படுதற்கு மற்றைப் பெண்களுக்குப் போல ஆபரணம் தங்களுக்கு இன்மையால், பிதாவை அடைந்து எங்களுக்குத் தரித்தற்கு ஆபரணமின்மையால் நீவிர் ஆபரணங் கொடுத்தருளல் வேண்டுமென்று வேண்டி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

னார்கள்; துக்கத்தோடு இவ்வாறு ஆபரணம் வேண்டுமென்று பிரார்த்தித்த குழந்தைகள் இருவரையும் ஆசாரியர் நோக்கி, நீங்கள் உங்கள் அவயவங்களிலே பூசும் விபூதியே பூஷணம், நீங்கள் சிரவணஞ்செய்யும் சிவநாமமே காதுக்கு அலங்காரம், நீவிர் எப்பொழுதும் செய்யும் சிவலிங்கார்ச்சனையே கரபூஷணம், நீங்கள் செய்யும் சிவலிங்கப்பிரதக்ஷிண நமஸ்காரமே பாதபூஷணம், ஆதலினால் நீங்களேன் கவலைப் படுகின்றீர்கள் என்றார். அவர்கள் பின்னரும் பிதாவே, தாங்கள் சொல்லிய ஆபரணங்கள் உள்ளபடியே இருக்கின்றன; இருந்தும் எங்களையொத்த தோழியர்கள் மிகுதியும் நிந்திக்கின்றார்கள்; ஆதலினால் லௌகிகபூஷணமுங் கொடுக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அது கேட்ட பிதாவானவர் சிறிது வருத்தத்தோடு அவர்களை நோக்கி முற்சென்மத்திலே இவை வேணுமென்று உபாசனை செய்தவர்களுக்கன்றி மற்றவர்களுக்கெப்படி வாய்க்குமென்று சொல்லக்கேட்ட புதல்விகள் பிதாவே உமக்கு அவை என் கிட்டா; ஆவசியகம் கொடுத்தருளல் வேண்டுமென்று கேட்டார்கள். அப்போது அரதத்தாசாரியர் சிறிதுபோது தியானபாராயணராயிருக்க, எருதொன்று அவ்வழியே செல்லக் கண்டு அவர்களை நோக்கி, அந்த எருது வைத்துக்கொண்டுபோன பாதக்குளம்பினிடத்திலே வேண்டிய பூஷணங்களெல்லாம் அகப்படும். அவ்விடத்தே போய் எடுத்துக் கொள்ளுங்கள் என்றார். குழந்தைகள் இருவரும் விரைந்து போய் அது கால்வைத்துப்போன குளம்பிடங்கடோறும் விசித்திரமாகிய ஆபரணங்கள் இருக்கக்கண்டு அவற்றை எடுத்துக்கொண்டு தங்கள் பிதாவுக்குச் சமீபத்திலே வந்து அவர் எவை எவை என்று கேட்க, அவர்கள் மகிழ்ச்சியோடு பாதமோதிரம், பாதகடகம், சிறுகிங்கிணிமாலை, மேகலை, கடிசூத்திரம், கடிபந்தனம், ஆரம், பவளமாலை, அங்கதம், கங்கணம், பதக்கபேதம், பவளவலயம், விரல்

மோதிரம், சுவஸ்திகம்; காதோலை, திலகாகாரமாகிய பொட்டு, தலையாபரணமுதலாயின அகப்பட்டன என்று சொல்லிப்போய், அந்தத்தானங்களிலே இவ்வாபரணங்களினால் தங்களுக்கு அலங்காரஞ்செய்யவேணுமென்று தம் தாயாரை வேண்டினார்கள்; தாயார் அவ்வாறு அலங்காரஞ்செய்து முடிந்தபின்னர், அவர்களுக்கு அணிந்து எஞ்சிய ஆபரணங்களை அக்கினீசுவரர் கற்பகநாயகி இருவருக்கும் அலங்கரிப்பிக்கும்பொருட்டுப் பழம் கர்ப்பூரம் தாம்பூலமுதலியன கொண்டு சகிகளோடு கூட ஆலயத்துக்குப்போய் நிவேதிப்பனவற்றை நிவேதித்து, ஆலயத்தைப் பிரதக்ஷிணஞ் செய்து, ஆசாரியருடைய மகிமையையும் சிவபெருமானுடைய திருவருளையும் நினைந்து சந்தோஷமுடையராயினர். ஊரிலுள்ள சனங்கள் இவ்வாபரணங்களையெல்லாங் கண்டு யாவும் அறிந்து அரதத்தாசாரியருடைய மகிமையே மகிமையாம் என்று வாழ்த்தினார்கள்.

ஓர்நாள் இராத்திரிப்போதிலே கோவடி எனப்படும் திருவாடுதுறையாலயத்திலே அரதத்தாசாரியர் சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு வழியே போம்போது, மழையும் காற்றும் உண்டாகி இருள் மிகுந்தபோது, சிவபிரான் இவருக்குச் சகாயமாகக் கோபாலவேஷந் தரித்துக்கொண்டு அவருடன் சென்றார். ஆசாரியர் அவனை நோக்கி நீ ஆர் என்றார். அவர் நான் கோவடி [illegible]த்திலுள்ள கோக்களை மேய்க்கும் இடையன், உமக்குச் சகாயஞ்செய்யப் போந்தேன் என்றார். இவ்வார்த்தை அவருக்கு இனிமை பயந்தமையால், அங்ஙனமாயின் நீ வருவாயாக என்று கூட்டிக் கொண்டு வந்து, பின்னர்த் தமது கிரகத்திலே ஆகாரஞ் செய்துபோவாயோவென அவர் நீர் என்கையிலே ஆகாரத்தைக் கொடுத்துவிடின், நான் என்வீட்டுக்குக் கொண்டுபோய்ச் சாப்பிடுகின்றேன் என்றார். அதற்கு ஆசாரியர் இசைந்து, பாகற்காய்க் குழம்பும் அன்னமுங்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கொடுப்ப, அவர் அதை வாங்கிக்கொண்டு தமது வீடாகிய
ஆலயத்தினினுள்ளே பிரவேசித்து, இலிங்கத்துக்கும் இட
பதேவருக்கும் இடையேயுள்ள அர்த்தமண்டபத்திலே
அவற்றைச் சிதறிவிட்டு லிங்கத்திலே அந்தர்த்தானமாயி
னர். காலையிலே அர்ச்சகர்கள் வந்து சிந்துண்டு கிடந்த கறி
யையும் அன்னத்தையும் பார்த்து, இஃதென்னை ! என்று
ஆச்சரியமுற்று நின்றார்கள். பின்னர்க் கோயிலதிகாரியர்ன
வர் வந்து பார்த்து, பரிசாரக வேலைக்காரரையெல்லாம்
தண்டிக்கத் தொடங்கினர். அவர்கள் நாங்கள் இந்தக் காரி
யம் செய்தோம் இல்லை என்றும், நாங்கள் வீட்டுக்குப் போ
ம்போது உள்ளே எங்கும் நன்றாகப் பரிசோதித்து, திருக்
காப்பிட்டுக் கொண்டு போனோம் என்றும், இதுசெய்தார்
மற்றியாருமில்லை என்றும் சொல்லித் தலைகுனிந்து சும்மா
விருந்தார்கள். அப்போது முதற்றினத்து இராத்திரியிலே
அரதத்தாசாரியர் தரிசனத்துக்காக இங்கே வந்திருந்தார்.
போகும்போது வழியிலே மழைபெய்யத் தொடங்கிற்று;
ஆதலால் அவருக்குச் சகாயமாகக் கோடுவநாதர் கோபா
லவேஷத்தோடு போயினர். அவர் தமது கிரகஞ் சார்ந்த
போது ஆசாரியர் அவரைப் போசனத்தின் பொருட்டுத்
தடுப்ப, அவர் அதற்கு உடன்படாமைகண்டு பாகற்காய்க்
குழம்பும் அன்னமுங் கொடுப்ப, பாலசந்திர சிகாமணியா
கிய கோவடு நாதப்பெருமான் இடைய ரூபத்தோடு அவற்
றைவாங்கிக் கொண்டுவந்து, இந்தப்பிரகாரஞ்செய்து விளை
யாடினர் என்று ஓர் அசரீரிவாக்கு ஆகாயத்திலே எழுந்
தது. அதைக்கேட்ட யாவரும் ஆச்சரியமுற்று அரதத்தா
சாரியருக்குச் சிவபெருமான் இத்துணைக் கிருபைசெய்தா
ரோவென்று யாவரும் புகழ்ந்தார்கள். இங்ஙனம் அரதத்
தாசாரியர் நெடுங்காலம் அதிதிபூசைமுதலிய அநேக தரு
மங்களைச்செய்து கொண்டுவந்தார். வயசு முதிர்வுறுந் தமது
தள்ளாமைப் பருவத்திலே எழுதலத்துக்குஞ் சென்றோ

றுஞ் செல்லமாட்டாதவராய், தமது ஆன்மார்த்த பூசையிலே
எழுதலத்துச் சிவலிங்கங்களையும் ஸ்தாபித்து பூசித்து தரிசி
த்து மோக்ஷப் பிராப்தியின் பொருட்டு ஒருமையோடும்
வழிபட்டுவந்தார்.

திரியம்பகர் என்னும் பிராமணர் ஒருவர் யதீசுவரர்
ஒருவரை அடைந்து சேவை செய்து, அநேக வித்தியாப்
பியாசம் பண்ணினர். ஓர்காலத்திலே தமது குரு ஏகாந்தத்
திலிருந்த போது, எல்லாவித்தைகளும் அப்பியசித்தேன்.
பஞ்சாக்ஷரோபதேசமும் பெற்றேன். இவற்றிற்கு மேலறி
யற்பாலது யாது? என்று தமது குருவைக் கேட்ப, அவர்
யோசித்து உலகத்திலே சுருதிஸ்மிருதிகளுள்ளும் ஸ்ரீபஞ்
சாக்ஷரத்தின் மேலானதும் ஒன்றுமில்லை. ஒப்பானதும் ஒன்
றுமில்லை. இந்த இரகசியம் இவனுக்குத் தெரியவில்லையே !
இவன் சந்தேகமில்லாமல் மூடனென்று நினைந்து சில இர
கசியம் இன்னும் உண்டு காலாந்தரத்திலே சொல்லுகின்
றேன் என்றார். இதுநோக்கிக் காலம் பார்த்துக்கொண்டி
ருந்தான். இப்படி வெகுகாலமாய் பின்னர், ஓர்நாள் சீஷன்
போசனத்தின்பொருட்டு வெளியே போயிருப்ப, யதீசுர
ருக்குத் தேகவியோக காலம் கிட்டிவிட, சீஷனுக்கு
யாதோ சொல்லவேண்டியிருந்ததென்பதை அவர் யோசி
த்து ஸ்ரீபஞ்சாக்ஷரத்தினும் மேலாய் அறியற்பாலது மற்
றொன்றில்லை என்று நிலத்தில் எழுதிச் சரீரத்தியாகம்
பண்ணினர். அதனை அருகில் நின்ற ஒரு கழைக்கூத்தி
யான தாசி கண்டு ஓலையில் எழுதிக் காதோலையாயிட்டுக்
கொண்டு மணலெழுத்தைக் கையாலழித்து வீடுசார்ந்தாள்.
சீஷன் வந்து பார்த்து, தனது ஆசாரியார் இறந்துகிடத்
தலைக் கண்டு துக்கத்தோடிருப்ப, அங்கிருந்தவர்கள் உம
து ஆசாரியர் எழுதிவைத்த இரகசியத்தை ஓர் தொம்
பச்சி எழுதிக்கொண்டு போய்விட்டாள் என்று சொல்ல,
சீஷன் அவள் வீடு தேடிப்போய், அவளைப் பலவகையா

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

னும் உபசரித்து காதோலையை தரல்வேண்டும் என்று கேட்டான்; நீ என்னோடிருந்து சாப்பிட்டு என்னோடு கூட உண்ணப்பயாயின், நான் காதோலையைத் தருவேன் என்றாள்; அதற்கு அவன் உடன்பட்டு, அவளுக்கு வேண்டிய தொழில்களையெல்லாஞ் செய்து, அவளைப் பிரீதி செய்து காதோலையை வாங்கிக்கொண்டான். அவன் தன் குரு எழுதிய பத்திரிகையைப்பார்த்து, அதிலே எழுதப்பட்ட அக்ஷரங்களைக் கண்டு மகிழ்ந்து; பின்னரும் அவளை இதுகாறுங் கூடியிருந்த தோஷமற யாது பிராயச்சித்தமாமோ என்று நினைந்து தைப்பூசத்திலே திருவிடைமருதூருக்குப் போய்ச் சுவாமி தரிசனஞ் செய்து, மத்தியார்ச்சுனரோடு காவேரிக்குப்போய் ஸ்நானஞ் செய்து, மகாலிங்கமூர்த்தி தரிசனஞ் செய்துகொண்டு போகும்போது, அரதத்தாசாரியர் கிரகத்துக்கு வந்து அவனை நோக்கி, சுவாமி! எனக்கு அன்னங் கொடுத்தருளல் வேண்டுமென்று பிரார்த்திப்ப, ஆசாரியர் அவனைத் தமது ஒரே பந்தியிலிருத்திப் போசனங் கொடுத்தார். போசனமுடிந்தபின் அவர் வெளியிலேவர, அதைக்கண்டு கிராமத்தார் இவன் தொம்பச்சி சகவாசம் பண்ணினவனென்று அரதத்தாசாரியருக்குப் பிரஸ்தாபித்தார்கள். பின்னர் அவர்கள் திரியம்பகனைநோக்கி நீ எந்தப்பந்தியிலிருந்து சாப்பிட்டாயென்று வினவ, அவர் உள்ளவாறு சொல்ல, அதைக்கேட்டு அவர்கள் ஆசாரியரிடத்திலே போய், மகாபாதகனாகிய இவனோடு நீர் சாப்பிட்டது நிந்தையாமன்றோ என்றார்கள்; அப்போது அவர் அவர்களைநோக்கி, தைப்பூசத்திலே மகாகாவேரியிலே ஸ்நானம் பண்ணி மகாலிங்கமூர்த்தி தரிசனம் பண்ணியிருக்கின்றார்; ஆதலினால் அவர் மகாபாதகங்களினின்று நீங்கினார் என்றார். கோடி ஜென்மங்களிலே செய்த பாவம் சிவதரிசனத்தினாலே அக்கினியிலிட்ட பஞ்சுபோல நசித்துப்போம் என்றார். இந்த வாக்கியத்தைக் கேட்டு அவர்கள் பின்னுஞ்

சொல்வாராயினர். அவளோ தாசி, அகோராத்திரம் அவன் அவளோடு இருந்தமையால், அவையெல்லாம் கேவலம் காவேரி ஸ்நானத்தால் எவ்வாறு நீங்கும் என்றார்கள். உடனே அரதத்தாசாரியர் அந்தப்பிராமணனைத் திரியம்பகரே என்றழைத்து, நீர் இவர்களோடு திருவிடைமருதூருக்குச் சென்று, நான் புஷ்யநக்ஷத்திரத்திலே காவேரியில் ஸ்நானஞ் செய்து உம்மைத் தரிசனம் பண்ணினமையால் என்பாவம் போய்விட்டதோ, சுவாமீ! சொல்லும் என்று கேளும் என்றார். இங்ஙனம் அரதத்தாசாரியர் அறிவுறுத்தக்கேட்ட திரியம்பகர் அப்பிராமணர்களோடு திருவிடைமருதூருக்குப் போயிருந்த சமயத்திலே, ஆலயம் சிவனடியாரால் நிறைந்திருந்தது. திரியம்பகர் சுவாமியைப் பார்த்து, தேவாதிதேவரே. தயாசமுத்திரரே, புஷ்யநக்ஷத்திரத்திலே காவேரி ஸ்நானத்தினாலும், உமது தரிசனத்தினாலும் அவ்வேசியோடு யான் சங்கமஞ் செய்துண்டு வாழ்ந்த தோஷம் போய்விட்டதா சொல்லும் என்று பிரார்த்தித்தார். அது கேட்ட பத்தரக்ஷகராகிய மருதப்பெருமான் அவரைநோக்கி, எ குழந்தாய்! நீ செய்த அந்தபாவம் தீர்ந்துபோய்விட்டது என்றார். சரணாகதரக்ஷகராகிய சிவபெருமானுடைய வாக்கியத்தை அவர்கள் கேட்டு இது எதிரொலி வாக்கியமேயன்றி; ஈசுவரனுடைய வாக்கியமன்று என்று மறுத்தார்கள். இதைக்கேட்டு திரியம்பகர் கண்ணீர் வார அழுது, மீட்டும் ஆசாரியரிடம் வந்து இவர்கள் அதனை ஒப்புக்கொண்டிலர் என்று விண்ணப்பஞ் செய்தார். அப்போது அரதத்தாசாரியர் அவரோடு தாமுங்கூட ஆலயத்துக்குப் புறப்பட்டுப் போய், அந்தச் சபையிலே சுவாமியைப் பார்த்து பின்னுங் கேளும் என்றார். அவரும் அப்படியே முன்போலவணங்கி வேண்டினார். சுவாமியும் மகாமேக கோஷம் போல, மகாலிங்க தரிசனத்தினாலும், காவேரி ஸ்நானத்தினாலும் உன்பாவம் போயது போயது என அசரீரிவாக்கி

டு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

னால் அருளினார். உடனே எல்லாரும் ஆச்சரியப்பட்டு அரதத்தாசாரியரைப் புகழ்ந்தார்கள். இதுநிற்க,

அரதத்தாசாரியருடைய சகோதரியாருக்கு ஓர் முடப்புதல்வர் அவதரித்திருந்தார். இவர் ஓர் நாள் தமது மாமனாருடைய பாதங்களிலே விழ்ந்து வணங்கி, சுவாமி உமது அருளினாலே காசி மகாக்ஷேத்திரத்து மணிகர்ணிகையிலே ஸ்நானஞ்செய்ய விரும்புகின்றேன் என்று ஆசையோடு வேண்ட, ஆசாரியர் கிராமத்திலேயுள்ள சரசிலே ஸ்நானஞ் செய்யுமாறு ஆஞ்ஞாபித்தார். மேன்மை தங்கிய புத்தியையுடைய இவர் உடனே அதில் ஸ்நானஞ்செய்ய, அவர் மணிகர்ணிகையிலே தோன்றி, பின்னர் கங்காஸ்நானஞ் செய்து, விசுவேசுரர் தரிசனஞ் செய்து கொண்டிருந்தார். இங்ஙனம் சிலவருஷம் கழித்தபின், ஓர் நாள் விசுவேசுரர் ஆலயத்துக்குச் சமீபத்திலே ஒருவர் தமது பாரியாரோடு சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்தார். அப்போது அவர் இவரை நோக்கி, ஓ பிராமணோத்தமரே! நுண்ணறிவுடையவரே! நுமது கிராமத்திலே காசிபகோத்திரரும், நல்லோரும், வைதிகருமாகிய அரதத்தர் என்பவர் ஒருவர் இருக்கின்றாரா? என்று கேட்டார். அதற்கு அவர் நான் வசிக்கும் கஞ்சாபுரத்திலே அரதத்தர் எனப் பெயரிய என் மாதுலர் வசிக்கின்றார். அவர் சைவேந்திரர் க்ஷேமத்தோடிருக்கின்றார் என்றார். அப்போது அவர் இவரது வார்த்தையைக்கேட்டு சந்தோஷமுற்று, காசியிலே ஒருவர் அவரது க்ஷேமம் விசாரித்தார் என்று சொல்லுதிர் என்றார்; அவரோடு அங்கிருந்த பாரியும் புன்முறுவலோடு நானும் விசாரித்தேன் என்று சொல்லுதிர் என்றார். அதைக்கேட்ட மருகனார் நான் நீங்கள் இருவருங்கேட்ட வசனம் சொல்வேனென்று சொல்லி, நான் இனி எப்படி அங்கே போகும் வன்மையுடையவனாவேன் என்றார். அதற்கு அவர் நீர் எப்படி இங்

கு வந்தீரென்று கேட்க, அவர் என் கிராமத்திலே பிரமதீர்த்தம் என்று ஒன்றுளது. அதிலே ஸ்நானஞ் செய்யுமாறு என் மாமனார் ஆஞ்ஞாபிக்க, அப்படியே ஸ்நானஞ்செய்து இங்கே மணிகர்ணிகையிலே வந்து தோன்றினேன். இனி அவ்வாறுபோகச் சக்தியுடையேனல்லேன் என்றார். அதைக்கேட்ட பெரியவர் நீர் இப்பொழுதும் போய் மணிகர்ணிகையிலே ஸ்நானஞ்செய்யும் என்றார். அவர் அவ்வாறு மணிகர்ணிகையிலே ஸ்நானஞ்செய்து, உடனே பிரமதீர்த்தத்திலே தோன்றி, மகிழ்ச்சியோடும் மாமனாரை அடைந்து வணங்கி, சுவாமீ! உமது கிருபையினால் கங்காஸ்நானஞ் செய்து போந்தேன் என, ஆசாரியர் அவரைநோக்கி, காசியிலே யாராயினும் என்னை அறிந்தார் உளரோ? என்று கேட்ப, அதற்கு மருகனார் ஆம் காசியிலே விடரூபத்தோடு சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்த தம்பதிகள் தங்கள் க்ஷேமத்தை விசாரித்தார்கள் என்றார். அதைக்கேட்ட அரதத்தர் அவர்கள் கேட்டார்களா! கேட்டார்களா!! என்று சொல்லிக் கண்ணீர்வார ஆனந்தபரவசராய் நிருத்தனஞ்செய்தார். இதைக்கேட்ட கிராமத்தாரெல்லாம் வந்து ஒருங்கு கூடிச் சிவாஞ்ஞையினாலே மணிகர்ணிகையிலே ஸ்நானஞ் செய்து, பிரமதீர்த்தத்திலேவந்து தோன்றினமையால், இத்தீர்த்தத்துக்கும் மணிகர்ணிகை என்று பெயர் வழங்குக என்றும், இதிலே ஸ்நானஞ்செய்தவர்களுடைய பாவமெல்லாம் ஒழியும் என்றும் ஓர் அசரீரிவாக்கு எழுந்தது. அரதத்தாசாரியர் முதலிய யாவரும் அற்புதமாகிய இவ்வசரீரி வாக்கைக்கேட்டு, இது அடியார்கள் பொருட்டுச் செய்யப்பட்ட சிவலீலை என்று அறிந்துகொண்டார்கள். அரதத்தாசாரியரிடத்திலிருந்து அவர் மருகனார் யாவும் அறிந்து சர்வஞ்ஞராயினார். இவர் தமது மாமனார்செய்த சுருதி சூக்தி மாலைக்கு வியாக்கியானஞ் செய்து மிகக்கீர்த்தி படைத்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தார். சனங்கள் இவருடைய பக்தி விஷயத்தை நோக்கி
இவருக்கும் அரதத்தர் என்று பெயர் கொடுத்தார்கள்.

அக்கஞ்சாபுரத்திற் சிவப்பிரியனென்னு மொரு மறை
யவ ரருமையாகப்பெற்ற சுமதி, தருமபாலன் என்னும் இர
ண்டு சிறுவர்களும் ஓரேதினத்தில் வாந்திபேதியாலும் பா
ம்புகடியாலும் இறந்தமையா லவர் மிகவுந் துக்கித்து இற
ந்த இருமக்களுடலங்களையுந் தகனஞ்செய்ய இட்டமில்லா
தவராக அழுதுகொண்டிருந்தனர். இதனை யுணர்ந்து அர
தத்தர் அவ்விடத்திற் கெழுந்தருளி பிரேதங்களை வைத்தி
ருப்பது சரியல்லவென்றுரைத்துப் புத்திரசோகத்தா லவர்
அவ்வண்ணஞ் செய்யாமையால், மந்திரவிபூதியை அவ்விற
ந்த இருவருடலின்மீது மிட்டனர்; உடனே அவர்கள் உயிர்
பெற்றெழுந்து அஞ்சலியஸ்தராக நின்று, சுவாமீ! நாங்கள்
முற்பிறப்பில் இச்சிவப்பிரியருக்கு அடிமைகளான நந்த
னும் வீரனுமாக விருந்தேம், இவரெங்களுக்குச் சரியான
கூலிகொடாமையினு லிவர் மக்களாகப் பிறந்தேம், கடனெ
ழிந்தமையா லுடலிழந்தேம்; உம்மாலிடப்பட்ட மந்திர
விபூதியினல் உயிர்பெற்றெழுந்தேமென்று அநேக விடய
ங்களைக் கூறினர்கள். அப்பொழுது சிவகணங்கள் விமான
த்துட னுகாயத்திற்றேன்றி அரதத்தருடைய விபூதிப்பே
ற்றினல் உங்களுச்குச் சிவலோகங் கிடைத்தது என்றன
ருடனே அவ்விருவரும் அவ்வுடலங்களைவிட்டு தேவ உருவ
மெய்திச் சிவலோகமடைந்தார்கள். இந்த ஆச்சரியத்தைக்
கண்டவர்களுங் கேட்டவர்களு மானந்த மடைந்தார்கள்.

இப்படி இருக்குங்காலத்தில் ஓர் நாள் திருடன் ஒரு
வன் இராசாவின் கிரகத்திலே திருடிக்கொண்டு புறப்பட்டு
ப்போக, காவற்காரர்கள் அவனைத் தொடர்ந்துவர, அதுக
ண்ட கள்வன் ஓடிவந்து அரதத்தாசாரியரை நமஸ்கரித்து,



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சுவாமீ ! காவற்காரர்கள் தொடர்ந்து வருகின்றார்கள்; என்னைக்கண்டால் கொன்றுபோடுவார்கள்; காத்துக்கொள்ளல் வேண்டுமென்று வேண்ட, உடனே அவர் அந்தத்திருடனுக்கு விபூதிதாரணஞ்செய்து யஞ்ஞோபவீததாரணஞ்செய்து, தாலபாத்திரத்திலே போசனங் கொடுத்து உண்பித்தார். உண்டுக்கொண்டிருக்கும்போது, முன்னே ஓடிவந்த கள்வன் எங்கே என்றுகாவற்காரர்கள் அரதத்தாசாரியரைக் கேட்டார்கள். அதற்கு அவர் நமது பிள்ளை உள்ளே உண்டுகொண்டிருக்கின்றான், ஐயமுளதேல் உள்ளே பிரவேசித்துப் பார்த்துக்கொள்க என்றார். அவர்கள் எங்குஞ் சுற்றிப் பார்த்தும் மற்றொருவரையுங் காணாது தம்வழியே போய்விட்டார்கள்.

அரதத்தாசாரியர் சர்வகர்த்தாவாகிய சிவபெருமானையே பூரணபாவனை தியானஞ் செய்துகொண்டிருந்தார். அப்போது சிவபெருமான் அவருக்குச் சாயுச்சியங் கொடுக்கவேண்டி, தாம் பிருங்கி நந்தி மகாகாளர் பிரமா விஷ்ணு முதலாயினோரோடு வாத்தியகோஷங்கள் முழங்க, அட்டதிக்குகளெல்லாம் அளவிலாப் பிரகாசம் விளங்க, சடையிலே அமைந்த கங்கைப்பிரவாகத்திலே சந்திரன்விளங்க, காதிலே சர்ப்பங்கள் இரத்தின குண்டலங்களாய் விளங்க, தமது மடித்தலத்திலே உமாதேவியார் அமர, கபோலங்களிலே தமது குண்டலங்கள் பிரதிவிம்பிப்ப, பவளக்கொடியின்மத்தியில் விளங்கும் முத்துக்கள்போல உதடுகளின் மத்தியிலே தந்த வரிசைகள் பிரகாசிப்ப, மந்தகாசத்தினாலே முகம் சோபிக்க, மான் மழு வரதம் அபயம் விளங்க, உருத்திராக்ஷ மாலாதாரணராய் இடபாரூடராய் இடபத்தின் பிடரியிலே சர்ப்பகங்கணமணிந்த கரம் அமைய, உருகும் நெய்க்கட்டிபோல சச்சிதானந்த சொரூபியாகிய சிவபிரான் அரதத்தாசாரியருக்குச் சாயுச்சியம் கொடுக்குமாறு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குருவடிவத்தோடு எழுந்தருளினார். இவ்வாறு தமக்கு முன் எழுந்தருளி மோக்ஷங் கொடுக்க விரும்பும் சுவாமியை ஆசாரியர் நோக்கி, அவரை ஆராமையினாலே மீட்டும் நமஸ்கரித்துத் தோத்திரம் பண்ணினார், பண்ணவே, ஆசாரியர்மீது சிவபிரான் பிரீதிசெய்து, ஏ அரதத்த பக்த சிரோமணியே! உனது திரிகாலபூசை செபம் ஸ்தோத்திரம் தியானம் என்பனவற்றால் நம்மை வழிபட்டனை; உனக்கு வேண்டிய வரத்தைக் கேள் என்றார். அதற்கு ஆசாரியர் உமாசமேதராகிய கைலாசபதியை நோக்கி, சுவாமீ! நீர் இப்போது அடியேனுக்குப் பிரசன்னராய் வரங்கொடுப்பது மெய்யேயானால், எனக்கு இருபுறத்துமுள்ள பதினான்கு வீட்டுக்காரரையும் மீண்டு வாரா நெறியாகிய முத்தியிலே சேர்த்தருளும் லோகநாதரே! உமக்கு நமஸ்காரம் என்றார், இங்ஙனம் பிரார்த்திக்கச் சிவபிரான் அங்ஙனமாகுக என்று அங்கீகாரஞ்செய்ய, ஆயிரங்கிண்கிணி சாலங்களாலும் நவரத்தினக் கால்களாலும் அலங்கரிக்கப்பட்ட கோடிசூரியப் பிரகாசமாகிய விமானமொன்று வந்திறங்கிற்று. அதிலே பதின்மூன்று வீட்டுக்காரரும் அவர்கள் பந்துக்களும் சிநேகிதர்களும் வந்தேறினார்கள். சுவாமி அரதத்தரை நோக்கி, பதின்மூன்று வீட்டுக்காரர்கள் வந்து ஏறினார்கள். மற்றோர் வீட்டுக்காரர் எங்கே என்று சிவபிரான் அரதத்தாசாரியரை வினவ, அவர் பதினான்காம் வீட்டுக்காரி ஓர் கிழவி, அவள் சரீரமெல்லாம் திரைந்து வெளுத்து நடுக்கப்பெற்றவள், நெடுங்காலத்தாள்; ஒவ்வோர் நாளும் விக்கினேசுரருக்கு மோதகம் நிவேதிப்பவள் என்று கூறி, அவளை அழைத்து வருமாறு ஒருவரை அனுப்ப, அக்கிழவி அழைக்கவந்தவரை நோக்கி, நான் விநாயகக்கடவுள்பொருட்டு அடுப்பிலே மோதகம் பாகமாமாறு வைத்தேன், அது நிவேதிக்கப்பட்டபின் வரு-

வேன், போகின்றவர்கள் கைலைக்கு முந்திப் போகலாம், நான் விக்கினேசுவரருக்கு நிவேதனம் பண்ணிவிட்டுப் பின்பு வருகின்றேன் என்று சொல்லியனுப்பினாள். அவர் அவள் வார்த்தையை ஆசாரியருக்குச் சொல்ல, அவர் நாங்கள் இப்போது பிரஸ்தானமாவோம், அக்கிழவி விக்கினேசுவரருக்குப் பூசை செய்துகொண்டு வருகின்றாளாம்" என்றார். அப்போது சுவாமி புன்சிரிப்படைந்து பக்கத்திலிருந்த கணபதியை நோக்கி, அக் கிழவியுடைய பூசையை அங்கீகரித்துக்கொண்டு அவளை கைலைக்கு இட்டுக்கொண்டு வருக என்று அவரை ஆலயத்தின் புறத்திலே இருக்கச்செய்தார். அரதத்தாசாரியர் விமானத்தில் ஏறும்பொழுது, அவருடைய வைவசுதான்னம் நாடோறும் புசித்துவந்த ஓர் சுவானமானது இரக்கத்தினாலே அழ, அதனையும் எடுத்து இரதத்தின் மேலேற்றி வைத்துத் தாமும் ஏறினார். சிவபிரான் அரதத்தாசாரியர் முதலிய பக்தர்களோடு கைலையை யடைந்தார். இதற்குள்ளே மோதகம் பாகஞ்செய்து முடித்து, அவற்றை மற்றைய உபகரணங்களோடு கொண்டுபோந்து, சாவகாசமாக விநாயகருக்குப் பூசைசெய்து முடிப்ப, அவ்விநாயகர் அவளை நோக்கி உனது பூசைகொண்டு பிரீதியுற்றேம். உனக்கு வேண்டிய வரத்தைக் கேளென்ன, அவள் லோகோபகாரமாக ஓர் வார்த்தைக் கேட்கின்றாள், சுவாமீ! இப்படிப்பட்ட ஓர் கிழவி பூசித்து வந்தாளென்ற புகழ் நிலைக்குமாறு நீர் இவ்விடத்திலே சாந்நித்தியராயிருந்து, உமக்கு மோதக முதலியன வைத்து நிவேதித்து உம்மைப் பிரதக்ஷிண நமஸ்காரஞ் செய்கின்றவர்களுக்குக் கைலாயத்தைக் கொடுத்தருளல் வேண்டுமென்று உரைத்து, தனக்குக் கைலாய பிராப்தியைத் தந்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தாள். அதற்கிசைந்து விநாயகர் அவள் கைலாசத்தை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அடையத்தக்க சக்தியைக் கொடுத்து அவர் ஆங்கே எழுந்தருளி யிருந்தார். இரதத்தின்மீதிவர்ந்து போந்தவர்கள் பாதித்தூரஞ் செல்லற்கு முன்னமே இவள் அவர்களைக் கண்டு சேர்ந்தாள். அங்குள்ளோர் நீ இவ்வளவு வேகமாய் வந்தாயோ என்று கேட்ப, அவள் "குதிரையுங் காதம்கிழவியும் காதம்" என்பது அறியீர்களோ என்றாள். அந்த வார்த்தையைக் கேட்டுக்கொண்டு அவர்கள் எல்லோரும் அழியாததும், பழிப்பற்றதும், ஆனந்தமே உருவமானதும், ஞானிகளுள்ளம்போல வெண்ணிறம்பொருந்தியதும், பாவிகளா லடையக்கூடாததும்; அருவிபை ஒலியாலும், ஐராவதத்தை மதநீராலும், சந்திரனைக் களங்கத்தாலும், அன்னத்தை நடையாலும் அறியவேண்டிய வெண்மையை யுடையதும், பகலுமிரவு மற்றதும், பரமேசுவரனையே ஒத்ததுமான ஸ்ரீகைலாசத்தை அடைந்தார்கள். பதினன்கு வீட்டுக்காரரும் சந்திரகலா சூடராகிய சம்புவுடைய சாரூபத்தைப் பெற்றார்கள்.

சரித்திரம் முற்றிற்று.

ஸ்ரீ ஆரதத்தாசாரியரடிமலர்வாழ்க.



ஆசிரியர் சிவலோகத்திற் கெழுந்தருளியது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாயிரம்.

விநாயகர்.

சீர்பூத்ததிருமறுமார்புடையவனேபரமென்னச்செருக்குற்றோர்கள்
ஏர்பூத்தசிந்தையிடிவிழுமாறுகண்ணன்கொள்கரியபொல்லா
நீர்பூத்தவிழியின்மலைப்பாம்பென்றுமுருவமதைநீக்கியாண்ட
வேர்பூத்தவெங்கரத்துப்பெம்மானதடிமலரையிறைஞ்சிவாழ்வாம்.

பசுபதி.

என்றலைகள்முதலபலவிலங்குமெழிலுறப்புடனேயேய்ந்தநின்னை
ஒன்றியுணர்ந்தேத்தாமலுறுபொல்லார்கெடுகவெனவுயர்மால்கூறி
நின்றுபணிந்திடுகெஞ்சபுரமதனிலமரொண்டோள்நிமலன்செய்ய
பொன்றிகழுமடிமலர்முடிமலராவெந்நாளும்பொருத்திவாழ்வாம்.

அம்பிகை.

எழிலுறுவைகுந்தமதிலேய்ந்தவனேபரமென்னவிசைப்போர்சிந்தை
வழியிலுறுமகந்தையுடன்வாழ்நாளுமகன்றொழியவலியபொல்லா
மொழியதனாலரிமகனையிறக்குமாறுசெய்தம்பின்மென்கூந்தற்
பழிதபுநல்லுமையவள்வனசமலரடியிணையைப்பணிந்துவாழ்வாம்.

குமாரசுவாமி.

எந்தமரியேபரமென்றிசைக்குமவர்மொழிப்பொருள்களில்லாதோடச்
சந்தமுறுமரிமகன்றன்றலைநான்குநனிகுலுங்கத்தட்டிக்குட்டிக்
கந்தகிரியுவளகத்திற்காவலுடனேவைத்துக்கடனீர்வைப்பி [ம்.
லெந்தவுயிரும்படைத்தவிளையபெருந்தகையடியையிறைஞ்சிவாழ்வா

ஸ்ரீஞானசம்பந்தசுவாமிகள்.

ஆழிதரித்துறுசெங்கையண்ணலயன்முதலானோரங்கைகூப்பி [ந்தை
யேழிசையின்றவப்பயனே யெழிலுறுமாமறைப்பொருளேயெந்தன்சி
வாழுறுநல்லிறையவனேயெனவென்பைமடமாதாவகுத்துத்தந்த
காழியர்கோனடிமலரையகத்துன்னிப்பவத்துன்பங்கழித்துவாழ்வாம்.

ஸ்ரீதிருநாவுக்கரசுசுவாமிகள்.

கரியநிறத்திருமாலுந்தேவர்கோனாங்காணாததிருவுருவிற்கண்மூ
ன்றுற்ற, பெரியவனைவிடமுண்டகண்டன்றன்னைப்பேணாதார்கொடி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யரனெனப்பேசும்வாய்மை, உரியமறைப்பொருளினைத்துந்தமிழிலாக்கி யுறுவர்சிகாமணியாகியுற்றுநின்ற, வரியதிருவாகீசவடிகள்செய்யவடி மலரைமுடிமலராவமைத்துவாழ்வாம்.

ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள்.

தேனுறுங்குல்லைமுடிநல்லோன்றன்னைத்தினநாடுமெடியவர்கள்சிந்தையைய்யர், தானுறவிழிமலராற்பூசையாற்றத்தனியாழியவற்கீந்ததலைவன்றன்னை, ஊனுறியொளிர்வடிவேன்முருகையீன்றவுத்தமனைப் பத்தியுடனுவந்துபாடி, வானுறுபுகழ்படைத்தசுந்தரரேசவள்ளலடியிணைமலரைவழுத்திவாழ்வாம்.

ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள்.

பந்தமுறுமால்சொற்றபொல்லாக்கொள்கைப் படிற்றொழுக்கப் புத்தரினம்பாறியோட, நிந்தையறுமறையிலுரைபொருளாமெங்கள் நிமலனுருவிதுவென்னநின்றுகாட்டி, அந்தமில்சீர்மான்மதத்தையழித்தவெங்களண்ணல்திருவாதவூரடிகள்செய்ய, சந்தமலரடியிணையின் மலர்கவித்தாழ்ந்திறைஞ்சியாழ்ந்தபிறப்பகற்றிவாழ்வாம்.

அரதத்தாசாரியசுவாமிகள்.

எருமிப்பூணணியாமென்பாகியன்பாகியெழில்கொண்மேனி
நீருமிப்பூந்தொடையாகிலையாகிக்கலையாகிநிமலன்பாலோர்
கூருமிப்பவளவிதழ்க்கொம்பாகியம்பாகிக்குலவியீசன்
பேருமியுறத்தவஞ்செய்சக்கரமாலடிமலரைப்பேணிவாழ்வாம்.

ஆசாரியர்.

பந்தவியலொடுமுத்தியியலிதென்னப் பகர்ந்தருளிச்சிவானந்தப் பரவைமூழ்கி, நந்தவிலாதிருக்குமுயர்மதவுமீந்துநாயேன்றனுடலாதி மூன்றுங்கொண்டு, நிந்தையறுமுறுவர்சிகாமணிகள்போற்றநின்றசிவ ஞானியெனவிலங்கூறு, மெந்தைதிருவடிமலர்கடம்மையென்றுமேத்தியெழின்மலர்தூவியிறைஞ்சிவாழ்வாம்.

அவையடக்கம்.

மந்தியும்புகுந்தாரவறிகலா
தந்துகோட்டிலுறங்கனியுண்குவான்
சிந்துநீட்டுஞ்செழுங்கரமேயென
வெந்தையார்புகழ்யான்சொலவேய்ந்ததே.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சி வா ய ந ம:

ஹரிஹர தாரதம்மியம்.

சுலோகம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஏகஸ்ஸமுத்ரசலிலேவடபத்திரசாயீ த்வந்யஸ்ஸமுத்ரஶரதிஸ்த்ரிபுரப்ரபெத்தா । கோவாநயோரதிகஇத்யநுசிந்த்யவ்ருத்தாஸ்ஸத்யம் ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம: ॥

மொழிபெயர்ப்பு.

மன்னுங் கடலி னீரினிடை மருவுஞ் சிறிய வாலிலைமேற்
றன்னுங் கரிய மேகமெனத் துலங்கி யொருவன் றுயிலுற்றான்
பன்னுங் கடலைத் தூணியெனப் படுத்தே யொருவன் பகையட்டா
னென்னு மிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற்பெரியீ ரிறைஞ்சுதுமே.

வடமொழி - பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
ஸமுத்ரஸலிலே	கடல்நீரில்
வடபத்ரசாயீ	ஆலிலையிற்கிடக்கிறவன்,
அந்ய:து	இன்னொருவனானால் [ம்
சமுத்ரசரதி:	அந்தக்கடலை அம்புக்கூடாக வுடையவனு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

த்ரிபுரப்ரபெத்தா	திரிபுரங்களைப் பேதித்தவனுமாக வுள்ளவ [ன்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்தியா	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் கடலின் நீரிலே ஒரு ஆலிலையின்மீது கிடந்தான், இன்னொருவன் அக்கடலையே அம்புக்கூடாக உடையவனும் திரிபுரங்களைப் பேதித்தவனுமாக உள்ளவன்; இவ்விருவருக்குள் (யார் சிறந்தவனென்று கேட்குமெமக்கு) இவர் சிறந்தவரென்று ஞானிகளாகிய நீங்கள் கூறுவீர்களானால், உங்களாற் சொல்லப்படுபவரையே நாங்கள் சரணமாக அடைகின்றோம்.

விதப்பு.

கடலி லாலிலையிற்கிடந்தானென்றது-ஹரியை; எங்ஙனேயென்னின், பிரமப்பிரளயகாலத்தில் உண்டாகிற சமுத்திர நீரினடுவிலோராலிலையிற் குழந்தையுருவமாக ஹரி கிடந்தமையால். இதனை—

"அண்டபித்திகையினளவுநீரலதறிந்துகூறவொருபொருளிலை
கண்டுபுத்திமிகநொந்திளைப்பினிருகண்கவற்சியுறுபோதினிற்
கொண்டலொத்ததிருமேனியோடொரு குருந்துபச்சையிலைமீதுவந்
தண்டிநிற்கவதுகண்டெனக்குமன்மாதரத்தின்மகிழ்வானதே" என்னும் பாரதம் ஆரணியபருவத்தாலுணர்க.

ஒருவன் அக்கடலை அம்பறாத்தூணியாக்கி திரிபுரதகனஞ் செய்தானென்றது – ஹரனை; ஹரன் திரிபுரசங்காரஞ் செய்தகாலத்தில், மேருவாகிய வில்லில் நாரயணனாகிய அம்பினை வைத்துவிட்டனன். இதனை—

"மேருமாமலைவலியையோர்வில்லதாத்திரட்டி
யோருஞ்சேடனைநாரியாப்பொறித்துலகளந்த
காருலாவுடல்விண்டுவைக்கணைவடிவாக்கி
நேருமங்கிமாருதமுனையிறகதாநிறைத்தார்" எனவும்,
" வளைத்தவெஞ்சிலைதாங்கினோன்மால்கணைசெலுத்தி
இளைத்ததுண்ணிடைபங்கர்பார்த்திளநகைவிளைப்பத்
திளைத்தமுவெயிற்றீமலிந்தெருகணஞ்செலாமுன்
றொலைத்ததீமையோர்மாய்ந்தனர்சாம்பராயொழிந்தே" எனவும் வரும் ஸ்ரீமகாபாரதங் கன்னபருவக்கவியாலுணர்க.

வ்ருத்தாவென்றது – ஞானவைராக்கியாதி நற்குணமுடையவர்களை. ஒருபொருளினுயர்வையோ தாழ்வையோ கூறவேண்டுமாயின், ஞானமுடையோர்களாலன்றி யேனையோர்களால் ஆகா. அளவையை முன்னே யுணரானேல், பதார்த்த நிச்சயம் எவ்வாறறிவான்? அறியினும் நூலாதரவில்லாதவனதறிவு முற்றநில்லா. ஆதலாலிவ்விடத்தில் வ்ருத்தாவென்றது – வித்வான்களையே. இவ்விடத்தளவையென்றது– அட்டாதச வித்தைகளை. கற்றவர்களே நடுவுநிலைமைக் குரியவர்களேனையரல்லர். ஏனெனி லவர்களிடத்து நூலாதாரமின்மையால், இதனை—

" அரங்கின்றிவட்டாடியற்றேநிரம்பிய
நூலின்றிக்கோட்டிகொளல்" என்றும்,
" கல்லாதான்சொற்காமுறுதன்முலையிரண்டு
மில்லாதாள்பெண்காமுற்றற்று" என்றும் நாயனார் திருவாய்மலர்ந்தருளி யிருத்தலாலுணர்க.

ஸத்யம்ப்ருவந்து என்றது – தம்மதம் பிறர்மதம் என்னும் தாரதம்மியங்களினும், பொய்யென்றுணர்ந்தாலும் தமது மதமானால்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மௌனஞ் சாதித்தலும், அவ்வாறிருக்கினும் இதுதான் சரியானது என்று கூறுதலும் ஆகிய குணங்களைச் சிலரிடத்துக் காண்கின்றோம். அவ்வாறுள்ளவர் ஒருதலையாகவே நிருமானஞ்செய்வதுலகத்திற் சில விஷயங்களிற் காண்கின்றோம்; அப்படிப்பட்டவர்களையல்ல நாம் வினவுவது என்றதாம்.

" சமஞ்செய்துசீர்தூக்குங்கோல்போலமைந்தொருபாற்
கோடாமைசான்றோர்க்கணி" என்னுந் திருக்குறளின்படி, தம்மதம் வேறுமதமென்று பாராது உண்மை கூறுமவர்களைச் சுட்டியே யவ்வாறு கூறியது.

தமிமம்வயமாச்ரயாம் என்றது-மெய்யறிவுடையோர்களாற் கூறப்படுவது உண்மைப்பொருளாதலால், அவ்வுண்மையின்வழி நிற்பதே தக்கோருக்கழகு என்பதாம். இதனை—

" பொருளல்லவற்றைப்பொருளென்றுணரு
மருளானுமாணாப்பிறப்பு" என்னுந் திருக்குறளின்படியெ ன்றுணர்க.

தாத்பர்யம்.

கடலினடுவிற் றிருமால் கண்ணுறங்கினர். சிவபெருமானவரை யே அம்பாகக்கொண்டு திரிபுரசங்காரஞ் செய்தனர் என்பதே.

தாரதம்மியம்.

ஒருவருக்குள்ள அம்பராத்தூணி அம்பு என்னும் இவைகளை விட அவைகளையுடையவர் சிறந்தவரென்பது தேற்றம். ஒருவனது செருப்புக் குடையும் அம்புமெல்லா மவனிட்டம்போல உபயோகிக்கப்படுபவை. அதுபோல திருமாலுஞ் சிவபிரானால் உபயோகப்படுத்தப்பட்ட ஒருவஸ்துவேதவிர வேறின்மையினாற் சிவபெருமானே சிறந்தவரென்றறியப்படுவதனால், நாம் தாழ்வுபொருந்திய திருமாலைப் பொருளல்லவென்று தள்ளி உயர்வுபொருந்திய ஹரனைச் சரணமாக அடைகின்றோம்.—எ-று. (௬)

𑌸𑍁𑌤𑌂𑌚𑌕𑌾𑌰𑌚𑌤𑍁𑌰𑌾𑌨𑌨𑌮𑍇𑌵𑌚𑍈𑌕
𑌸𑍂𑌤𑌂𑌚𑌕𑌾𑌰𑌚𑌤𑍁𑌰𑌾𑌨𑌨𑌮𑍇𑌵𑌚𑌾𑌨𑍍𑌯𑌃 ।
𑌕𑍋𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑍃𑌦𑍍𑌧𑌾
𑌸𑌤𑍍𑌯𑌂𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁𑌤𑌮𑌿𑌮𑌂𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃 ॥

ஸூதஞ்சகாரசதுராநநமேவசைகஸ்ஸூதஞ்சகாரசதுராநநமேவ சாந்ய:| கோவாநயொரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்புருவந்து. தமிமம்வயமாச்ரயாம:||

மொழிபெயர்ப்பு.

ஐந்தி லொன்று குறைந்தமுகத் தவனை மகனு வாண்டுள்ளா
னிந்த வுலகி லொருவன்மற் றொருவ னெழில்கொள் சாரதியா
வந்த மகனை யேயுடையா னதனாற் சிறந்தா னொன்னுச்
சிந்தை புரிந்து பெரியவர்நீர் செப்பி லவனைச் சேருதுமே. (௨)

ஆரியத்தின் பதப்பொருள்.

ஏக:ச	ஒருவனானல்
சதுராநநமேவ	நான்குமுக முள்ளவனையே
ஸூதம்	பிள்ளையாக
சகார	செய்துகொண்டான்,
அன்ய:ச	மற்றொருவனோவென்றால்
சதுராநநமேவ	அந்த நான்குமுகமுள்ளவனையே
ஸூதம்	சாரதியாக
சகார	செய்துகொண்டான்,
அநயோ:	இவர்களுக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	எவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை

DHARMAPURA ADHINAM LIBRARY. தருமபுர ஆதீனம் நூல் நிலையம், தருமபுரம். DHARMAPURAM.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ப்ருவந்து	சொல்லலாம்; சொன்னால்
வயம்	நாங்கள்
தம் இமம்	அப்ப்டிப்பட்ட அந்த இவனை
ஆச்ரயாமஃ	அடைகின்றோம்.

பொழிப்பு.

(உ) ஒருவன் நான்முகமுள்ளவனைத் தனது மகனாய்ப் பெற்றான், இன்னொருவன் அந்த நான்முகனையே சாரதியாகக்கொண்டான்; இவர்களிலார் சிறந்தவர்கள்? அறிவுடையவர்களே கூறுங்கள்! நாங்களந்தப் புருஷனைச் சரணமாக அடைந்து வணங்குகின்றோம்.

விதப்பு.

ஒருவன் நான்குமுகமுள்ளப் பிள்ளையைப் பெற்றானென்றது – திருமால் நான்முகனை மகனாப்பெற்றதை. இதனை—

"வெண்டிருக்கிளைகடல்நெடுவேலிமூதலகம்
உண்டுபைத்தலைநாகபோகத்தினிலுறங்கும்
தண்டுழாய்முகிலுந்தியந்தடத்தினிற்றளைத்தாட்
புண்டரீகமொன்றலர்ந்ததுபுவியெலாம்பூப்ப" எனவும்,

"நீலமால்வரைநெற்றியிற்பொடித்தசெங்கதிரோ
போலவான்சுடர்பொழிதருமுளரியம்பொகுட்டின்
மேலதாகவந்தெழுந்ததுவெயில்விரிபசும்பொற்
கோலமேவியகுலமறைமழலைவாய்ச்குழவி" எனவும்,

"கொங்குவிம்மியகொழுமடற்றாமரைக்குழவி
யெங்குவந்தனவெவ்வழியிருந்தனமென்னா
வங்கண்மாதிரமனைத்தையும்பார்த்ததுபார்ப்பத்
திங்கள்போற்றிகழ்திருமுகநான்கெனச்சிறந்த" எனவும்

வரும் பாகவதச்செய்யுட்களா லுணர்க.

அவன்போலனைவொருவனென்றது – வேதாமங்களிலே கேட்கப்படுகிற ஹரனை. தனது சூதனாவுறவானந்தச் சதுர்முகனென்றது-

ஹரியின் மகனாகிய சதுர்முகனென் றழைக்கப்படுகிற பிரமனை ஹரன் தனதிரதத்திற்குச் சாரதியாகக்கொண்டதை—

"உருகெழுநிலமொருவையமு
மிருசுடரிருபுடையாழியுஞ்
சுருதிகடுகளாறுவாசியும்
மருமலரனையவன்வலவனும்" என்ற காஞ்சிமான்மியத்தாலும்,

"மறுவிலாமற்றநான்குநல்வட்டங்களாப்பிணித்து
நிறுவியேசமயங்களாற்றயும்பரிகளாநிரப்பித்
தெற்றுவிலாப்பெருங்குடிலைமுட்கோலெனத்திருத்தி
அறிவினீண்டவம்புயத்தனைப்பாகனாவமைத்தார்" என்று கூறப்படுகிற ஸ்ரீமகாபாரதத்தாலுமுணர்க.

தாத்பர்யம்.

ஹரிமைந்தனை ஹரன் சாரதியாகக்கொண்டான் என்பதாம்.

தாரதம்மியம்.

ஒருவன் தன் மகனை வேறொருவனுக்குத் தேரோட்டும்படி விடுவானாயின், தேரையுடையவனைக்காட்டிலும் தேரோட்டுபவனும் அவன் றந்தையுஞ் சிறந்தவர்களல்லவென்பது தேற்றம். ஆதலால் சதுர்முகனை மைந்தனாகவுடைய ஹரியினும் சதுர்முகனைச் சாரதியாகவுடைய ஹரன் சிறந்தவன். இவ்விஷயத்தால் ஹரிஹரரென்னும் இருவருக்குட்சிறந்தவன் யாவனென்று ஆயுமிடத்தில் ஹரனே என்று அறியப்படுகின்றான். ஆதலால், இவ்விஷயத்திலிழிந்த அரியை அப்பிரதானமாக அகற்றி, உயர்ந்த ஹரனை நாங்கள் சரணமாகஅடைந்து வணங்குகின்றோம்.—எ-று. (உ)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

கூ

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஏக:புத:புவிதகௌநவநீதகண்டமந்யோதகௌநவஸுதாமய சந்த்ரகண்டம் । கோவாநயோரதிகஇத்யநுசிந்திய வ்ருத்தாஸ்ஸத்யம் ப்ருவந்து தமிமம் வயமாஸ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

வண்ணக் கடலே யுடையாக விளைந்த வுலகில் வெண்ணெய்தனை
உண்ண வெடுத்தா னொருவன்மற் றொருவ னழகா ரமுதுடனே
நண்ணு மதியின் கலையொன்றை நயந்து தலையின் மீதணிந்தான்
எண்ணி லிவரு ளுயர்ந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:புந:	ஒருவனுனல்
புவி	உலகத்தில்
நவநீதகண்டம்	வெண்ணெய்த்துண்டை
ததௌ	தரித்தான்,
அந்ய:	மற்றொருவன்
நவஸுதாமய	புதிய அமிர்தமயமான
சந்த்ரகண்டம்	நிலாத்துண்டத்தை
ததௌ	தரித்தான்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	எவன்?
இதி	இதனை
அநுசிந்த்ய	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்வலாம்.
தமிமம்	உங்களாற் சொல்லப்பட்ட அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஸ்ரயாம:	ஆச்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் (புதிய) வெண்ணெய்த்துண்டை (கையில்) வைத்திருக்கின்றான், இன்னொருவன் புதிய சந்திரகலையைத் (தலையில்) வைத்துக்கொண்டிருக்கின்றான்; இவ்விருவருக்குள் சிறந்தவனை பெரியவர்களாகிய நீங்கள் சொல்லுவீர்களாயின், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக அடைந்து வணங்குகின்றோம்.

விதப்பு.

ஒருவனுலகிற் புதுவெண்ணெ யுறுதுண்டெடுத்தானென்றது - ஹரியை, அது அவ்வரிஅவ்வண்ணஞ் செய்திருத்தலால். ஹரி துவாபரயுகத்தில் மதுராநகரத்திற்பிறந்து,கஞ்சனுக்குப்பயந்து, தனது தந்தையாலிரவி லாயர்சேரியிற் கொண்டுவரப்பட்டு, அசோதையின் பிரசவவீட்டி லவளை யறியாதிடப்பட்டு, அங்கிருந்த பெண்குழந்தையை யாதவ க்ஷத்திரியராகிய வசுதேவர் தன்வீட்டிற்கு எடுத்துக்கொண்டு வரப்பட்டதற்குப்பின்பு,அசோதை தனது குழந்தையே இது என்று கருதி எடுத்துக் கண்ணனென்று பெயரிட்டு வளர்த்துக்கொண்டுவருங் காலத்தில்,இக்கண்ணன் வெண்ணெ யுண்பதி லதிகவிருப்பமுள்ளவனாய் வீட்டிலுள்ள வெண்ணெயை யுண்பதுவும்போதாமல்,அயல்வீடுகளிலுஞ்சென்று வெண் ணெய் திருடியுண்டு, நவநீதசோரன் - வெண்ணெய்திருடி என்னும் பெயரும்பெற்றனன். இவைகளை—

“ எறித்தவெண்டிங்களூற மின்றுளியமுதமென்னத்
தெறித்தவெண்டயிர் நுண்புள்ளிதிருமுகஞ்சிறப்புநின்ற
உறைப்பசுங்கொண்டலன்னுனுடைத்தனன்றடவுத்தாழி [ம்,
மறைத்தனள்வைத்தவெண்ணெய்வாரினுனேடினுனல்” என்று

“ களவுசெய்மால்காணுமற்காலமார்மனைகடோறுந்
தளவலர்நகையார்வைத்தவுறிதனைத்தடவிமல்கு [மெய்
மனைநெய்பால் வெண்ணெயெல்லா மசோதைசேய் கல்லுர்தன்
ஒளிவிழக்கவினைக்காட்ட வுண்டையாற்றெறித்தேயுண்டான் ”

என்றும் வரும் பாகவதங்களின் செய்யுட்களாலுணர்க. இச்சரித்திர விரிவை பாகவதாதிபுராணங்களிற் காண்க,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மற்றொருவன் புதியகலை மதித்துண்டைத்தரித்தான் என்றதி-ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ணஞ் செய்தமையால்.

முன்னொருகாலத்தில் பிரமபுத்திரனாகிய தக்கன் என்னும் உபப்பிரமா தன் புத்திரியர்களில் அசுவனிமுதல் இரேவதி ஈறாகிய இருபத்தேழுபெண்களையும் அழகிய (சோடச பதினாறு)கலைகளையுடைய சந்திரனுக்குக் கல்யாணஞ் செய்துகொடுத்தனன். அச்சந்திரன் அவ்விருபத்தேழுமாதர்களில் சிலரிடத்தில் அதிக விருப்பத்தையும், பலரிடத்தில் அதிக வெறுப்பையும் பொருந்தினவனாக இருந்தான். அதனால் அவன் மனைவியர்கள் தங்கள் தந்தையினிடத்திற்சென்று சந்திரனது பக்ஷபாதங்களை யெடுத்துக் கூறினார்கள். அவனும் உடனே குபிதனாய் மருகனாகிய சந்திரனைக்குறித்து நின்னழகு கெட்டொழிக, குறைந்தழிக என்று சபித்தனன்; பின்னர் தக்கனிடத்து நின்றுங் கிடைத்த சாபத்தினாற் சந்திரன் ஒளிகுன்றினவனாய் மிகவும் பயந்து இனி யென்செய்வதென் றஞ்சி யிந்திரனையடைந்து, தேவராஜ! யான் மாதுலனாகிய தக்கனிட்ட சாபத்தா லொளியிழந்தவனாயினேன். நீ விரைவில் அவன் சாபத்தை ஒழித்தருள் என்னலும், அவ்விந்திரன், சந்திர! யான் தக்கனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பவன், அது பற்றி யவனென்சொல்லை யொருபொருளாக மதியான், நீ நின்கவலையை நீக்கித்தரும்படி யவன் றந்தையாகிய பிரமனை வேண்டிக்கொள் என்றனன். உடனே சந்திர னிந்திரனைவிட்டுப் பிரமனிடஞ்சென் றவனது கால்களில் வணங்கி, ஐய! எனது கவலையை யொழித்தருள்கவென்றனன். விதாதா-பிரமன். குமுதநண்ப? நின்சோகமொழித்தற்கியானருகனல்லேன். தக்கன் என்மகனாக விருந்தாலும் என்னை மதியான். ஆதலா லவனிட்ட சாபத்தை யானெவ்வாறு நீக்குவேன். நின் கவலையை யொழித்தற்கென்னா லியலா. அதற்குத்தக்கவன் சர்வபூத தயாபரனாகிய ஹரனே ஆம். அதனால் நீ அவரிடஞ்செல் என்றனன். உடனே சந்திரன் கைலைமலையை யடைந்து, அங்கு நந்திதேவரருளினால் உள்ளே புகுந்து, ஸ்ரீகண்டமூர்த்தியே வணங்கி, பெருமானே!

அந்தோ? என் உடலழகெல்லாம் தக்கனா லழிந்துவருகின்றதாற் றேவரீரை சரணமாக அடைந்தேன்: அடியேனை இரக்ஷிக்கவேண்டும் என்று கதறியழுது குறைகூறினான். சந்திரனது தத்கால நிலைமையைக்கண்ட கருணைக்கடலாகிய ஸ்ரீ-அரனென்று திருநாமமுள்ள சிவபெருமானார் அவனை ஆதரித்து அபயாத்தமளித்து, ரோகணிகாந்த? நீ தக்கனது சாபத்திற்காக அஞ்சற்க. நின்னை யாமாதரிப்பேமென்று கூறி யவனிடத் தப்போழ்திருந்த ஒற்றைக்கலையை வாங்கித் தனது திருமுடியின்மீது ஓராபரணமாகத்தரித்து அழிவற்ற யாமிதனைத் தரித்தமையால் இனி உன்னுடலிலுள்ள கலைகள் முறையே நிரம்புதலும், பின்னர்க் குறைதலுமாகிய தன்மையையடைந்து இவ்வுலகத்திற் சுக்கில க்ருஷ்ணவென்னும் பெயரோடுகூடிய பக்ஷமாகவாகி விளங்கக்கடவதென் றருளிச்செய்தனர். இதனாற் சிவபெருமானும், பிறைசூடி - சந்திரசேகரன் என்னு மபிதான முற்றவனாயினான். இதனை—

ஸஹஜாஸ்ஸப்தவிம்ஶத்ய: பத்ந்யோ தக்ஷஸ்ய கந்யகா: ।
தாஸ்வேவ ரோஹிண்யாம் சந்த்ரஸ்ஸ்நேஹாதப்யதிகோ(அ)பவத் ॥

தாஸாஞ்ஜ்யேஷ்டாஸ்வஸ்ருபி: க்ருத்திகாத்யாபிரேவ ஹி ।
ததஸ்தா: க்ருத்திகாத்யாஸ்ஸ்வம் பிதரம் தக்ஷமப்யயு: ॥

தாஸாமாகர்ண்ய தக்ஷ: க்ருத்திகாத்யாஸ்ஸ்வயாவித: ।
ஜகாம சந்த்ரம் ஶீக்ரம் தக்ஷஶ்சோபாலம்பகம் ॥

ஶஶாப சந்த்ரம் ஸ ஶபம் க்ஷயரோகீ பவேதி ஹ ।
ததோ(அ)பவச்சந்த்ரமா: க்ஷயரோகீ ஸுதுர்தஶ: ॥

ஶரணம் ப்ராப்ய ஶிவம் தேவதேவம் ப்ராபஹக்ஷகம் ।
இந்த்ரம் ப்ரஹ்மாணம் ஸ்வீக்ருத்ய ப்ரஸாதவாந் பவநக்ஷா ॥

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

[illegible]
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible]
[illegible]
[illegible] ॥
[illegible] ।
[illegible]
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
தத: ப்ரஸந்நஹ்ருதயோ மஹாதேவோ(ம்)பிகாபதி: ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥ என
வரும் சிவரகஸ்யகண்ட சுலோகங்களாலும்,

" இன்னபல்கிளைகண்மல்கவிருந்திடுந்தக்கன்பின்னர்த்
துன்னியநாண்மீனத்துட்டொகைபெறுமிருபானேழு
கன்னியர்தம்மைநல்கிக்கடிமணவிதியினீராற்
றன்னிகரில்லாப்பொற்பிற்றண்மதிக்கடவுட்கீந்தான்.

ஈந்தபின்மதியைநோக்கியார்க்குமோர்பெற்றித்தாக
வாய்ந்திடுமொர்வழுய்த்துமருவுதிசிலர்பாலன்பிற்
றோய்ந்தொருசிலரையெள்ளிச்சுளிதிற்பாயல்லையென்று
வாய்ந்திவைபுகன்றுதேற்றியனையரோடகலச்செய்தான்.

இன்னணம்புணர்ச்சிபோற்றியேகியதிங்கட்புத்தேள்
பன்னியரனையர்தம்மிற்பழுதிலாவாரருணும்
பின்னவடானுமாற்றப்பேரொழிலுடையராக
வன்னவர்திறத்துமேலாமார்வமோடணுகலுற்றான்.

ஏனையர்தம்பாற்சேராணிருதுவின்வேலைபூத்த
தேனிமிர்சொல்லார்மாட்டுச்சேருறுக்கணவரோபோல்.
வானிடைமதியப்புத்தேண்மறுத்தனன்றிரியும்வேலை
யானதோர்பான்மைநோக்கியவரெலாம்முனிந்துபோனார்.

போந்தவர்தக்கன்றன்பாற்பொருமியேபொலம்பூட்கொங்கை
யேந்திழைமாதர்தங்கள்கேள்வனதியற்கைகூறக்

Center for Shaiva Studies, Pondicherry Collection

காந்தியவுளத்தணுகக்கனன்றவன்கலைகளெல்லாந்
தேய்ந்திலவாகவென்றுதீமொழிச்சாபஞ்செய்தான்.

செப்பருந்திருவில்வைகுஞ்சிறுவிதியென்பான்சொற்ற
விப்பெருஞ்சாபந்தன்னாலென்றுமெஞ்சாததிங்கள்
ஒப்பருங்கலைகள்வைகற்கோரொருகலையாய்ஃகாப்
பொய்ப்பெருஞ்செல்வம்பெற்றோன்புகழெனக்குறைந்தவன்றே

மூன்றுறழைந்துவைகன்முடிந்துழிமதியமென்போ
னான்றதன்கலையின்மூவைந்தழிந்தலுமவனேயென்னச்
சான்றுரைசெய்தல்போலோர்தண்கலையிருத்தலோடு
மான்றனன்மெலிந்துவெள்கிவானவர்கோனையுற்றான்.

தக்கனென்பவன்சாபத்தாற்றண்கலையனைத்தும்போகி
யிக்கலையொன்றுநின்றதீதுமின்றிறக்குமென்னின்
மிக்கவென்னியல்புகுன்றும்வியன்பெயர்தொலையும்யாண்டும்
புக்கதொல்புகழும்போகும்புகல்வசையாகுமன்றே.

ஈங்கினிச்செய்வதென்னோவுணர்கிலேனெற்கோர்புந்தி
தீங்கறவுரைத்தியென்னச்செப்பினனிரங்கியேங்கித்
தாங்கரும்பையுள்வேலைசார்தலுந்தழுவியெற்கோர்
பாங்கனையஞ்சலென்னாவிவைசிலபகர்தலுற்றான்.

இதுபழியொன்றுமிற்கவின்றுநீதக்கன்றன்னாற்
புதியதோர்குறையும்பெற்றாய்பொலிவொடுதிருவுந்தீர்ந்தாய்
மதியினைமதியதற்றாய்மற்றினிவல்லைசென்று
விதியொடுபகர்திசேயைவேண்டியீதகற்றுமென்றான்.

தாமரையென்னுந்தண்பூந்தவிசிடைதிகழ்ந்தவண்ணன்
மாமலரடியின்வீழாமாதுலன்வெகுண்டுசொற்ற
தீமொழியுணர்த்தியுன்றன்சேயினைத்தெருட்டித்தீயேன்
றோமுறுகலைமாற்றித்துடைத்தியிச்சாபமென்றான்.

அன்னதுமொழிந்ததிங்கட்கம்புயன்மொழிவானீண்டுத்
தன்னுளநெறிப்பாலன்றிச்சார்கிலன்றக்கனென்பா

னென்னுரையிறையுங்கொள்ளான்யானவன்மாட்டுஞ்செல்லேன்
முன்னுளனல்லன்யார்க்குமுதல்வனேயாகிநின்றான்.

ஆதலினீண்டுநின்றாதிநாயகன்
காதலின்மேயவக்கைலையுற்றவன்
பாதமிங்கரணெனப்பற்றிவல்லைநின்
பேதுறவொழிமதிபெருந்தண்மாமதி.

என்றலுமயன்பதமிறைஞ்சியெம்பிரா
னன்றிவைபுகன்றனைஞானமூர்த்திபாற்
சென்றடைவேனெனச்செப்பிவெள்ளியங்
குன்றினையணைந்துபொற்கோயிலெய்தினான்.

நங்களையலைத்திடேண்ணலன்றனை
யிங்கிவணடுதுமென்றிருட்கள்சூழ்ந்தென
மங்குலினிறங்கொடுவடிவம்வேறதாந்
திங்கணின்றெம்பிராற்கினையசெப்புவான்.

வன்றிறற்றக்கன்முன்வழங்குதீச்சொலாற்
றன்றிடுங்கலையெலாந்தொலைந்துபோந்திட
வொன்றிவணிருத்தலாலுதுவுந்தேய்ந்திடு
மின்றினிவினையினேனியாதுசெய்வதே.

எஞ்சியவிக்கலையிருக்கத்தேய்தரு
விஞ்சியகலையெலாமேவநல்குதி
தஞ்சநின்னலதிலையென்னத்தண்மதி
யஞ்சலையென்றனனருளினாழியான்.

தீர்ந்தனவன்றியேதிங்கட்டன்னிடை
யார்ந்திடுகலையினையங்கையாற்கொளா
வார்ந்திடுசடைமிசைவயங்கச்சேர்த்தினான்
சார்ந்திலதவ்விடைத்தக்கன்சாபமே.

நின்னதொல்கலையைந்துமுப்பகலிடைநிரம்பிப்
பின்னரவ்வழிதேய்ந்துவந்தோர்கலைபிரியா

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta
Center for Shaiva Studies, Pondicherry Collection

தின்னபான்மையேநிகழுமெக்காலமுமென்றுன்
முன்னையாவிதோறிருந்தெலாமியற்றியமுதல்வன்" என்
றுங் கந்தபுராணக்கவிகளாலு முணர்க.

தாரதம்மியம்.

அரி வெண்ணெயையும், அரன் சந்திரகலையையுந்தரித்தனர் என்பதாம். வெண்ணெயோ விரைவிலழிந்து படும்பொருள்; சந்திரகலையோ நித்தியமான பொருள். அழிவுபடும் பொருளையுடையவனைக் காட்டிலும், நித்தியமான பொருளையுடையவனே சிறந்தவனென்பது தேற்றம். ஆதலால் வெண்ணெயை யேந்திய ஹரியிலும் சந்திரகண்டந்தாங்கிய ஹரனே சிறந்தவன். ஆதலால், நாங்களரியை இவ்விஷயத்திற் சிறந்தவனல்லவென் றொழித்துச் சிறந்தவனான ஹரனையே சரணமாக வடைந்து வணங்குகின்றோம்.—எ-று. (௧)

𑌏𑌕𑍋𑌽𑌸𑍍𑌤𑌿𑌨𑌨𑍍𑌦𑌕𑍁𑌟𑌿𑌲𑌵𑍍𑌰𑌜𑌮𑌨𑍍𑌦𑌿𑌰𑍇𑌷𑍁
𑌚𑌾𑌨𑍍𑌯𑍋𑌽𑌸𑍍𑌤𑌿𑌮𑍇𑌰𑍁𑌶𑌿𑌖𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑌕𑌨𑍍𑌦𑌰𑍇𑌷𑍁।
𑌕𑍋𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑍃𑌦𑍍𑌧𑌾
𑌸𑌤𑍍𑌯𑌂𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁𑌤𑌮𑌿𑌮𑌂𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகோஸ்திநந்தகுடிலவ்ரஜமந்திரேஷு சாந்யோஸ்திமேருசிகரஸ்திதகந்தரேஷு। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஸ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

அழிந்த சாணஞ் கோமயமென் றறையு மவற்று வழகினங்க
ளொழிந்த விடையர் குடில்களிடத் தற்று ளொருவன் மற்றொருவன்
கழிந்த பெருமைப் பொற்கிரியின் கண்ணார் குகையன் காதன்மை
யிழிந்த விவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
நந்தகுடிலவ்ரஜமந்திரேஷு	இடையர்களுடைய (அல்லது, நந்தனுடைய) அபரிசுத்தமான மாட்டுக்கொட்டில்களையுடைய வீடுகளில்
அஸ்தி	இருந்துகொண்டிருக்கிறான்,
அந்ய:ச	இன்னொருவனானால்
மேருசிகரஸ்திதகந்தரேஷு	மேருமலையிலுள்ள சிகரத்திலுள்ள குகைகளில்
அஸ்தி	இருக்கிறான்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	உயர்ந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	யதார்த்தத்தை
ப்ருவந்து	சொல்லுங்கள்.
தமிமம்	உங்களாற் சொல்லப்பட்ட அந்த புருஷனையே
வயம்	நாங்கள்
ஆஸ்ரயாம:	ஆச்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் நந்தவிரச மந்திரமென்னுங் கன்றுகளோடுகூடிய மாட்டுத்தொழுவத்தி லிருப்பவன், அல்லது நந்தகோபனுடைய ஒழுங்கீனமான குடிசைகளில் வசிப்பவன், இன்னொருவன் (பொன்மயமான மஹா) மேருமலையின் சிகரத்திலுள்ள குகையினிடத்தை இடமாகக்கொண்டவன்; இவ்விருவர்களில் யாவர் சிறந்தவர்? உண்மைஞானத்தையுடைய நீவிர் கூறுவீர்களாயின், நாங்கள் அம்மஹாபுருஷனைச் சரணமாகவடைந்து வணங்குகின்றோம்.

விதப்பு.

ஒருவன்நந்தவிரசமந்திரத்திலிருந்தானென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணமிருத்தலால்.

(ஹரியாகிய) கண்ணன் நந்தகோபனுடைய கன்றுகளுங் காலிகளும்பொருந்திய ஒழுங்கீனமான தழைகளிட்டிழைத்த வீடுகளிலிருந்

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta
Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தனன்; மாடமாளிகைகளோடு கூடியதன்றோ நந்தகோபனது வீடெ னெனின், அன்றென்பேம். யாதனிலெனில், நந்தகோபன் முல்லைநில த்தலைவன்; முல்லைநிலத்தினர்களுக்கு நாகரீகமானவீடுகளு முடைக ளுமில்லை. இதனை—

"முடையுறிபொறுத்தசுவலினர்வெளுத்தநறியதவளி
முகையெனுமெயிற்றின்வழிவிரவுகொச்சையுடையமொழியின
முடலைபடுநெட்டையுடலினரழுக்குறுமுறுகுமறுவையர் [ர்
முருகொழுகுவெட்சியிதழிநறைகக்குபிடவமதுமலர்
இடைவிரவியிட்டகுழையினர்குலத்தின்முதன்மையறன்வழி
யெமதுமகள்சுற்கமிதுவெனவிதிப்பமுதலுமொருபகல்" எ-ம்,

"தளவுகாட்டும்வெண்முறுவறவழுந்துவர்வாயசோதைபச்சைத்
தழைக்கூடையினின்முடைப்பகுவாய்த்தடவுத்தாழிநெட்டுறியின்"
எனவும்,

"கோதூளிமொய்ப்பமருண்மாலையிற்கொண்டல்வண்ணன்" என வும் வருவனவற்றாலுணர்க.

ஸ்ரீஹரியானவர்-நந்தகோபனது வீடுகளிலிருந்தாரென்பதை—

"வாயால்வீழ்குருதிகதிரிகராயோடவடவரைபோல்மாண்டுவிழப் பகனைக்கொன்ற, தூயோனைத்துதித்தனர்கள்முனிவரொல்லாஞ்சுரு தியுறத்தும்புருநாரதர்கள்பாட, வோயாமல்மலர்மாரி சொரிந்தார்வா னோருயர்தேவதுந்துபிசங்கொலிப்பவெய்தி, ஆயோர்கள்நந்தன்மகிழ் வெய்தப்புக்காரசோலையுரோகணியாகத்தனைத்தாரன்றே."

"படர்சுடர்விட்டொளிகாலுஞ்செம்மணிச்சூட்டரவரசாம்பரமன் றனும், தொடர்சுடர்விட்டொளிமாலைமலராதனத்தவடன்றனேட்டோய் வானும், அடர்சுடர்விட்டொளிர்வானத்தண்டர்புகழண்டர்பிரானகத் துளாயர், மிடர்சுடர்விட்டொளிர்மணிப்பொனணிப்பூவைகளிதூங்கப் பிறங்குவாரால்" என்னும் பாத்மோத்தரபுராணத்தாலும்,

"தந்தமுறியிலவர்வைத்ததயிர்பால்வெண்ணெயெட்டாமற்
குந்தியுரலின்மிசையேறியிளங்கோவியர்முன்கூத்தாடி

நந்தன்மனையிலசோதைபெருநயனங்களிக்கவிளையாடு
மைந்தனிருந்தானொருவனுமறவார்தாரோபிறவாதார்" என்று ஸ்ரீம ஹாபாரதத்திலும் வருதலைக்கொண்டுணர்க.

ஒருவன் மேருசிகரத்திலுள்ள குகையி லிருக்கின்றானென்றது ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ணமிருத்தலால். இதனை—

"சிகரியெண்ணிலசேர்ந்தெழுந்துயர்ந்துமீச்சென்றே
பகருமுக்குவடுயர்ந்தறும்பங்கயன்றிருமால்
முக்கணோந்துளான்மூவர்க்குமுதன்மைசால்பதிகள்
அகநெடுந்தலைமூன்றினுமாமெனவறிவாய்" என்று பாரதத்திலும்,

"மேருவரையதற்குநடுப்பிரமன்மூதூர்மிக்கம்னேவதியதற்குமே லைத்திக்கி, ஞரணன்வாழ்வைகுண்டம்வடகீழ்ப்பாலினுதனமர்சோதிட் கந்திசைகளெட்டுஞ், சீரியவிந்திரன்முதலோமெண்மர்தேயந் தெற்கு முதல்வடக்களவுமருங்குதன்னி,னேரியதோர்தேயமதுசெவ்வேபோ குநெடும்பூழையொன்றுளதுநினைகமாதோ" என்று ஸ்ரீகந்தபுராணத் திலும்,

"மாதிரத்தலைவர்தத்தமதிசையின் மருவியகுவட்டிடைவதிவ, ரோதியசிரத்தினுப்பணுக்குடாதுமுதீசியின்குணக்குமுச்சிகர,மேதக விளங்குமயனரியீசன்விளம்பியமுறையின்வீற்றிருப்பா,ரோதமிலவற் றின்பெயர்கேளுவதிவைகுண்டமேசோதிவெற்பென்க" என்று தணி கைப்புராணத்தும்,

"தண்ணறுங்கமலத்துறைதலைவனுள்விரும்பும்
எண்ணரும்புகழீசனுமாயனுமிருப்பக்
கண்ணகன்றிருகடிநகரிரண்டெழில்கலந்து
விண்ணுபர்ந்தவம்மேருவின்முகட்டினில்விளங்கும்" என்று பாகவதத்தும் வருதலாலுணர்க.

தாத்பர்யம்.

ஒருவனிடைக்குடிலிலும், மற்றொருவன் மேருமலையிலும் இரு க்கின்றார்கள் என்பதாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தாரதம்மியம்.

உவலெக்குடிலென்று பிறர்கூறியபடி காணப்படும் இடையர் சேரியிலுள்ள நந்தனது வீட்டை யிடமாகக்கொண்டிருப்பவனைக்காட்டிலும், பொன்மயமான மஹமேருமலையை இருப்பிடமாகக்கொண்டிருப்பவனே இவ்விருப்பு முறையிற் சிறந்தவனுகின்றான். அதனால் இம்முறையிற் றாழ்வடைந்த ஹரியைத் தாழ்ந்த பொருளாகவும், ஹரனைச் சிறந்த பொருள்ாகவுமறிந்த நாங்க ளரியையொழித் தரனை வணங்குகின்றோம்.—எ-று. (௪)

𑌏𑌕𑌸𑍍𑌸𑌹𑌸𑍍𑌰𑌕𑌮𑌲𑍈𑌰𑍍𑌯𑌮𑍁𑌪𑌾𑌰𑍍𑌚𑍍𑌯𑌤𑌸𑍍𑌥𑌾
𑌵𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑍁𑌤𑍈𑌰𑍁𑌪𑌸𑌿𑌤𑌸𑍍𑌸𑌮𑍁𑌮𑍋𑌦𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍।
𑌕𑍋𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌸𑍍
𑌸𑌤𑍍𑌯𑌂𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁𑌤𑌮𑌿𑌮𑌂𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகஸ்ஸஹஸ்ரகமலைர்ய முபார்ச்யதஸ்தாவந்யஸ்து தைருபசிதஸ்ஸமுமோத தஸ்மாத்| கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:||

மொழிபெயர்ப்பு.

தேனர் கமல மாயிரத்தாற் சிறந்த பூசை தனையொருவன்
வானோர் புகழச் செய்தானவ் வளங்கொ ணறிய கமலத்தைத்
தானே யேற்றுப் பின்னொருவன் றவரு மகிழ்ச்சி தனையுற்றான்
ஏனே யிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
ஸஹஸ்ரகமலை:	ஆயிரந்தாமரைமலர்களால்
ய்ம்	எவனை
உபார்ச்சிய	அர்ச்சித்து
தஸ்தௌ	இருந்தானே

ஸ:	அந்த
அந்ய:து	இன்னொருவன்
தை:	அந்தத் தாமரைப்புட்பங்களால்
உபசித:	பூஜிக்கப்பட்டவனாய்
தஸ்மாத்	அந்த பூஜையினாலே
முமோத	சந்தோஷித்தான்;
அநயோ:	இப்படிப்பட்ட இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	எவனென்று
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	யதார்த்தத்தை
ப்ருவந்து	சொல்லுங்கள்.
தமிமம்	உங்களாற் பெரியவனென்று கூறப்பட்ட அந்தச் சிறந்தவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	கர்த்தாவாக வாச்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் ஆயிரந் தாமரைமலர்களால் அர்ச்சனை செய்தனன், அவனைப்போல விளங்கவெடுத்துக்காட்டிய வின்னொருவன் முன்சொன்னவனாற் செய்யப்பட்ட பூசையைப்பார்த்து மகிழுகின்றான்; இவர்களில் யார் சிறந்தவனென்று கேட்குமெமக்குச் சத்தியமும் கல்வியுந் தவமுமுள்ள பெரியவர்களாகிய நீங்கள் இவர் சிறந்தவனென்று சொன்னால், நாங்களந்த மஹாபுருஷனை ஆச்ரயிக்கின்றோம்.

விதப்பு.

ஒருவனாயிரந் தாமரைமலர்கள்ாற் பூசித்தானென்றது-ஹரியை. அது அவ்வரி அவ்வண்ணஞ் செய்திருத்தலால். இதனை—

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விஷ்ணுஸ்து தாவத் ஸஹஸ்ரநாமபிஸ் ததா ஸஹஸ்ரபத்மைஸ்
ஸ்வயம் ஶம்பும் ஸமப்யர்ச்ய ஸிவலிங்கம்
ஸஹஸ்ரஸ்த்ரீ அர்ச்சநாதாவந்தம் ...

என்று ஸ்ரீ மஹாஸ்காந்தத்திலும்,

"மாயிருங்கமலப்போதுகைக்கொண்மோக்ஷிசான்ற
வாயிரந்திருநாமத்தாளித்தலுமருச்சித்தேத்தி
மேயினன்திருமாலன்னோன்பத்தியின்விளைவுகாண்பான்
பாயிரம்றைகடேறுப்பரம்பொருளொருநாளங்கண்" என்று

காஞ்சிமான்மியத்திலும்,

"வடகிழக்காசைதன்னில்வாளியொன்றேடேந்திர
நெடியவனெய்தித்துயவிலிங்கமொன்றியற்றிரார்
கடிமலராதிகொண்டுகவினுறுபூசைசெய்தான்
படியிலப்பரனைச்சுந்தரேசப்பேர்பகருகிற்பார்" என்று சுருதிபுரி

மான்மியத்திலும்,

"பூவாயிரந்தோட்டிருங்கமலப்போதாயிரத்தால்வழிபட்டா
னுவேறுயர்த்தோனிவனிலைமையறிவானேக்கியக்கமலத்
தோவாவொருபூக்கிடையாதுவருந்தப்புரிந்தானொருநாளிற்
தேவாதிபன்றுட்கொருநயனமலரிற்சாத்தி க்குறைதீர்ந்தான்" எ

ன்று உபதேசகாண்டத்திலும் வருதலால், திருமால் சிவபெருமானை ஆயிரங்கமலத்தாற் பூசித்தனனென் றறியப்படுகின்றார்.

"ஒருவனதற்குமகிழ்வாகி யுறைந்தானென்ப" என்றது-ஹரியாற் செய்யப்பட்ட பூசைக்கு மகிழ்ந்த ஹரனை. இதனை—

"திருவினுயகனவ்வழியருச்சனைதிருத்தக்
கருமணிக்களத்தெம்பிரான்கருணைமீக்கூர்ந்து
பொருவிடைப்புறத்தினிதெழுந்தருளினன்புகுந்தான்
குருதிவெண்ணிணத்திகிரியானிருகரங்குவித்தான்" என்று

உபதேசகாண்டத்திலும்,

"ஆங்கவனைநோக்கி நின்பூசைக்ககமகிழ்ந்தே முனக்கின்னான்று, தேங்கமலவிழியளித்தேம்பதுமாக்கனெனும்பெயரிற்றிகழ்வாயவ் வூர், பாங்குபெறுதிருமாற்பே றெனப்பொலிகவென்றருளிப் பானுகோடி, தாங்குகதிர்ச்சுதரிசனப்பெயராழித்தனிப்படையுமுதவியெங்கோன்" என்று காஞ்சிமான்மியத்திலும் வருதலாற் சிவபெருமானுகிய ஹரனே மாயோன் செய்த பூசையை மகிழ்ந்து நின்றவனுக வறியப்படுகின்றான்.

தாத்பர்யம்.

திருமா லாயிரந் தாமரைமலர்களாற் பூசைசெய்தவர்; சிவபெருமா னப்பூசையையேற்று மகிழ்ந்தவர் என்பதாம்.

தாரதம்மியம்.

உலகத்திற் கண்கூடாகப் பூசைசெய்பவனிலும், பூசையை யேற்றுக்கொள்பவனே சிறந்தவனென்பது தேற்றம். ஆதலால் ஆயிரந் தாமரைமலர்களாற் பூசைசெய்த ஹரி, அப்பூசையை யேற்றுக்கொண்ட ஹரன் என்னும் இருவர்களில் ஹரனே சிறந்தவனென்று அறியப்படுதலால், இவ்விடயத்திற்றாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக வொதுக்கி, மஹாபுருஷனுகிய ஹரனையே சிறந்த பொருளாக வறிந்து நாங்கள் அவ்வரனுகிய சிவபெருமானைச் சரணமாக வடைகின்றோம். (ௗ)

காடாந்தகாரகநீலஶரீரஶோபா
ஸாதிந்த்ரவிஶதஶரீரகஃ
கோவாநயோரதிக இத்யநுசிந்த்ய வ்ருத்தா
ஸத்யம்ப்ருவந்து தமிமம்வயமாஶ்ரயாமஃ

காடாந்தகாரகநீலசரீரஏகோஜோத்ஸ்நாதிநிர்மலவிஶத்தஶரீரகஃ। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தர்ஸ-ஸத்யம்ப்ருவந்து தமிமம்வயமாஶ்ரயாமஃ॥

மொழிபெயர்ப்பு.

மதியு முவ்வு மில்லாமன் மறைக்குங் கொண்மூ வுருமிரவி
ல்திக மான கருநிறத்தை யடைந்தா னொருவ னயலொருவன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

துதிசெய் மதியின் கிரணமெனத் துலங்கு முருவ னிவர்தம்மி
லதிக மெவரோ வவர்தம்மை யறைந்தாற் பெரியீ ரடைகுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
காடாந்தகாரகநீலசரீர:	காடாந்தகாரத்தைப்போல கன்மானதும், நீலமானதுமான சரீரத்தையுடையவன்;
ஏக:	இன்னொருவன்
ஜ்யோத்ஸ்நாதி	நிலாவைப்போல மிகவும்
நிர்மல	பரிசுத்தமானதும்,
விஶுத்த	சுத்தமானதும், வெண்மையானதுமான
ஶரீர:	சரீரத்தினையுடையவன்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிலாகனீயமானவன்
கோவா	யாவன்?
இதி	இதனை-என்று
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	இதன் உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம். சொன்னால் [வினை
தமிமம்	உங்களா லக்கிரஹக்கூறப்பட்ட அந்த வி
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆச்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் காடாந்தகாரமான திருமேனியையுடையவன், மற்றொருவன் நிலவைப்போல சொலிக்கின்ற திருமேனியையுடையவன்; இவ்விருவர்களிற் சிறந்தவனை நீங்கள் சொன்னால், அறிவிற் சிறந்தவர்களே! நாங்களந்த மகாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

விதப்பு.

காடாந்தகாரமான சரீரத்தை யுடையவனென்றது - ஹரியை, அது அவ்வரி அவ்வாறான சரீரத்தோடு இருத்தலால். இதனை—

"கருவிமாமுகிற்கொழுந்தெனக்கண்கவர்மேனி
திருவில்கான்றொளிசிந்திடச்செய்யதாமரைக்கண்
அருள்பொழிந்திடவற்புதக்குழவியாய்த்தோன்றும். என்றும்,
கண்ணேமணியேகருநாயிறுபோல்வாய்
உன்னையொழியவுனைப்பெற்றேனானுவந்து
மண்ணோர்மகிழவளராமற்போக்குவனோ
பெண்ணாகயான்பிறந்துபீழையினைப்பெற்றேனே" என்றும்

பாகவதத்தும்,

"பெரியவனைமாயவனைப்பேருலகமெல்லாம்
விரிகமலவுந்தியுடைவிண்ணவனைக்கண்ணுந்
திருவடியுங்கையுமெழில்சிறந்தகனிவாயுஞ்செய்ய
கரியவனைக்காணாதகண்ணென்னகண்ணே
கண்ணிமைத்துக்காண்பார்தங்கண்ணென்னகண்ணே" என்று

சிலப்பதிகாரத்திலும் வருதலைக்கொண்டுணர்க.

ஒருவனிலவினிறமாகவுற்ற வொளிகொளுருவுடையான் என்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ணமிருத்தலால். சிவபெருமான் சுத்த ஸ்படிகம்போன்ற வெண்ணிறமுடையவனாதலால், வெண்ணிறமுள்ள சந்திரிகைபோன்ற வுருவினனென் றுரைக்கப்பட்டது. இதனை—

"ஒளிவளர்விளக்கேயுலப்பிலாவொன்றேயுணர்வுசூழ்கடந்ததோருணர்வே, தெளிவளர்பளிங்கின்றிரண்மணிக்குன்றேசித்தத்துட்டித்திக்குந்தேனே, அளிவளருள்ளத்தானந்தக்கனியேயம்பலமாடரங்காக, வெளிவளர்தெய்வக்கூத்துகந்தாயைத் தொண்டனேன்விளம்புமாவிளம்பே" என்று திருவிசைப்பாவிலும்,

ஏதம்யெநஜஃஹாவாஶீஷம் வெூாதஜுவவஃஹஸா
வெூாதம்தெ - வஶவொவிவாஶநிகுராஃூவஸூவூவா
ஜெநதஃ। ஏசிதூாகிதிநவூஹாயூநிமதம்ஜெூாகிஷுதாம்

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஶ்யாமகம் - ஶ்யாமேவ ஶ்யாமேவ ரம்ஶிவாவ் யாமேகல்ஜோஜ்ஜ்வ தின்யவஶ்யியா: என்று ஸித்தாந்தசாராவளியிலும்,

"உலகெலாமுணர்ந்தோதற்கரியவன்
நிலவுலாவியநீர்மலிவேணியன்
அலகில்சோதியனம்பலத்தாடுவான்
மலர்சிலம்படிவாழ்த்திவணங்குவாம்" என்று பெரியபுரா

ணத்திலும் வருதலைக்கொண்டுணர்க.

தாத்பர்யம்.

அரி கறுப்பன், அரன் வெளுப்பன் என்பதாம்.

தாரதம்மியம்.

உலகத்திற் கருநிறமுள்ளவனைவிட வெண்ணிறமுள்ளவன் சிறந்தவனாக அறியப்படுகிறான், 'ஶுக்லாம்ஶ்யாமஶ்ச' என்று மகாகவியாகிய காளிதாசனுரைத்தபடி, ஹரி இவ்விஷயத்தில் தாழ்ந்தவனாகிறான். ஆதலாற் கருநிறமுள்ள திருமாலைக்காட்டிலும், வெண்ணிறமுள்ள ஹரனே இவ்விஷயத்திற் சிறந்தவன்; அதனால் நாம் தாழ்ந்த ஹரியை அப்பிரதானமாக வொதுக்கி உயர்ந்த ஹரனைப் பிரதானமாகக்கொண்டு அவ்வரனையே சரணமாகவடைந்து வணங்குகின்றோம். (௬)

ஏக: ஸுதராமனங்கம் குமாரமபஜத்
ப்ரயாதிகில ஶக்திதரம் குமாரம்।
கோவாநயோரதிக இத்யநுசிந்த்ய வ்ருத்தா:
ஸத்யம் ப்ருவந்து தமிமம் வயமாஶ்ரயாம:॥

ஏக:குமாரமபஜத்ஸுதராமநங்கமந்ய:ப்ரயாதிகில ஶக்திதரம்குமாரம்। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்து தமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

மின்னார் பூண்க ளிலங்கொருவன் மிகவு மனங்க மானனைத்
தன்னோர் மகனைத் தானுற்றான் றன்போ லொருவன் றாரணியில்
ஒன்னார் குடமா மாலையிடு மொளிர்வேற் குமரன் றனையுடையா
னின்னோர்தம்மிற்சிறந்தவன்யா ரிசைத்தாற்பெரியீரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
ஸுதராம்	மிகவும்
அநங்கம்	அங்கமில்லாதவனாக விருக்கிற
குமாரம்	மகனை
அபஜத்	அடைந்தான்,
அந்ய:	மற்றொருவன்
சக்திதரம்	வேற்படையைத் தரித்திருக்கிற
குமாரம்	குமாரனை
ப்ரயாதிகில	அடைந்திருக்கிறானல்லவா;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா:	எவன்?
இதி	இதனை
அநுசிந்திய	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம். சொன்னால்
தமிமம்	உங்களாற் சொல்லப்பட்ட அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆச்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் அனங்கனென்று சொல்லப்படுகிற மகனையுடையவனாக இருக்கின்றான், அவனைப்போன்ற இன்னொருவன் சக்திதரனாகிய மகனையுடையவனாக இருக்கின்றான்; இவ்விருவர்களிற் சிறந்துள்ளவனை பெரியவர்களே நீங்கள் சொன்னால் நாங்களந்த மகாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விதப்பு.

அனங்கனை மகனாகவுடையானென்ற தரியை, அது அவ்வரி அவ்வண்ணமுடையவனாக விருத்தலால்.

ஹரி தனக்குப் புத்திரப்பேறில்லாதிருந்தகாலத்தில் அரனைநோக்கி அநேககாலந் தவஞ்செய்தனன். ஹரியின் தவத்துக்கிரங்கி ஹரன் உமாதேவியாருடன் அரிக்குக் காக்ஷியளித்தனன். உடனே அவ்வரி வணங்கி வேதமந்திரங்களாற் றுதித்தனன். சிவபெருமான், ஹரியே! நின் தவத்துக்குகந்தேம், காக்ஷியளித்தேம், வரங்கேள் தருகின்றோம் என்றனர். திருமால், சுவாமின்! கிருபைக்கடலாகிய தேவரீரது கருணையால் அடியேனொரு புத்திரனுடையவனாக வேண்டுமென்றனன்.

ஹரன் ஹரியைப்பார்த்து நீயவ்வாறே மகனையுடையவனாவை என்றனன். அப்பொழுது அருகிலிருந்த உமாதேவியார், நாரண! நின்னிடத்துண்டாகும் அம்மகன் இவ்விறைவனாலேயே இறந்துபடுவானாக என்றனள். உடனே ஹரி, ஹே கல்யாணீ! அடியேன் சிவபெருமானது வருகையா லானந்தங்கொண்டு நின்னை வணங்காதிருந்தேனே அன்றி அகம்பாவத்தாலன்று. ஆதலா லெனதிப்பெரிய குற்றத்தை மன்னித்து, என்னைக் கிருதார்த்தனாக்கவேண்டுமென்று ஜகதம்பிகையின் பாதங்களில் விழுந்து வணங்குதலும், தயாஸிந்துவாகிய அவ்வம்மை, முகுந்த! நின்மகன் இவ்விறைவனா லிறந்துபடினும், பின்னுமிவராலேயே அநங்கனாய் இருப்பவனாவான் என்று அநுக்கிரகித்தனள். அதனால் மன்மதன் ஹரியின் மனத்தின் வழியாகத்தோன்றி பஞ்சபாணங்களையுங் கரும்புவில்லையுமுடையவனாய்,காமத்துக்கதிகாரியாய் காமனென்று பெயர்பெற்றனன். மனதிற் பிறந்தமையால் மன்மதனென்று கூறப்படுகிற வவன், ஒருகாலத்திற் கைலாசத்திற் சிவபெருமான் கல்லாலநிழலில் தக்ஷிணாமூர்த்தியாய் ஜனகாதியர்களுக்கு உபதேசஞ் செய்துகொண்டிருந்த சமயத்திற்சென்று பஞ்சபாணங்களையும் அவர்மீது விட்டு நெற்றிக்கண் நெருப்பாற் சாம்பராயினன். பின்னர் அவன் மனைவியாகிய இரதியின் வேண்டுகோளால் பார்வதீ கல்யாணத்தில் இமையமலையில் யாவருங் காணும்வண்ண மெழுந்து

இரதிக்குமாத்திரம் உருவமுள்ளவனாகவும், ஏனையோருக்கெல்லாம் அருவமானவனாகவும் விளங்கித் தன்றொழில் நடத்தற் கரனளித்த வரத்தால் அநங்கனாய் விளங்கினான். இதனை—

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] என்று ஸ்காந்த மஹாபுராணத்திலுள்ள சங்கரசங்கிதையில், சிவரகசியகண்டத்தில் தேவகாண்டத்துள்ள சுலோகங்களாலும்,

“ உந்தியா லுலகைத்தந்தவொருதனிமுதல்வன்முன்ன
மைந்தர்தாமின்மையாலேமன்னுயிர்த்தொகுதிக்கெல்லாந்
தந்தையாயிருந்தகோன்சரணமேயரணமென்னச்
சிந்தைசெய்தூழிகாலஞ்செய்தவமியற்றியிட்டான். என்றும்,

தவமுழந்திருந்தகாலைச்சாரதப்புணரிசுற்றக்
கவுரியுந்தானுமையன்கருணையால்வந்துதோன்றப்
புவிதனையளந்தமாயோன்பொள்ளெனவெழுந்துபோற்றிச்
சிவனடிவணக்கஞ்செய்துசெங்கையாற்றொழுதுநின்றான்.என்றும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மாதொருபாகன்மகிழ்ந்தருள்செய்து
நீதவமாற்றிநெடும்பகனின்று
யேதிவண்வேண்டுமியம்புதியென்னச்
சீதரனின்னனசெப்புதலுற்றான். என்றும்,

அந்தமிலாயுவுமாருயிர்காப்புஞ்
செந்திருவோடுறைசெல்வமுமீந்தாய்
மைந்தனிலாமல்வருந்தினனெந்தாய்
தந்தருளாய்தமியேற்கினியென்றான். என்றும்,

குன்றினையாற்றிடுகோனிவைசெப்ப
நன்றெனவேநகையாநகையில்லா
வொன்றொருசெம்மலுனக்குதவுற்று
மென்றருள்செய்தனன்யாரினுமேலோன். என்றும்,

கழையிசைபோற்றுகருங்கடல்வண்ணன்
முழுதுலகீன்றிடுமுற்றிழைபாதந்
தொழுதிலனின்றுதுதித்திலனன்பால்
வழிபடுநீரின்வணங்கிலன்மாதோ. என்றும்,

முறையினுற்றனக்கிளையவளென்றேமுன்னினன்கொலொமூல முநடுவு,மிறுதியுமில்லாப்பரமனுக்கெம்போலிவளுமோர்சத்தியெனநி னைந்தனனொ, மறுவிலாமலைமகளெனவுளத்தேமதித்தனன்கொலோ மாயவன்கருத்தை, யறிகிலேமுமையம்மைபாற்சிறிதுமன்புசெய்தில ன்முன்புசெய்வினையால். என்றும்,

ஆன்றவைம்புலனொருவழிப்படுத்தியார்வம்வேரறுத்தையமொ ன்றின்றி, வூன்றிரிந்திடினுநிலைதிரியாவுண்மையேபிடித்துலகங்கள் முழுதும், ஈன்றவெம்பெருமாட்டியைநீக்கியெம்பிரானையேவழிபடுமி யற்கை, மூன்றுதாளுடையவொருவனுக்கல்லா லேனையோர்களான் முடியுமோமுடியா. என்றும்,

அன்னகாலையிலெம்பெருமாட்டியாழியம்படையண்ணலைநோக் கி, யென்னைநீயிவணவமதித்தனையாலெம்பிராற்குநீயன்புளனன்றான்,

முன்னநீபெறுமதலையுமையன் முனிவினெல்லையின் முடிந்திடுவென் னுப், பன்னருங்கொடுமொழிதனையியம்பிப்பராபரன்றனைநோக்கியே பகர்வான். என்றும்,

ஆனதோர்பரப்பிரமமும்யானே யல்லதில்லையென்றறிவிலாப்பே தை, மானுடப்பெரும்பசுக்களையெல்லாமருட்டியேதிரிவஞ்சகன்மு ன்ன, ஞானநீரினுலறிவினுலன்றிநணுகுறு தநீயணுகிநிற்பதுவோ, ஆ னுலாவியவுயிரினுக்குயிரா மொருவசெல்லுதும்வருகென வுரைத்தா ன். என்றும்,

இறைவிதாண்மலர்பணிந்தபினெம்பிரான்பதமு
முறையினுற்பணிந்திருவர்தஞ்சீர்த்திகண்முழுது
மறையின்வாய்மையாற்பன்முறையால்வழுத்துதலு
நிறையுநல்லருள்புரிந்தனன்றனக்குநேரிலாதான். என்றும்,

மாதுநீயிவற்கருள்புரியென்னவம்மாது
சீதரன்றனைநோக்கியேநம்பெருந்தேவ
னோதும்வாய்மையும்யான்முனிந்துரைத்திடுமொன்றும்
பேதியாவினியாவரோயன்னவைபெயர்ப்பார். என்றும்,

எங்கணுயகன்விழிபொழியங்கியாலிறந்து
துங்கமேன்மையோய்பின்முறைமுன்புபோற்றோன்றி
யிங்குன்மாமகனிருக்கவென்றுரைத்தனளுமையா
ளங்கதாகவென்றருளியேமறைந்தனனையன்" என்றும் வருங்

கந்தபுராணத்துக் கந்தவிரதப்படலத்துக் கவிகளாலும்,

" திங்கண்மேவுசெஞ்சடைத்தேவன்மாரவேள்
இங்குநின்றெய்யவும்மெரிதரும்நுதல்விழிப்
பொங்குகோபஞ்சுடப்பூளைவீயன்னதன்
அங்கம்வெந்தன்றுதொட்டனங்கனேயாயினன்" என்று வருங்

கம்பராமாயணத்தாலும்,

" [illegible]
[illegible]" என்று வான்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மீசத்திலும் வருதலைக்கொண்டு, ஹரியின் குமாரனை அனங்கனென்றுணர்க.

ஒருவன் சத்திரனெனும் பேருற்ற மகனை யுடையவனுமென்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ணமுடையவனாகவிருத்தலால். சிவபெருமான் தனது நெற்றிக்கண்ணின் தீப்பொறியின் வழியாய் குமாரஸ்வாமியை உண்டாக்கி வேலாயுதமளித்து வேலாயுதக்கடவுளென்று சொல்லுகிற சத்திரனாக இருக்கச்செய்தனன். இதனை—

'ப்ரயச்சோஜ்ஞா நசக்திபாஹா' என்றும், 'சக்திபாணயே நம:' என்றும், "குடர்க்கொழுந்தொடர்மிலைச்சியசெவ்வேற் குரிசில் வாழ்குமரகோட்டமுமாப்பாம்" என்றும், "வேலுலாந்தடக்கைவேந்தனென்சேந்தனென்னுமென்மெல்லியளே" என்றும், "மறங்குலவு வேலெடுத்தகுமரவேள்சேவடிகள்வணக்கஞ்செய்வாம்" என்றும் வருவனவற்றால் சத்திரனே அரன் மகனென்றுணர்க.

தாத்பர்யம்.

ஒருவன் அநங்கனை மகனையுடையவன், மற்றொருவன் சத்திரனையிய மகனை யுடையவனென்பதாம்.

தாரதம்மியம்.

அனங்கனாகிய மகனைக்காட்டிலும், அங்கனுமாஞ் சத்திரனும் உள்ள மைந்தன் சிறந்தவனென்பதற் கென்னதடை. ஆதலால் அனங்கனாகிய மகனையுடைய ஹரியைக்காட்டிலும், அங்கனுமாகும் சக்திதரனாகியுமுள்ள மகனையுடைய ஹரனை இவ்விஷயத்திற் சிறந்தவன்; ஆதலால் நாம் இவ்விஷயத்தில் தாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக அகற்றிச் சிறந்த ஹரனை பிரதானமாகக்கொண்டு அம்மஹாபுருஷனுடைய சரணங்களில் அடைக்கலம் புகுகின்றேம்.—எ-று. (எ)

ஸ்ரீரூபமாப கில பூர்வமபீஷ்டமேக

ஸ்த்வந்ய ஸ்தமேவ பஜதே புருஷ: ஸ்வரத்யை ।

கோவாநயோரதிக இத்யநுசிந்த்ய வ்ருத்தா

ஸ்ஸத்யம் ப்ருவந்து தமிமம் வயமாச்ரயாம: ॥

ஸ்திரீரூபமாபகிலபூர்வமபீஷ்டமேகஸ்த்வந்யஸ்தமேவபஜதேபுருஷ:ஸ்வரத்யை:। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஸ்ரயாம.॥

மொழிபெயர்ப்பு.

பொன்னங் கொம்பு நறுமலரைப் பூத்தா லன்ன வணியுடனே
மின்னுங் கோல மாதாகி மிளிர்ந்தா னொருவன் மேலொருவ
னன்ன மாதா மவன்றன்னை யணைந்து புணர்ந்து சுகித்திட்டா
னின்ன விவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
பூர்வம்	முன்னே
அபீஷ்டம்	விரும்பப்பட்ட
ஸ்திரீரூபம்	பெண்ணுருவத்தை
ஆப-கில	அடைந்தான் அல்லவா?
அந்ய:	மற்றொருவன்
ஸ்வரத்யை	தன்னுடைய சம்போகத்தின்பொருட்டு
தமேவ	அவனையே
பஜதே	அடைந்திருக்கிறான்;
அநயோ:	இவ்விருபுருடர்களுக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்திய	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லாம். சொன்னால்
தமிமம்	உங்களாற் சொல்லப்பட்ட வந்த விவனை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வயம் நாங்கள்
ஆஶ்ரயாமः ஆச்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவ னழகிய மோகினிப்பெண் ணுருவத்தை முன்ன மடைந்தனன், இன்னொருவன் அந்தப்பெண்ணுருவமானவனையே தனது சுகத்தின்பொருட்டுப் புணர்ந்து மகிழ்வடைந்தனன்; இவ்விருவர்களிற் சிறந்தவனிவனென்று இனிமையினையுடைய பண்டிதர்களான நீங்கள் சொல்லுவீர்களானால், உங்களாற் சிறந்தவனென்று சொல்லப்பட்ட அந்த மஹாபுருஷனை நாங்கள் சரணமாக வடைந்து வணங்குகின்றோம்.

விதப்பு.

ஒருவன் மாதர் மோகினியா யுற்றானென்ற தரியை, அது அவ்வரி அவ்வண்ணம் மோகினியுருவுற்றமையால்.

முன்னொருகாலத்திற் றேவர்கள் துருவாசமுனிவரது சாபத்தால் நரை திரை பிணி மூப்பாதிகளை யடைந்து மிகவுங் கஷ்டப்பட்டு கஷ்ட நிவிர்த்தியை யுத்தேசித்து ஸாக்ஷாத் ஸ்ரீவைகுந்தவாசியான பகவானையடைந்து அவரது சரணசரோருகங்களை வணங்கி ஸ்வாமின், தயாநிதே! நாங்கள் துருவாசமுனிவரது சாபத்தா லியற்கை யழகை யிழந்தவர்களாக விருக்கின்றோம்; அதுமாத்திரமோ நோயினாலும் வருத்தப்படுகிறோம்; இத்தருணத்திற் பகைவர்களாகிய அசுரர்களும் உபத்திரவிக்கின்றார்கள்; வலியற்ற நாங்களென்செய்வோம்; தேவரீரைச் சரணமாக வடைந்தோம் என்று கூறினார்கள். அதைக் கேட்ட பகவான் ஆலோசித்து இனி நீங்க ளமிர்தமுண்டாலொழிய உங்களுக்கு அமரத்துவம் ஸித்திக்காது என்றுகூற, அவர்கள் அமிர்தத்தை எப்படி யுண்டாக்குகிறதென்று கேட்கப் பாற்கடலில் உலகங்களிலுள்ள சிறந்த வோஷதிகளையிட்டுக் கடைந்தா லமிர்தந் தோன்றுமென்று கூறிப் பாற்கடலின்கரையையடைந்து அனந்தனைக்கொண்டு மந்தரமலையைக்கொண்டுவரச்செய்து அதை மத்தாக்கி சந்திரனை யம்மத்திற்குக் காம்பாக்கி வாசுகியை அதைக் கடையுங் கயிறாக்கி கடை

விக்க வாரம்பித்தனர். தேவர்களால் தனியே அதனைக் கடைய முடியாமையினால், திருமா லசுரர்களையுங் கூடச்சேர்த்து நீங்களிரண்டு வகுப்பினர்களுமாகக் கடையுங்கள் என்று கூறவே, அசுரர்க ளொருபுறமுந் தேவர்க ளொருபுறமுமாகக் கடைந்தார்கள்; கடைதலும் அக்கடலினின்றும் விஷமுதலியவைகள் தோன்றியானதற்குப் பின்பு கடைசியில் அமுதகும்பம் பிறக்க, அதனைக்கண்ட தேவர்களு மசுரர்களு மாரவாரஞ்செய்த சமயத்தில், அசுரர்கள் துராகிருதமா யமிர்தத்தை எடுத்துக்கொண் டிது எங்களுக்கென்று கூறுதலும், இனி யென் செய்வோமென்று கவலையுற்ற தேவர்களை யாதரித்து நின்ற திருமால் அசுரர்களை வஞ்சிக்கும்பொருட்டொரு பெண்ணுருவங் கொண்டனன். இதனை—

" செய்யமணிமேகலைசிலம்பொடுசிலம்ப
மையொழுகுவார்குழலின்வண்டிசைமிழற்ற
வெய்யமுலையாரமொடுவெள்வளையெறிப்ப
பெய்யுமுகில்வண்ணனொருபெண்ணுருவெடுத்தான்" என்று

பாகவதத்திலும்,

"ஆற்றல்மிகையாற்சுதைக்குடத்தையடல்வாளவுணர்கைப்பற்றத்
தோற்றுமறுகிப்புத்தேளிரலமந்தேங்குந்துயர்நோக்கிக்
காற்றுந்துளவநறும்பிரசக்கமஞ்சூற்கொண்டலினைவிழிக்குக்
கூற்றம்பதைக்குமோகினியாம்வடிவமாங்குக்கொண்டனனால்" என்று காஞ்சிப்புராணத்திலும்,

" எம்மாலிதுவந்துளதாமெலமக்கேயீதென்றே
தம்மாசையினாற்சுரர்தானவர்தம்மின்மாறாய்த்
தெம்மானமுடன்பொரவுன்னலுந்தீர்வுநோக்கி
அம்மால்விரைவினொருமோகினியாயினானே" என்று கந்த

புராணத்திலும் வருதலைக்கொண்டுணர்க.

ஒருவன் அந்த மோகினியான ஹரியைப் போகித்தானென்றது ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ணஞ் செய்திருத்தலால்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கடல்கடைந்த திருமால்கொண்ட பெண்ணுருவத்தி னழகைக் கண்டு மகிழ்வுடன் புணர்விரும்பிச் சிவபெருமான் ஹரியைப்பார்த்து, மாலே! நினது பெண்ணுருவத்தை நீ காட்டு என்றனர், உடனே அவரும் அவ்வுருவத்துட னெதிரில் நின்றனர்; சிவபெருமா னவ்வுருவத்தைப்பார்த்து மகிழ்ந்து புணர்விரும்பி மேருமலையின் தென்புறத்திலுள்ள சாலமரச்சோலையி லவளை யழைத்துக்கொண்டு சென்று புணர்ந்தனர். இதனை—

‘ஶ்ரீஹரிஸ்வாத்மநயிகாம் [illegible] மோஹநாகாரா |
வாமவ்ருக்ஷஸ் [illegible] வக்ஷஸ்தலஸ்ய ஸ: |
தமேஸ் த்ராத்வா [illegible] |
உத்வாஹயாமாஸ [illegible] ஸநீரிணீ |’ என்று சங்கரஸம்ஹிதையிலும்,

“ பற்றியேகிப்படிமிசைநாவலாற்
பெற்றநீவிற்பெருங்கடற்சார்பினின்
மற்றுநேரில்வடதிசைவைப்பினி
லுற்றசாலத்தினெண்ணிழனண்ணினன். என்றும்,

நண்ணியேதனிநாயகனவ்விடைப்
பெண்ணினீர்மையைப்பெற்றிடுநாரண
னுண்ணெகிழ்ந்துமயக்குற்றுருகியே
யெண்ணிலின்புறக்கூடினனென்பவே” என்று கந்தபுராணத்திலும்,

“ மையல்செய்மோகினிவடிவங்காட்டுபு
வெய்தெனநடந்தனன்வேலைவென்றகோ
னெய்யெனவெழுந்துசென்றுற்றுப்புல்லவுங்
கையகன்றோடினன்கரியமேனியான். என்றும்,

“ மறவலுமெம்பிரான்வலிந்துபற்றியாங்
கிறுகுறத்தழீஇயினனினையகாலையில்” என்றும் வருங் காஞ்சிப்புராணத்திலும் வருதலைக்கொண்டுணர்க.

தாத்பர்யம்.

ஹரி மோகினியானன், அரன் அம்மோகினியைக்கூடிச் சுகித்தான் என்பதாம்.

தாரதம்மியம்.

பெண்ணுருவத்தைக்காட்டிலும் பெண்ணுருவத்தைப்புணர்ந்து சுகித்த ஆணுருவஞ் சிறந்ததும் ஆண்பாலுருவத்திற்குப் பெண்பாலுருவமடங்கி நடத்தலும் உலகிற் கண்கூடாகவே காண்கின்ற நாம் பெண்ணுருவடைந்த திருமாலைக்காட்டிலும் அத்திருமாலை மனைவியாகக்கொண்டு புணர்ந்த சிவபெருமானை யுயர்ந்தவராக இவ்விஷயத்தி லறிகின்றோம். அதனு லிவ்விஷயத்திற் றாழ்வடைந்த ஹரியை அப்பிரதானப் பொருளாகத்தள்ளி ஹரனைப் பிரதானப்பொருளாகக் கொண்டு; அரியையொழித்து அரனது திருவடிகளிற் சரணம் புகுகின்றோம்; உயர்ந்ததை கைக்கொண்டு இழிந்ததை அப்பிரதானமாக்க லுலகத்தி லுயர்ந்தவர்களது வழக்காதலா லவ்வாறே செய்கின்றோம்.—எ-று. (அ)

முஷ்ணாதி வல்லவக்ருஹே நவநீதமேக:
அந்யோ ததாதி ஸுதயாம் வரமாமிர்தம் தத் |
கோ வா நயோரதிக இத்யநுசிந்த்ய வ்ருத்தாஸ்
ஸத்யம் ப்ருவந்து தமிமம் வயமாஶ்ரயாம: ||

முஷ்ணாதிவல்லவக்ரஹேநவநீதமேக அந்யோததாதிஸாநீயாம்பரமாமிர்தந்தத், கோவாநயோரதிகஇத்யநுசிந்த்யவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம: ||

மொழிபெயர்ப்பு.

மட்டார் கொன்றை நிழரேறு மருவு மிடையர் பாடிகளிற் [வன்
கட்டான் வெண்ணெய் தனையொருவன் கருதுமவன்போ லுறமொரு
சிட்டார் சுதிக டமக்கெல்லாஞ் சிறந்த வமிர்த மெனுமொன்றை
யிட்டா னிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
வல்லவக்ரஹே	இடையர் வீடுகளில்
நவநீதம்	வெண்ணெயை
முஷ்ணுதி	திருடிக்கொண்டிருக்கிறான்,
அந்ய:	இன்னொருவன்
ஸுதீயாம்	பண்டிதர்களுக்கு
தத்	பிரசித்தமான
பரமாமிர்தம்	சிறந்த மோக்ஷத்தை
ததாதி	கொடுத்துக்கொண்டிருக்கிறான்;
அநயோ:	இவ்விருவருள்
அதிக:	சிறந்தவன்
கோவா	எவன்?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்தியா	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	உங்களாற் சொல்லப்பட்ட அந்த இந்தச் சிறந்தவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாமஃ	ஆச்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் இடையர்களது தழைகளிட்டுக்கட்டிய வீட்டினுள்ளிருந்த வெண்ணெய் (மொத்தைகளைத்) திருடினான், இன்னொருவன் தன்னையடைந்த அடியவர்களுக்கு அழியாத அமிர்தத்தைக் கொடுக்கிறான்; இவ்விருவர்களி லுயர்ந்தவரை பெரியவர்களே நீங்கள் கூறினால், நாங்க ளந்த மஹாபுருஷனைச் சரணமாக வடைந்து வணங்குகின்றோம்.

விசேஷம்.

ஒருவன் வெண்ணெய் திருடினானென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணந் திருடியிருத்தலால்.

ஹரி கிருஷ்ணாவதாரஞ் செய்தபோது பலராமனும் மற்றைய கோபாலச்சிறுவர்களும் உடன்வரவும் வராமலும் சென்று வெண்ணெயைத் திருடினான். இதனை—

“ அறுபொருளிவனென்றேயமரர்கணந்தொழுதேத்த
உறுப்சியொன்றின்றியேயுலகடையவுண்டனையே
உண்டவாய்களவினுற்றிவெண்ணெயுண்டவாய்
வண்டுழாய்மாலையாய்மாயமோமருட்கைத்தே” என்று சிலப்பதிகாரத்திலும்,

“ எந்தைபுகுந்தொளித்தமனையுறிவெண்ணெயெட்டாமற்
குந்தியுரன்மீதேறிக்கல்லினுற்குழிசியுடைத்
தந்தளிர்க்கையால்வேந்தியினிதருந்தியாங்கெய்த
மைந்தருக்குமிகவளித்துப்பூசைக்கும்வழங்கினான்” என்று கூர்ம்புராணத்திலும்,

“களவுசெய்மால்காணுமற்காளமார்மனைகடோறுந்
தளவலர்நகையார்வைத்தவுறிதனைத்தடவிமல்கு
மனைநெய்பால்வெண்ணெயெல்லாமசோதைசேய்கலனுர்தமெய்
யொளிவிழக்கவினைக்காட்டவுண்டையாற்றெறித்தேயுண்டான்”
என்று நாரதபாகவதத்திலும் கூறப்படுதலைக்கொண்டுணர்க.

இன்னொருவன் மாறுவமுதளித்துள்ளான் என்றது - ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ணமளித்திருத்தலால். ஹரன் ஞானசாரியனு யெழுந்தருளி, பக்குவர்களாகிய ஜனகாதிகளுக்கும், நந்தி மார்க்கண்டேயன் முதலியவர்களுக்கும் ஞானோபதேசத்தாற் பிறவியை யொழித்தருளி ஞானமிர்தத்தை யருளினான். இதனை—

“என்றும்பிறந்திறந்தாழாமேயாண்டுகொண்டான்
கன்றால்விளவெறிந்தான்பிரமன்காண்பரிய

அ

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குன்றாதசேர்த்தில்லையம்பலவன்குணம்பரவித்
துன்றார்குழலினீர்தோணேக்கமாடாமோ" என்று திருவாசகத்திலும்,

யஸ்தஇவ ஸம் ஹ்ரு தா ஹரவஞி என்று சுருதியிலும்,

"மைந்தநீநமைவழுத்திமாசிலா-முந்துபூசனைமுயன்றதன்மையா
லந்தமில்லதோராயுள்நிற்கியாங் - தந்துநல்கினுமென்றுசாற்றினன்"
என்று கந்தபுராணத்திலும்,

"வழுத்தல்கேட்டலுமதிமுகிழணிந்தவார்சடைமேற்
குழைத்தபைந்தளிர்க்கொன்றைதாழ்குழகன்வந்தாவி
யழிக்குங்கூற்றவனுன்னுழையணுகிடானென்று
தழைத்தகாதலாற்றலையின்மேற்றன்கரம்வைத்தான்" என்று
இலிங்கபுராணத்திலும்,

"அருமறைச்சிறவுருத்திரசமகஞ்செபித்திடலொழியளவிறந்த,
மருமலர்ப்பொகுட்டுப்பிரமர்தங்கற்ப மல்லலந்திருவொடும்பொலியா,
வருமெழுதோற்றக்கணங்கடம்பதியாயினி தினிலுறைந்தொளியெறிக்கும், பொருவருஞானச்சுடர்ப்பிழம்பாகு மெனதுழைப்பொருந்துதியென்றான்" என்று கூர்மபுராணத்திலும் வருதலைக்கொண்டுணர்க.

தாத்பர்யம்.

ஹரி திருடுபவன், ஹரன் தன்னையடைந்தவர்களுக்கு அமிர்தங் கொடுப்பவனென்பதாம்.

தாரதம்மியம்.

(திருடுபவன் தாழ்ந்தவன்.) அவனிலும் கேவலமான பொருளைத் திருடினவனையும், சிலாகனீயமான பொருளைத் திருடினவனையுங் கூறுங்கால், (சிறந்த திருடனைப் புகழுகிறார்கள். தாழ்ந்த திருடனைச் இவன் சாமான்ய திருடனென்கிறார்கள்.) அவனிலும் இழிந்தசாதியார்களது வீட்டிற்சென்று சாமான்யமான வஸ்துவை திருடினவனை உலகினர் சீ! இது ஒருபொருளாகத் திருடினனே இது ஒருபிழைப்பா! அது கேட்டகேடு காலனுபோட்டால் வருது என்று ஸாமான்ய

ஜனங்களுஞ் சொல்வதை நாம் கேட்டிருக்கின்றோம். ஆதலால் கேவலம் இடையர்களது குடிசைக்குணுழைந்து சாமான்யமான வெண்ணெயைத்திருடின ஹரியையும், திருடர்களுக்குள்ளேயும் மதிக்கப்படாத கேவலம் ஸாமான்யதிருடனுக வெண்ணவேண்டியதாகின்றது.

உலகினிற் கொடையாளிகளைப் புகழாதவர்களில்லை. கொடையாளிகளுள்ளும் சிறந்தபொருள்களைக் கொடுத்தவர்களை மிகவும் புகழுகிறார்கள். ஹரன் தன்னையடைந்தவர்களுக்கு அமிர்தத்தையே-சாவாமையையே அளித்திருக்கின்றான். ஆதலா லவனது புகழுக்களவில்லை. இதனல் நாங்கள் கேவலம் இடையர்குடிசையுட் புகுந்து வெண்ணெய்திருடி யபகீர்த்தியடைந்த ஹரியை இவ்விஷயத்திலப் பிரதானமானவனுக ஒதுக்கி ஈயுந்தன்மையாற் சிறப்படைந்த ஹரனையே சரணமாகவடைந்து துதிக்கின்றோம்.—எ-று. (கூ)

𑌏𑌕𑌃𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑌿𑌹𑌿𑌸𑌕𑌾𑌮𑌇𑌤𑌿𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌿
𑌮𑌨𑍍𑌯𑍋𑌮𑌨𑍋𑌨𑌿𑌹𑌿𑌤𑌕𑌾𑌮𑌇𑌤𑌿𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑍍।
𑌕𑍋𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑍃𑌦𑍍𑌧𑌾
𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌂𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑌮𑌿𑌮𑌂𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகட்ப்ரயாதிஹிஸகாமஇதிப்ரஸித்திமந்யோகமந்நிஹிதகாமஇதி ப்ரஸித்திம்|கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந் துதமிமம்வயமாஸ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு

மன்னு நின்றச காமனென மருவுங் கீர்த்தி தனையொருவன்
துன்னு நின்றான் மற்றொருவன் துகடீ ருலகி லுள்ளவர்கள்
துன்னு நிகத காமனெனச் சொற்ற பெயரை யுற்றுள்ளான்
இன்னோர் தம்மிற் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக: ஒருவன் [கூடினவன்
ஸகாம: காமத்தோடு கூடினவன் (மன்மதனோடு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இதி	என்று
ப்ரஸித்திம்	ப்ரஸித்தியை
ப்ரயாதிஹி	அடைந்திருக்கின்றானல்லவா?
அந்ய:	இன்னொருவன் [யுடையவன்
நிஹதகாமம்	காமத்தைத்தள்ளினவன், அழித்த காமனை
இதி	என்று
ப்ரஸித்திம்	ப்ரஸித்தியை
அகமத்	அடைந்தான்;
அநயோ:	இவர்களுக்குள்
அதிக:	அதிகமானவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொன்னால்
வயம்	நாங்கள்
தமிமம்	உங்களாற்சொல்லப்பட்ட அந்தவினையே
ஆஸ்ரயாம:	ஆச்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் அழகுபொருந்திய ஸகாமனென்று (காமத்தோடுகூடியவன் எனவும், மன்மதனோடு கூடியவன் எனவும்) பொருந்திய திருநாமத்தைக்கொண்டிருக்கிறான்; இன்னொருவன் நிஹதகாமனென்று (காமம் இல்லாதவனென்று - மன்மதனை அழித்தவனென்று) சொல்லப்பட்ட திருநாமத்தைக்கொண்டவனாக இருக்கின்றான்; இவ்விருவர்களில் இவ்விஷயத்தி லெவன் சிறந்தவனோ அவனை நீங்கள் சொன்னால், நாங்கள் அந்த மஹாபுருஷனைச் சரணமாக அடைந்து வணங்குகின்றோம்.

விதப்பு.

ஒருவன் ஸகாமனென்றது - ஹரியை, அது அவ்வரி அவ்வாறிருத்தலால். இதனை—

"முனிசிலைத்தருக்கள்யாவுமுன்னையிற்பசுமையெய்தித்
தளிர்குழைத்தரும்புதோற்றப்பாடியதையறன்னைக்
களியொடுகண்ணனேக்கியாசைநோய்கவற்றமாழாந்
தளிபெறுவாயில்காணான்பார்த்தனதருகுசாந்தான்" என்று கூர்ம புராணத்திலும்,

"ததையுமலர்தாரண்ணலிவ்வண்ணமயலுழந்துதளருமேல்வை, சிதையுமனத்திடருடையசெங்கமலமுகமலர செய்யவெய்யோன், புதையிருளினெழுகின்றபுகர்முகயானையினுரிவைப் போர்வைபோர்த்த,உதையகிரியெனுங்கடவுள்நுதல்கிழித்தவிழியேபோலுதயஞ்செய்தான்" என்றிராமாயணத்திலும்,

"இக்கொடுமொழிபுகன்றெரியைமூட்டியே
புக்குயிர்துறந்தனள்புலம்பியாங்கவள்
அக்குறுசுடலைநீறுடிவாடினான்
மைக்கடன்மேனியன்மாலின்மூழ்கியே" என்று கந்தபுராணத்திலும்,

வாஸுதேவோமஹதஸ்ம்ருதிஸ்ஸ்ஹு... என்று சிவரகஸ்யகண்டத்திலும்,

"மெல்லெனமுல்லைமூரலாள்வியந்தெடுத்தகாலையாழ்
வல்லமாதவத்தனெய்திவாணெடுங்கண்மங்கையிவ்
வெல்லினங்குழவிமாயனீன்றதோன்றல்வேனிலஞ்
செல்வனின்மணாளனென்றுதேர்ந்துதன்மைசெப்பினான்" என்று பாகவதத்திலும் வருதலைக்கொண்டுணர்க.

ஒருவன் நிஹதகாமனென்றது-ஹரனை. அது அவ்வரனவ்வண்ணமிருத்தலால். இதனை,—

"மேனாளிலந்தரமெல்லியலா - வானுவருடன்னையளித்தொரு பால்
தானாகவிருத்தியதற்பரனை - நானுமயல்செய்வதுநன்றிதுவே"
என்று கந்தபுராணத்திலும்,

"விட்டவெம்பகழிமுற்றும்வியத்தகுவிமலன்மீது
பட்டிலுஞ்சிறிதேவேளைப்பார்த்தனன்பார்த்தலோடும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

கட்டழல்பொதிந்தநெற்றிக்கண்ணனுக்கிதேகாமற்
சுட்டதுகைகொழற்றுஞ்சூழ்புலகப்ரவிற்றன்றே." என்று கந்த புராணத்திலும் வருதலைக்கொண்டுணர்க.

தாத்பரியம்.

ஹரி ஸகாமன், ஹரன் நிஷ்காமன் என்பதாம்.

தாரதம்மியம்.

உலகத்தில் காமமுள்ளவனைக்காட்டிலும் காமமில்லாத இந்திரியவசியினும் மன்மதனோடு ஸகவாஸம் செய்பவனைவிட கொடிய காமனை அழித்தவனும் சிறந்தவனாகின்றான்; ஆதலாலிந்தவிஷயத்தில் தாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமானவனாகத்தள்ளி நாம் பிரதானமான ஹரனைத் தலையால் வணங்குகின்றோம். (கo)

ஏகோ விபாதி ரவிசந்த்ரஸமத்வி நேத்ர:
ஸ்த்வந்யோ ரவிந்தஸக ஸோமஸிகித்ரிணேத்ர:
கோவாநயோரதிக இத்யநுசிந்த்ய வ்ருத்தா:
ஸத்யம் ப்ருவந்து தமிமம் வயமாஸ்ரயாம:॥

ஏகோவிபாதிரவிசந்த்ரஸமத்விநேத்ரஸ்த்வந்யோரவிந்தஸகஸோமஸிகித்ரிணேத்ர:। கோவாநயோரதிகஇத்யநுசிந்த்யவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஸ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

பரிய கடலி னடுவுதையம் பண்ணு மதியும் பரிதியுமே
பெரிய விழிக ளாக்கொண்டு பிறங்கு மொருவன் மற்றொருவன்
அரிய மதியுஞ் சிகியுமென வறையு நயனத் தொடுசிறந்தான்
இருவர் தம்மிற் சிறந்தவன்பா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
ரவிசந்த்ரஸமத்வி	சூரியசந்திரர்களென்னுஞ் சமானமான

நேத்ர:	இருவிழிகளுள்ளவனாக
விபாதி	பிரகாசிக்கின்றான்,
அந்யஸ்து	மற்றொருவனானால்
அரவிந்தஸகஸோமஸிகித்ரிணேத்ர	-சூரியன் சந்திரன் அக்கினியென்னு மூன்று கண்களையுடையவனாக
விபாதி	பிரகாசிக்கின்றான்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	எவன்
இதி	இதனை
அநுசிந்திய	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லவாம்.
தமிமம்	உங்களா லுயர்ந்தவனென்று கூறப்படுகிற அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஸ்ரயாம:	ஆச்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் சூரியனென்றும் சந்திரனென்றும் பேர்பெற்றுள்ள இரண்டு கண்களையுடையவன். இன்னொருவன் சூரியனும் சந்திரனும் அக்கினியுமாகிய மூன்று கண்களையுடையவன்; அறிவுள்ளவர்களே இவ்விருவர்களிற் சிறந்தவனிவனென்று நீங்கள் சொன்னால் நாங்க ளந்த மஹாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

விதப்பு.

பரிதிமதியெனும் பேருற்ற விழிகள் இரண்டுள்ளானென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வாறான இருவிழிகளை யுடைமையான். இதனை—

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"மண்டலம்பாதமாவானம்மேனியுர
முண்டகன்முதலினோர்மொழியுறுப்பதாய்
பண்டநல்வதனமாம்பரிதிமாமதி
விண்டிருவிழிகளாவிளங்குமேனியான்" என்னும் ஸ்ரீமா
பாரதத்தாலுணர்க.

இன்னொருவன் முச்சுடர்களையும் விழியாகவுடையானென்றது அரனை, அது அவ்வரன் அவ்வண்ணம் முச்சுடர்களையும் மூன்றுகண்களாகக்கொண்டிருத்தலால். இதனை—

"இருசுடர்தமக்காதாரமாகியவெம்மதுகஞ்சத்
திருவிழிபுதைத்தவாற்றாற்புடைப்பாதிசெய்கைமாறி
உருகெழுதீமைநின்னையுற்றதாலதற்குத்தீர்வு
மருமலர்க்குழலினாய்நீமிரபுளியியற்றல்வேண்டும்." என்றும்,

இருந்தவாறிருந்துபம்புமெண்ணிலாவுயிரும்வாடி
வருந்திடுமிடும்பைநோக்கிவள்ளலார்வறிதேநெற்றித்
திருந்தழல்விழியைவல்லேதிறந்தனரிளமகார்கள்
கருந்துயருழப்பவீன்றோர்காண்புறோசிறிதுபோதும்" என்றும்
வரும் காஞ்சிப்புராணத்தாலுணர்க.

தாத்பரியம்.

இரண்டுகண்களுள்ள ஹரியைவிட மூன்றுகண்ணுள்ள ஹரனே சிறந்தவன் என்பதாம்.

தாரதம்மியம்.

பிரபஞ்சத்தி லொளிப்பொருளாகவுள்ளவைகள் சூரிய சந்திர அக்கினிகளேயாம். அவைகளில் ஹரி சூரியனையும் சந்திரனையும் இரண்டு கண்களாகக்கொண்டிருக்கின்றனன், ஹரன் சூரிய சந்திரர்களுடனே அக்கினியையும் கண்ணாகக்கொண்டிருக்கின்றனன்; ஒன்றைக் குறைவாகவிட்ட ஹரியிலும் சுடர்களனைத்தையும் கண்ணாகக் கொண்டுள்ள ஹரனன்றோ இந்தவிஷயத்திற் சிறந்தவன். ஆதலால் நாங்கள் முச்சுடர்களையும் மூன்று கண்களாகக்கொண்டுள்ள ஹரனை இவ்விஷயத்திற் சிறந்தவனாக அறிந்து ஹரியை கண்களின் விஷயத்தில் தாழ்ந்தவனாக அகற்றி உயர்வான ஹரனைச் சரணாகதியாக அடைந்து வணங்குகின்றோம்.—எ-று. (௧௧)

கோபாலகத்வமபிகம்ய விபாதி சைக:
ஸ்த்வந்யோ வ்ருஷாதிபதிநாயக இத்யபாணி।
கோவாநயோரதிக இத்யநுசிந்த்ய வ்ருத்தாஸ்
ஸத்யம் ப்ருவந்தமிமம் வயமாஶ்ரயாம:॥

கோபாலகத்வமபிகம்யவிபாதிசைகஸ்த்வங்யோவ்ருஷாதிபதிநாயகஇத்யபாணி। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம் ப்ருவந்த்தமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

தளவ மொளிரு முல்லைநிலந் தன்னிற் கோபா லகனாகி
உளவ னொருவன் மற்றொருவன் உயர்ந்த விடப வதிபதியாய்
மிளிரு மவற்கு நாயகனா மேவி நின்றா னின்னவரில்
எளிய ரல்லார் தமைநீங்க ளிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:ச	ஒருவனானல்
கோபாலகத்வம்	கோபாலகத்துவத்தை
அபிகம்ய	அடைந்து
விபாதி	பிரகாசிக்கின்றான்,
அந்ய:து	இன்னொருவன் ஆனால்
வ்ருஷாதிபநாயக	இடபாதிபதிநாயகன்
இதி	என்று
அபாணி	சொல்லப்படுகின்றான்;
அநயோ:	அவர்களுக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	எவன்?
இதி	இதனை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அதஸிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம். சொன்னுல்
தமிமம்	அந்த விஷயே
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆச்ரயிக்கின்ருேம்.

பொழிப்பு.

ஒருவன் பசுக்களை ரக்ஷிப்பவனென்று பிரஸித்தியானவன், ஒருவன் பசுக்களுக்குள் சிறந்த வ்ர்ஷபங்களுக்கு அதிபதியாகிய மஹா வ்ருஷபத்துக்கு அதிபதியென்று யாவருங்கூறுகின்றனர்; இவ்விருவர்களிற் சிறந்தவனின்னுனென்று அறிவிற்சிறந்த நீங்கள் சொன்னுல், நாங்கள் அந்த மஹாபுருஷனைச் சரணமாகவடைந்து வணங்குகின்ருேம்.

விதப்பு.

ஒருவன் கோபாலகத்துவமுடையவனென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணமுடையவனுக விருத்தலால், இதனை—

"(-ிசெ்கால்வெட்டிவிளையாடுவில்லேற்றித்
பீலித்தழையைப்பிணையைப்பிணைத்துபிறகிட்டுக்
காலிப்பின்போவார்க்கோர்கோல்கொண்டுவா
கடல்நிறவண்ணற்கோர்கோல்கொண்டுவா. என்றும்,

ஆநிரைமேய்க்கநீபோதியருமருந்தாவதறியாய்
கானகமெல்லாந்திரிந்துன்கரியதிருமேனிவாடப்
பானையிற்பாலைப்பருகிப்பற்ருதாரெல்லாஞ்சிரிப்பத்
தேனிலினியபிரானேசெண்பகச்சூட்டவாராய்" என்றும் வரும்,
நாலாயிரப்பிரபந்தத்தாலும்,

"குராமலர்முருகுவிம்மிக்குழவியமல்லன்முல்லை
விராய்மலர்த்துளவம்பூத்தமேதகுதண்ணங்கானின்
மராமெனமருளுமேனிவள்ளலோடெழுந்துசெஞ்சுட்
டராவணைதுயின்றவண்ணலானிரைமேய்க்கலுற்ருன்" என்று
சுகபாகவதத்திலும்,

ஆயரெல்லாமகிழநந்தகோபனருட்கமலக்கண்ணனையு மவ்முன்னேனும், சேயினையுந்தமருட்னுங்கூடச்சென்றுசிறந்தவிளங்கன்றுகளைமேய்மினென்ருன்,. தூயவிளஞ்சிறுவருடன்பாலின்வண்ணன்றுலங்கிடநற்காயாம்பூவண்ணனெய்தி, வேயினிசையூதியெங்குங்கவனிற்கல்லைவீசியவன்சொற்படியின்மேய்க்குநாளில்" என்று நாரதபாகவதத்திலுங் கூறப்படுதலைக்கொண்டுணர்க.

ஒருவன் வ்ர்ஷாதிபனென்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ணமிருத்தலால்,

பெண்களுக்குப் புருடர் தலைமையாவதைப்போல, பசுக்களுக்கு எருதுகள் சிறந்தன; எருதுகளிற்சிறந்தது தர்மரூபமான வ்ர்ஷபம்.

தர்மவ்ர்ஷபத்துக்கும் ஹரிகொண்ட வ்ர்ஷபரூபத்துக்கும் ஹரனே தலைவன். இதனை—

"ஒடிவிலாவூழிதோறொவ்வொன்றுகநல்
அடியொருமூன்றிழந்தண்ணனல்லறம்
படிமிசையோர்பதம்பாவும்பாலதாய்
விடையுருத்தாங்குபுமெலிந்துநின்றதால்" என்று சுகபாகவதத்திலும்,

"ஆறுலாஞ்சடையண்ணலைச்சேர்வனே
வீறிலாதென்றுமுற்றிடுவேனெனுத்
தேறியேயறத்தெய்வதஞ்செங்கணு
னேறதாயொரொழிலுருக்கொண்டதே.

ஈங்குனதிடத்தினில்யாமெக்காலமும்
நீங்கலமிருந்தனம்நீயும்வந்துநம்
பாங்கரினடைந்தனைபரிவொடூர்தியாய்த்
தாங்குதியாரினுந்தலைமைபெற்றனாய்" என்று கந்தபுராணத்திலும் வருதலாலுணர்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இவ்விடபரூபமான தருமத்தெய்வம் ஒரு மஹாப்ரளயத்தில் எல்லாமொழிந்துபோவதைநோக்கி நாம் எவ்விடஞ்சென்றுற் பிழைக்கலாமென்றுலோசித்துப் பிரளயத்தி லழியாது நின்று நடிக்கின்ற நடராஜனையடைவோமென எண்ணித் தாண்டவரூபியாக நிற்கின்ற ஹரனையடைந்து வணங்கி என்னை ரக்ஷிக்கவேணுமென்று வேண்டிக்கொண்டது, உடனே ஹரன் அதனைத் தன்னடிமையாக்கி வாகனமாகக் கொண்டான். இதுவன்றியும் திருமாலும் விடையுருக்கொண்டு சுமந்தான். இதனை—"இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ" என்று திருவாசகத்தில் வருதலாலுமுணர்க.

தாத்பரியம்.

ஹரி பசுநாயகன், ஹரன் வ்ர்ஷாதிபதிநாயகன் என்பதாம்.

தாரதம்மியம்.

கோபாலகனைக்காட்டிலும் இடபாதிபதிநாயகனே சிறந்தவனென்பது சொல்லாதேயமையும். நாம் பசுபாலகனான ஹரியை இவ்விஷயத்தி லப்பிரதானமானவனாக ஒழித்து இடபாதிபனாகிய ஹரனை சிறந்தவனாக அறிந்து அம்மஹாபுருஷனைச் சரணாகதியாக அடைந்து வணங்கின்றோம்.—எ-று. (௧௨)

ஏகோ ஹ்யகாததரதுக்தநிதௌ நிமக்ந:
கைலாஸஶைலஶிகரே வர்த்ததே ஹ்யந்ய:।
கோ வாநயோரதிக இத்யநுசிந்த்ய வ்ருத்தா:
ஸத்யம் ப்ருவந்து ததிமம் வயமாஶ்ரயாம:॥

ஏகோஹ்யகாததரதுக்தநிதௌநிமக்ந: கைலாஸஶைலஶிகரே கலுவர்த்ததேந்ய। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

பொழிபெயர்ப்பு.

பன்னு மொருவன் பாற்கடலிற் படிந்தா னொருவன் பகர்வேலை
மன்னுங் கோடி மதியங்கள் மருவிப் பூத்த நிலவென்னத்

துன்னுங் கைலை மலைமீதே சுடருஞ் சிகர மீதுற்றான்
இன்னர் தம்மிற் சிறந்தவனியா ரிசிந்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
அகாததரதுக்தநிதௌ	மிகவும் ஆழமான பாற்கடலில்
நிமக்நோஹி	மூழ்கினானல்லவா,
அந்ய:	இன்னொருவன்
கைலாஸஶைலஶிகரே	கைலாயமலையின் சிகரத்தில்
வர்த்ததேகலு	இருக்கின்றானல்லவா;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	எவன்?
இதி	இதனை
அநுசிந்திய	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
சத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த விவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆச்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் மிகவும் ஆழமான பாற்கடலில் மூழ்கினானல்லவா, இன்னொருவன் கைலாயமலையின் சிகரத்தி லிருக்கின்றானல்லவா? பெரியவர்களே இவர்களிருவருட் சிறந்தவனை நீங்கள் சொன்னா லவனை நாங்க ளாச்ரயிக்கின்றோம். ஆஶ்ரயித்தல்-அன்புபூண்டொழுகிநிற்றல்.

விசேஷம்.

ஒருவன் பாற்கடலின் மூழ்கினனென்றது - அரியை, அது அவ்வரி அவ்வண்ணம் முழுகியிருத்தலால். இதனை—

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

" உயருமந்தரங்கீழுததியில்விழலுமும்பர்களுடன்புருகூதன்
றயநறவவர்க்கவ்விடரினையகற்றச்சுந்தரனவருடனமர்ந்து
மியல்புடைக்கமடமாகித்தன்வெரிநினிலங்கியவோங்கருனெழநீள்
கயலுடையுவரியமுவத்துளெய்திக்கவினுறத்தாங்கினன்றே" என்
று நாரதபாகவதத்தும்,

" அழியும்பணிவெண்டிரைபுரட்டுமாழிவயிறகிடங்கெழுந்து
இழியநெடுமால்வரை தளங்கிக்கீழ்வீழ்ந்திடலுந்தனிநின்று
சுழலும்பசும்பொற்கிரிமுதுகுசொறிந்தாங்கணிதினிளநறவம்
முழுகுந்துளவோன்மோட்டாமையுருவமெடுத்துத்தாங்கினன்ல்"
என்று சுகபாகவதத்தும் வருதலாலுணர்க.

ஒருவன் கைலாயசிகரத்தி லிருந்தானென்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ணமிருத்தலால். இதனை—

"தெய்வமேருவின்தென்புலத்திருப்பெருங்கைலைத்
தையல்பாகன்முத்தலைநெடுஞ்சூற்படைப்பெருமான்
ஐயனுலமுண்டிருண்டகண்டத்தினனுறைவான்" என்று உபதேசகாண்டத்திலும்,

" அன்னதோர்கைலைநாப்பணம்பொனின்சுடர்மேற்கொண்ட
நன்னெடுஞ்சிமயத்தோங்கனவையோரிரண்ணிற்றென்ன
கன்னியங்காப்புமேவிக்கதிர்மணிக்கற்றைசுற்றப்
பொன்னெடுங்கோயிலொன்றுபொலிவொடும்பொருந்திற்றன்றே.
சோதிசேருமத்துமணிமண்டபத் - தாதியானவரியணையும்பரிற்
காதலாகுங்கவுரியோர்பாங்குற - வேதநாயகன்வீற்றிருந்தானரோ"
என்று கந்தபுராணத்திலும்,

[illegible] என்று ஹாலாஸ்ய மாஹாத்மியத்திலும்,

[illegible] என்று அத்தியாத்மராமாயணத்திலும் வருதலைக்கொண்டு ஹரன் கைலாஸஸிகரவாசி என்றுணர்க

தாத்பரியம்.

ஹரி கடலின் முழுகினன், ஹரன் மலைமீது இருந்தான் என்பதாம்.

தாரதம்மியம்

கடல்கடைந்தநாளில் பாற்கடலின் முழுகிய ஹரியினும் ஸதா ஸ்ரீகைலாஸசிகரத்திலிருக்கும் ஹரன் சிறந்தவனேயாம். கீழே போவோனில், மேலே யிருப்பவன் சிறந்தவன்தானே? ஆதலால் நாங்கள் கடலிலழுந்திய ஹரியை அப்பிரதானமாக அகற்றி மலைமீது இருந்த ஹரனைச் சரணமாக அடைகின்றோம்.—எ-று. (௧௫)

[illegible]

எகஸ்துநைல்யமுபயாதிசரீரமாத்ரோஹ்யந்யஸ்துநைல்யமுபயச் சதிகண்டமாத்ரே। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஸ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

மன்னுங் கரிய நீலநிற மருவு மொருவ னுடன்முழுதந்
துன்னுங் களத்தி னளவுமே நீலங்குநீல வன்னத்தை
முன்னுமாறு கொண் டொருவன் மதிபால் விளங்கி மன்னினன்
என்னு மிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

பதப்பொருள்.

ஏக: து	ஒருவனானால்
சரீரமாத்ரே	உடன்முழுமையும்
நைல்யம்	நீலவன்னத்தை
உபயாதி	அடைந்திருக்கின்றான்,
அந்ய: து	மற்றொருவன்
கண்டமாத்ரே	கண்டத்தின்மாத்திரமே
நைல்யம்	நீலவன்னத்தை
உபயச்சதி	அடைந்திருக்கின்றான்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	எவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆச்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் சரீராதியந்தம் நீலநிறமுடையவனாக விருக்கின்றான், இன்னொருவன் கழுத்தில்மாத்திரம் நீலவன்னத்தை உடையவனாக விருக்கின்றான்; இவ்விருவரில் எவன் சிறந்தவனோ அவனைப் பெரியோர்களே நீங்கள் சொன்னால் நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக வடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் உடன்முழுமையும் நீலவன்னமுடையவனென்றது — ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணமுடையவனாக இருத்தலால். இதனை—

"பாயுநீரரங்கந் தன்னுள்பாம்பணைப்பள்ளிகொண்ட
மாயனார் திருநன்மார்புமரகதவுருவுந்தோளும்
தூயதாமரைக்கண்களுந் துவரிதழ்ப்பவளவாயும்
ஆயசீர்முடியுந்தேசுமடியரோர்க்ககலலாமே" என்றும்,

"வருந்திரையணிநீர்க்கங்கையின்கரைமேல்வதரியாச்சிரமத்துள்ளானை, கருங்கடன்முந்நீர்வண்ணனையெண்ணிக் கலியன்வாயொலி செய்தபனுவல், வரஞ்செய்தவைந்துமைந்தும்வல்லார்கள்வானவருலகுடன்மருவி, இருங்கடலுலகமாண்டுவெண்குடைக்கீழிமையவராகுவர்தாமே" என்றும்,

'மரகதவுருவும்,' 'கருங்கடல்வண்ணனை' என்றும் நாலாயிரப்பிரபந்தத்துள் வருதலைக்கொண்டுணர்க.

ஒருவன் களத்தின்மாத்திரம் நீலவன்னமானவனென்றது அரனை, அது அவ்வரன் அவ்வண்ணமிருத்தலால். இதனை—

"உமாஸகாயம் நீலகண்டம்" என்று மண்டலப் பிரமணோபநிஷத்தும்,

"காலனைவீழச்செற்றகழலடியாண்டும்வந்தென்
மேலவாயிருக்கப்பெற்றேன்மேதகத்தோன்றுகின்ற
கோலச்செய்த்தானமென்னுங்குளிர்பொழிற்கோயின்மேய
நீலமைவைத்தனையகண்டனினைக்குமாநினைகிலேனே" என்று திருநெறித்தமிழ்வேதத்தும்,

"நீலகண்டனேபோற்றியெண்குணங்களாணிறைந்த
மூலகாரணாபோற்றிமுன்சிறுவனுக்கிரங்கும்
காலகாலனேபோற்றியின்றெம்முயிர்காத்த
வேலவார்குழல்பங்கனேபோற்றியென்றிசைத்தார்" என்று காஞ்சிப்புராணத்தும்,

'நீலம்வைத்தகண்டனை' என்றும், 'நீலகண்டனே' என்றும் பிறவிடங்களிலும் வருதலானுணர்க.

தாத்பரியம்.

ஹரி முழுக்கறுப்பன், அரன் கழுத்தின்மாத்திரங் கறுப்புநிறமுள்ளவன் என்பதாம்.

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta
Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தாரதம்மியம்.

இவ்வுலகி லனைவருங் குறைந்த கருமையுடையவனையே சிறந்தவனாகக் கருதுதலாலும், அரனிடத்திலுள்ள இக்கருமை இயற்கையின்மையாலும், லோகோபகாரமாகத் தோன்றியதாதலாலும், ஹரியின் கறப்பு லோகோபகாரமாகத் தோன்றிய தன்மையாலும், இவ்விஷயத்திற் றாரதம்மிய மாயுங்கால் ஹரி தாழ்ந்து ஹரன் உயர்ந்து நிற்றலால், நாங்கள் இவ்விஷயத்தில் தாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக விட்டுப் பிரதானமான ஹரனை ஆஶ்ரயிக்கின்றோம்.—எ-று.()

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஏகஸ்ஸதாஷ்டமஹிஷீருபயாதிஸீக்ரமந்யோபிபர்த்திநிதராமிதி சாஷ்டமூர்த்தி:। கோவாநயோரதிகஇத்யநுசிந்த்யவ்ருத்தாஸ்ஸத்யம் ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

சேதவமுத மதியிலொளி சிறந்த முகத்தி லுறுநகையான்
மாதர் விளக்கு மட்டமனை மருவ வொருவன் மன்னுவான்
ஏத மறுமெண் மூர்த்திகளை யிலங்க வொருவ னெய்தினன்
ஈதிற் பெரியார் தமைநீங்க ளிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
அஷ்டமஹிஷீ:	எட்டுமனைவியரை
ஸீக்ரம்	விரைவாக
உபயாதி	அடைகின்றான்,
அந்யச	இன்னொருவனானவன்
அஷ்டமூர்த்தி:	அஷ்டமூர்த்திகளை-எண்வகையுடல்களை

நிதராம்	மிகவும்
விபர்தி	பரிக்கின்றான்;
அநயோ:	இவருள்
அதிக:	அதிகமானவன்
கோவா	யாவன்
இதி	என்று
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்தவிவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் ஸதா எட்டுமனைவியரை விரைவாக அடைகின்றான், இன்னொருவன் ஸதா அஷ்டமூர்த்திகளை யடைகின்றான்; இவ்விருவருள் எவன் சிறந்தவன் பெரியவர்கள் சொல்லலாம். நாங்களந்த மஹா புருஷனை ஆஶ்ரயிக்கின்றோம்.

விசேடம்.

ஒருவனட்டமகிஷிகளை அடைகின்றானென்றது-ஹரியை, அது அவன் எட்டுமனைவியர்களை யுடையவனாதலால்.

எட்டுமனைவியராவார்.

உருக்குமணி, சத்தியபாமை, காளிந்தி, மித்திரவிந்தை, சத்தி, பத்திரை, இலக்கணை, சாம்பவதி என்பவர்களாம்.

ஹரி உருக்குமணியை மணந்தது.

கடலாடை நிலமாதைக் கைப்பற்றியாண்ட மன்னர் பலருளொருவனாய் விதர்ப்பநாடாளும் வேந்தனாகிய வைதர்ப்பமன்னன் தன்னருந்தவத்தாலொருமகனையும் ஒருமகளையும் உடையவனாகி மகனுக்கு உருக்குமி என்றும், மகளுக்கு உருக்குமணியென்றும் நாமகரணஞ்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குட்டிவளர்த்தனன். மூத்தவனாகிய உருக்குமி யுவராஜாவாகியிருந்தனன், இளையவளாகிய உருக்குமணி மணப்பருவமடைந்திருந்தனள்; மகளின் மணப்பருவத்தையுணர்ந்த மன்னவன் கண்ணனுக்குத் தன் மகளைக் கொடுக்குமாறு தானே தீர்மானித்தானதனையுணர்ந்தவவன் மகனுருக்குமி தந்தையை வணங்கி, தந்தையே! இது தகுதியன்று இடையர்குலத்திலிருந் திசைக்குழலூதிய கண்ணன் என்னிளையாட் கேற்றவனல்லன். என்றங்கைக்கேற்ற மணவாளன் சேதிபனாகிய சிசுபாலனேஎன்று வற்புறுத்திக்கூறித் தந்தையின் சிந்தையைக்கரைத்து சிசுபாலனுக்கே கொடுப்பதாகத்தீர்மானித்தான்; இதையுணர்ந்த அவனிளையவள், கண்ணனையன்றிப் பிறனை மணம்புரியுங் கருத்தில்லாதவளாதலால், ஒரு பார்ப்பனமகனை துவாரகைக்கனுப்பினாள். அவனாண்டுச் சென்று கண்ணனைக்கண்டு ஸ்வஸ்திகூறிப் பின்னர் உருக்குமணியினபிப்பிராயத்தை யுணர்த்தினான். அதனையுணர்ந்த கண்ணனும் அலாயுதன் முதலியோருடன் தேரேறி விதர்ப்ப நோக்கிச்சென்றான். முன்னரே உருக்குமியி னேவலியால் சிசுபாலனாதியர்கள் நகரில்வந்து நெருங்கி யிருந்தார்கள். அப்பொழுது சைனியங்களுடன் கண்ணன் வருவதை யுணர்ந்த விதர்ப்பன் மணங்காணிய வந்தானென்று கருதி உபசாரத்துட னெதிரேற்றனன். பின்னர்க் கண்ணனுங் காலம்பார்த்தவனாக விருந்தனன்.

பார்ப்பனத்தூதனா லெல்லாமறிந்த உருக்குமணி அலங்கரிக்கப்பட்ட சரீரத்தினளாய் ஸ்ரீதுர்க்காதேவியி னாலயத்திற்குச்சென்று துர்க்கையை வணங்கி, இமாசலதனயே! அடியேற்கு தேவகிநந்தனனே வரனாகவேண்டும் என்று பிரார்த்தித்துப் பூசைமுடித்துக் கோயிலுக்கு வெளியில்வந்து எங்குளான் கண்ணன் என்று பங்கய விழிகளைப் பரப்பினவளாக நின்றனள்.

மறையோன்முகத்தால் நடந்த முறைகளையுணர்ந்த கண்ணன் பரிவாரங்களுடன் அவள் நிற்குமிடத்தடைந்து தேரினின்றும் இறங்கித் தன்கையா லவளை எடுத்துத் தேரில் வைத்துக்கொண்டு தன்னகரை நோக்கி இராமனுடன் திரும்பினான். திரும்பியகாலத்து வந்தெதிர்த்த

உருக்கிமியாதியரை அவமானப்படுத்தியோட்டித் துவரையடைந்து அவளை முதன்மனைவியாக மணம்புரிந்துகொண்டனன். இதனை—

"சேறுற்றநான்மூளரிசெம்முகநகைக்கும்
வீறுற்றதண்பணைவிதர்ப்பன்மகள்பைந்தேன்
ஊறுற்றமென்மொழியுருக்குமணிதன்னை
மாறற்றபொற்றிகிரிமாயன்மணமயர்ந்தான்" என்பதால் உணர்க.

ஹரி சத்தியபாமையை மணந்தது.

துவாபரயுகத்து, கண்ணனிருந்த காலத்திருந் திவ்வுலகாண்ட மன்னர்வகளிலொருவனான சத்திசித்து என்னுமோரரசன் இருந்தான். அவன் ஸ்ரீபானுமூர்த்தியை உபாசித்தான். அவரவனெதிரிற்றோன்றி நாராயணன் மார்பிலணிந்துள்ள நல்ல கவுத்துவம்போன்ற தன்மையானதாகியதும் ஸியமந்தமென்று பேருள்ளதுமான ஒருமணியையளித்து மறைந்தனர்; அதனை அவன் காதிற்றரித்திருந்தான். அம்மணியின்மீது பேரவாகொண்ட ஹரி அம்மன்னவனையடைந்து அம்மணியைக்கேட்டான். அதற்கவன் நீ என்னவளித்தாலும் நான் இதனை யளியேனென்றனன். பின்னர் கண்ணனதனை கேளாதுவிட்டனன். ஒருநாளம்மணியை அச்சத்திசித்தவின் தம்பியான பிரசேனனென்பவன் வாங்கித் தரித்துக்கொண்டு காட்டில் வேட்டைக்குச் சென்றான்; சென்றவிடத்தொரு சிங்கமவனைக்கொன்று அம்மணியையபகரித்தது. அச்சிங்கத்தை சாம்பவனென்னும் ஒருகரடி கொன்று அம்மணியைத் தானபகரித்த தன் குகைக்குட்சென்று தன்மகளின் றொட்டின்மீது விளையாட்டாகக் கட்டியது.

இவ்விஷயங்களொன்றையு முணராத சத்திரசித்து வேட்டைக்குச்சென்ற பிரசேனன் திரும்பிவராமையாலவனைக் கண்ணனே மணியாசையினாற் கொன்றானென்று தூற்றினான். அதனையுணர்ந்த கண்ணன் காட்டிற்குச்சென்று கரடியின் வீட்டுக்குள் நுழைந்து அக்கரடியுடன் ஒன்பதுதினம் வன்போர்புரிந்து அதனைவென்று மணியையபகரித்துத் திரும்பவந்து சத்திரசித்திற்கு நடந்தவற்றைக்கூறி மணியையளித்தான். உடனே அவன் கண்ணன்செய்த காரியத்தில் மகிழ்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வடைந்த மணியையும் தான்பெற்ற சத்தியபாமை யென்பவளையும் அவனுக்கு அளித்தான். கண்ணன் சத்தியபாமையை இரண்டாவது மனைவியாக விவாகமுகத்தா லங்கீகரித்துக் கொண்டு சமந்தகமணியை அவனிடமே அளித்தனன். இதனை—

"பிழைத்தனனென்றுவேந்தன்பிழைத்தவப்பிழைப்புத்தீர்ப்பான்
விழைத்தகுமணியினோடுவெண்டலைப்புணரிவேலை
தழைத்ததெள்ளமுதின்சாயற்சத்தியபாமைதன்னை
மழைப்புயலன்னமேனிவள்ளலுக்குதவினனே." என்னும் சுகபாகவதத்தாலுணர்க.

ஹரி காளிந்தியை மணம் புரிந்தது.

அருச்சுனனுடன் கண்ணன் ஒருகாலத்து யமுனைநதியின் கரையை யடைந்தான், அப்பொழுதங்கோர் பாரிசாத நிழலிலோ ரழகிய கன்னியொருத்தி நின்றனள், அவளைக்கண்ட கண்ணன் காமுற்று அருச்சுனனைக்கொண் டவளை யாதொன்று கேட்பித்தா னதற்கவள் யான் பானுபுத்திரி காளிந்தியென்று பேருள்ளவள் என்றாள். பின்னரும் பார்த்தன் நின்னபிப்பிராயம் என்னை என்றனன்; அதற்கவள் என்னபிப்பிராயம் கண்ணனுக்கு மனைவியாதலென்றாள், உடனே அருச்சுனன் அவளைக் கண்ணனொடு சேர்த்துத் துவாரகைக்கனுப்பினான். கண்ணனும் அவளை மூன்றாவது மனைவியாக மணம்புரிந்துகொண்டனன். இதனை—

"தெளிந்தவானொழுகுகங்கைத்திருநதிநீரமாந்தி
வளர்ந்தமந்தாரத்தம்பொன்மலர்மழையமரர்தூற்றக்
களங்கனிவண்ணத்தண்ணல்கற்பகக்கொழுந்துபோல
விளங்குகாளிந்திமன்றல்விதிபுரியியற்றினனே" என்னும் பாகவதத்தாலுணர்க.

கண்ணன் மித்திரவிந்தையை மணம் புரிந்தது.

கண்ணனுக் கத்தைமகளாக மித்திரவிந்தை யென்பவளொருத்தி யிருந்தனள். அவள் கண்ணனையே விரும்பினாள். இவள் தமை

யனாகிய அவந்திமன்னவ னிவளைத் துரியோதனனுக்குக் கொடுப்பதாகத் தீர்மானித்து அவனையுமழைத்தனன். இதனையுணர்ந்த கண்ணனங்குச்சென்று துரியோதனனெதிரிலேயே அம்மித்திரவிந்தையைப் பலாத்காரமாகக் கைப்பற்றினான். இதனைக்கண்ட துரியோதனன் எதுவும் பேசாது போய்விட்டான். கண்ணனவளைத் தன் நகரிற் கொண்டுவந்து நாலாவது மனைவியாக மணம்புரிந்தனன். இதனை—

"மருவுயிர்த்தலர்ந்தமாலைவாள்வசுதேவன்றன்னோ
டொருவயிற்றுதித்தநங்கையுயிர்த்தவள்வரிவண்டூத
விரையெடுத்தெறிபூங்கோதைமித்திரவிந்தையையும் [என்றும்,
திருவயிற்றொருபால்வைத்தசெம்மல்மேல்விழைதல்செய்தாள்." எ

"நடாக்கரும்பெழுதிநட்டநாகுவேயன்னமென்றோட்
படாக்களியிளமென்கொங்கைப்பவளவாய்மயிலனாளை
விடாக்களிச்சுரும்புண்கோதைவிதியினிற்புணர்ந்துவேட்டான்
கடாக்களிறழைப்பவந்தகாயழற்றிகிரிமாலோன்"என்றும் வரும் பாகவதச் செய்யுட்களாலுணர்க.

ஹரி சத்தியை மணந்தது.

கோசலநாட்டரசனாகிய நக்னசித்தென்பவன் தன் மகளாகிய சத்தியை என்பவளை தன்னால் விடப்படுகிற ஏழெருதுகளைத் தழுவினவர்களுக்குக் கொடுப்பதாகப் பிரஸ்தாபித்து ஏழுவிடைகளையும் நிறுத்தினான். இதனைக்கேட்ட வனேகம் மண்ணாளும் மன்னவர் பெண்ணாசையின் கொடுமையாலெய்தி யேறுதழுவச்சென் றங்கவீனர்களானார்களப்பொழுது கண்ணன் அருச்சுனனுடன் கோசல நாட்டையடைந்து இடபங்களைத் தழுவினான். அதுகண்ட மன்னவன் சந்தோஷத்துடன் தன்மகளை யவனுக்களித்தனன். அவனும் அவளை ஐந்தாவதுமனைவியாக மணஞ்செய்து அருச்சுனனுடன் திரும்பித் துவாரகையை நோக்கிச் செல்லுங்காற் பொறாமையினாலெய்திப் போர்புரிந்த மன்னவர்களை வென்று துவாரகையடைந்தனன். இதனை—

"திலகவெண்கவிகைமன்னவனுவந்துசெஞ்சிலைவளங்கொள்பொற்கோட்டு, மலைபகவிடிக்குமத்தமால்யானைமணிமருப்பொசித்தகார்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வண்ணற், கிலவிதழ்குலிகமூட்டிவைத்தன்னவின்னகைச்செய்யவாய்
க்கருங்கட், கலவமாமஞ்ஞைநடக்குமஞ்சாயற்கதிர்முலைக்கன்னியைக்
கொடுத்தான்'' என்றுரைக்கும் பாகவதச்செய்யுளாலுணர்க.

ஹரி பத்திரையை மணந்தது.

கேகயராஜனுக்கு மனைவியும் வசுதேவனுக்குத் தங்கையும் கண்ணனுக்கத்தையும் ஆகிய சுதகீர்த்தி யென்பவள் பெற்ற புத்திரியான பத்திரை யென்பவள் பேதைப்பருவத்திலேயே கண்ணனை வரனாகக் கருதினவளாக விருந்தனள். இவளபிப்பிராயத்தை யுணர்ந்த இவள் தமையன் கண்ணனைத் தனது நகரத்திற்கழைப்பித்து அவளையவனுக் களித்தனள். கண்ணனும் பத்திரையை ஆறுவது மனைவியாக மணந்தனன். இதனை—

"தழலும்வெஞ்சினவாட்படைவசுதேவன்றங்கைதண்டளிமுகில்வயிறு
கிழிபடநிவந்ததண்டலைவேலிக்கேகயநாட்டினுக்கிறைவன்
எழில்வளைக்கலம்புணர்சுதகீர்த்தியீன்றசெவ்வாய்ப்பசுங்கிள்ளை [ல்.
மழலையந்தீஞ்சொற்பத்திரைபூவைவண்ணன்மேற்காதல்கூர்ந்தனளா

என்றும்,

"பொன்னினரமரர்தூற்றப்புரிவளையலறமுந்நீர்
இன்னமுதனையசாயலேரிளமுலையினாளை
முன்னவனளித்தல்செய்தான்முழங்கழல்சான்றதாகக்
கன்னியந்துளவுசூடுங்கார்முகில்வண்ணற்கன்றே" எனும் பாகவதச்செய்யுட்களாலுணர்க.

ஹரி இலக்கணையை மணந்தது.

மத்திரநாட்டரசன் மகள் இலக்கணங்களையுடைய இலக்கணை, இவளை இவள் தந்தை தன்னாலமைக்கப்பட்ட வில்லை வளைத்து மச்சயந்திரத்தை அடித்தவர்களுக்கு இவள் மனைவியாகத் தகுந்தவளென்று மணமுறை யோலையை ஒவ்வொரு மன்னவர்களுக்கு மனுப்பினன். வந்த மன்னவர் கூட்டத்துள் எவனும் அந்தவில்லை வளைத்தானில்லை; கண்ணனே வளைத்தான். அதனால் இலக்கணை யவனுக்கு

மாலையிட்டனள். அவளுடன் துவாரகையடைந்து அவளை ஏழாவது மனைவியாக மணந்தனன். இதனை—

"அளவில்வெங்காதற்பவ்வத்தளறெழவழுந்தலுற்ற
இளமயிலன்னசாயலிலக்கணைமன்றலாற்றி
முளையிளமுல்லைமூரன்முருக்கிதழமுதந்துய்த்தான்
தளையவிழ்ந்தடைந்தோர்க்கீறிறனியின்புதருநந்தொல்லோன்"

என்னும் பாகவதத்தாலுணர்க.

கண்ணன் சாம்பவதியை மணந்தது.

சத்தியபாமையின் சிறிய தந்தையின்பொருட்டுச் சாம்பவனிடம் போர்புரிந்து மணியைப் பெற்றுக்கொண்டவுடனே அவன் தன்மகளான சாம்பவதியையும் கண்ணனுக்கு மனைவியாகவளித்தனன். அவளையுந் துவாரகைக்கு கொண்டுவந்து எட்டாவது மனைவியாக மணந்துகொண்டனன். இதனை—

"எண்கின்வேந்தளித்தசாம்பவதியெனுமிலவச்செவ்வாய்
பண்கனிமழலைத்தீஞ்சொற்படாமுலைப்பவளவல்லி
கண்கவர்மணியினோடுகொண்டகவிளங்கக்கொண்டு
மண்கவர்கமலத்தாள்வன்மாகடலென்னமீண்டான்" என்று

வரும் பாகவதச்செய்யுளாலுணர்க.

ஒருவன் அஷ்டமூர்த்திகளை யடைந்தானென்றது ஹரனை. அது அவ்வரன் அவ்வண்ண மஷ்டமூர்த்தியாக விருத்தலால்.

அஷ்டமூர்த்திகளாவார்.

சருவன், பவன், பசுபதி, ஈசானன், வீமன் உருத்திரன், மஹாதேவன், உக்கிரன் என்பவர்களாம்.

ஹரன் பிருதிவியைச் சரீரமாகக்கொண்டு தான் சரீரியாக நின்ற வவதாரத்தைச் சருவன் என்றும், அப்புவைச் சரீரமாகக்கொண்டு தான் சரீரியாகநின்ற வவதாரத்தைப் பவன் என்றும், அக்கினியைச் சரீரமாகக்கொண்டு தான் சரீரியாகநின்ற வவதாரத்தைப் பசுபதி என்றும், வாயுவைச் சரீரமாகக்கொண்டு தான் சரீரியாகநின்ற வவதாரத்தை ஈசானன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்றும், ஆகாயத்தைச் சரீரமாகக்கொண்டு தான் சரீரியாகநின்ற வவதாத்து வீமன் என்றும், சூரியனைச் சரீரமாகக்கொண்டு தான் சரீரியாகநின்ற வவதாத்து உருத்திரன் என்றும், சந்திரனைச் சரீரமாகக்கொண்டு தான் சரீரியாகநின்ற வவதாத்து மகாதேவன் என்றும, ஜீவனை அல்லது யஜ்வாவைச் சரீரமாகக்கொண்டு தான் சரீரியாகநின்ற வவதாத்து உக்கிரன் என்றும் பெயர்பெற்று நிற்கின்றானெனக் கேட்கப்படுதலால், ஹரன் எட்டுமூர்த்திகளை யடைகின்றான் என்பது பெறப்பட்டது. இதனை—

“ விரியப்படைப்பாயெனவோடும்விழைந்தமலரோன்பேசற்றவான்
மருவுமணஞ்சேர்ந்தகன்றவிரிமண்ணினுநவாஞ்சருவனு
யிரதமன்னித்தெண்ணீரினுநவாயுறைபுமெழிற்பவனாய்
உருவம்பொருந்திக்கனல்வடிவாயுற்றேயுறையுட்பசுபதியாய்.
ஊருயுலவையுருவாகியொழியாதுறையீசானனாய்
ஆறுவொலியாய்வெளியுருவாயமர்ந்தேயுறையும்வீமனாய்
வீறுமொளிசேர்ந்திரவியுருமேவியுறையுமுருத்திரனாய்
மாறுத்திணைநீரமுதாகிமதியாயுறைமாதேவனாய்.
உரைத்தற்கரியவியமானனுநவாய்த்தோன்றுமுக்கிரனாய்
விரித்தற்குரியனாய்வேறாய்விளம்பலாகாத்தனிமுதலாய்த்
திருத்துமறிவாலறிபொருளேசெழுஞ்சேவடிப்போதென்றலைமே
விருத்தியான்வாயெனப்பரவிபிறைஞ்சிப்படைக்கலுற்றனனால் ”

என்று கூறப்படுகிற வாயுசங்கிதையாலுணர்க.

தாத்பரியம்.

ஹரி அஷ்டமகிஷிகளை யடைந்தவன், ஹரன் அஷ்டமூர்த்தங்களை அடைந்தவனென்பதாம்.

தாரதம்மியம்.

① ஸாமான்யமான எட்டுப்பெண்களை இஷ்ட அநிஷ்டங்களுடன் கைப்பற்றிய ஹரியினும், சிறந்த அஷ்டமூர்த்தங்களையடைந்த ஹரன் சிறந்தவனென்னத் தடையென்னை? ஹரனுடைய அஷ்டமூர்த்திகளையன்றி உலகே இல்லை. ஆனால், விதந்தெதென்னையோ கூறுவது. ஆத

① ருக்மணி, சத்யபாமா, காளிந்தி, மித்ரவிந்தை, சத்தி, பத்திரை இலக்கணை, ஜாம்பவதி எனும்

② சிவன், பவன், பசுபதி, ஈசானன், வீமன், உருத்திரன், மகாதேவன், உக்கிரன் எனும்

லால், நாங்கள் இவ்விஷயத்தில் தாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாகத்தள்ளிச் சிரேஷ்டனான ஹரனை ஆஶ்ரயிக்கின்றோம். (௧௫)

𑌏𑌕𑍋 𑌲𑍁𑌠𑌤𑍍𑌯𑌨𑍁𑌦𑌿𑌨𑌂 𑌯𑌮𑍁𑌨𑌾𑌜𑌲𑍌
𑌘𑍇𑌷𑍍𑌵𑌨𑍍𑌯𑍋 𑌦𑌧𑌾𑌤𑌿 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌮𑌹𑌤𑍀𑌂𑌚 𑌗𑌙𑍍𑌗𑌾𑌮𑍍 ।
𑌕𑍋 𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾
𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌵𑌨𑍍𑌤𑍁 𑌤𑌮𑌿𑌮𑌂 𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃 ॥

ஏகோ லுடத்யநுதிநம்யமுநாஜலௌகேஷ்வந்யோ ததாதிஶிரஸா மஹதீஞ்சகங்காம் கோவாநயோரதிகஇத்யநுசிந்த்யவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

கல்லாக் கயவருள்ளமெனக் கறுத்த யமுனை நீர்ப்பெருக்கி
லுல்லாசத்தோடுழந்ததனி லுநண்டானொருவ னற்றொருவன்
வில்லார் கங்கை தனைத்தரித்து விளங்காநின்றா னிவரிலுயர்க்
கில்லார் தம்மை யிவரென்ன விசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
அநுதிநம்	எப்பொழுதும்
யமுநாஜலௌகேஷு	யமுனாஜலப்பெருக்குகளில்
லுடதி	புரளுகின்றான்,
அந்ய:து	இன்னொருவனால்
ஶிரஸா	தலையினாலே
மஹதீம்	பெரிதான
கங்காம்	கங்கையை
ததாதி	தரித்துக்கொண்டிருக்கின்றான்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	எவன்?

Center for Shaiva Studies, Pondicherry Collection

இதி	இதனை
அநுசிந்த்யா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் பிரவாகமான யமுனையாற்றுநீரிலே விழுந்து புரளுகின்றான், மற்றொருவன் மகத்தான கங்கையை யணிந்துகொண்டிருக்கின்றான்; இவருக்குட்சிறந்தவனை இன்னவனென்று பெரியவர்களே நீங்களுரைத்தால் நாங்கள்ந்தமஹாபுருஷனை ஆஶ்ரயிக்கின்றோம்.

விசேடம்.

ஒருவன் யமுனையாற்று நீர்ப்பெருக்கிற் புரளுகின்றானென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணம் புரளுதலால். இதனை—

"மாயனை மன்னுவடமதுரைமைந்தனைத்
தூயபெருநீர்யமுனைத்துறைவனை" என்ற நாலாயிரப்பிரபந்தத்தும்,

"அளக்குமண்ணுலகருந்திவெண்ணெயுணவாயர்பாடிவளர்செங்கணான்,தொளைக்கைமால்களிறுபோலநின்றுதனிதுளையவெம்பியெழுவாளரா, வளைத்துவால்கொடுநெடும்பணுடவியின்வள்ளன்மேனியை மறைக்குபு, முளைத்தநாண்மதிமருட்டும்வாலெயிறுமூழ்குறும்படிகடித்ததால்" என்ற பாகவதத்தும் வருதலைக்கொண்டுணர்க.

ஒருவன் கங்கையைத் தலையிற் றரித்திருக்கின்றானென்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ணந் தரித்திருத்தலால்.

முன்னொருகாலத்தி லுமாதேவியுஞ் சங்கரனும் ஒருவிதானநிழலிலிருந்து அன்யோன்னிய ஸல்லாபாலாபங்களாற் குதூகலிக்கின்ற சமயத்தி லம்பிகை தன் கணவனிருவிழிகளையும் பொத்தினாள்; அதனால் உலகமிருளடைதலையுணர்ந்த உமாகாந்தன் நெற்றிக்கண்ணைத் திறந்து உலக மொளியுடையதாக வியற்றினன். பின்னர் நாணமுற்ற நாராயணி, நாமென் செய்தோமென மூடியவத்தங்களை விரைவிலெடுத்தனள். உடனே அக்கரங்களினின்றும் பத்து நீர்த்துளிகள் கீழே சிந்தின; அவை அதிக பிரவாகமாய் உலகனைத்தையும் மூடின; இதனாற் கஷ்டமடைந்த தேவர்கள் பிறைபணி மவுலிப் பெருந்தகையையடைந்து, பிரவாகத்தை மாற்றவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். ஈசனவர்களின் வேண்டுகோளுக்கிரங்கி, அப்பிரவாக கங்கையைத் தன் சடையிலணிந்துகொண்டனன். இதனை—

"மலைமகளையொருபாகம்வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தாலவன்சடையிற் பாய்ந்தாளென்னேடி
சலமுகத்தாலவன்சடையிற் பாய்ந்தளேற்றரணியெல்லாம்
பிலமுகத்தேபுகப்பாய்ந்துபெருங்கேடாஞ்சாழலோ" என்றுதமிழ்வேதத்தும்,

ஸம்ஹ்ருஷ்டஹ்ருதயாம் க்ருஷ்ணாம் [illegible] ।
ஜ்யாயாம்ஸொ [illegible] என்று

ஸ்காந்தபுராணத்தும் வருதலைக்கொண்டுணர்க.

தாத்பர்யம்.

ஹரி யமுனையாற்றின் முழுகுவான், ஹரன் கங்கையைத் தலையிலணிந்தான் என்பதாம்.

தாரதம்மியம்.

கங்கையினும் யமுனை தாழ்ந்ததாதலால், பிரவாகமான யமுனை நீரிற்கிடந்து புரளுபவனைவிட, கங்கையைத் தலையிலே வைத்திருப்பவன் இந்த விஷயத்திற் சிறந்தவனே. ஆதலால், இவ்விஷயத்தில் தாழ்வடைந்த ஹரியை நாங்களப்பிரதானமானவனென்று ஒதுக்கி இவ்விஷயத்திற் பிரதானமடைந்த ஹரனை ஆஶ்ரயிக்கின்றோம். (௧௬)

[illegible] ।

கோவா நயோரதிக இத்யநுசிந்த்ய வ்ருத்தா:
ஸத்யம் ப்ருவந்து தமிமம் வயமாஸ்ரயாம:॥

ஏகஸ்ஸுவர்ணவஸநந்நித்தாதி கட்யாமந்யஸ்ஸுவர்ணகிரிசாபமதாத்கராக்ரே| கோவாநயோரதிக இத்யநுசிந்த்யவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஸ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

பொன்னை யுருக்கிச் சாய்த்தடித்துப் பொருத்து மியல்ப தாகுமிஃ
தென்ன விசைக்கும் பீதவுடை யிடையனொருவ னெழி லொருவன்
பொன்னின்மலையை வில்லாகப் பொருந்தக்கரத்திற் பிடித்துள்ளான்
என்று மிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
கட்யாம்	அரையில்
ஸுவர்ணவஸநம்	பொன்மயமான வஸ்திரத்தை
நிததாதி	தரிக்கின்றான்,
அந்ய:	மற்றொருவன்
கராக்ரே	கை நுனியில்
ஸுவர்ணகிரிசாபம்	பொன்மலையாகிய வில்லை
அதாத்	பிடித்தான்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்த்ய	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்,
தமிமம்	அந்த இவனை

வயம்	நாங்கள்.
ஆஸ்ரயாம:	ஆஸ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் பீதாம்பரத்தை இடையிலணிந்திருக்கின்றான், இன்னொருவன் பொன்மலையை வில்லாகக் கையிற் பிடித்திருக்கின்றான்; இவ்விருவருக்குள் சிறந்தவனைப் பெரியவர்காள் நீவிர் கூறினால், நாங்கள் உங்களால் உண்மையாக உரைக்கப்பட்ட மஹாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

விசேடம்.

ஒருவன் பீதவாடையைத் தரித்திருக்கின்றானென்றது - ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணந் தரித்திருத்தலால். இதனை—

வீதாம்பரோ வ்யுதக: என்றுரைக்கும் அமரகோசத்தாலும்,

"சூதாம்பரஞ்செயலென்றுசனன்சொல்லவு
மீதாம்பரிசென்றுணர்மாவலியீந்துவப்பப்
பாதாம்புயம்பாருயர்வானிற்பரந்தவந்நாட்
பீதாம்பரமல்கியபேரொளிவாழிவாழி" என்ற ஸ்ரீமஹாபாகவதத்தாலும் உணர்க.

ஒருவன் கைநுனியாற் பொன்மலையான வில்லினைப் பிடித்துக் கொண்டிருக்கின்றான் என்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ணம் பிடித்திருத்தலால். இதனை—

"திருநெடுமாலிந்திரனயன்வானோர்திருக்கடைக்காவலினெருக்கிப்
பெருமுடிமோதியுகுமணிமுன்றிற்பிறங்கியபெரும்பற்றப்புலியூர்ச்
செருநெடுமேருவில்லின்முப்புரந்தீவிரித்தசிற்றம்பலக்கூத்த
கருவடிகுழைக்காதமலசெங்கமலமலர்முகங்கலந்ததென்கருத்தே"
என்று திருவிசைப்பாவிலும்,

"பொன்மலை வில்லி" என்று பாகவதத்தும்.

"பரிந்துதற்பதங்குறுகினர்பழையதீவினைபோ
லெரிந்துமுப்புரம்பொடிபடவிழுந்திடாதுயிர்கொள்

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

டிருந்தவப்பெருங்கொடியனாயெம்பிரான்கண்டு
பொருந்துபொற்சிலைவாங்கினன்சிலீமுகம்பூட்டி" என்று கூவ புராணத்திலும் வருதலைக்கொண்டுணர்க.

தாத்பர்யம்.

ஹரி பொன்னுடையுடையவன், ஹரன் பொன்மலையாகிய வில்லினையுடையவன் என்பதாம்.

தாரதம்மியம்.

கொஞ்சம் பொன்னினாலாகிய வோராடையை இடையிலணிந்தவனைக்காட்டிலும், பெரியபொன்மலையைக் கைநுனியிற் பிடித்திருக்கின்றவன் பொன்னின்விஷயத்திற் சிறந்தவனென்பது ஸ்பஷ்டம். "இதனெல்லையோசனையோ ரிலக்கமாகு மிதற்கு நடுப்பொற்பிறங்கல்" என்று பாரதத்தும், [illegible] என்று அமரத்திலும் கேட்கப்படுதலால், மகாமேருமலை பொன்னுருவமான மலையென்று கேட்கப்படுகின்றது. இதனால் ஒருபெரியபொன்வஸ்திரத்தைவிட மிகவும் பெரிய பொன்மலையே ஒருவனிடத்திலிருந்தால் அவனை பொன்னின் விஷயத்திலெவன்தான் இழித்துக்கூறுவான். இவ்விஷயத்தில் தாழ்வடைந்த ஹரியை குறைந்த பொன்னுடையவனாகக்கருதி அப்பிரதானமாக்கி மிகுந்த பொன்மலையினையுடைய ஹரனை நாங்கள் சரணமாக வடைகின்றோம். (கஎ)

ஏகோ(அ)ததௌ ஶிரஸி பர்ஹிணபிஞ்சமாத்ரம்
அந்யோ மயூரவரவாஹநபுத்ரத்ருஷ்டி:।
கோவாநயோரதிக இத்யநுசிந்த்ய வ்ருத்தா:
ஸத்யம் ப்ருவந்து தமிமம் வயமாஶ்ரயாம:॥

ஏகோதெதௌஶிரஸிபர்ஹிணபிஞ்சமாத்ரமந்யோமயூரவரவாகந புத்ரத்ருஷ்டி: । கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம் ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

எம்மா தென்னக் கண்டவர்க ளிசைக்கு மயிலின் றோகை தனைத்
தம்மோர் தலையின் மீதணிந்து தயங்கு மொருவன் றவிரொருவன்
அம்மா மயிலை வாகனமா வடைந்த மகன்மே லார்விழியான்
இம்மா னவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
ஶிரஸி	தலையில்
பர்ஹிணபிஞ்சமாத்ரம்	மயிலினொருதோகையையே
ததௌ	தரித்தான்,
அந்ய:	இன்னொருவன்
மயூரவரவாஹந	சிறந்த மயிலை வாகனமாகவுடைய
புத்ரத்ருஷ்டி	பிள்ளையினிடத்திற் பார்வையுள்ளவன்;
அநயோ:	இவ்விருவருள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்திய	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் தன் றலையி லொரு மயிலிறகை வைத்திருக்கின்றான், இன்னொருவன் மயிலை வாகனமாகவுடைய பிள்ளையைப்பார்த்து மகிழ்கின்றான்; இவ்விருவருக்குட் சிறந்தவனை நீங்கள் சொன்னால் நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக வடைகின்றோம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விதப்பு.

ஒருவன் மயிலிறகைத் தரித்தானென்றது-அரியை, அது அவ்வரி அவ்வண்ண மணிந்திருத்தலால். இடையர்கள் முன்காலத்திற் சிரோபூஷணமாக மயிற்றழையையணிவது வழக்கம். ஹரியுங் கண்ணவதாரத்தி லவ்வண்ணமணிந்தனன். இதனை—

"சிந்துரப்பொடிக்கொண்டுசென்னியப்பித்திருநாமமிட்டங்கோரிலையந்தன்னால், அந்தரமின்றித்தன்னெறிபங்கியை யழகியநேத்திரத்தாலணிந்து,இந்திரன்போல்வருமாயப்பிள்ளையெதிர்நின்றங்கினவளையிழவேலென்னச், சந்தியில்நின்றுகண்டீர்நங்கைதன்துகிலொடுசரிவளைகழல்கின்றதே" என்றும்,

"சாலப்பன்னிரைப்பின்னேதழைக்காவின்கீழ்" என்றும் நாலாயிரப்பிரபந்தத்தும்,

"தழைதவழ்ந்தபூந்தாதவிழ்தாழிருங்கூந்தற்
குழைதவழ்ந்தகட்டேவகிபச்சிளங்குழவி
இழைதவழ்ந்தபேரொளிக்கதிர்மின்னெனவிமைப்ப
மழைதவழ்ந்தெனமருதிடைத்தவழ்ந்தனன்மன்னோ" என்று பாகவதத்தும்,

"பரிபுரங்கள்பாதமிசைக்கதிரைக்காட்டப்பசும்பொன்னினுடையுடைதிகழ்த்துய்ய, தாளவடமொடுதாமந்திவளக்காதிற்றயங்கியகுண்டலமலையப்பிலிப்பின்னல், சிரமிசையிற்கவினுறவேகேயூரங்கடிரண்டுபுயமிசையினெழிலைக்காட்டக், கரமிசையின்வயிரமணிக்கடகமின்னக்கந்தர்ப்பனெனக்கழைகோடுதினனால்" என்று ஸ்ரீநாரதபாகவதத்தும் வருதலைக்கொண்டுணர்க.

ஒருவன் மயிலை வாகனமாகவுடைய பிள்ளையைப் பார்த்துக்கொண்டிருக்கின்றானென்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ணம் பார்த்துக்கொண்டிருத்தலால். இதனை—

"எண்காரும்புனக்குறவர்தமக்குறவனெனவணுகியேனல்காத்துத்
தண்சாருஞ்சைவலமுமனையகுழல்வள்ளிதனந்தழுவுகோவை

வெண்காட்டன்றிருமகனைமயிலோனையமரர்சிறைவிடுத்தவேளைக்
கண்காணப்பரவினர்தம் பிறவியெனும்பெருஞ்சிறையைக் கடப்பர்
தாமே" என்று திருவெண்காட்டுப்புராணத்தும்,

"அறிவிரீண்டுமோயவலங்கறிவிற்றாழ்ந்தோர்
செறிவகன்றயாக்கைச்செருத்தேருகைப்போ
னுறங்லியின்வையமுடற்றுதகளூர்ந்த
வெறழ்மிகுந்தார்நாற்கோட்டிபப்பாகன்போலும்
எழிற்கலவமஞ்ஞையினிதுகைத்தான்போலும்" என்று தணிகைப்புராணத்தும் வருதலைக்கொண்டு, ஹரன் மகன் மயில்வாகனனென்றுணர்க.

தாத்பரியம்.

ஹரி ஒருமயிலிறகைத் தலையிலணிந்திருக்கின்றான், ஹரன் மகன் ஒருமயிலையே வாகனமாக உடையவனாக இருக்கின்றான் என்பதாம்.

தாரதம்மியம்.

ஒருமயிற்பீலியைத் தலையின்மீது வைத்துக்கொண்டிருப்பவனிலும் அநேக தோகைகளையுடைய மயிலினை வாகனமாகவுடைய பிள்ளையைப்பார்த்து மகிழ்பவன் சிறந்தவனேயாம். ஹரி, மயிலிறைகைத்தலையிற் றரித்திருக்கின்றான்; ஹரன் மகன் அம்மயிலையே வாகனமாகச் செய்திருக்கின்றான். ஒருபொருளைத் தலையிற் சுமப்பவனையும் அதேபொருளை வாகனமாக்கினவனையுங் கருதினும், வாகனமாகக்கொண்டவனே சிறந்தவனாகின்றான். இதனால் மயிலிறகைத் தலையிற் பூஷணமாக வணிந்த ஹரியையும், மயிலினை வாகனமாகவுடைய பிள்ளையினையுடைய ஹரனையும் சீர்தூக்கி ஆராயுங்கால், மயிற்பீலியைச் சிரோபூஷணமாகக்கொண்ட ஹரி தாழ்ந்தவனும், தன்மகனுக்கோர் மயிலை வாகனமாகச்செய்து அதனைப்பார்த்து மகிழுகிற ஹரன் சிறந்தவனும் ஆகின்றார்கள்; ஆதலால் நாங்கள் இவ்விஷயத்திற் றாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாகவொதுக்கி இவ்விஷயத்தி லுயர்வடைந்த ஹரனைச் சிறந்தபொருளாகக்கொண்டு அவ்வரனை ஆஸ்ரயிக்கின்றோம். (கஅ)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஏகோ ததாதி ஹ்ருதி கௌஸ்துபரத்நமேகம்
அந்ய: ஸஹஸ்ரஸபணாமணிரத்நஹாரம்।
கோவாநயோரதிக இத்யநுசிந்த்ய வ்ருத்தா:
ஸத்யம் ப்ருவந்து தமிமம் வயமாஸ்ரயாம: ॥

ஏகோததாதிஹ்ருதிகௌஸ்துபரத்நமேகமந்யஸ்ஸஹஸ்ரஸபணாமணிரத்நஹாரம்| கோவாநயோரதிகஇத்யநுசிந்த்யவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஸ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

நீலம் பூத்த தெனவொளிகொ ணிமல மணியை யெழின்மார்பங்
கோலம் பூப்ப வணிந்தொருவன் குலவா நின்முன் மற்றெருவன்
ஆலம் பூத்த மணிச்சேட வார ணிவரு ளகிலத்தி
லேலுஞ் சீர்த்தி பரன்யாவ னிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
ஹ்ருதி	மார்பில்
ஏகம்	ஒரு
கௌஸ்துபரத்நம்	கௌஸ்துபமென்னு மணியை
ததாதி	தரிக்கின்முன்,
அந்ய:	மற்றொருவன்
ஸஹஸ்ரபணாமணிரத்நஹாரம்	ஆயிரம் பணாமணிகளையுடைய அரதன வாரத்தை
ததாதி	தரிக்கின்முன்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஸ்ரயாம:	ஆஸ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

பெரியவர்காள்! ஒருவன் ஒரு கௌஸ்துபமணியை மார்பில் தரித்திருக்கின்முன், இன்னொருவன் ஆயிரம் பணாமணிகளுடைய ரத்ந ஆரத்தைத் தரித்திருக்கின்முன்; இவர்களிற் சிறந்தவனை நீங்கள் உண்மையாகக் கூறினால், நாங்க ளந்த மகாபுருஷனைச் சரணமாக வடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் ஒரு கௌஸ்துபமணியைத் தரித்திருக்கின்முன் என் றது-ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணங் கௌஸ்துபமணியைத் தரித்திருத்தலால். இதனை—

கௌஸ்துபஸ்யோமணிர்திவ்ய ப்ருதஸ்ஸ்வஸ்தநோ ந யஸ்ய தவஸம்பவ:।
ஸ்ரீவத்ஸவக்ஷா ஸ்ரீமாநு நாராயண உரோமத:॥ என்று ஸ்ரீமகா பாரதத்திலும்,

"வெருவுமாலமும்பிறையும்வெவ்விடையவற்கீந்து
தருவும்வேறுளதகைகளுஞ்சதமகற்கருளி
மருவுதொல்பெருவளங்களும்வேறுறவழங்கித்
திருவுமாரமுமணிந்தனன்சீதரமூர்த்தி" என்று கம்பராமாயணத் திலும் வருதலைக்கொண்டுணர்க.

ஒருவன் ஆயிரம்பணாமணிகளையுடைய அரதனவாரத்தைத் தரித் திருக்கின்முன் என்றது - ஹரனை, அது ஹரன் அவ்வாறு தரித்திரு த்தலால். இதனை—

" கணம்விரிகுடமிச்செம்மணிக்கவைநாக்
கறையணற்கட்செவிப்பகுவாய்ப்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பணம்விரிதுத்திப்பொறிகொள்வெள்ளெயிற்றுப்
பாம்பணிபரமர்தங்கோயின்
மணம்விரிதருதேமாம்பொழின்மொழுப்பின்
மழைதவழ்வளரிளங்கமுகந்
திணர்நிரையரும்புபெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்திருச்சிற்றம்பலமே" என்று திருவிசைப்பாவிலும்,

"பன்னகங்களையணியெனத்தாங்கினன்பன்னகாபரணன்ற
னின்னருட்பெறுமதனிகையான்மற்றவையெந்தைபால்ரியோடுந்
தன்னுவெம்பகைக்கலுழனை நோக்கியேசுகங்கொலென்றஞ்சாமே
பன்னிமேன்மையின் விஞபினவிம்மொழிபாலொலாமேடுத்தோதும்"

என்று ஸ்ரீ காஞ்சிப்புராணத்தும் வருதலால், ஹரன் அநேகபடங்களையுடைய சர்ப்ப ஆரத்தை தரித்தவனென்று அறியப்படுகின்றான். ஆதிசேஷன் முதலிய சர்ப்பராஜர்கள் சுடிகாமணிகளை யுடையவர்களென்று அனைவர்களு மறிந்திருக்கின்றார்கள்.

தாத்பரியம்.

ஹரி ஒரு கௌஸ்துபமணியையுடையவன், ஹரன் ஆயிரமணிகளையுடைய ஆதிசேஷ ஆரத்தையுடையவன் என்பதாம்.

தாரதம்மியம்.

ஒருமணியினை மார்பினிற் றரித்திருப்பவனைவிட ஆயிரமணிகளைத் தரித்திருப்பன் அந்த விஷயத்திற் சிறந்தவனேயாவன்; இது நிற்க, அது ஜீவமணிகளாக விருந்தா லின்னம் விசேஷமேயாம். இவ்வுலகத்தில் நாகரத்தினத்திற்கு இருக்கு மகிமை இவ்வளவினதென்று கூறுதற்கியாவன் வல்லவன். சாமானிய நாகத்தின்மணிக்கே அத்தகைய சிறப்பிருக்குமானால், சர்ப்பங்களுக்கெல்லா மரசனான ஆதிசேஷனுடைய மணிக்கிருக்கும் பெருமை இத்தகையதென்று கூற வியலாது. கேவலம் ஒரே ஒருகௌஸ்துபமணியை அணிந்திருக்கின்ற மார்பினையுடைய ஹரியைவிடச் சிறந்த ஆயிரம்பணாமணிகளையுடைய

சேஷஹாரத்தைத்தரித்த ஹரன் சிறந்தவனென்று நியாயமுகத்தால் அறியப்படுகின்றான்; ஆதலால் இவ்விஷயத்தில் தாழ்வடைந்த ஹரியை நாங்கள் அப்பிரதான வஸ்துவாக வொதுக்கிச் சிறந்த ஹரனாகிய மகாபுருஷனைச் சரணமாக வடைகின்றோம். (கக)

𑌏𑌕𑌃 𑌕𑌰𑍇𑌣 𑌧𑍃𑌤𑌵𑌾𑌨𑌿𑌹 𑌪𑌾𑌞𑍍𑌚𑌜𑌨𑍍𑌯
𑌮𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌦𑌤𑍍𑌤 𑌬𑌹𑍁𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍃𑌜𑌾𑌂 𑌕𑌪𑌾𑌲𑌾𑌨𑍍।
𑌕𑍋 𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾
𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌂 𑌧𑍍𑌰𑍁𑌵𑌂 𑌤𑌮𑌿𑌮𑌂 𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏக: கரேண த்ருதவாநிஹ பாஞ்சஜந்யமந்யஸ்த்வதத்தபஹுவிஶ்வஸ்ருஜாம்கபாலாந்। கோவாநயோரதிக இத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

நீரார் பாஞ்ச சன்னியப்பேர் நிலவி யிலங்கு சங்கத்தைச்
சீரார் கரத்தி லிஞ்ஞான்று சேர்த்தா னொருவன் மற்றொருவன்
ஆரார் மார்பிற் பிரமர்தலை யனேக மணிந்து நிற்கின்றான்
ஏரா ரிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
கரேண	கையினாலே
இஹ	இப்பொழுது
பாஞ்சஜந்யம்	பாஞ்சஜன்யத்தை
த்ருதவாந்	தரித்தான்,
அந்ய: து	இன்னொருவனானால்
பஹூ	அநேகமான
விஶ்வஸ்ருஜாம்	பிரமர்களுடைய
கபாலாந்	மண்டையோடுகளை
தத்த	தரித்தான்;

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன் ?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்தியா	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் இப்பொழுது பாஞ்சஜன்னியத்தை தரித்துக்கொண்டிருக்கின்றான், இன்னொருவன் அநேக பிரமகபாலங்களைத் தரித்துக் கொண்டிருக்கின்றான்; இவ்விருவரில் சிறந்தவனிவனென்று பெரியவராகிய நீங்கள் கூறினால், நாங்க ளந்த மஹாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் பாஞ்சஜன்யத்தைத் தரித்திருக்கின்றானென்றது-ஹரியை, அது அப்பாஞ்சஜன்யத்தை யவ்வரி தரித்ததிருத்தலால்.

அதுவும் கழிந்த துவாபரயுகத்தின் கடைசியிலாதலால், இப்பொழுதென்று சமீபகாலம் குறித்துரைக்கப்பட்டது. ஹரி தனது கண்ணுவதாரத்தில் அவந்திநாட்டிலிருந்த சாந்தீபமுனிவனிடத்து வேதாகமாதிகலைகளைக் கற்றுணர்ந்து தங்குரவனை வணங்கி அடியேன் நும்மாட்டுக்கற்ற கல்விக்குத் தக்கணை யென்னையென்று கேட்டதற்கு அம்முனி தனது மனைவியுட னாலோசித்துக் கண்ண! எமக்கு நீயருளும் தக்கணை கடலாட்டி லிறந்த எம்மகனை அழைத் தெமக்கு கொடுத்தல் என்றனன். உடனே ஹரி கடற்கரையையடைந்து வருணனை யழைத்து என் குரவன் மகனைக் கொன்றவன் யாவனென்று கேட்டனன். அதற்கவ்வருணன் யானறியேன்; இக்கடலுள் வாழும் பாஞ்சஜனனாகவிருக்கலாம் என்றனன். பின்னர் கண்ணன் கடலிலிருந்த பாஞ்சஜனனைத் தேடிக்கண்டு அவனோடு போர்புரிந்து அவன் மார்பைப்பிளந்து அவன் வயிற்றுக்குளிருந்த பாஞ்சஜன்னியமென்னும் சங்கத்தையெடுத்து அண்டமதிர ஊதினன். உடனே எமன் குருமகனை அளித்தனன். அளித்தவனைக் குருவினிடங் கொடுத்துத் தன்னிடத்திற்குச் சென்றனன். இதனை—

“ வஞ்சம்படைத்துமறிவெண்டிரைவேலையூடு
துஞ்சுந்திறல்வாளவுணன்றனைச்சூழ்ந்துபற்றி
நெஞ்சம்பிளந்துநிலவுக்கதிர்ச்சங்குகொண்டான்
கஞ்சங்கருக்குங்கருணைத்தடங்கண்ணன்மாதோ” என்று சுக

பாகவதத்தும்,

“ பரவையினெய்திப்பஞ்சசனனைச்செற்றகன்றபாரின்
மருதிறவுதைத்தகோமான்மற்றவன்வயிற்றைப்போழ்ந்தே
யிரவியினவிர்கொண்டோங்குபாஞ்சசன்னியத்தையோரார்
கரதலம்பற்றியண்டங்கலங்கிடவூதினனால்” என்று நாரத பா

கவதத்தும் வருதலாலுணர்க.

ஒருவன் அநேக பிரமர்களுடைய மண்டையோடுகளைத் தரித்திருக்கின்றான் என்றது - ஹரனை, அது அவ்வரன் அவ்வாறணிந்திருத்தலால்.

ஹரன் பிரமாதிகளிறக்கும் பிரளயங்களாகிய மஹா பிரளயங்களில் ஒவ்வொரு பிரமர்களையும் சுட்டெரித்து அவர்களின் மண்டையோடுகளைத் தரித்திருக்கின்றான். இதனை—

“ ஒள்ளொளிப்பிரமசிரசினுங்கனையான்மகேச்சுரனுலப்பினாளமரும்
எள்ளருந்தேவர்தானவர்யாருமிறப்பவோர்கணத்தினிலெரித்துத்
தள்ளரும்பிரமர்தலையொடென்பணிந்துசங்கரிகண்டுகண்களிப்ப
வள்ளிலைச்சூலவேறிரித்தினி தினனந்நடம்புரிந்திடுவான்” என்று

கூர்மபுராணத்தும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

ஸ்ரீஹரிவிஷ்ணுகவாடாவ்ருஜயகிங்கிணிகாம்ஹ்ரிக: என்று ஸ்காந்தபுராணத்தும் வருதலைக்கொண்டுணர்க.

தாத்பரியம்.

ஹரி பாஞ்சஜன்னியமென்னும் ஒரு சங்கத்தைத் தரித்திருக்கின்றான், ஹரன் அநேக பிரமகபாலங்களைத் தரித்திருக்கின்றானென்பதாம்.

தாரதம்மியம்.

ஒரு பாஞ்சஜன்னியமென்னும் சங்கவோட்டினையுடைய ஹரியைவிட அநேக பிரமர்களின் மண்டையோடுகளையுடைய ஹரன் சிறந்தவனேயாம்; ஆதலா லிவ்விஷயத்திற் றாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக வொதுக்கி பிரதானமான ஹரனை நாங்கள் அடைந்து ஆஸ்ரயிக்கின்றோம். (உ௦)

𑌏𑌕𑍋 𑌵𑍍𑌰𑌜𑍇𑌷𑍁 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌮𑍃𑌦𑍁𑌵𑍇𑌣𑍁𑌨𑌾𑌦-
𑌮𑌨𑍍𑌯𑍋 𑌲𑌯𑍇𑌷𑍁 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌵𑌿𑌕𑌟𑌾𑌟𑍍𑌟𑌹𑌾𑌸𑌮𑍍 ।
𑌕𑍋 𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾-
𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁 𑌤𑌮𑌿𑌮𑌂 𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃 ॥

ஏகோவ்ருஜேஷுகுருதேமிருதுவேணுநாதமந்யோலயேஷுகுருதேவிகடாட்டஹாஸம் கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்தியம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம: ॥

மொழிபெயர்ப்பு.

குரங்கு மடிகொள் சுரபிபுறங் குடில்க டோறுஞ் சென்றெப்தி
யிரங்கு தொனியார் சிங்குழலை யிசைத்தா னொருவ னின்னொருவ
னரங்கு மியலை யுலகடைய வட்ட காசம் புரிகின்றா
னிரங்கு மியலிற் சிறந்தவன்பா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
வ்ரஜேஷு	மாட்டுக்கொட்டாய்களில்-தொழுவுகளில்
ம்ருது	மிருதுவான
வேணு	மூங்கிற்குழலாலாகிய
நாதம்	இசையை
குருதே	செய்கின்றான்,
அந்ய:	இன்னொருவன்
லயேஷு	பிரளயகாலத்தில்
விகடாட்டஹாஸம்	பயங்கரமான அட்டகாசத்தை
குருதே	செய்கின்றான்;
அநயோ:	இவ்விருவருள்.
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்தியா	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஸ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் மாட்டுக்கொட்டில்களில் மெல்லிய வேய்ங்குழலிசையைச் செய்கின்றான், மற்றொருவன் சங்காரகாலத்தில் அட்டகாசம் செய்கின்றான்; இவ்விருவர்களில் சிறந்தவன் இவனென்று விவேகிகளாகிய நீங்கள் கூறுவீர்களானால், நாங்க ளந்த மஹாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விதப்பு.

ஒருவன் மாட்டுகொட்டிலி லிசையூதுகின்ருனென்றது-ஹரியை, அது ஹரி அவ்வாறு இசையூதினமையால். இது இவ்வரி ஆயர்சேரி யில் வளர்ந்த அந்நாளிற் செய்ததாம். இதனை—

''நாவலம்பெரியதீவினில்வாழுநங்கைமீர்களிதோரற்புதங்கேளீர்
தூவலம்புரியுடையதிருமால்தூயவாயிற்குழலோசையின்வழியே
கோவலர்சிறுமியரிளங்கொங்கைகுதுகுலிப்பவுடலுளவிழ்ந்தெங்கும்
காவலுங்கடந்துகயிறுமாலையாகிவந்துகவிழ்ந்துநின்றனரோ'' என்று நாலாயிரப்பிரபந்தத்தும்,

" தெறித்தகன்றுவாய்வைத்தவம்முலையுணுதிரண்டு
கறித்தபுல்லுணுகறவைபூங்கற்பகச்செங்கேழ்
முறிக்கொழுங்கவின்கவற்றியமுகிணகைச்செவ்வாய்
மறைக்கொழுந்தின்வேயின்னிசையஞ்செவிமடுத்தே''என்று சுகபாகவதத்தும் வருதலைக்கொண்டுணர்க.

ஒருவன் விகடாட்டகாசஞ் செய்கின்ருனென்றது-ஹரனை, அது ஹரன் பிரளயகாலத்தி லவ்வண்ண மட்டகாசஞ்செய்தலால். இதனை,

" சாருமெவ்வுயிருந்தன்வயமாக்கித்தளர்க்குமாணவப்பகையோருஞ், சூரனைமுதலாந்துளக்கரும்வகையும்தலங்குமிப்பிரணவப்பொருளாம், வீரனிலின்றேவிளிந்ததென்றுளத்துவினைந்தெழும்வீரத்தின் குறிப்பி, ஞரமர்முடியோனுர்த்தவினுயதவ்விடம்வீரட்டகாசம்'' என்று தணிகைப்புராணத்தும்,

அரன் மஹாப்பிரளயகாலத்தில் சகலாண்டங்களையும் ஒரே கவளமாக விழுங்கு மியல்பினனுய், சகலாண்டங்களையும் அண்டங்களினுள்ளிற்பொருந்திய வேறுவேருன வுலகங்களையும் உலகங்களைப்படைத்துக்காக்கும் ஹயன்-ஹரி முதலானவர்களையும் ஹுங்காரம் அட்டகாசம் நோக்கமுதலியவற்ருலழித்துக் கடைசியி லட்டகாசத்துடன் நின்று நடனமிடுவன். இதனை—

ஸாட்டஹாஸவஸொநர்த்தநேநவகாரஹி என்று ஸ்ரீமஹாஸ்காந்தபுராணத்தும்,

" அண்டத்தினுறுந்தோற்றமனைத்துந்தன்னிடத்தடங்கக்
கண்டத்தின்பெருமையினுற்கருத்திலுயிர்களிப்போங்கிப்
பண்டைப்போலுலகளிப்பப்பண்புறுதன்றிருவுளத்திற்
கொண்டக்கால்வீரட்டகாசஞ்செய்குணத்தவனுய்'' என்று திருவோத்தூர்ப்புராணத்தும் வருதலைக்கொண்டுணர்க.

தாத்பரியம்.

ஹரி வேணுகானஞ் செய்தான், ஹரன் விகடாட்டஹாஸம் செய்தான் என்பதாம்.

தாரதம்மியம்.

மெல்லிய வேய்ங்குழலூதிமவனிலும் அவ்வேய்ங்குழலிசைப்பவனையும், அவன் சம்பந்தமான வுலகங்களையும் அட்டகாசத்தினுலே சங்கரித்தவன் சிறந்தவனுவென்று ஆலோசிக்கவேண்டுவதில்லையன்றே? ஆதலால் இவ்விஷயத்தி லிசையடையாத ஹரியை அப்பிரதானப்பொருளாக வகற்றி, இவ்விஷயத்திற் சிறந்த ஹரனை நாங்கள் நியாயமுகத்தாற் சிறந்தவனுகக்கருதி, அந்த மஹாபுருஷனைச் சரணமாக வடைகின்றேம். (உக)

வக்ஷீந்த்ரவாஹந இதிப்ரதிதோயமேக:
ஸ்வேந்த்ராஹோக்ஷவரவாஹந இத்யபிஸ்வ:।
கோவாதநயோரதிகஇத்யநுசிந்த்யவ்ருத்தா
ஸ்லத்யம் ப்ருவந்தமிமமாஸ்ரயாம:॥

பக்ஷீந்த்ரவாஹநஇதிப்ரதிதோயமேகஸ்த்வங்யோமஹோக்ஷவரவாஹநஇத்யபிச்ய:।கோவாநயோரதிகஇதயநுசிந்தியவ்ருத்தாஸ்லத்யம்ப்ருவந்தமிமம்வயமாஸ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

மன்னுஞ் சுவண விறகுடனே மருவும் வ்வந தேயனையே
துன்னு மூர்த்தி யாக்கொண்டு சுடர்ந்தா னொருவன் தகளில்லா
வன்ன விடபந் தனையூர்ந்து வருவா னொருவன் வையத்தி
லின்னர் தம்மிற் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam, Funding Tattva Heritage Foundation, Kolkatta

பதப்பொருள்.

அயம்	இந்த
ஏகஃ	ஒருவன்
பக்ஷீந்திர:	கருடனை
வாஹந:	வாஹனமாகவுடையவன்
இதி	என்று
ப்ரதித:	பிரசித்தியடைந்தவன்,
அந்யஃது	இன்னொருவனுல்
மஹோக்ஷவரவாஹந:	சிறந்ததும் சிரேஷ்டமானதுமான வ்ருஷபத்தைவாஹனமாகவுடையவன்
இதி	என்று
அபிக்ய	பிரக்கியாதியடைந்தவன்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	அதிகமானவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்தியா	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாமஃ	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் கருடனை வாகனமாகவுடையவனென்று கீர்த்திபெற்றவன், இன்னொருவன் சிறந்ததும் உயர்ந்ததுமான இடபத்தை வாகனமாகவுடையவன்; இவரில் சிறந்தவனைப் பெரியவர்களான நீங்கள் கூறினுல், நாங்கள் உங்களால் சிறந்தவனென்று கூறப்பட்ட மகாபுருஷனைச் சரணமாக வடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் பக்ஷீந்திரவாகனன் என்றது - ஹரியை, அது அவ்வரி கருடனை வாகனமாகக் கொண்டிருந்தமையால். இதனை—

காசிபன் என்னும் முனியின் மனைவியர் பலரில் ஒருத்தியான விநதையென்பவள் பெற்ற மகனுன கருடன் திருமாலோடு போர்புரிந்து திருமாலால் வெல்லப்படாது போனபோழ்து, கபடமாகக் கருடனைப்பார்த்து உனக்கு வேண்டிய வரங்களைக்கேள் தருகின்றேனென்று கூறியதனைக் கேட்ட கருடன் கலுக்கென்று நகைத்து நாராயணு நீ என்னை வெல்லாமலே எனக்கு வரமளிக்கவந்தாய் இதுமொரு வேடிக்கைதான் என்று கூறி உனக்கு வேண்டுமானு லென்னைக்கேள் வரந்தருகின்றேன் என்றனன். உடனே ஹரி கருடனைப்பார்த்து நீ எனக்கு வாகனமாக இருக்கவேண்டுமென்று வரங் கேட்டனன். அதற்கவன் சம்மதித்தனன். அதனு லரிக்குக் கருடன் வாகனமாயினன். இதன் விரிவை புராணேதிகாசாதிகளிலுணர்க.

“ கருமுகிறு மரைக்காடுபூத்துந்
டிருசுடரிருபுறத்தேந்தியேடவிழ்
திருவொடும்பொலியவோர்செம்பொற்குன்றின்மேல்
வருவபோற்கலுழன்மேல்வந்துதோன்றினுன்” என்னுங் கம்பராமாயணத்தாலும்,

“ விட்டிலன்றுருவன்மூச்சுவிழுத்தவம்புரிதலானே
முட்டியதுமக்குமாங்கேமூச்சுநாங்காத்துமென்னு
மட்டறுவேதமேனிவரிச்சிறைப்புள்ளின்மேற்றிக்
கெட்டுநல்லுருவக்காந்தியெறிதரவேகினுனல்” என்னும் பாகவதத்தாலும்,

“ குழல்கோவலர்மடப்பாவையும்மண்மகளும்திருவும்
நிழல்போல்வனர்கண்டுநிற்குங்கொல்மீளுங்கொல்தண்ணந்துழாய்
அழல்போலடுஞ்சக்கரதண்ணல்விண்ணோர்தொழக்கடவுந்
தழல்போற்சினத்தவப்புள்ளின்பின்போனதனிநெஞ்சமே ” என்று

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நம்மாழ்வார் கூறிய இயற்பாவிலும் கேட்கப்படுதலாலும், மற்றும் பலவிடங்களிலும் ஹரி கருடவாகனன் என்றிருத்தலாலும்,

நிகண்டிலும் நாராயணோ கருடத்வஜ: என்று கேட்கப்படுதலாலும் ஹரி கருடவாகனன் என்றறியப்படுகின்றான்.

ஒருவன் சிறந்ததும் பெரியதுமான இடபத்தை வாகனமாகவுடையவன் என்றது — அரனை, அது அவ்வரன் எருதை வாகனமாகக் கொண்டிருத்தலால்.

முன்னொருகாலத்தில் ஹரி ஸ்ரீகைலாசத்திலிருக்கும் ஹரனிடம் தனது கருடவாகனத்திலேறி ஹரனுடைய ஆலயத்தின் முன்புறத்தில் ஹரனுடைய வாகனமாகிய எருது கிடக்கும் இடத்தில் தனது வாகனமான கருடனையும் நிறுத்தி உள்ளே சென்றனன். கருடன் இடபத்தினருகில் இறுமாந்திருந்தனன். பின்னர் சற்றுநேரத்திற்கெல்லாம் அவ்விடபம்விட்ட மூச்சினுட் சிக்கித் தடுமாறி இடபத்தின் மூக்கினுட்போவதும் வெளிவருவதும் ஆகிப் பெருங்காற்றிற் சிக்கிய எருக்கம் பஞ்சைப்போல படாதபாடுபட்டான். பின்னர் சிவகணங்களால் எழுப்பப்பட்ட எருதின் சுவாசம் நின்றவுடனே ஒருவாறு சுகமடைந்து ஹரியுடன் திரும்பிச் சென்றான் என்று ஒரு நகைப்புக்கேற்ற இரதமமைந்தசரித்திரமொன்று பலநூல்களிலுங் கேட்கப்படுகின்றது. இதனால் கருடவாகனத்தின் உயர்வும் இடபவாகனத்தினுயர்வும் நன்கு புலப்படும். இதனைச் சுட்டியே ஆசிரியரும் 'மஹோக்ஷவரவாஹநம்' என்றார். இதனை,—

"கொடுவினையாரொன்றுங்குறுகாவடி
குறைந்தடைந்தாராழாமைக்காக்கும்படி
படுமுழவம்பாணிபயிற்றும்படி
பதைத்தெழுந்தவெங்கூற்றைக்காய்ந்தவடி
கடுமுரணேறூர்ந்தான்கழற்சேவடி
கடல்வையங்காப்பான்கருதும்மடி

நெடுமதியங்கண்ணியணிந்தானடி
நிறைகெடிலவீரட்டநீங்காவடி" என்று திரவிடசுருதியிலும்,

"அங்கிலையிற்றிருத்தோணிவீற்றிருந்தாரருளேக்கான்
முன்னிலைமைத்திருத்தொண்டுமுன்னியவர்க்கருள்புரிவான்
பொன்மலைவல்லியுந்தாமும்பொருவிடைமேலெழுந்தருளிச்
சென்னியிளம்பிறைதிகழச்செழும்பொய்கைமருங்கணைந்தார்" என்று பெரியபுராணத்தும் வருதலைக்கொண்டும், மற்றையவிடங்களில் வருவனவற்றைக்கொண்டும் உணர்க.

தாத்பரியம்.

ஹரி கருடவாகனன், ஹரன் இடபவாகனன் என்பதாம்.

தாரதம்மியம்.

வாகனத்தையே வரங்கேட்டுப்பெற்று அதனில் ஏறுபவனும், அவ்வாகனந் தன்னிடத்துக்கொண்டுள்ள அகம்அறுமாறு மூச்சுவிட்டுக் கருவபங்கஞ்செய்யும் பிறனுடைய வாகனத்தின் சிறப்பும் இவ்வண்ணமானது என்று கூறாமலே நன்கு விளங்கும். அன்றியும் ஹரனுடைய வாகனம் தருமத்தெய்வம், அதன் வேண்டுகோளினாலதனை அவ்வரன் வாகனமாகக்கொண்டான். இவ்விஷயத்தில் கருடவாகனம் இடபவாகனத்தைவிட அனேககோடிப்பங்கு தாழ்ந்தது என்பது முன்காட்டிய கதையே விளக்கும். தாழ்ந்த கருடனை வாகனமாகக் கொண்ட ஹரியை இவ்விஷயத்திலப்பிரதானமாக நீக்கி, உயர்ந்த ஹரனை நாங்கள் சரணமாக அடைந்து வணங்குகின்றோம். (உஉ)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஏகஸ்துயோநிஜஇதிப்ரஸித்திமங்யஸ்துஜாதஇதிஸர்வஜகத்ப்ரஸித்தி:। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஸ்ரயாம:॥

Center for Shaiva Studies, Pondicherry Collection

மொழிபெயர்ப்பு.

வள்ளக் குலவு கடல்புடைசூழ் வையத் துற்ற வுயிர்களைப்போற்
கொள்ளும் யோனி சன்னனென்னக் குலவு மொருவன் கூறொருவன்
துள்ளும் பிறவி யில்லாத் தூயோ னுகித் துலங்கினன்
என்னி லிவரிற் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏகஸ்து	ஒருவனுனல்
யோநிஜ:	யோனியிற்பிறப்பவன்
இதி	என்று
ப்ரஸித்திம்	பிரக்யாதியை
வ்ரஜதி	அடைகிறுன்,
அந்ய: து	இன்னெருவனுவென்றுல்
அஜாத	பிறப்பில்லாதவன்
இதி	என்று
ஸர்வஜகத்பிரஸித்திம்	எல்லா வுலகங்களிலும் பிரஸித்தியை
வ்ரஜதி	அடைகிறுன்;
அநயோ:	இவர்களுக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	எவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம். சொன்னுல்
தமிமம்	அந்த விஷ்ணு
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் என்றும் யோனியில் பிறப்பவனுகக் கீர்த்தியடைகின்றுன், இன்னெருவன் யோனியில் பிறவாதவனென்று கீர்த்தியடைகின்றுன்; இவ்விருவரில் சிறந்தவனை அறிவுடையவர்கள் சத்தியமாகச் சொன்னுல் நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாகவடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் யோனியிற்பிறப்பவனென்றது – ஹரியை, அது ஹரி யோனிவாய்ப்பாட்டுப் பிறத்தலால்.

அதாவது கோசலையின் யோனியில் பிறந்தவனிராமன், தேவகியின் யோனியில் பிறந்தவன் கிருஷ்ணன், ரேணுகையின் யோனியிற்பிறந்தவன் பரசுராமன், அநசூயையின் யோனியிற் பிறந்தவன் கபிலன் என்று ஹரியின் பிறப்புரைக்கும் புராணவேதாதிகளாலறிக. இதனை—

“மண்மிசையோநிகள்தோறும்பிறந்தெங்கள்மாதவனே
கண்ணுறநிற்கிலுங்காணகில்லாவுலகோர்களெல்லாம்
அண்ணலிராமாநுசன்வந்துதோன்றியவப்பொழுதே
நண்ணருஞானந்தலைக்கொண்டுநாரணற்காயினரே. என்றும்,

வண்ணமாடங்கள்சூழ்திருக்கோட்டியூர்
கண்ணன்கேசவன்நம்பிபிறந்தநாள்
எண்ணெய்சுண்ணமெதிரெதிர்தூவிட
கண்ணன்முற்றங்கலந்தளறாயிற்றே” என்றும் நாலாயிரப்பிரபந்தத்தும்,

“ஒருபகலுலகெலாமுதரத்துட்பொதிந்
தருமறைக்குணர்தருமவனையஞ்சனக்
கருமுகிற்கொழுந்தெழில்காட்டுஞ்சோதியைத்
திருவுறப்பயந்தனடிறங்கொள்கோசலை” என்று இராமாயணத்தும்,

ஜயது ஜயது தேவோ தேவகீநந்தநோயம்
ஜயது ஜயது க்ருஷ்ணோ வ்ருஷ்ணிவம்ஶப்ரதீப:
ஜயது ஜயது மேகஶ்யாமள: கோமளாங்கோ
ஜயது ஜயது ப்ருத்வீபாரநாஶோ முகுந்த: ॥ என்று

முகுந்தமாலையிலும் கேட்கப்படுதலாலுணர்க.

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஒருவன் யோனிவாய்ப்பட்டுப் பிறவாதவனென்றது - ஹரனே, அது ஹரன் யோனிவாய்ப்பட்டு பிறவாமையால். இதனை—

[illegible]
[illegible]
[illegible] என்ற சுருதியிலும்,

"வைச்சபொருணமக்'குமென்றெண்ணிநம்சிவாய
வச்சமொழிந்தேனணிதில்லையம்பலத்தாடுகின்ற
பிச்சன்பிறப்பிலிபேர்நந்தியுந்தியின்மேலசைத்த
கச்சினழகுகண்டாற்பின்னைக்கண்கொண்டுகாண்பதென்னே"

என்று திரவிடசுருதியிலும்,

"எல்லார்பிறப்புமியற்பாவலர்தஞ்
சொல்லாற்றெளிந்தேநஞ்சோணேச – னில்லிற்
பிறந்தகதையுங்கேளேம்பேருலகில்வாழ்ந்துண்
டிறந்தகதையுங்கேட்டிலேம்" என்று குகநமசிவாயயோகி வெண்பாவிலும் கேட்கப்படுதலைக்கொண்டும் உணர்க.

தாத்பரியம்.

ஹரி யோனிவாயில் பிறப்பவன், ஹரன் யோனிவாயில் பிறவாதவன் என்பதாம்.

தாரதம்மியம்.

இவ்வுலகத்திற் பலதரம் நிலைமாறி வருபவனைவிட ஒரேரீதியாக இருப்பவனைச் சிறப்பாக மதிக்கின்றார்கள். ஹரி பலமாதர்களின் யோனிசம்பந்தமாகப் பிறந்திருத்தல் பாகவதமுதலிய மஹா நூல்களிலும், அவ்வரியி னன்பர்வாக்கியங்களிலும் கேட்கப்படுதலால், ஹரி பிறப்புள்ளவனென்று பிரசித்திபெற்றவன். ஹரனோ நிலைமாறாததன்மையனாகி மிருத்துஞ்சயனென்று யதார்த்த நாமமடைந்து சுருதியாதிகளாலும், அன்பர் வாக்கியங்களாலும் பிறவியற்றவனென்று பிரசித்தியடைந்திருக்கின்றனன். இவ்விஷயத்தி லிவ்விருவர்களில் ஹரன் உயர்ந்தவனும் ஹரி தாழ்ந்தவனும் என்று ஸ்பஷ்டமாக விளங்குதலால், நாங்கள் பிறப்பினால் தாழ்வடைந்த ஹரியை, பிறப்பில்லாதவனாகிய ஹரனைவிட தாழ்ந்தவனென்றறிந்து அப்பிரதானமாக அகற்றி இவ்விஷயத்திற்சிறப்படைந்த ஹரனை அடைந்து வணங்குகின்றோம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஏகோஹ்யுலூகலநிபத்தஇதிப்ரஸித்தி ஸ்த்வம்யோபபூவபவபாச விமுக்திதக்ஷ:। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம் ப்ருவந்துதமிமம்வயமாஸ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

அறையுங் கடனீர் வைப்பி னிடை யறைவா ரொருவ னுயர்குடிற்
கறையிற் கட்டுண் டானென்னக் கருது மொருவன் கருவினிடை
உறையும் பந்த வியல்பதனை யொழிப்பா னாகி யொளிர்கின்றான்
இறைவ னிவரி லிவனென்ன விசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
உலூகலநிபத்த:	உரலில் கட்டிப்போடப்பட்டவன்
இதி	என்று
ப்ரஸித்திம்ஹி	ப்ரஸித்தி யடைந்தானல்லவா,
அந்ய:து	இன்னொருவனானல்
பவபாசவிமுக்திதக்ஷ:	ஸம்ஸாரபந்தத்தை விடுவிக்கிறதில் சமர்த்தனானவனாக
பபூவ	ஆனான்
விபாதி	ப்ரகாசிக்கின்றான்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

கோவா	எவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	உங்களா லுயர்ந்தவனென்று கூறப்படுகிற அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் உரலிற் கட்டப்பட்டவனென்று பிரசித்தி யடைந்தவனல்லவா, இன்னொருவன் சமுசாரபந்தத்தை விடுவிக்கிறவனாக ஆனான்; இவ்விருவருக்குள் சிறந்தவனென் றுள்ளவனை இவனென்று அறிவுடைய நீங்கள் கூறுவீர்களானால், நாங்கள் அந்த மகாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் உரலில் கட்டப்பட்டானென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணங் கட்டுண்டமையால்.

ஹரி கண்ணனாகப்பிறந்து இடையர் குடிவில் வளர்ந்த வஞ்ஞான்று ஒருதினம் தனது மாதாவான அசோதையின் மடியிலிருந்து பாலுண்டனன். அப்பொழுது சமையற்கொட்டிலிற் பாற்றாழி பொங்கிப் பால் நெருப்பில் விழுந்த நாற்றமறிந்து அசோதை பால்கொடுப்பதைவிட்டுப் பானெருப்பை யவிக்கச்சென்றனள். உடனே தனக்குப் பால்கொடாமற் சென்றன ளன்னையென்னுங் கோபத்தா லெதிரிற் கடைதற்கு வைத்திருந்த தயிர்த்தாழியைக் காலாலுருட்டி யுடைத்துவிட்டு, வேறொரு குடிலுள் நுழைந்து அங்கொரு கல்லுரலைக் கவிழ்த்து அதன்மீதேறி யுயரத் தொங்கிக்கொண்டிருந்த உறியிலிருந்த கலசத்தைப் பொத்தலாக்கி அதனிலிருந்த வெண்ணெயை யெடுத்து இரண்டு கைகளிலும் வைத்துத் தின்றுகொண்டங்கிருந்து, பூனைகளுக்குங் கொடுத்தனன். இதற்குள் பாலடுப்பின் நெருப்பை அளவுபடுத்தித் திரும்பிய வசோதை தயிர்த்தாழி யுடைந்திருத்தலைக்கண்டு இது கண்ணன்செய்த வேலையேயன்றி வேறில்லையென்று கருதித் தேடி யற்றைக்குள் நிற்பவனது சிறு குறும்பைக்கண்டு கோபங்கொண்டு, உன்னைத் திருடனென்று அயற்குடில்களிலுள்ள இடைச்சிகள் கூறியதை மெய்யல்லவென்று கருதினேன்; நீ திருடனென்பதை இன்று அறிந்தேன்; இனி யுன்னை விடமாட்டேன்; திருட்டுச்சிறுவா, இங்குவா இங்குவா என்று துரத்திப்பிடித்து ஒரு உரலினைக்கவிழ்த்த தன் நடுவிற்கும் இவனிடுப்பிற்குமாக ஒரு தாம்பினை இட்டுக்கட்டி உரலோடு நகருமாறு வைத்தனள். இதனை—

"அரிவையர்கள்மிகநகைக்கவசோதைநங்கை
யாயர்மனைத்தாழ்பெல்லாமுடிந்தொன்றாக்கிக்
கரியவனைக்கட்டுதலும்போதாதாகிக்
கைசலித்துமெய்வெயர்வுசொரியக்கண்டு
வளையினமர்யோகிகட்குமறைநாலுக்கும்
வானவர்க்கும்வாசவர்க்குமலரின்வந்த
பிரமனுக்குமகப்படாப்பெரியோன்றாய்கைத்
தாம்பினாலுலூகலத்திற்பிணிப்புண்டானால்" என்று பாகவதத்தில் வருதலைக்கொண்டுணர்க.

ஒருவன் சமுசாரபந்தத்தை நிவிர்த்திப்பதில் பிரசித்தியடைந்தவனென்றது - ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ண மநேகர்களின் சமுசாரபந்தத்தை நிவிர்த்தித்தமையால்.

ஸ்ரீகைலாசத்திலே வடவாலநிழலிலே ஞானாசாரியனாக வீற்றிருந்து ஜனகன் முதலிய வனேகர்களின் பந்தங்களை நிவிர்த்தித்த பரமாசாரியனென்றும், இன்னும் பந்தநிவர்த்தியையடைய விரும்பின பக்குவர்களனைவரும் அவ்வரனையே சரணமாக வடையவேண்டுமென்றும் வேதாகமாதி நூல்கள் கோஷிக்கின்றன. இதனை—

[illegible]
[illegible]

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

𑌶𑌙𑍍𑌕𑌰𑍋 𑌯𑌤𑍀𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌵𑌂 𑌸𑍁𑌲𑍁𑌪𑍍𑌤𑌃॥ என்று எஜுர்வேத சம்பந்தமான சுகரகஸ்யோப்நிஷதம் பிரதிபாதித்தலாலும்,

"கடுவினைப்பாசக்கடல்கடந்தைவர்கள்ளமெள்ளவேதுரந்து,
னடியிணையிரண்டுமடையுமாறடைந்தே னருள்செய்வா யருள்செயா
தொழிவாய், நெடுநிலைமாடத்திரவிருள்கிழிக்குநிலைவிளக்கலகில்சாலே
கம், புடைகிடந்திலங்குமாவணவீதிப்பூவணங்கோயில்கொண்டாயே"

என்று திருவிசைப்பாவிலும், மற்றிடங்களிலும் வருதலைக்கொண்டுணர்க.

தாத்பரியம்.

ஹரி உரலிற் கட்டுண்டான், ஹரன் ஆன்மகோடிகளின் பந்தங்களை அவிழ்க்கின்றான் என்பதாம்.

தாரதம்மியம்.

பாசபந்த முடையவனைவிடத் தானும் பாசபந்தமின்றிப் பிறர்க்கும் பாசபந்தமொழிப்பவன் மிகவுஞ் சிறந்தவனென்பது சொல்லாமே யமைந்தவிஷயம். இதனால் பாசபந்தத்தாற்றாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாகத்தள்ளி இவ்விஷயத்தி லுயர்வடைந்த மஹாபுருஷனாகிய ஹரனை நாங்கள் சரணமாக அடைந்து வணங்குகின்றோம் ()

𑌏𑌕𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑌿𑌤𑍍𑌯𑍋 𑌸𑍁𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑍋 𑌜𑌗𑌤𑍍𑌯𑌾
𑌮𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑍁 𑌨𑌿𑌤𑍍𑌯 𑌇𑌤𑌿 𑌚 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌲𑍋𑌕𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃।
𑌕𑍋𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾
𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁 𑌤𑌮𑌿𑌮𑌂 𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகஸ்த்வநித்யோஸுப்ரதிதோஜகத்யாமந்யஸ்துநித்யஇதிசஶ்ருதிலோகஸித்திः। கோவாநயோரதிக்இத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம் ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாமः॥

மொழிபெயர்ப்பு.

தண்ணங் கமல வனம்புடைசூழ் தரணி தன்னி லனித்தியனு
நண்ணு மொருவன் மற்றொருவன் நடலை யில்லா நித்தியனு
மண்ணும் வேதா கமங்களுமே மாறு தனைக்கு மாண்புற்றான்
எண்ணு மிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏகஸ்து	ஒருவனானால்
அநித்ய:	அநித்தியன்
இதி	என்று
ஜகத்யாம்	லோகத்திலே
ஸுப்ரதித	நன்றாகப் பிரசித்தி அடைந்தவன்,
அந்யஸ்து	இன்னொருவனோவென்றால்
நித்ய:	நித்தியன்
இதி	என்று
ஶ்ருதிச	சுருதிகளிலும்
லோகச	லோகத்திலும்
ப்ரஸித்தி	கீர்த்தி
அஸ்தி	இருக்கின்றது;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிகः	சிறந்தவன்
கோவா	எவன் ?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தாः	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாமः	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் அநித்தியனென்று லோகத்திலே நன்றாகப் பிரஸித்தியடைந்தவன், மற்றொருவன் நித்தியன் என்று நன்றாகப் பிரஸித்தியடைந்தவன்; இவ்விருவருள் சிறந்தவனை அறிவுடைய நீங்கள் சொன்னால் நாங்களந்த மகாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விதப்பு.

ஒருவன் அநித்தியனென்றது-ஹரியை, அது அவ்வரி அநித்தியத்துவத்தை யடைதலால்.

ஹரி இராமன் கிருஷ்ணன்முதலிய அவதாரங்களை அடைந்திருந்து இறந்தனன் என்று கேட்கப்படுதலால், அநித்தியன் ஆயினன்; நிலையற்றவனாயன்றே அநித்தியனென்று கூறுவது நூல்.

ஹரி கிருஷ்ணாவதாரமடைந்து துவாரகையிலிருந்து கடைசியில் சரமனென்னும் வேடனொருவன் விட்ட அம்பினால் கிருஷ்ணரூபத்தினின்றும் அநித்தியமடைந்தானென்றும், இறந்த கண்ணனுடைய சரீரத்தைப் பார்த்தன்முதலியவர்கள் தீயிலிட்டுச் சுட்டனரென்றும், அவனுடன் அவன் மனைவியரான உருக்குமணியாதியர் உடன்கட்டையேறினர்களென்றுங் கேட்கப்படுதலாலும், இராமனாகப் பிறந்த ஞான்று சரீரத்தை சரயுநதி நீரில் மூழ்கவிட் டவ்வுடலினின்றும் அநித்தியமடைந்தானென்றுங் கேட்கப்படுதலாலும், ஹரி அநித்தியமானவனென்று அறியப்படுகின்றான். இதனை—

"மேதகுபுகழுடைவிதர்ப்பன்பாவையே
ஆதிசன்மடந்தையரழலின்மூழ்கமற்
றேதமின்மடந்தையர்யாருமீறிலா
நாதன்மெய்யொடுதழனண்ணினாரே" என்று பாகவதத்தும்,

"துன்னியவ்வானவர்துயரநீக்குவான்
மன்னியவுலகினிற்பிறந்தமாயையைத்
தன்னிகரிலாதவச்சரயுநீத்துத்தன்
பின்னவர்தம்முடன்பெயர்த்தமேவினான்" என்று இராமாயணத்தி லிராமன் தன்னுடம்பைச் சரயுவிலமிழ்த்தி வேறுடம்படைந்தானென்றும் கேட்கப்படுதலாலும், ஹரி அநித்திய இயல்பினனென்றறியப்படுகின்றான்.

ஒருவன் நித்தியனாகவிருக்கின்றான் என்றது-ஹரனை, அது அவ்வரன் அச்சமாறுதிருத்தலால். மிருத்துஞ்சயன் என்று ஹரன் பெயரடைந்திருத்தலும் அழியாமையினாலன்றே. இதனை—

"இந்திரியவயமயங்கியிறப்பதற்கேகாரணமா
யந்தரமேவீழ்ந்துபோயருநரகில்வீழ்வேற்குச்
சிந்தைதனைத்தெளிவித்துச்சிவமாக்கியெனையாண்ட
வந்தமிலாவானந்தமணிகொடில்லைகண்டேனே" என்று தமிழ்வேதத்தும்,

[illegible]

என்று மைத்திரேயோபநிஷத்திலும்,

"அத்தனும்பகவன்றானுமருவமுமுருவுமாகுஞ்
சுத்தனுமுணர்தற்கொண்ணாச்சோதியுமியாண்டுமேவுஞ்
சித்தனுமநாதிதானுந்தேவர்கடேவுமென்று
நித்தனுமுயிர்க்குணீங்காதிருத்தனுமவனேயென்னும்" என்று கந்தபுராணத்திலும் வருதலைக்கொண்டுணர்க.

தாத்பர்யம்.

ஹரி அநித்தியன், ஹரன் நித்தியன் என்பதாம்.

தாரதம்மியம்.

அழியுமியல்பினை யுடையவனைக்காட்டிலும் அழியாவியல்பினையுடையவன் சிறந்தவனென்பது லோகப்பிரசித்தம். ஆதலால் நாங்களும் அநித்தியமான இயல்பினையுடைய ஹரியைவிட நித்தியமான இயல்பினையுடைய ஹரனைச் சிறந்தவனாக அறிந்து அநித்தியமான ஹரியைஅப்பிரதானமாக இவ்விஷயத்திலொதுக்கி நித்தியமான இயல்பினையுடைய ஹரனை பிரதானமாக நியாயமுகத்தாற்கொண்டு வணங்குகின்றோம். (உரு)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஏகஸ்துபார்த்தரதவாஜிக்ருதோப்சாரஸ்த்வந்யஸ்துபார்த்தஸம ரப்ரணுதப்ரபாவ:।கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்ய ம்ப்ருவந்துதமிமம்வயமாஸ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

குந்தி மகாரிற் பார்த்தன்றேர்க் குதிரைக் குபசா ரகனுகி
யிந்த வுலகி லுறுமொருவ னின்ன மொருவ னிவ்விசையன்
பந்த வமரிற் றுதிபுரியும் பான்மை யுடையா னின்னவரில் [மே.
எந்த வியல்போன் சிறந்தவனென் றிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுது

பதப்பொருள்.

ஏகஸ்து	ஒருவனுனல்
பார்த்தரதவாஜி க்ருதோபசார:	அருச்சுனன் றேரிற்கட்டப்பட்ட குதிரைகளின்பொருட்டு செய்யப்படுகின்ற உபசாரத்தினையுடையவன்,
அந்யஸ்து	இன்னொருவனுனல்
பார்த்தசமர ப்ரணுதப்ரபாவ:	அருச்சுனனோடே யுத்தத்தி லவனுல் துதிக்கப்பட்ட மஹாத்மியமுடையவன் ;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	எவன்?
இதி	இதனை
அநுசிந்திய	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஸ்ரயாம:	ஆஸ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் அருச்சுனன் றேர்க்குதிரைகளுக் குபசாரம் செய்யுமவனுக வுள்ளவன், இன்னொருவன் அந்த அருச்சுனனோடு செய்த யுத்தத்தில் அந்த அருச்சுனனுல் துதிக்கப்பட்ட பிரதாபமுடையவன் ; இவர்க ளிருவரில் சிறந்தவன் இவனென்று பெரியவர்களே நீங்கள் சொல்லுவீர்களானுல், நாங்கள் அந்த மஹாபுருஷனைச் சரணமாக வடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் பார்த்தனுடைய தேர்க்குதிரைகளை உபசரிப்பவனென்று கூறியது - ஹரியை, அது அவ்வரி அவ்வாறு செய்திருத்தலால்.

பாரதயுத்த நடந்தகாலத்தி லருச்சுனனுக்குச் சாரதியாக இருந்து தேரோட்டின காலத்துக் குதிரையவிழ்த்து நீரூட்டல் முதலிய காரியங்களை ஹரி செய்தானென்று பாரதாதிகளாற் பிரஸித்தம். இதனை—

“ தலமாமகளுந்திதடநிகரானதடங்கண்
டலமாறுகொளிருதோள்வலியுடைவள்ளலுனைப்பக்
குலமாமணியனையான்வினைதேர்நின்றெதிர்குதியா
வலமானதுரங்கங்களைவள்வார்விசிநெகிழா. என்றும்,

குவளைப்பரிமளமேவியகுளிர்வாரிபருக்கிப்
பவளத்துயர்வாயாரிருபாதங்கைவிளக்கித்
த்வளக்கிரியொருநாலெனமேன்மேலொளிதருபே
ரிவுளிக்குமினைப்பாறவினைப்பாறினனிப்பால்” என்றும் ஸ்ரீமகாபாரதத்தில் வருதலைக்கொண்டுணர்க.

ஒருவன் பார்த்தனுடன் யுத்தஞ்செய்து அவனுல் துதிக்கப்பெற்றவனென்றது-ஹரனை, அது அவ்வர னவ்வாறு துதிக்கப்பெற்றமையால்.

ஹரன் பாசுபதாஸ்திரத்தின்பொருட்டுத் தவஞ்செய்து நின்றவருச்சுனனுடன் பன்றியினிமித்தம் சண்டையிட்டுக் கடைசியி லவ்வருச்சுனனுல் துதிக்கப்பெற்றான். இதனை—

[illegible] । [illegible]
[illegible] । [illegible]
[illegible] ॥ என்று ஸ்ரீமஹாபாரதத்தில் கேட்கப்படுதலாலும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

" மல்லமர்தொடங்கியிவரிருவரும்வெகுண்டுபொரமாநிரமும்ம நிலமுமே, வில்லையுமதிர்ந்துசுழல்கின்றபொழுதத்திமையவின்பமயில் சேர்வன்வெகுளா,நல்லசைபுனைந்தமணிநூபுரவிசாலவொளிகண்ணு பதநாண்மலரினால், வில்வியரிவென்னுதிறல்வில்லுடையகாளைதனை வின்னூல்கில்வீசினனரோ. என்றும்,

ஆதியேயண்டமுமனைத்துமாயொளிர்
சோதியேகொன்றையந்தொங்கன்மௌலியாய்
வாதியேமரகதவல்லிபாகனொரு
பாதியேபவளமாம்பரமரூபியே. என்றும்,

பையராவணிமணிப்பவளமேனியாய்
செய்யவாய்மரகதச்செல்விபாகனே
ஐயனேசேவடியடைந்தவர்க்கெலா
மெய்யனேயெங்குமாய்விளங்குசோதியே." என்று அருச்சுனன் சண்டையிற் றுதித்தானென்று பாரதங் கூறுதலாலு முணர்க.

தாத்பரியம்.

ஹரி பார்த்தன் றேர்க்குதிரைகளை யுபசரித்தவன், ஹரன் பார்த்தனால் துதிக்கப்பெற்றவனென்பதாம்.

தாரதம்மியம்.

தன்னிலையைவிட்டுத் தேர்ப்பாக னுருவையடைந்து ஒருவனுடைய குதிரைகளை நீருட்டன் முதலிய வுபசாரங்களினாலே மகிழ்விப்பவனைவிட, ஒருவனோடு போர்புரிந்து மறுதலையாற் றுதிக்கப்பெற்றவன் சிறந்தவன். இம்முறையி லரி அருச்சுனனுடைய சாரதியாக நின்று அவன் குதிரைகளை யுபசரித்தனிமையால் தாழ்ந்தவனாயினான், ஹரன் அந்தப்பார்த்தனுடன் சண்டைசெய்து அதே பார்த்தனாற் புகழ்ப்பெற்றமையாற் சிறப்படைந்தான்; இதனால் தாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக அகற்றி உயர்வடைந்த ஹரனை நாங்கள் சரணமாக அடைந்து வணங்குகின்றோம். (உ௬)

வ்யாப்தஶ்ச விஷ்ணுரயமித்யவகம்ய ஏகோ
அந்யோ விஷ்ணுவல்லப இதி ப்ரதிதஸ்த்ரிலோக்யாம்।

கோவாநயோரதிக இத்யநுசிந்த்ய வ்ருத்தா:
ஸத்யம் ப்ருவந்து தமிமம் வயமாஶ்ரயாம:॥

வ்யாப்தஸ்சவிஷ்ணுரயமித்யவகம்யஏகோஅந்யோவிஷ்ணுவல்லபஇதிப்ரதிதஸ்த்ரிலோக்யாம் । கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஸ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

மண்டுந் தவள வளை தரள மணிக ளிலங்கு மாநிலத்தில்
விண்டு வென்னும் பெயருடனே விளங்கு மொருவன் வேறொருவன்
அண்டு மன்னன் வல்லவனென் றறையும் பேரோ டார்கின்றான்
எண்டுன் றிவரிற் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
அயம்	இந்த
விஷ்ணு	விஷ்ணுவானவன்
வ்யாப்த	வியாபித்திருக்கின்றான்
இதி	என்று
அவகம்ய	அறியப்படுகின்றான்,
அந்ய:	இன்னொருவன்
விஷ்ணுவல்லப:	அந்த விஷ்ணுவுக்குப் பிரபு
இதி	என்று
த்ரிலோக்யாம்	மூன்றுலோகங்களிலும்
ப்ரதித	ப்ரசித்தியடைந்தவன்;
அநயோ:	இவ்விருவருள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்திய	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸத்யம் — உண்மையைப்
ப்ருவந்து — சொல்லலாம்.
தமிமம் — அந்த இவனை
வயம் — நாங்கள்
ஆம்ரயாமः — ஆம்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் வியாபித்திருக்கின்றானென்று அறியப்படுகின்றான், இன்னொருவனந்த வியாபியாகவுள்ளவனுக்குப் பிரபுவாகவிருக்கின்றான்; இவ்விருவர்களுட்சிறந்தவனை இவனென்று அறிவுடைய பெரியவர்களாகிய நீங்கள் சொன்னால், நாங்களந்த மஹாபுருஷனைச்சரணமாகவடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் விஷ்ணு வியாபித்திருக்கின்றான் என்று கூறியது — ஹரியை, அது அவ்வரி அவ்வாறு வியாபித்திருத்தலால்.

விஷ்ணுவென்னும் பெயர் அரிக்கு வியாபகத்தா லுண்டாயதேயாம். இதனை,—

"என்னுஞ்சரணையெதிர்நோக்கியிரங்கவென்னின்
மன்னுமுலகினுயிரொங்கும்வதிந்துளேன்மற்
றுன்னினுறைந்துவினைசெய்யவுஞற்றினேன்யான்
பொன்னின்றிலங்குமுலகெய்துதிபோதியென்றான்" என்று ஸ்ரீ பாகவதத்தில் ஹரி தன்னை வியாபகனென்று உரைத்திருப்பதாகவிருக்கும் மேற்காட்டிய செய்யுளாலும்,

ஸ்ரீஹரிணா ஸர்வவிஷ்ணுர்வ்யாப்தः என்று ஆத்மபோதோபநிஷத்தில் கேட்கப்படுதலாலும்,

"திடவிசும்பெரிவளிநீர்நிலமிவைமிசை
படர்பொருள்முழுவதுமாயவையவைதொறும்
உடன்மிசையுயிரெனக்கரந்தெங்கும்பரந்துளன்
சுடர்மிகுசுருதியுளிவையுண்டசுரனே" என்று நாலாயிரப்பிரபந்தத்தும் வருதலைக்கொண்டுணர்க.

ஒருவனவ்விஷ்ணுவுக்குப் பிரபு என்றது - ஹரனை, அது அவ்வரன் ஹரிக்குப் பிரபுவாகவுள்ளவனென்று கேட்கப்படுதலால். இதனை,

ஸத்ய ஜ்ஞாநாநந்தரூபோ விஷ்ணு ருஹாதிகேதரோ மஹேஶ்வரः

என்றுபநிடதத்தும்,

"விச்சுவன்சிறப்புள்ளாசுயர்த்தவன்விளம்பும்
விச்சுவாதிகனெறும்வலிச்சினவிடையூர்தி
யெச்சமேசுரும்புள்ர்தழாயலங்கலானென்ப
வெச்சநாயகன்பொலந்துணரிதழிமாலிகையான்" என்று காஞ்சிப்புராணத்தும் வருதலைக்கொண்டுணர்க.

தாத்பரியம்.

ஹரி வியாபகன், ஹரன் அவ்வியாபகனை ஹரிக்குப் பிரபு என்பதாம்.

தாரதம்மியம்.

வியாபகனாகவுள்ளவன் சிறந்தவன், அவனைவிட அவனுக்குப் பிரபுவாகவுள்ளவன் சிறந்தவன்; ஆதலால் நாங்கள் இவ்விஷயத்தில் தாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக வொதுக்கிச் சிறந்த ஹரனைச் சரணமாக அடைந்து வணங்குகின்றோம்.—எ-று. (உஎ)

ஏகோ ஜநார்த்தந இதி ப்ரகடீக்ருதோயம்
அந்யஸ்து ஶங்கர இதி ஸ்புடமீர்யதே ஹி।
கோ வாநயோரதிக இத்யநுசிந்தியவ்ருத்தா
ஸ்ஸத்யம் ப்ருவந்து தமிமம் வயமாஶ்ரயாமः॥

ஏகோஜநார்த்தநஇதிப்ரகடீக்ருதோயமந்யஸ்துஶங்கரஇதிஸ்புடமீர்யதேஹி। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாமः॥

மொழிபெயர்ப்பு.

மலர்ப்பூஞ் சோலை வையத்து மன்னுஞ் சனார்த்த னனென்ன
வுலப்பார் பெயரா யார்க்தொருவ னுற்றொருவ னுரையொருவன்
றலப்பா லுயிர்கட் கின்பமதைத் தருசங் கரனத் தானிற்றான்
எலப்பா லாவார் யாரிவரு ளிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பதப்பொருள்.

அயம்	இந்த
ஏக:	ஒருவன்
ஜநார்த்தந:	ஜனங்களைப் பீடிக்கிறவன்
இதி	என்று
ப்ரகடீக்ருத	தெரிவிக்கப்பட்டிருக்கின்றான்,
அந்யஸ்து	இன்னொருவனோவென்றால்
சங்கர:	சுகத்தைப்பண்ணுகின்றவன்
இதி	என்று
ஸ்புடம்	நிச்சயமாக
ஈர்யதேஹி	சொல்லப்படுகின்றானல்லவா;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்திய	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் ஜனார்த்தனனென்று தெரிவிக்கப்பட் டிருக்கின்றான், இன்னொருவன் சங்கரனென்று நிச்சயமாகச் சொல்லப்படுகிறான்; இவர்களுட் சிறந்தவனை இவனென்று பெரியவர்களாகிய நீங்கள் சொன்னால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாகஅடைந்து வணங்குகின்றோம்.

விதப்பு.

ஒருவனை ஜனார்த்தனனென்றது-ஹரியை, அது அவ்வரி ஜனார்த்தனனாக நின்றமையால். ஜனார்த்தனன் என்றால் ஜனங்களைப் பீடித்தவனென்று பொருள் ஆகும்.

ஹரி, ஜகத்ப்ரஸித்தனாகவிருந்த மாவலி மன்னனது யாகசாலைக் குட்புகுந்து மூவடிமண் கேட்க, அவனவ்வாறே கொடுக்க, அவனை வஞ்சிக்குமாறு பேருருவடைந்து ஈரடியாலே மூவுலகளந்து மற்றோரடிக்கவன் தலைமீது காலைவைத்து அவனைப் பாதலத்தி லிருக்குமாறு செய்து பின்னர் செருக்குந் தருக்கும் பொருந்தி யிவ்வுலகத்தினை யழிக்க நிமிர்ந்து நின்றனனென்றும், இரணியனைக் கொல்லுமாறு தூணினின்றும் வெளிப்பட்டு அவனைக் கொன்ற பின்னர் அவனுடைய இரத்தபானத்தால் வெறியுற்று உலகத்தை யழிக்க முயன்று நின்றனனென்றும், அப்பொழுது ஜனங்கள் கஷ்டத்தை யடைந்தார்களென்றும், சோமுகன் பொருட்டு மீனுருவடைந்தபொழுது, கடலைக் கொந்தளிக்கச்செய்து உபத்திரவித்தமையால், ஜனங்கள் வருந்தினார்களென்றும், அமிர்தமதனத்தின்நிமித்தம் ஆமையுருவடைந்தபோது கடற்கரையைப் பேதித்து நின்றமையால், ஜனங்கள் வருந்தினார்களென்றும் கூறுமிவைகளால் ஜனார்த்தனனென்று ஹரிக்குப் பெயராகியது. இதனை—

“ஈரெயிற்றசுரர்கோமான்மாவலியென்போன்றன்னைக்
காரகப்படுத்திமற்றைக்கடிகமழலங்கற்குல்லைத்
தாரகப்படுத்தமாயோன்தன்னிகரின்மைநோக்கிப்
பேரகலண்டமெல்லாம்பிளப்பதற்குருத்துநின்றான்” என்று வரும் ஸ்காந்தபுராணத்தும்,

“எண்ணில்கோடிசிரங்கள்கரங்களிலங்கவுலப்பிலதாங்
கண்ணிறைதீயுலகெங்கும்வளைந்திடமூச்சுமிழ்காலறைய
மண்ணொடுவிண்ணினைநகரவிரித்திடுவாய்புகையாயெழவே
விண்ணவர்முனிவரலைந்துநடுங்கினர்மேவவுமிடமிலதாய்” என்று பாகவதத்தும் வருதலாலுணர்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஒருவன் சங்கரனென்று பிரஸித்தியானவனென்றது - ஹரனே, அது அவ்வரன் அவ்வாறு ஜீவர்களுக்கு இன்பங் கொடுக்கின்றவனாதலால்.

சங்கரன் - சுகத்தைச்செய்பவன். ஹரியனீட்டந்த அகம்பாவமுதலியவைகளாலும், ஆலாலவிஷமுதலியவைகளாலும் ஆன்மகோடிகளுக்குண்டான துன்பங்களை ஹரனகற்றி இன்பத்தை யுண்டாக்கினானென்று நூல்களில் விஸ்தாரமாகக் கேட்கப்படுகின்றன. இதனை—

ஶங்கரோ ஹ வா நாமைஷ ப்ராணஸுகலா ப்ரஜா: என்னும் பைப்பலாதசுருதியாலும்,

" இன்பந்தருவன்குயிலேயேழுலகும்முழுதாளி
யன்பனமுதளித்தூறுமானந்தன்வான்வந்ததேவன்
நன்பொன்மணிச்சுவடொத்தநற்பரிமேல்வருவானைக்
கொம்பின்சுழற்றுங்குயிலேகோகழிநாதனைக்கூவாய்" என்னுந்

தமிழ்வேதத்தாலும், இதர நூற்பிரமாணங்களாலும் உணர்க.

தாத்பரியம்.

ஹரி ஜனங்களை வருத்தி ஜனார்த்தனனானான், ஹரன் ஜனங்களைச் சுகப்படுத்திச் சங்கரன் ஆனான் என்பதாம்.

தாரதம்மியம்.

ஜனங்களைப் பீடிப்பவனைவிட ஜனங்களைச் சுகப்படுத்துபவன் சிறந்தவனாதலால், நாங்களும் சனங்களைப் பீடிக்கிற ஜனார்த்தன நாமனான ஹரியை அப்பிரதானமாக வகற்றிச் சனங்களுக் கின்பத்தைக் கொடுக்கின்ற ஹரனைப் பிரதானமாகக்கருதி வணங்குகின்றோம். ()

பக்தம்பலிம்புநரதஃக்ருதவாநிஹைகோபக்தம்
குபேரமகரோததிகஶ்ரீயாந்ய:।
கோவாநயோரதிகஇத்யநுசிந்த்யவ்ருத்தா
ஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

பக்தம்பலிம்புநரதஃக்ருதவாநிஹைகோபக்தம்குபேரமகரோததிகஸ்ரீயாந்ய: । கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஸ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

தன்றாள் வணங்கும் பலிதன்னைத் தரைக்கீ ழாரத் தாழ்வுன்றி
நின்றா னொருவன் மற்றொருவன் நிகரி லடியை நேசித்த
குன்றா வியலா னனைவசுவிற் குறையாக் குபே ரனாக்கினான்
என்றா விவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக: புந:	ஒருவனானால்
பக்தம்	பக்தனான
பலிம்	பலியை
இக	இந்த உலகத்தில்
அத:க்ருதவாந்	கீழே போகச்செய்தான்,
அந்ய:	இன்னொருவன்
பக்தம்	பக்தனான
குபேரம்	குபேரனை
அதிக:	மிகுதியான
ஸ்ரீயா:	சம்பத்துடையவனாக
அகரோத்	செய்தான்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்தியா	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வயம் — நாங்கள்
ஆஶ்ரயாம: — ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் அன்பனான மாவலியை இந்த உலகத்திற் கீழே போகச் செய்தான், இன்னொருவன் அன்பனான குபேரனை மிகுதியான சம்பத்துடையவனாகச் செய்தான்; இவ்விருவரிற் சிறந்தவனைப் பெரியவர்களான நீங்கள் உண்மையாகச் சொன்னால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாகவடைந்து வணங்குகின்றோம்.

விதப்பு.

ஒருவன் பத்தனான பலியைக் கீழேபோகச்செய்தானென்றது - ஹரியை, அது அவ்வரி அவ்வாறு செய்தமையால்.

மாவலி ஹரியினிடத்து அன்புள்ளவன்; இவன் தனது குலப்பகைஞர்களாகிய தேவர்களிடத்திலன்றிப் பிறரிடத்தி லதிக பிரியமுடையவனாகவிருந்தவன். அவனொருகாலத்தி லொருயாகஞ்செய்ய வுத்தேசித்து யாகாரம்பஞ்செய்து யாகம் நடத்திக்கொண்டிருக்குங்காலத்துத் தேவர்களின் தூண்டுதலா லரி யொரு குள்ளப்பிராமணப் பிரமசாரியாய் அம்மாவலியின் யாகசாலையை யடைந்தனன். உடனே யாகதீக்ஷையுடனிருக்கும் பலிச்சக்கரவர்த்தி வந்த வந்தணனை யுபசரித்தனன். அப்பொழுது அந்தணனாகிய ஹரி நானின்னை வெகு நல்லவனென்று கேள்வியுற்று வந்தேன், வந்த எனக்குத் தவமியற்றவிருத்தற்கு மூன்றடிமண் வேண்டும்; நீ தருதியோவென, அன்னோன் அவ்வாறே தருகின்றேனென் றுரைத்துத் தாரைவார்த்தனன். தாரைநீரைக் கையிலேற்றவுடனே குள்ளனாக நின்ற ஹரி நீண்ட வுருவுடையனாகித் தனதிரண்டு காலடிகளால் மூவுலகங்களையும் அளந்து மூன்றாவதடி மண்ணெங்கென்றதற்கு, மாவலி அண்ணலே! மூன்றாவதடிக்கிடம் என்றலை என்றுரைத்து வணங்கினன். பின்னரம்மாயோ னவனை வருணபாசத்தாற் கட்டி வருத்தினன். இதனை யுணர்ந்துவந்து துதித்த பிரகலாதன்பொருட்டு அம்மாவலியை விட்டு இனி

நீ இங்கிராதே கீழுலகத்திலிரு என்று அவனைக் கீழ்நிலையில் இருக்குமாறு புரிந்தனன். இதனை—

“ உரவுநீருலகமெல்லாமோரடியாயதோங்கும்
இருவிசும்படியொன்றாயதேனையோரடிமற்றெங்ஙன்
தருதிநீதாராயென்னிற்சார்குவைநரகமென்னா
வருணபாசத்தால்வீக்கமாவலிகட்டுண்டானால்.

குருவெகுண்டதனாற்புன்கண்குறுகினன்போலுமென்னாப்
பிரகலாதப்பேரன்பன்பெருமனைக்கண்டுநெஞ்சம்
உருகுறப்புளகமெய்தியுவப்பினோடேத்தாநிற்ப
மருவிரிதுளவமாலைமலரவன்வழுத்திச்சொல்வான்.

உன்பதநீரினாட்டியுற்றநீர்தலையிற்றாங்கி
மன்பெருஞ்செல்வமெல்லாம்வழங்குமாவலிதானென்றும்
இன்பமேபெறுதலல்லாவிடருறற்கியாவன்கொல்லோ
அன்பனென்றுரைத்துப்பாசமவ்வழிநீக்கினானால்.

வீக்கியவருணபாசம்விட்டொழிந்தவுணர்வேந்தன்
மாக்கண்வெம்முலையாள்செய்யமலர்மகள்கொழுநபச்சைத்
தேக்கமழ்துளவத்தாரோய்செப்புமோரடியென்சென்னி
மீக்கண்வைத்தளத்தியென்னவிமலனங்குவந்துவிள்ளும்” என்று பாகவதத்தும்,

“ மன்னிலங்குபாரதத்துத்தேரூர்ந்துமாவலியைப்
பொன்னிலங்குதிண்விலங்கில்வைத்துப்பொருகடல்சூழ்
தென்னிலங்கையீடழித்ததேவர்க்கிதுகாணீர்
என்னிலங்குசங்கோடெழில்தோற்றிருந்தேனே” என்று நாலாயிரப்பிரபந்தத்தும் வருதலைக்கொண்டுணர்க.

ஒருவன் பத்தனான குபேரனைச் சகலசம்பத்தும் உடையவனாகச் செய்தானென்றது - ஹரனை, அது அவ்வரன் அவ்வாறு தன் பத்தனான குபேரனுக்குச் சகல செல்வங்களையுங் கொடுத்தலால்.

விஶ்ரவஸ் மகரிஷியின் சந்ததியான வைச்ரவணன் என்னும் குபேரன் சிவதீக்ஷையுடன் சித்தவடமென்று வழங்குகின்ற சித்தவட

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

க்ஷேத்திரத்தில் ஹரனை வழிபட்டு அன்புபாராட்டிப் பூசித்தனன். அவனன்புக்கிரங்கி ஹரன் அவனுக்கு வடதிசையின் ஆதிபத்தியமும், நவநிதி நாயகத்துவமும், யக்ஷாதிபதித்துவமும், நரவாகனமும், இன்னம் வேண்டிய ஆயுதவாகனாதிகளும் அளித்தனன். இதனை—

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] என்று

சிவரகஸ்யகண்டத்தும்,

"சித்தவடச்சித்தேசுரர்பொற்சேவடியெண்ணிப்
பத்திபயக்கச்சென்றுகுபேரன்பணிதந்தான்
அத்தனையொக்குந்தோழமைகொண்டானருள்பெற்றான்
நத்தமுதற்கோமாநிதியெல்லாநனிபெற்றான்.

எண்ணிநினைந்தவரம்பலயாவையுமெய்துற்றான்
மண்ணியபுட்பகம்வாகனமாகவழங்குற்றான்
திண்ணியவெங்கதையாயுதமெய்துசிறப்புற்றான்
அண்ணலெனவெங்குடையுத்தரதேயமளிக்கின்றான்" என்று கந்தபுராணத்தும் வருதலைக்கொண்டுணர்க.

தாத்பரியம்.

ஹரி தன் பக்தனான பலியைக் கீழே தள்ளினான், ஹரன் தன் பக்தனான குபேரனை கௌரவப்படுத்தினான் என்பதாம்.

தாரதம்மியம்.

தன்னிடத்தி லன்புவைத்த வொருவனை எவ்வளவு தாழ்ந்த தன்மையி னிற்பவனும் வஞ்சித்துக் கீழ்ப்படுத்த மாட்டான். இது இவ்

வாறிருக்க, இவ்வாறி தன்னை வழிவழி யடிமையாக வணங்கு மரபில் வந்தவனும் நீதிமானுமாகிய மாவலியைக் கீழ்ப்படுத்தியது எவ்வளவும் உசிதமான விஷயமல்ல. தன்னை வணங்கிய குபேரனுக்கு ஐசுவரியாதிகளை யளித்த ஹரன் மாவலி விஷயத்தி லிழிவுபுரிந்த ஹரியைவிட உயர்ந்தவனென்பது சொல்லாமலே யமைந்த விஷயம். ஆதலால் அன்பன் விஷயத்திற் கெடுதிபுரிந்த ஹரியை அப்பிரதானமாக அகற்றி அன்பன்விஷயத்தி லுயர்வுபுரிந்த ஹரனைச் சிறந்தவனாக வறிந்து நாங்களந்த ஹரனையே சரணமாக அடைந்து வணங்குகின்றோம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

வ்யாதாதிநீசஹ்ருததைஜவதாகவேகோவ்யாதாயிதோபிநிகமஸ்வ ப்ராஞ்ஞீதோங்ய:। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம் ப்ருவந்துதமிமம்வயமாஸ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

பண்டங் கிளிமென் மொழிமனைமார் பலரை வியாதப் பாதகர்கள்
கண்டங் கடையப் பெற்றவனுங் கண்டா னொருவன் களையொருவன்
புண்டங்கிலவேல்வேடுவனுப்போந்துமறைநாயொடுபொலிந்தான்
எண்டங் கிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற்பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
வியாதாதிநீசஹ்ருததை - ஜவதாக	வேடர்முதலிய நீசசனங்களால் அபகரிக்கப்பட்ட தன்னதான மனைவியாருடையவன்,
அந்ய:	இன்னொருவன்
வ்யாதாயிதோபி	வேடனானும்
நிகமஸ்வபி:	வேதங்களாகிய நாய்களாலே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆச்ரித:	ஆச்ரயிக்கப்பட்டவன்;
அநயோ	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா:	யாவன்?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்த்யா	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் தன் மனைவியை வேடர் முதலிய இழிஞர்க்ளு மபகரிக்கு மியல்பினனுயினன், இன்னொருவன் தான் வேடனுனலும் வேதங்களாகிய நாய்களாலே ஆச்ரயிக்கப்பட்டவனுகவிருக்கின்றான்; இவ்விருவரிற் சிறந்தவனைப் பெரியவர்களான நீங்கள் சத்தியமாகச் சொன்னால்,நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாகவடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் வேடர் முதலிய இழிஞர்களாலே அபகரித்த மனைவியை யுடையவனென்றது - ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணம் வேடர்களா லபகரிக்கப்பட்ட மனைவியை யுடையவனுதலால்:

ஹரி கண்ணனுகத்தோன்றி இறந்து பட்டபின்பு, அவன் மைத்துனனுன பார்த்தன் அக்கண்ணன் மனைவியரிற் றீயில் விழுந்திறந்தவர்கள் தவிர வுள்ள மற்றையவர்களை அழைத்துக்கொண்டு அத்தினபுரியைக் கருதிவருங்காலத்தி விடையிலொரு விடத்திற் றங்கியிருந்த வொரு இராத்திரியில் அநேகம் வேடர்களான திருடர்கள் வந்து ஆளுக்கொருத்தியை யிழுத்துக்கொண்டு போய்விட்டார்கள். பின்

னர் அவ்வேடர்களுடன் போர்புரியத் திறமற்றவனுகப் பார்த்தனும் தன்னூரடைந்தனன். இதனை—

" ஈரொண்ணுயிரர்முதலேழைமார்களைச்
சீரிலாவேடுவர்சினத்திற்கைக்கொளப்
போரினுன்மிகுந்தக்காண்டீவம்பூங்கணை
வீரமோடென்வலிவிசையங்கைக்கொடு" என்று ஸ்ரீ பாகவதத்தில் வருதலைக்கொண்டுணர்க.

ஒருவன் வேடனுனலும் வேதங்களாகிய நாய்களாற் சூழபெற்றானென்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வாறிருந்திருத்தலால்.

ஹரன் பாசுபதாத்திரத்தைக்கருதித் தன்னைக்குறித்துக் காமியார்த்த தவம்புரிந்த அருச்சுனனுக் கருள்புரியும்பொருட்டு வேடரூபமடைந்து சென்றபோழ்து, வேதங்களும் நாய்ரூபமடைந் துடன்வரச் சென்றனன். இதனை—

[illegible]
[illegible]
[illegible]
[illegible] என்று ஸ்ரீமஹாபாரதத்தும்,

" மிக்கவன்றவஞ்சோதிப்பான்வேட்டுவக்கோலமாகித்
திக்கெலாமன்னங்கோலந்தொடருமோர்தேவதேவர்
மைக்குழலன்னம்பின்னேதொடரமற்றொருகோலத்தைப்
புக்குறத்தொடர்வார்போலப்புகுந்தனர்பொருவில்லேந்தி" என்று குற்றாலபுராணத்தும்,

" அநந்தவேதமுமிறைவனேவலினன்ஞானிகளாயருகுசூசு
அநந்தகோடியிற்கோடிகணநாதர்வேட்டுவராயருகுபோத
வநந்தனுவினித்தரிக்கவரிதரிதிப்பூதலமென்றமரர்கூற
வநந்தமாமுகமாகியடிச்சுவடுநோக்கினனடவியெல்லாம்" என்று பாரதத்தும் வருதலைக்கொண்டுணர்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தாத்பரியம்.

ஹரியின் மனைவியரை வேடர் முதலிய இழிந்தவர்கள் இழுத்துக்கொண்டு போயினார்கள், ஹரன் வேடவுருவடைந்தும் வேதங்களாகிய நாய்களாற் சூழப்பெற்றான் என்பதாம்.

தாரதம்மியம்.

நல்ல ஜாதியர்களாற் கைக்கொள்ளப்பட்டாலும் ஒருவன் மனைவியைப் புகழுவோரிவ்வுலக முதலிய வெவ்விடங்களிலு மில்லை, அநேக மனைவியரை வேடர் முதலிய நீசஜன்மிகளால் அபகரிக்கப்படும் துர்ப்பாக்கியத்தினையுடையவனை இந்த உலகத்தில் எவன் சிறந்தவனாக வுள்ளவனென்று கூறுவான். இதனையுத்தேசிக்குங்கால் வேடர்முதலிய நீசர்களாலபகரிக்கப்பட்ட மனைவியரையுடைய ஹரி இவ்விஷயத்திற் பலராலும் இகழப்பட்டவனாகின்றான்; வேடரூபத்தை யடைந்தாலும், ஹரன் கௌரவஹானி யில்லாமலிருத்தலால், இவ்விஷயத்திற் சிறந்தவனாகின்றான். ஆதலால் நாங்கள் மனைவியைப் பறிகொடுத் திழிவடைந்த ஹரியை அப்பிரதானமாக வொதுக்கி கிராதரூபத்திலும் மனைவியுடனும், வேதங்களான நாய்களுடனுமிருக்கும் ஹரனைச் சரணமாக வடைந்து வணங்குகின்றோம்.—எ-று.

ஏகஸ்ய ஸேவகஜநா ப்ருஶம் தக்தகாத்ரா
அந்யஸ்ய ஸுப்ரம்ருதுபூதவிபூதிரோகா:।
கோவாநயோரதிக இத்யநுசிந்த்ய வ்ருத்தா
ஸத்யம் ப்ருவந்து தமிமம் வயமாஶ்ரயாம:॥

ஏகஸ்யஸேவகஜநாப்ருஶதக்தகாத்ரா அந்யஸ்யஸுப்ரம்ருதுபூதவிபூதிரோகா:। கோவாநயோரதிகஇத்யநுசிந்த்யவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

மணிநீர் வையத் தொருவனடி மருவிச் சேவை புரியடியர்
திணிதோள் முதல விடமெல்லாந் தீயாற் சுட்டுத் திரிதருவோர்
கணிசே ரொருவன் றிருவடியர் கனமா நீறு காணுதலோர்
எணிலீ ரிவருட் சிறந்தவர்க ளிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏகஸ்ய	ஒருவனுடைய
ஸேவகஜநா:	அடிமைகள்
ப்ருஶதக்தகாத்ரா:	மிகவும் சுடப்பட்ட சரீரமுடையவர்கள்,
அந்யஸ்ய	மற்றொருவனுடைய
ஸேவகஜநா:	அடிமைகள்
ஸுப்ரம்ருதுவிபூதிரோகாபூத-	வெண்மையாயும், மிர்துவாயும், பரிசுத்தமாயுமிருக்கிற விபூதிரேகையோடு கூடினவர்கள்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்திய	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவனுடைய பத்தசனங்கள் சுடப்பட்ட சரீரத்தினையுடையவர்கள், மற்றொருவனுடைய பத்தசனங்கள் மிகவும் வெண்மையான பஸ்மதாரிகளாகவுள்ளவர்கள்; இவ்விருவர்களுட் சிறந்தவனை இவனென்று பெரியவர்களான நீங்கள் கூறுவீர்களானால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக வடைகின்றோம்.

விதப்பு.

ஒருவனுடைய பக்தஜனங்கள் சுடப்பட்ட சரீரங்களையுடையவர்களென்றது-ஹரியை, அது அவ்வரி பக்தர்கள் அவ்வாறு சுட்டுக்கொள்ளுதலால். இதனை—

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"சென்னியோங்குதண்திருவேங்கடமுடையாயுலகு
தன்னைவாழநின்றநம்பிதாமோதராசதிரா
என்னையுமென்னுடமையுநின்சக்கரப்பொறியொற்றிக்கொண்டு
நின்னருளேபுரிந்திருந்தேனினியென்திருக்குறிப்பே" என்னும் நாலாயிரப்பிரபந்தத்தாலுணர்க.

ஒருவனுடைய பத்தசனங்கள் வெண்மையும் மிகுதிவுந் தூய்மையுமானதான விபூதியைத் தரிக்கப்பெற்றவர்களாக விருக்கின்றார்கள் என்றது-ஹரனை, அது அவ்வரபத்தர்கள் அவ்வாறு தரித்துக் கொள்ளுதலால். இதனை—

"எவரேனுந்தாமாகவிலாடத்திட்ட திருநீறுஞ்சாதனமுங் கண்டாலுள்கி, யுவராதேயவரவரைக்கண்டபோதேயுகந்தடிமைத்திறநினைந்தங்குவந்துநோக்கி, யிவர்தேவரவர்தேவரென்றுசொல்லியிரண்டாட்டாதொழிந்திசன்றிறமேபேணிக், கவராதேதொழுமடியார்நெஞ்சினுள்ளேகன்றாப்பூர்நடுதறியைக்காணலாமே" என்று வருந் திரவிடருக்தத்தாலுணர்க.

தாத்பரியம்.

ஹரிபத்தர் சுடப்பட்ட உடம்பினர்; சிவபத்தர் விபூதிதாரண சரீரிகள் என்பதாம்.

தாரதம்மியம்.

மிகவுஞ் சுடப்பட்ட சரீரத்தினையுடைய பத்தர்களை யுடையவனைக்காட்டிலும், மிகவும் பரிசுத்தமான விபூதியைத் தரித்த பத்தர்கள் கஷ்டமில்லாதவர்களாதலாலே சுடப்பட்ட தேகங்களை யுடையவர்களை பத்தர்களாகவுடையவனைவிட தூய்மையான விபூதிதாரிகளான பத்தர்களையுடையவன் சிறந்தவனாதலால், இவ்விஷயத்திற் றாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக வகற்றிச் சிறந்த ஹரனை நாங்கள் வணங்குகின்றோம்.—எ-று. (ருக)

ஏகோ நிதாந்தமபவத்வடபத்ரசாயீ
ஹ்யந்யோ ஹி தாத்ருசமஹாவடமூலவாஸீ।

கோவாநயோரதிக இத்யநுசிந்த்ய வ்ருத்தா:
ஸத்யம் ப்ருவந்து தமிமம் வயமாச்ரயாம:॥

ஏகோநிதாந்தமபவத்வடபத்ரசாயீஹ்யந்யோஹிதாத்ருசமஹாவடமூலவாஸீ। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிம்வ்யமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

தரள மிப்பி யீன்றிறைக்குந் தண்ணீ ருலகிற் சாரொருவன்
விரள மொன்றி வடத்திலையில் வீழ்வா னுவான் வேறொருவன்
கரள மொன்று களத்தோடக் கல்லா னிழலின் கண்ணுறுவான்
சரள மொன்ற லெவரிடைநீர் சாற்றிற் பெரியீர் தாழுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
நிதாந்தம்	எப்பொழுதும்
வடபத்ரசாயீ அபவத்	ஆலிலையிற்படுத்துக்கொள்ளுகிறவனானான்,
அந்ய:	இன்னொருவன்
தாத்ருஶவடமூலவாஸீ	அப்படிப்பட்ட ஆலமரத்தினடியிலிருக்கிறவனாக
அபவத்	ஆனான்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்திய	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பொழிப்பு.

ஒருவன் சதா ஆலிலையிற் கிடைப்பவனுக்வானன், இன்னொருவன் அவ்வாலினடியிலிருப்பவனுகவானன்; இவ்விருவருக்குள் பெரியவர்களே! யாவன் சிறந்தவன்? நீங்கள் உண்மையைச் சொல்லுங்கள். நாங்கள் உங்களாற் சொல்லப்பட்ட அந்த மஹாபுருஷனைச் சரணமாக வடைகின்றோம்.

விசேஷம்.

ஒருவன் எப்பொழுதும் ஆலிலையிற் கிடந்தானென்றது - ஹரியை, அது அவ்வரி அவ்வாறு கிடத்தலால். இதனை—

“ பாலகனென்றுபரிபவஞ்செய்யேல்பண்டொருநாள்
ஆலினிலைவளர்ந்தசிறுக்கனவனிவன்
மேலெழப்பாய்ந்துபிடித்துக்கொள்ளும்வெகுளுமேல்
மாலைமதியாதேமாமதீவிளாங்தோடிவா” என்னு நாலாயிரப்பிரபந்தத்தாலுணர்க.

ஒருவன் அவ்வாலின்கீழிருந்தானென்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வாறிருத்தலால். இதனை—

“ ஒரானீழலொண்கழலிரண்டு - முப்பொழுதேத்திய நால்வர்க்கொளிநெறி-காட்டினை” என்று திருஞானசம்பந்தப்பெருமான் றிருவாய்மலர்ந்த திரவிடவேதத்தாலும்,

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] என்று உபநிஷத்துக் கூறுதலாலுணர்க.

தாத்பரியம்.

ஹரி ஆலிலையிற் கிடந்தான், ஹரன் ஆனிழலி லிருந்தானென்பதாம்.

தாரதம்மியம்.

ஒரு ஆலிலையிற் கிடந்து வீணே உறங்குபவனைக்காட்டிலும், ஆலினடியில் ஞானோபதேசியாக இருப்பவன் சிறந்தவன். இதனுல் ஆலிலையிற் கிடந்த ஹரியைவிட ஆலினடியிலிருந்த ஹரன் சிறந்தவனுதலால், இவ்விஷயத்திற் குழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக வகற்றி இவ்விஷயத்திற் சிறந்த ஹரனைப் பிரதானமாக நியாயமுகத்தாலுணர்ந்து நாங்களந்த மஹானுகிய ஹரனைச் சரணமாக வடைந்து வாழ்கின்றோம்.—எ-று. (௬௨)

ஏகோ ததௌ ஸிதம்ருதம் திலகம் லலாடே
அந்யோ ததௌ ஹுதவஹம் திலகம் லலாடே ।
கோவாநயோரதிக இத்யநுசிந்த்ய வ்ருத்தாஸ்
ஸத்யம் ப்ருவந்து தமிமம் வயமாஸ்ரயாம: ॥

ஏகோதடௌஸிதம்ருதம்திலகம்லல.டேஹ்யங்யோதடௌஹூத வஹம்திலகம்லலாடே । கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ் ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஸ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

கொண்டற் கச்சுக் கிரிமுலையார் கோதை யிடத்திற் கூறொருவன்
மண்டெற் றிடுமோர் நெற்றியினுன் மற்று மொருவன் குற்றமிலா
தொண்டெற் றிடுமெவ் வுதவகனை ஒருநற் றிலத மாவுடையான்
கண்டெற் றிவருட் சிறந்தவனைக் களைந்தாற் பெரியீர் காணுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
லலாடே	நெற்றியில்
ஸிதம்ருதம்	வெள்ளை மண்ணை
திலகம்	திலகமாக
ததௌ	தரித்தான்,
அந்ய:	இன்னொருவன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஹுதவம்	அக்கினியை
லலாடே	நெற்றியில்
திலகம்	திலகமாக
தடுதௌ	தரித்தான்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன் ?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஸ்ரயாம:	ஆஸ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் திலதமாக வெள்ளைமண்ணை நெற்றியிலணிந்தான், மற்றொருவன் திலதமாக அக்கினியை நெற்றியிலணிந்திருக்கின்றான்; இவ்விருவருட் சிறந்தவனைப் பெரியவர்களே நீங்கள் கூறினால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக வடைந்து வாழ்கின்றோம்.

விதப்பு.

ஒருவன் நெற்றியில் மண்ணைத்தரித்திருக்கின்றானென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வாறு தரித்திருத்தலால். இதனை,—

"பூப்பிட்டானைப்புரந்தருனென்றுமுன்
கூப்பிட்டானைத்தன்குக்கியுட்கூவெலாம்
ஆப்பிட்டானையகிலனெந்தனைக்
காப்பிட்டானைக்காப்பிட்டனன்காரிகை" என்று பாத்மோத்தரத்தும்,

"ஜ்வினீரதனால்மஞ்சனமாட்டியதினுறுமண்கொடுவிளக்கிச்
சாய்பன்னிரண்டுநாமமுஞ்சாத்திச்சதுமறையோதும்வேதியர்கள்
நாவின்மந்திரநீருடலெலாந்தெளித்துநவையில்கோதானமுநல்கிக்
காவிகொள்விழியார்கருப்புரதீபங்காட்டினர்கவினுறப்பலகால்" என்று பாகவதத்தும் வருதலைக்கொண்டுணர்க.

ஒருவனக்கினியைத் திலதமாக வுடையவனாக விருக்கின்றானென்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வாறு நெற்றியில் திலதம்போன்ற அக்கினிக்கண் உடையவனாக இருத்தலால். இதனை—

யொரீலலெயவத்ரீவ—ஈநுஷாஹுகாஜோ - காலெஒவொஜ ஸஹுஸ்ர ஶீநெத்ர: என்று பைப்பலாத சுருதியிலும்,

"சுற்றுமமரர்சுரபதிநின்றிருப்பாதமல்லால்
பற்றொன்றிலோமென்றழைப்பப்பரவையுணஞ்சையுண்டான்
செற்றங்கனங்கனைத்தீவிழித்தோன்றன்றில்லையம்பலவன்
நெற்றியிற்கண்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே"
என்று திரவிடசுருதியிலும்,

"சந்தனக்களபந்துதைந்தநன்மேனித்தவளவெண்பொடிமுழுதாடும், செந்தழலுருவிற்பொலிந்தநோக்குடையதிருநுதலவர்கிடம்போலும், இந்தனவிலங்கலெறிபுனந்தீப்பட்டெரிவதொத்தெழுநிலைமாடம், மந்தணரழலோம்பலைபுனற்களந்தையணிதிகழாதித்தேச்சரமே" என்று திருவிசைப்பாவிலும் வருதலைக்கொண்டுணர்க.

தாத்பரியம்.

ஹரி நெற்றியில் மண்ணைத் தரித்தான், ஹரன் நெற்றியிலக்கினிக்கண்ணைத் தரித்தான் என்பதாம்.

தாரதம்மியம்.

ஒருவன் சாமான்யமாக வெல்லாராலும் தரிக்கத்தக்கவொரு வஸ்துவைத் தரித்திருப்பானாயின் அவனை யாவரும் மதிப்பாகக்கொள்ளார்கள்; பிறராற் றரிக்கமுடியாத வஸ்துவை ஒருவன் தரித்திருப்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாஞயின் அவனை அனைவருஞ் சிறப்பாகவே கொள்வார்கள் என்பது நியாயமாதலால், கேவலம் மண்ணை வென்றியிலணிந்துள்ள ஹரியை நாம் அந்த விஷயத்தில் எப்படி சிறந்தவனாகச் சொல்லலாம். இது எல்லாராலும் ஆகும் விஷயம். இதனால் இவ்விஷயத்திற் சூழ்வுண்டாகிய ஹரியை அப்பிரதானமாக அகற்றி, உயர்ந்த ஹரனை நாங்கள் வணங்குகின்றோம்.—எ-று. (கக)

𑌏𑌕𑍋 𑌦𑌧𑌾𑌤𑌿 𑌤𑍁𑌲𑌸𑍀𑌦𑌳𑌮𑌾𑌲𑌿𑌕𑌾𑌂 𑌹𑍃
𑌦𑍍𑌯𑌨𑍍𑌯𑍋 𑌦𑌧𑌾𑌤𑌿 𑌵𑌿𑌧𑌾𑌤𑍃𑌕𑌪𑌾𑌲𑌮𑌾𑌲𑌾𑌂।
𑌕𑍋 𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾
𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁 𑌤𑌮𑌿𑌮𑌂 𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகோ ததாதிதுலஸீதளமாலிகாம்ஹ்ருத்ந்யோ ததாதிவிதாத்ருகபாலமாலாம்| கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாமஃ||

மொழிபெயர்ப்பு.

பச்சென்றொளிரும்வடத்திலையைப்பறித்துக்கட்டும்பலதொடையல்
வைச்சொன் றகலத் தானொருவன் வையந் தன்னை யீன்றபுத்தர்
உச்சந் தலைகள் பலவணியா வுகந்துதிரியு மொருபெரியோன்
இச்சந் தர்களுட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏகஃ	ஒருவன்
ஹ்ருதி	மார்பில்
துலஸீதளமாலிகாம்	துளசியிலைமாலையை
ததாதி	தரிக்கிறான்,
அந்யஃ	மற்றொருவன்
விதாத்ருகபாலமாலாம்	பிரமர்களுடைய கபாலமாலைகளை
ததாதி	தரிக்கிறானல்லவா;
அநயோஃ	இவ்விருவருக்குள்
கோவா	யாவன்

	சிறந்தவன்?
அதிகஃ	இதனை
இதி	பெரியவர்கள்
வ்ருத்தாஃ	ஆலோசித்து
அநுசிந்திய	உண்மையை
ஸத்யம்	சொல்லலாம்.
ப்ருவந்து	இந்த இவனை
தமிமம்	நாங்கள்
வயம்	ஆஶ்ரயிக்கின்றோம்.
ஆஶ்ரயாமஃ	

பொழிப்பு.

ஒருவன் மார்பிற் றுளசிமாலையை யணிந்திருக்கின்றான், இன்னொருவன் பிரமர்களின் கபாலங்களை மார்பிலணிந்துகொண்டிருக்கின்றான்; இவ்விருவரில் சிறந்தவனைப் பெரியவர்களாகிய நீங்கள் சொன்னால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாகவடைந்து வாழ்கின்றோம்.

விதப்பு.

ஒருவன் துளசிமாலையை மார்பிலணிந்திருக்கின்றானென்றது — ஹரியை, அது அவ்வரி அவ்வாறு தரித்திருத்தலால். — பூர்வத்தில் ஸ்ரீகைலாயமலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைத் தரிசிக்கும்பொருட்டுச் சென்ற இந்திரன் செருக்குடையனாதலையுணர்ந்த சிவபெருமான் ஒரு பூதரூபத்துடன் கோபுரவாசலில் நின்றனன். அப்பொழுது அங்குவந்த இந்திரன் பூதனைப்பார்த்து பூத ஈசற்குச் சமயமென்னை என்றனன். அதற்குப் பூதனொன்றும் பேசாது வாளா இருமாந்து நிற்பதைக்கண்ட அவ்வலாரி தன்கை வச்சிரத்தால் அப்பூதனை அடித்தான். பூதன்மீது பட்ட வச்சிரம் நுறுங்கிப் பாழாகவே இந்திரன் அச்சமுற்றனன்; இறைவனும் மிக்க கோபத்துடனெதிரே தோன்றினன். உடனே இந்திரன் அந்தோ! இறைவனென்று அறியாது தகாத காரியஞ்செய்தோமே என அச்சுற்று வீழ்ந்து வணங்கி வேண்டிக்கொண்டனன். இந்திரன் வேண்டுகோ

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ளுக்கிரங்கிய சிவபெருமான் தன்னிடத்துண்டாகிய சீற்றத்தை கட
னடுவில்விட்டு இந்திரன்மீது கருணைகாட்டிச் சென்றனன்.

பின்னரக்கோப மொரு கொடிய அசுர வடிவத்தை யடைந்து
மஹாவீரனுய் வெகுகால் மருந்தவஞ்செய்து பெரிய வரங்களைப்பெ
ற்று மிகவுஞ்சிறந்தவனுய் அனேககாலமிருந்தனன். அவன் மனைவி
ப்ருந்தையென்று பேருள்ளவள்; மஹா சுந்தரி. அசமானமான லாவ
ண்யமுள்ள அப்ருந்தையைக்கண்டு காதலுற்ற ஹரி, சலந்தரன்
தன்னுல் வெல்லக்கூடாத பராக்கிரமியா யிருத்தலைத் தானவனுெடு
பலதரம் போர் புரிந்து தோற்றமையா லுணர்ந்தவனுதலால் அவன்
மரணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனன். சிலகாலங் கழித்து
அந்தணவுருவத்துடன் வந்த சிவபெருமானு லமைக்கப்பெற்ற சக்கர
த்தினுல் இருபிளவாகி விழுந் தழிந்தனன் சலந்தரனென்பதை யுணர்
ந்தான். உணர்ந்து, இதைவிட வேறே தருணம் இல்லையென்று
ஒரு வயோதிகனுன முனியைப்போல வேஷந்தாங்கி ப்ருந்தை யுலா
வும் பூங்காவனத்தி லிருந்தனன்.

கணவனது மரணத்தையுணராத வம்மாது பூந்தோட்டத்தி லிரு
க்கும் முனிவனைக்கண்டு வணங்கி, ஐயரே! எனது கணவன் கைலா
யத்திற்குச் சேனைகளுடன் போயினுன், இன்னம் வந்தானில்லை.
திவ்யத்ருஷ்டியினையுடைய தாங்கள் எப்பொழுது வருவானென்று
கூறவேண்டுமென்று வேண்டிக்கொண்டனள். அக்கப்டமுனிவன்
அதற்கென்ன, அவ்வாறே செய்கின்றேனென்று தனது கண்களை
மூடிக்கொண்டு சற்றுநாழிகையிருந்து பின்னர் கண்ணைத்திறந்து,
மாதே! அஞ்சாதே. நான் சகல சித்திகளையும் உணர்ந்தவன். என
ணுல் இறந்தவர்களையும் எழுப்ப முடியும். ஆதலால் நீயஞ்சாதே
என்று கூறித் தனது தௌவாரிகளாகிய இரண்டு வானரங்களால்
அவ்விறந்த சலந்தரனுடலை அங்கு கொண்டுவரச்செய்தனன்.

பின்னர் தன் கணவனது மரணத்தைக்கண்டு கவலுகின்ற காரி
கையை நோக்கி, நீ அஞ்சாதே; நின் கணவனை நானெழுப்பித்தருகி
ன்றேனென்று கூறி, இருபிளவான உடலை யொன்றுப்படுத்தி யவனு

ணராமல் அதனில் தானே புகுந்து உயிருள்ளவனுகச் சலந்தரனெழு
ந்ததாக நடித்தனன்.

விஷ்கபடையான் ப்ருந்தை தன் கணவனென்றே கருதி மிக்க
சந்தோஷத்துடன் இறுகத்தழுவினுள். இதனுலானந்தமுற்ற கபட
சலந்தரன் அரண்மனையடைந்து அநேககாலம் அவளொடு ரமித்தனன்.
பின்னரொருநாள் தன்னை மறந்து தூங்கிவிட்டான். தூங்கும்பொழு
து பார்த்த ப்ருந்தையின் கண்ணுக்குச் சலந்தரன் காணப்படவில்லை;
நாராயணன் காணப்பட்டான். உடனே நாராயணனுடைய இழிந்த
இச்செய்கைக்கு வெறுப்புற்றுப் பல தீயசாபங்களையிட்டு அவனுணர்
தற்கு முன்னே அக்கினிப்பிரவேசமாயினுள்.

இவளெரிந்து சாம்பரானபின்பு எழுந்த நாராயணன் அவளது
மரணத்தாற் சோகமுற்று ஏங்கி அச்சாம்பலிலேயே அதிக மோகத்
துடன் புரளத்தொடங்கினுன். இவ்வநுசித காரியத்தைக்கண்ட தே
வர்கள் மஹாதேவியினிடம் கூறினுர்கள். மஹாதேவியும் தன் திரு
மேனியினின்றுஞ் சற்றே அழுக்குருட்டி எடுத்து இதனைக்கொண்டு
போய் அவ்வசுரியின் உடற்சாம்பலிலிட்டுத் தண்ணீர் விடுங்களென்ற
னள். அவர்களும் அவ்வாறே செய்தார்கள். அப்பொழுது அச்சாம்ப
லில் நின்றும் ப்ருந்தையென்று பேருள்ள க்ருஷ்ணதுளசிச்செடிகள்
தோன்றின. அவைக ளந்நாரணனுக்கு அப்ருந்தையாகக் காணப்பட்
டமையால், அதனைத் தன் மார்புமுதலியவற்றில் அவள் பரிசிப்பதைப்
போல பரிசிக்குமாறு அத்தழைகளைப் பறித்துத் தரித்துக்கொண்
டான் என்று வியாசர் ஸ்காந்தபுராணத்திற் கூறியிருக்கின்றுர்.

திருமால் துளசி யணிபவனென்பதை "வனமாலிபட்டியிடந்தோ
ன்" என்றும்,

"அணுங்கவென்னைப்பிரிவுசெய்தாயர்பாடிகவர்ந்துண்ணும்
குணுங்குநாறிக்குட்டேற்றைக்கோவர்த்தனனைக்கண்டீரோ
கணங்களோடுமின்மேகம்கலந்தாப்போல்வனமாலை
மினுங்கநின்றுவிளையாடவிருந்தாவனத்தேகண்டோமே" என்று
வரும் நாலாயிரப்பிரபந்தத்தாலும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"மட்டுலாவுதண்டுழாயலங்கலாய்புலன்கழல்
விட்டுமீள்விலாதபோகம்விண்ணில்நண்ணியேறினும்
எட்டினோடிரண்டெனுங்கயிற்றினால்மனந்தனைக்
கட்டிவீடிலாதுவைத்தகாதலின்பமாகுமே" என்று திருமழிசை யாழ்வாரும் கூறியிருத்தலாலுணர்க.

ஒருவன் பிரமர்களின் கபாலங்களைத் தரித்திருக்கின்றான் என்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வாறு தரித்திருத்தலால். இத்தனை பிரமர்களிறந்தார்களென்று இனிவரும் பிரமர்களும் அறியும்வண்ணம் ஹரனாலிவைகள் தரிக்கப்பட்டன. இதனை—

"கற்பங்கள்தோறுந்தோன்றுங்கணக்கிலாப்பிரமர்மாயர்
முற்பொன்றுந்தலைகள்கோத்துநாற்றியமுளிபுன்மாலை
பொற்பொன்றுநமதுசென்னிபுயமனாசரணமெங்குஞ்
சிற்பங்கள்விளங்கப்பூண்டதிறமிதுநோக்கிக்காணாய்" என்று வருங் காஞ்சிப்புராணத்தாலும் பிறவற்றாலும் உணர்க.

தாத்பரியம்.

ஹரி துளசிமாலையை யணிந்தான், ஹரன் அநேகாயிரம் பிரம கபாலங்களை அணிந்தானென்பதாம்.

தாரதம்மியம்.

ஒருவனணியும் அணியினாலொரு மதிப்புவேண்டும், அப்பொழுதுதான் அந்த அணி அணிந்தவனுடைய தன்மைவிளங்கும். ஹரி துளசியைத் தரித்திருத்தலால் விளங்கும் பிரபாவமொன்றுமில்லை; ஹரன் பிரமர்களின் கபாலங்களை அணிந்திருத்தலால் நித்தியன் என்னும் பிரபாவம் கேட்கப்படுகிறது. அதனால் நாங்கள் இவ்விஷயத்தில் ஹரியை அப்பிரதானமாக வகற்றி ஹரனைப் பிரதானமாகக்கொண்டு வாழ்கின்றோம்.—எ-று.

(ருசு)

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

ஏகோம்ருகக்ரஹணதோகஹநேசசார த்வந்யேம்ருகங்கரதலே நிவஹந்ஸ்தாஸ்தே। கோவாநயோரதிக இத்யநுசிந்த்யவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஸ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

கத்துங் கரியுங் கோடரமுங் கனலுங் கொடிய காட்டினின்மா
னெத்தும் பரிவு கொண்டொருவ னெங்கு முலவ வேய்ந்துற்றான்
உத்துங் கமதார் மானொன்றை யொருவன் றாங்கி யுறுகின்றான்
இத்துங் கர்தமிற் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
ம்ருகக்ரஹணத:	மானைப் பிடிக்கும்பொருட்டு
ககநே	காட்டில்
சசார	சஞ்சரித்தான்,
அந்ய: து	இன்னொருவனானால்
ம்ருகம்	மானை
ஸதா	எப்பொழுதும்
கரதலே	கையில்
நிர்வஹந்	வைத்துக்கொண்டவனாக
ஆஸ்தே	இருக்கிறான்;
அநயோ:	இவ்விருவருக்குள்
கோவா	யாவன்
அதிக:	சிறந்தவன்?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்தியா	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன். மானைப் பிடிக்கும்பொருட்டுக் காட்டிலுலாவினான்; இன்னொருவன் எப்பொழுதும் மானைக் கையிற் பிடித்துக்கொண்டிருக்கின்றான்; பெரியவர்கள் உண்மையாக இவர்களிற் சிறந்தவனை இவனென்று சொன்னால், அந்த மஹாபுருஷனை நாங்கள் சரணமாக அடைந்து வாழ்வோம்.

விதப்பு.

ஒருவன் மானின்பொருட்டுக் காட்டிலுலாவினானென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வாறு இயற்றியிருத்தலால்.

ஹரி - இராமனாகிய ஞான்று சிற்றன்னையி னாணைக்குட்பட்டு மனைவியும் இளையவனும் உடன்வர வனவாசியாகித் தண்டகாரண்யத்தில் இருந்தபோழ்து; சூர்ப்பநகையென்பவள் இராவணனிடஞ் சென்று இராமன் மனைவியின் பேரழகை வர்ணித்தவுடனே, இராவணன் இராமன் மனைவியை விபசரிக்கக்கருதி, இராமனை யவன் மனைவியான சீதையி னருகினின்றும் பிரிக்கும்வண்ணம் மாரீசனென்பவனை நீ ஒரு மாயமானுருவுடன் செல்லென்றனுப்பினான். அவனும் பொன்மயமான மானாக இராமன் மனைவியின் எதிரே உலாவினான். அவளும் அதனைக் கபடமானென்றுணராது தன் கணவனைப் பிடித்துத் தருமாறு வேண்டினாள்; அவனும் பெண்புத்திக்கிசைந்து வில்விலம்பு வைத்துக்கொண்டு அதன் பின்னாலே உலாவினானென்பதை உலகரெனைவரு மறிவார்கள். இதனை—

"வலிவணக்குவரைநெடுந்தோள்விராதைக்கொன்று
வண்டமிழ்மாமுனிகொடுத்தவரிவில்வாங்கிக்
கலைவணக்குநோக்கரக்கிமூக்கைநீக்கிக்
கரனோடுதூடணன்றனுயிரைவாங்கிச்

சிலைவணக்கிமான்மறியவெய்தான்றன்னைத்
தில்லைநகர்த்திருச்சித்திரகூடந்தன்னுள்
தலைவணங்கிக்கைகூப்பியேத்தவல்லார்
திரிதலால்தவமுடைத்துத்தரணிதானே" என்று குலசேகர மன்னன் கூறியிருத்தலைக்கொண்டுணர்க.

ஒருவன் எப்பொழுதும் கையின் மானைப் பிடித்துக்கொண்டிருக்கின்றானென்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வாறு சதா மானைப் பிடித்துக்கொண்டிருத்தலால்.

தாருகாவனமுனிவர் யாகஞ்செய்து எழுப்பிய மானை அதன் கருவடங்க ஹரன் இன்றும் தரித்திருக்கின்றான்.

ஏகோமார்கயதே ஹரிர்மூகம் பாணினா ஹரோ தத்தே ।
திஷ்டேத்கணாதிகோ வி பக்ஷாந்துவைஸாஷ்பார்ஜிகம் ॥

என்று ஸ்காந்தபுராணத்தும்.

ஏகோமார்கயதே க்ஷிதிம் ஸவைரம் ஹரிணம்

ஹஸ்தே ந தத்தே - ஜா நாவஸத்விகபாதேநாஹ ஜகவா

ஸா ஓவஸ்வகாஸாராவதாய: என்று மார்க்கண்டேய சுருதியிலும் கேட்கப்படுதலைக் கொண்டுணர்க.

தாத்பரியம்.

ஹரி மானின்பொருட்டுக் காட்டிற் றிரிந்தான், ஹரன் மானைக் கையிற் பிடித்திருக்கின்றான் என்பதாம்.

தாரதம்மியம்.

கேவலம் மானைப்பிடிக்க வலைந்து திரிந்தவனைக்காட்டிலும், மானை என்றுங் கையில் வைத்திருப்பவன் அந்தவிஷயத்தில் சிறந்தவனாதலால், நாமும் மானுக்கலைந்த ஹரியை இந்த விஷயத்தில் அப்பிரதானமாக அகற்றி ஸதா மானைத்தாங்கிய ஹரனை அடைந்து வணங்கி அவ்வரனையே ஆஶ்ரயிக்கின்றோம்.—எ-று. (௩௫)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஏகோ தஶாஸ்யஹ்ருதநைஜவதூக ஆஸீத்
அந்யோ வதூவிலஸிதார்த்தஶரீர ஆஸீத்।
கோவா நயோரதிக இத்யநுசிந்த்ய வ்ருத்தா
ஸ்ஸத்யம் ப்ருவந்து தமிமம் வயமாஶ்ரயாம:॥

ஏகோதஶாஸ்யஹ்ருதநைஜவதூகஆஸீத் அந்யோவதூவிலஸிதார்த்தஶரீரஆஸீத் கோவாநயோரதிக இத்யநுசிந்த்யவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

புல்லும் பொறிகொள் மதிலிலங்கைப் பூப னெடுத்த மனைவியினன்
சொல்லி லொருவன் மற்றொருவன் துகளர் வல்லி யன்னாளா
லெல்லொன் றிடுமே னியிற்பாதி யிடத்தனாகி யிருக்கின்றான்
எல்லி லிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
தஶாஸ்ய	இராவணனாலே
ஹ்ருத	அபகரிக்கப்பட்ட
நைஜ	தன்னதான
வதூக:	மனைவியையுடையவனாக
ஆஸீத்	ஆனான்,
அந்ய:	இன்னொருவன்
வதூவிலஸிதார்த்தஶரீர:	பெண்சாதியினாலே பிரகாசிக்கிற பாதிசரீரத்தையுடையவனாக
ஆஸீத்	ஆனான்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்த்ய:	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் பத்துத்தலையுள்ள இராவணனால் அபகரிக்கப்பட்ட மனைவியையுடையவன், இன்னொருவன் தன் சரீரத்திற்பாதி மனைவியாற் பிரகாசிப்பவனாக இருக்கின்றான்; இவ்விருவர்களில் எவன் சிறந்தவனோ அவனைப் பெரியவர்கள் உண்மையாகச் சொன்னால், அவனை நாங்கள் ஆஶ்ரயிக்கின்றோம்.

விதப்பு.

ஒருவன் இராவணனால் அபகரிக்கப்பட்ட மனைவியை யுடையவனென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணம் இராவணனால் எடுக்கப்பட்ட மனைவியை உடையவனாதலால். இதனை—

“பரிந்துபற்பலவெகுண்டவள்பகர்தலினிளையோன்
விரைந்துநாடுவான்போயபின்மெலிவொடுதனித்தங்
கிருந்தவன்னையையிராவணன்வவ்விவிண்ணெழுந்தான்
கரந்துகொல்வதற்குற்றதுகாலமென்றுணரான்” என்று வரும்

பாகவதத்தாலும்,

“கொண்டானுயர்தேர்மிசைக்கோல்வளையாள்
கண்டாள்தனதாருயிர்கண்டிலளால்
மண்டானுறும்மின்னின்மயங்கினளால்
விண்டான்வழியாயெழுவான்விரைவாய்” என்று கம்பராமாய

ணத்திலும்,

“அரக்கர்கோவௌவியவணங்கைநீக்கலான்
மருக்கமழலங்கலான்மணந்ததென்கொலென்

Center for Shaiva Studies, Pondicherry Collection

நிரக்கமில்சிதடனுங்கிசைத்தனல்லறம்
புரக்கவந்தருள்புரிபுனிதன்கேட்டனன்" என்றுபாகவதத்திலும்,

[illegible]
[illegible]
ராவண: என்று சுருதியிலும் வருதலைக்கொண்டுணர்க.

ஒருவன் மனைவியாற் பிரகாசிக்கப்பட்ட பாதியுடம்பினனென்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வாறிருத்தலால். இதனை—

"திருந்தமதிசூடித்தெண்ணீர்ச்சடைக்கரந்துதேவிபாகம்
பொருந்திப்பொருந்தாதவேடத்தாற்காடுறைதல்புரிந்தசெல்வ
ரிருந்தவிடம்வினவிலேலலங்கமழ்சோலையினவண்டியாழ்செய்
குருந்தமணநாறுங்குன்றிடஞ்சூழ்தண்சாரற்குறும்பலாவே" என்று
திரவிடவேதத்து வருதலைக்கொண்டும்,

"வலப்பாகஞ்செழும்பவளச்சோதியென்ன
வாணீலச்சோதியென்னமற்றைப்பாகங்
கலப்பானதிருமேனியணிந்தநீற்றாற்
கதிர்முத்தின்சோதியெனமேனிமின்ற
குலப்பாவையுடன்கைலைக்குன்றில்வாழ்விற்
குன்றுடையோன்றிருகோலங்குறிப்பாலுன்னிப்
புலப்பாடுபுறம்பொசியமார்புந்தோளும்
பூரித்தானுடல்புளகம்பாரித்தானே" என்று பாரதத்தும் வருதலைக்கொண்டுணர்க.

தாத்பரியம்.

ஹரி ராவணனால் அபகரிக்கப்பட்ட மனைவியையுடையவன்; ஹரன் தன் மனைவியைத் தன்னுடம்பிற் பாதியாக உடையவன் என்பதாம்.

தாரதம்மியம்.

ஒருவனால் அபகரிக்கப்பட்ட மனைவியையுடையவனாக விருப்பவனை எவனும் சிறந்தவனென்று கூறான். ஒற்றுமையாயும் அயலானால் அபகரிக்கப்படாதவளாயும் உள்ள மனைவியை யுடையவனை யாவரும் புகழ்வார்கள். இதனால் இராவணனா லபகரிக்கப்பட்ட மனைவியையுடைய ஹரியைவிட இடப்புறத்தி லமைக்கப்பெற்ற மனைவியினையுடைய ஹரன் சிறந்தவனாம். அதனால் நாம் இவ்விஷயத்திற் றாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக வகற்றி, இவ்விஷயத்தி லுயர்வுபெற்ற ஹரனைச் சிறந்த மஹா புருஷனாகக்கருதி அவ்வரனையே சரணமாக அடைந்து வாழ்கின்றோம்.—எ-று. (ருசு)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஏகஸ்துமர்க்கடபடேநததாஹலங்கா மங்யஸ்துமந்தஹஸிதேந புரத்ரயஞ்ச:। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஸ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

மாலை மதிய மெனச்செம்மை மருவு முகத்துக் கோடரத்தாற் [ன்
கோல விலங்கை தனையொருவன் கொளுத்தி யழித்தான் கூறொருவ
சாலச் சிறிய மூறுவலினாற் றகித்தான் றகுவர் புரமூன்றை
ஏலு மிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏகஸ்து	ஒருவனானால்
மர்க்கடபடேந	குரங்குத்தூதனால்
லங்காம்	இலங்கையை
ததாஹ	சுட்டான்,
அந்யஸ்து	இன்னொருவன்
மந்தஹஸிதேந	புன்சிரிப்பினால்
புரத்ரயஞ்ச	முப்புரங்களையும்
ததாஹ	சுட்டான்;

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன் ?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்தியா	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் குரங்கு வேலைக்காரனால் இலங்கையைச் சுட்டான், மற்றொருவன் மந்தஹாஸத்தினாலேயே திரிபுரங்களைச் சுட்டான்; இவ்விருவருக்குள் சிறந்தவனை பெரியவர்களாகிய நீங்கள் சொன்னால், உங்களால் சொல்லப்படுகிற மஹாபுருஷனை நாங்கள் சரணமாக அடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் மர்க்கடபடனால் இலங்கையைச் சுட்டான் என்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வாறு செயதிருத்தலால்.

ஹரி இராமனாக விருந்தகாலத்திற் குரங்காகிய அநுமானைத் தூதனாக அனுப்பினான்; அவன் இலங்கைக்குட்புகுந்து இந்திரசித்தினால் பிடிக்கப்பட்டு வாலில் கிழிசுற்றித் தீயைப் பற்றவைத்தவுடன் அந்த வால்த்தீயினால் இலங்கையைச்சுட்டான். இதனை—

" தனமருவுவைதேவிபிரியலுற்றுத்தளர்வெய்திச்சடாயுவைவைகுந்தத்தேற்றி, வனமருவுகவியரசன்காதல்கொண்டுவாலியைக்கொன்றிலங்கைநகரரக்கர்கோமான், சினமடங்கமாருதியாற்சுடுவித்தானைத்தில்லைநகர்த்திருச்சித்திரகூடந்தன்னுள், இனிதமர்ந்தவம்மானையிராமன்றன்னையேத்துவாரிணையடியேயேத்தினேனே" என்று நாலாயிரப்பிரபந்தத்திற் குலசேகரமன்னன் வாக்கியங்கேட்கப்படுதலாலும்,

" வேந்தன்கோயில்வாயிலொடுவிளாவிற்கடந்துவெள்ளிடையிற்
போந்துபுறநின்றிளைகின்றபொறைதீர்மறவர்புறஞ்சுற்ற
ஏந்துநெடுவால்கிழிசுற்றிமுற்றுந்தோய்த்தாரிழுதெண்ணெய்
காந்துகடுந்தீக்கொளுத்தினாரார்த்தாரண்டங்கடிகலங்க. என்றும்,
நீனிறநிருதாீண்டுநெய்பொழிவேள்விநீங்கிப்
பால்வருபசியனென்பான்மாருதிவாலைப்பற்றி
ஆலமுண்டவனன்றாட்டவுலகெலாமழிவினுண்ணும்
காலமேயென்னமன்னேகனலியுங்கடிதிலுண்டான்" என்றும்
வரும் இர்ராமாயணத்திலும்,

ஸீ-தாஂஶு-ரஷ்டாஉவஃ-ஈாநுஹஃஷாவ-ஈஸஂத ஷ்வா-தஷாவ்யஷ்

என்று ராமதாபினியிலும் வருதலைக்கொண்டுணர்க.

ஒருவன் மந்தஹாஸத்தால் திரிபுரங்களைச் சுட்டானென்றது-ஹரனை, அது அவ்வர னவ்வாறு சுட்டிருத்தலால். இதனை—

" விண்ணோர்தலைவர்வெண்புரிநூன்மார்பர்வேதகீதத்தர்
கண்ணார்நுதலர்நகுதலையர்காலகாலர்கடவூரர்
எண்ணார்புரமூன்றெரிசெய்தவிறைவரிமையோருபாகம்
பெண்ணாணவர்மயானத்துப்பெரியபெருமானடிகளே" என்று
திரவிடசூக்தியினும்,

" எறுழ்வலிமுழுவதுமெண்ணினான்
கறுவுறுகுறுநகைகாட்டினான்
முறுவலினுயர்புரமும்மையும்
நெறுநெறுநெறுவெனநீறின" என்று காஞ்சிப்புராணத்தும் வருதலைக்கொண்டுணர்க.

தாத்பரியம்.

ஹரி குரங்குத்தூதனால் இலங்கையைச் சுட்டான், ஹரன் மந்தஹாஸத்தினால் மூன்றுபுரங்களைச் சுட்டான் என்பதாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தாரதம்மியம்.

குரங்குத்துணைனல் ஒரு நகரத்தை எரிப்பித்தவனைவிடப் புன்சிரிப்பினுல் மூன்று நகரங்களை எரித்தவன் சிறந்தவன் என்று விதந்து கூறவேண்டுவ தில்லை. தானே விளங்கும். மந்தஹாஸத்தினுல் முப்புரங்களை எரித்த ஹரனைவிட வானரங்களுல் இலங்கையைச் சுடுவித்த ஹரி தாழ்ந்தவனுதலால், இந்த விஷயத்திற் ருழ்வடைந்த ஹரியை நாங்கள் அப்பிரதானமாக வகற்றி இந்த விஷயத்திற் சிறந்த ஹரனைச் சரணமாக அடைந்து வாழ்கின்ருேம்.—எ-று. (௧௭)

ஏகஸ்து மர்க்கடபடைர் நிஜகார்யகாரீ
ஹ்யந்யஸ் ஸுரேந்த்ரவிபவைர் நிஜகார்யகாரீ।
கோ வாநயோரதிக இத்யபிசிந்த்ய வ்ருத்தா
ஸ்ஸத்யம் ப்ருவந்து தமிமம் வயமாஶ்ரயாம:॥

ஏகஸ்துமர்க்கடபடைர்நிஜகார்யகாரீஹ்யந்யஸ் ஸுரேந்திரவிபவைர்ஜகார்யகாரீ। கோவாநயோரதிகஇத்யபிசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

குந்தி புலவுங் கோடரத்தாற் குலவுந் தனது காரியத்தை
முந்தியொருவன் முடித்தான்சொல் முறையாலொருவன் முன்னுளி
விந்தி ராதி தேவர்களா லியற்றி முடித்த வெழில்வினையான்
இந்த விவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரிபீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏகஸ்து	ஒருவனுல்
மர்க்கடபடை:	வானரசேனைகளாலே
நிஜகார்யகாரீஹி	தன்காரியத்தைச்செய்துகொண்டவனல்ல [வா,
அந்ய:	இன்னொருவன்
சுரேந்த்ரவிபவைஹ	இந்திரன் முதலியவர்களாலே
நிஜகார்யகாரீ	தன்காரியத்தைச் செய்துகொண்டானல்ல வா;

அநயோ:	இவ்விருவரில்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அபிசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்ருேம்.

பொழிப்பு.

ஒருவன் குரங்குச்சேனைகளால் தனது காரியத்தை முடித்துக் கொண்டான், மற்றொருவன் இந்திராதிகளால் செய்யப்பட்ட தன் காரியங்களையுடையவன்; பெரியவர்களே இவ்விருவரிற் சிறந்தவனை நீங்களுரைத்தால், நாங்களந்த மஹாபுருஷனை ஆஶ்ரயிக்கின்ருேம்.

விதப்பு.

ஒருவன் மர்க்கடபடர்களாற் செய்துமுடிக்கப்பட்ட தன் காரியத்தினை உடையவனென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வாறு செய்து முடித்திருத்தலால்.

அது ஹரி இராமனுகவந்தநாளிலும், ஜலந்தரன் மனைவியை விபசரித்தநாளிலும் குரங்குகளாலே தனது காரியங்களைச் சாதித்தானென்பதை. இது ஜகத்ப்ரஸித்தம். இதனை—

நிஹத்ய ராவணம் ராஜ்யே ஸ்ரீவத்ஸாங்கோ யதஸ்தத:।
[illegible]॥
[illegible]। என்றற்றொடக்கத்து உபநிஷத்து வாக்கியங்களாலும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

" அளவிகந்தவரிக்குலத்தோரொழில்
வளருகின்றவரைக்குழுவுய்த்திட்
உளமுவந்துநூரேசனையாமணே
நளன்விரைந்தவணன்கமைத்தனனரோ" என்றிராமாயணத்தும்,

" எயிலைமுற்றியெதிர்ந்தவரக்கரை
அயிலெயிற்றவரிக்குலத்தோர்தெறப்
புயலையொத்தவன்முடிபத்தும்வெவ்
வெயிலையொத்தொளிர்வேந்தொடுமேற்றனன்" என்று பாகவதத்தும் வருதலைக்கொண்டுணர்க.

ஒருவன் இந்திராதிதேவர்களைகொண்டு தன் காரியங்களை நிறைவேற்றினன் என்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வாறு செய்திருத்தலால்.

ஹரன் திரிபுரசங்காரகாலத்திலே இந்திராதிகளான தேவர்களையே கருவிகளாகக்கொண்டு போர்புரிந்து தன் காரிய சாத்தியமான திரிபுரஜயாதிகளை அடைந்தனன். இதனை—

" உருகெழுநிலமொருவையமு
மிருசுடரிருபுடையாழியுஞ்
சுருதிகள்துகளறுவாசியு
மருமலரனையவன்வலவனும்.
தடநெடுவடவரைசாபமும்
படவரவிறைபகர்நாரியு
மடல்விரிதுளவினன்வாளியுங்
கடவுளர்பிறபிறகருவியும்.
ஆயினரதுபொழுதண்ணலு
மேய்வுறுமிரதமதேறினன்
மாயிருநெடியவில்வாங்கினன்
காய்கனலுமிழ்கணைபூட்டினன்" என்று காஞ்சிப்புராணத்தும் வருதலாலுணர்க.

தாத்பரியம்.

ஹரி குரங்குகளால் தன் காரியத்தைச் சாதித்தான்; ஹரன் இந்திராதி தேவர்களால் தன் காரியத்தைச் சாதித்தான் என்பதாம்.

தாரதம்மியம்.

இழிந்த ஜனங்களால் தன் காரிய சாத்தியமடைபவனை எவனும் சிறந்தவனென்று கூறான்; உயர்ந்தவர்களைக்கொண்டு தன் காரிய சாத்தியஞ் செய்துகொள்பவனை நியாயவாதிகள் உயர்ந்தவனாக ஒப்புக்கொள்வார்கள். ஹரி இழிந்த குரங்குகளைக்கொண்டே தன் காரியங்களைச் சாதித்துக்கொண்டனன்; ஹரன் உயர்ந்தவர்களான தேவர்களைக்கொண்டே தன் காரியத்தைச் சாதித்துக்கொண்டனன். இதனால் ஹரி தாழ்வையும் ஹரன் உயர்வையும் அடைந்து விளங்குதலால், நாங்கள் இவ்விஷயத்திற் றாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாகவகற்றிப் பிரதானமான ஹரனைச் சரணாகதியாக அடைந்து வாழ்கின்றோம்.—எ-று. (௬அ)

𑌏𑌕𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑌤𑍍𑌸𑍍𑌯𑌤𑌨𑍁𑌮𑍇𑌤𑍍𑌯𑌕𑌤𑍋𑌽𑌬𑍍𑌧𑌿𑌤𑍋𑌯
𑌮𑌨𑍍𑌯𑍋𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑌥𑌿𑌤𑌤𑌤𑍍𑌵𑌜𑌵𑌾𑌨𑍁𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌃।
𑌕𑍋𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕𑌇𑌤𑍍𑌯𑌨𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑍃𑌤𑍍𑌤𑌾
𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌂𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁𑌤𑌮𑌿𑌮𑌂𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகஸ்துமத்ஸயதநமேத்யசதோப்திதோய மங்யோவிநிர்மதிதத்வஜவாந்ப்ரவிஶத்த: । கோவாநயோரதிகஇத்யநசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஸ்ரயாம: ॥

மொழிபெயர்ப்பு.

சங்கந் திகழுங் கடனீரிற் றகவார் சேலி னுருவுடனே
தங்கந் திகழச் சென்றொருவன் றளைந்தா னொருவன் றகளில்லாச்
செங்கண் மீனக் கொடியானைச் செகுத்த மிகுத்த சீர்த்தியினன்
இங்கண்ணவருட் சிறந்தவன்யா ரிசைத்தார்டேரியி ரிறைஞ்சுதமே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பதப்பொருள்.

ஏகஸ்து	ஒருவனுனல்
மத்ஸ்யதநும்	மச்சவுடலை
ஏத்ய	அடைந்து
அப்திதோயம்	கடல்நீரை
கத:	அடைந்தான்,
அந்ய:	இன்னெருவன்
விநிர்மதிததத்வஜவாந்	சங்கரிக்கப்பட்ட அந்த மீனக்கொடியோடு கூடிய மன்மதனையுடையவனுக
ப்ரவித்த:	ப்ரவித்தியானவன்;
அநயோ:	இவ்விருவருக்குள்
கோவா	யாவன்
அதிக:	சிறந்தவன்?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்தியா	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	இந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்ருேம்.

பொழிப்பு.

ஒருவன் மச்சவுருவத்தையடைந்து சமுத்திரத்தையடைந்தான், இன்னெருவன் மச்சக்கொடியினையுடைய மன்மதனைச் சங்கரித்த பிரசித்தியை யுடையவன்; இவர்களி லுயர்ந்தவனைப் பெரியவர்கள் உண்மையாகச் சொன்னுல், நாங்களந்த மஹாபுருஷனைச் சரண்மாக வடைந்து வாழ்கின்ருேம்.

விதப்பு.

ஒருவன் மச்சவுருவை யடைந்து கடல்நீரிற் பிரவேசித்தானென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வாறு செய்திருத்தலால்.

தமிழ்நாட்டிற்குச் சிறந்த நகரமான மதுரையில் சத்தியவிரதன் என்னும் ஒரு அரசன் இருந்து செங்கோல் செலுத்திவந்தான். மணம்பொருந்திய மலர்மாலை யணிந்த தோளினையுடைய வம்மன்னவன் வையையாற்றில் அருக்கியங் கொடுத்தற்காக எடுத்த நீரில் ஹரி மீனுருக்கொண்டு விளங்கினன்.

பாண்டிமன்னவனுகிய சத்தியவிரதன் தன் கையிலிருந்த அச்சிறு மீனினை ஹரியென்றுணராமையால் வையையாற்று நீரினுள் விட்டனன். உடனே அம்மீனுகிய ஹரி அம்மன்னவனைப் பார்த்து, மன்னவ! நானுன்னைச் சரணமாகவடைந்தேன்; சரணமாக வந்த என்னை எனக்குப் பகையாகவுள்ள ஜலசரங்கள் வசிக்கும் ஆற்றுநீரில் அனுதரணையாக விட்டனை; என்னை இவ்வாறு விட்டுவிடுதல் நின்னீதிக்கேற்றதன்று. மன்னவனே! என்னை நீ நான் சற்றே வளருங்காறுங் கமண்டல நீரி விட்டுவைத்துச் சற்றே வளர்ந்ததற்குப் பின்னர் நல்ல தடாக நீரில் இட்டு என்னைக் காக்கவேண்டும் என்று கூறியது. இம்மொழிகளைக்கேட்ட மன்னவனுக்கு அதிக ஆச்சரியந்தோன்றினமையால் அச்சிறுமீனினைப் பின்னருந் தானே எடுத்துக் கமண்டலநீரில் விட்டுவைத்தனன். அம்மீன் அக்கமண்டல நீரினைக்காட்டிலும் அதிகமாகப் பருமனுடையதாகியது. பின்னரம் மன்னவன் அம்மீனினையெடுத்து ஒருநல்ல தடாகத்தில் விட்டு வளர்த்தனன். அம்மீன் அத்தடாகத்தைவிடவும் பெரியதானமையால் பின்னர் அம்மன்னனினி இதனை எங்கு வைத்துக் காப்பது என்ருலோசித்து அதனை எடுத்துக்கொண்டு சென்று ஆரவாரத்தினையுடைய கடனீரில் விட்டனன். கடனீரில் விழுந்த அம்மீன் இரங்கிய தொனியுடனம்மன்னவனைப்பார்த்து, மன்னவ! நீ என்னை இங்குத் தனியே விட்டுச் சென்ருல் மிக்க வலுவினையுடைய இக்கடல்நீரிலுள்ள கொடிய மீனினங்களென்னைத் தின்றுவிடுமே என்று கூறியது.

அதனைக்கேட்ட மன்னவன் குதூஹலமடைந்து இம்மீன் என்னிறைவனுகிய ஹரியே இவ்வாருயினுன்போலும் என்று கருதி, மீனமே! நீ என்னிறைவனுகிய திருநெடுமாலன்ருே? இழிவினையுடைய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இம்மீனுருவத்தை நீ அடைந்த காரண மென்னை? என்று வினவி வணங்கினன்.

உடனே அம்மீன் அம்மன்னவனைப்பார்த்து, அரசனே! ஏழுநாட் கழித்தவுடனே இப்பெரிய கடல் திரிலோகங்களும் அழியுமாறு பெருகும்; அப்பொழுது நமது கட்டளையால் ஒரு தோணி தோன்றும்; அத்தோணியில் நின்னையும் இவ்வுலகி லிப்பொழுதுள்ளவற்றின் வித்துக்களையும் முனிச்சிரேஷ்டர்களின் கூட்டங்களையும் ஏற்றிக்கொண்டு சுமந்து திரிந்து பிரளயநீர் வற்றியவுட னுங்களனைவரையும் இறக்கிவிடுவேன். பின்னர் வேதத்தைத்திருடி யொளித்த ஒருவனை யுங் கொல்லுவேன் என்று கூறி அம்மீன் கடலினுட்சென்றது.

பின்னர் அம்மீன் கூறிய ஏழாநாளில் பெருமழை பெய்தவுடன் கடனீர் பொங்கியது. உடனே முனிவர்களையும் வித்துக்களையும் சத்தியவிரதனையும் அங்கு தோன்றின ஓடத்திலேற்றித் தான் தன் கொம்பினுலிழுத்துக்கொண்டு திரிந்தது. பிரளய நீங்கினவுடனே அனைவரையும் இறக்கிவிட்டுப் பின்னர் வேதத்தைக் கவர்ந்துசென்ற அசுரனையுங்கொன்று மீனுருவத்துடன் இருந்தனன் என்று பாகவதபுராணமானது கூறுகின்றது. இதனை—

“ மருக்கமழ்தாரினுன்வையையாற்றிடை
அருக்கியங்கொடுப்பதற்கங்கைதாங்கிய
திருக்கிளர்புனலிடைச்சேட்டிளங்கயல்
உருக்கொடுதனிமுதலுவந்துதித்தனன்.

மன்னவன்காண்டலும்வையையாற்றிடைத்
துன்னுறவிடுதலுமீனஞ்சொல்லுமால்
உன்னுழிச்சரணெனவுற்றவென்னைநீ
பன்னுபல்பகைகொளப்பழுதின்விட்டனை.

கன்னலினீரினுங்கமழுந்தண்சுனை
மன்னியநீரினுமருவவிட்டனை

இன்னலொன்றறநனியினிதுகாக்கென
அன்னவனெஞ்சகமடைந்ததற்புதம்.

கடமுமிழ்களிற்றினன்கன்னனீரிடை
விடுதலுங்கன்னலின்விட்டுவீங்கலால்
மடலவிழ்நறுமலர்வாவியுய்த்தனர்
நெடுமலர்ப்பூந்தடநிறைந்ததென்பவே.

தடநிறைந்திடுதலுந்தயங்குசெங்கதிர்
விடுமணிப்பூணினன்வியந்துநோக்கினன்
கடலிடையுய்த்தனன்கல்லென்கௌவைநீர்
படுதிரைப்பரவையிற்பாய்ந்துசொல்லுமால்” என்றற்றொடக்கத்த பாகவதப்பாடல்களாலுணர்க.

ஒருவன் மீனக்கொடியினையுடைய மன்மதனைக்கொன்ற கீர்த்தியினையுடையவன் என்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வாறு இயற்றியிருத்தலால். இதனை—

“காமனெரிப்பிழம்பாகநோக்கிக்காம்பனதோளியொடுங்கலந்து
பூமருநான்முகன்போல்வரோத்தப்புகலிநிலாவியபுண்ணியனே
ஈமவனத்தெரியாட்டுகந்தவெம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
வீமருதண்பொழில்சூழ்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே”
என்று திரவிடசுருதியினும், மற்றையவைகளினும் வருதலைக்கொண்டுணர்க.

தாத்பரியம்.

ஹரி மீனுருவடைந்தான்; ஹரன் மீனக்கொடியினனான மன்மதனைக் கொன்றானென்பதாம்.

தாரதம்மியம்.

இழிந்த மீனுருவையடைந்தவனைக்காட்டிலும் அவ்விழிந்த மீனைக் கொடியாகவுடையவனைக் கொன்றவன் சிறந்தவனாதலால், நாம் இழிந்த மீனுருவடைந்து கடனீரிற்புகுந்த ஹரியை அப்பிரதானமாக்கருதி உயர்ந்த ஹரனடியை அடைந்து ஆச்ரயிக்கின்றோம். (கூ)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌨𑍁𑌜𑌤𑍍𑌵𑌮𑌗𑌮𑌤𑍍𑌭𑍁𑌵𑌿𑌸𑌰𑍍𑌵𑌦𑍈𑌕
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌦𑌿𑌭𑌿𑌸𑍍𑌸𑍁𑌰𑌗𑌣𑍈𑌃𑌪𑌰𑌿𑌪𑍂𑌜𑍍𑌯𑌤𑍇𑌽𑌨𑍍𑌯𑌃।
𑌕𑍋𑌵𑌾𑌽𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌸𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑍃𑌦𑍍𑌧𑌾
𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌂𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁𑌤𑌮𑌿𑌮𑌂𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

இந்த்ரானுஜத்வமகமத்புவிஸர்வதைக இந்த்ராதிபிஸ்ஸுரகணை: பரிபூஜ்யதேந்ய:। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம் ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

மண்ணி லொருவ னென்ஞான்றும் மகவா னிளைய னுவாரு
மெண்ண விருந்தா னின்னொருவ னிழிவி லிந்தி ராதியர்கள்
பண்ணும் பூசை தனையேற்றுப் பயிலு மியல்பைப் பரித்துள்ளான்
எண்ணி லிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
புவி	உலகத்தில்
ஸர்வதா	எப்பொழுதும்
இந்திராநுஜத்வம்	உபேந்திரனாக விழுத்தலை
அகமத்	அடைந்தான்,
அந்ய:	இன்னொருவன்
இந்திராதிபி:	இந்திரன்முதலியவர்களாலும்
ஸுரகணை:	தேவகணங்களாலும்
பரிபூஜ்யதே	பூஜிக்கப்படுகின்றான்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்

அநுசிந்தியா	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் இந்திரனுக்கு அநுஜனாகவிருக்கப்பெற்றான், இன்னொருவன் இந்திராதிகளாலும் தேவகணங்களாலும் பூஜிக்கப்பட்டான்; இவ்விருவர்களிற் சிறந்தவனைப் பெரியவர்களாகிய நீங்கள் உண்மையாகக் கூறினால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக வடைகின்றோம்.

விதப்பு.

ஒருவ னிந்திராநுஜத்துவத்தை யடைந்தானென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணமாக விருத்தலினால்.

மாவலி மன்னன் தேவவைரியாகி உலகனைத்தையுந் தங்குடை நிழலிலாக்கியாண்டநாளில், ஹரி அம்மாவலிமன்னனை அடக்குமாறு இந்திரனுக்குத் தந்தையான காசிபமுனியின் மகனாகத்தோன்றிக் குள்ளனாக விருந்தமையால், வாமன நாமத்துடன் றுலங்கி மாவலியைப் பாதலத்திலாக்கி யிந்திரவுலகஞ்சென்று இந்திரனருகி லவன் றம்பியாக விருந்தனன். இதனை—

"உபேந்திர இந்திரவரஜ:" என்னும் நிகண்டாலும்,

"குறையிலையெனினுமின்றுகூறுநற்பணிசெய்கேனென்
றிறைவனைவணங்கிவெள்ளியியற்றினனிறைவன்றானும்
நறுநுதலதிதியென்பாணலந்திகழ்மகிழ்ச்சிநாளும்
உறவுபேந்திரனேயாகியும்பர்நாடுறையுமன்னோ" என்னும் பாகவதத்தாலும் உணர்க.

ஒருவன் இந்திராதி தேவர்களாற் பூசிக்கப்படுகிறானென்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வாறு பூசிக்கப்படுதலால்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இந்திராதிதேவராவார்:—இந்திரன், அக்கினி முதலிய திக்குப்பாலகர்கள்; ஆதித்தியர்கள், வசுக்கள், அசுவனிதேவர்கள், உருத்திரர்கள் முதலிய முப்பத்துமுக்கோடியர்களும்,மற்றுள்ள தேவயோனிகளும்.

இந்திரன் பூர்வத்தில் ஸ்ரீகாளஹஸ்தி க்ஷேத்திரத்திற் சிவனைப் பூசித்தானென்றும், காசியிலீசனைப் பூசித்தானென்றும், கேதாரத்திலிறைவனைப் பூசித்தானென்றும், காஞ்சிபுரத்தி லீசனைப் பூசித்தானென்றும்,திருவாரூரி லிந்திர னீசனைப் பூசித்தானென்றும்,சிதம்பரத்தி லீசனைப் பூசித்தானென்றும்,இவ்விடங்களிற் பூசித்த முறையே வலாசுரசங்காரம், வலாசுரசங்கார தோஷபரிகாரம், துருவாசசாபநாசம், கௌதமசாப நிவிர்த்தி, அநேக முனிவர் சாப நீக்கம், சுவர்க்கலோகவாட்சி, விருத்திர சங்கரபாவநாசம், மகாமேரு மேகவாகனம், உச்சைச்சிரவாகனம், சிவலோகவாழ்வு என்னும் இவைகளை யடைந்தான். இதனை—

[illegible]
[illegible]

"கொற்றவார்சடைநிழற்றியமருலகமினிதளிக்குங்குலிசவேந்தன்
கற்றைவார்சடையானைக்காளத்திமுக்கணனைக்கருதிபூசித்
தற்றைநாளவனருளவலாசுரனையுயிர்செகுத்தானவனியோமென்றுன்.
பெற்றவானவருலகுந்துயரொழித்தான் வலாரியெனும்பெயரும்பெற்

[illegible]
[illegible]

"செருத்தகுலிசத்தவனொருத்தன்கறைக்களத்தெம்பெருமானைச்சிந்தித்தோர்நாள், விருத்தகிரிவழிபட்டான்துருவாசனமொழிந்தால் விளம்பவாசத்,தருப்டணிலஞ்சுரபிசிந்தாமணிமுதலமறிகடலிற்றமுவிச்சார்ந்த, திருப்பிவறிதொழிந்துபெருவளநகர்ந்துதனிச்செங்கோல் செலுத்தினனல்."

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

"மகபதியோர்மகவின்றிநெடுங்காலந்துயருழந்துமறுக்கங்கொண்டு, முகையவிழ்காஞ்சியினிழலினினிதிருந்து முழுமுதலைப்பூசையாற்றித், திகழொளியவுலகளிக்குஞ்சயந்தனெனுமொருமகவையினிதினீன்றான், புகலரியவாரூரிற்பூசித்தானினிதுகைக்கும்புயலும்பெற்றான்."

[illegible]
[illegible]

"அருணகிரிப்பெம்மானைமலரடிபெற்றருச்சித்தானரும்பூத்த, பொருகளபவனசமூலைப்புலோமசையைப்பெறப்பெற்றான் குலிசப்புத்தே, ளுருகியசிந்தையனுகியெம்மானைப்பூசித்த துணைக்கப்பாற்றே, பெருநதிநின்றுவட்டெடுக்குஞ் சடையோனைப்பூசித்த பிறவுஞ்சொல்வாம்."

திருவண்ணாமலையில் ஹரனைப்பூசித்து அநேகவரங்களைப்பெற்றனன்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

என்றிருத்தலால், எமனும் ஸ்ரீகேதாரக்ஷேத்திரத்தில் ஹரனைப் பூசித்து வரம்பெற்றனன் என்றறியப்படுகின்றது.

நிருதியும் கோகர்ணக்ஷேத்திரத்தில் ஹரனைப் பூசித்து வரங்களைப்பெற்றனன். இதனை—

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

[illegible]

[illegible] என்றி ருத்தலைக்கொண்டுணர்க.

வருணனுஞ் சம்புகேசுவரமென்னும் திருவானைக்காவிலரனைப் பூசித்து வரம்பெற்றனனென்பதை—

[illegible]

[illegible] என்னு மிதனுலுணர்க.

வாயுவும் தெக்ஷிணகைலாசமான ஸ்ரீமஹாகாளஹஸ்திக்ஷேத்திரத்தி லீசனைப்பூசித்து வரங்களைப்பெற்றான் என்பதை—

[illegible]

[illegible] இதனு லுணர்க.

குபேரனும் சித்தவடக்ஷேத்திரத்தில் ஹரனைப்பூசித்து வரம் பெற்றனன். இதனை—

[illegible]

[illegible] என்ப தனுலுணர்க.

ஈசானனும் கமலாலயமாகிய திருவாரூரில் ஹரனைப்பூசித்து வரங்களைப்பெற்றனன். இதனை—

[illegible]

[illegible]

என்பதனுலுணர்க.

ஆதித்தியனும் ஸ்ரீகாஞ்சீபுரத்தில் அரனைப் பூசித்து வரம்பெற்றனன். இதனை—

[illegible]

[illegible] என்றி ருத்தலாலுணர்க.

சந்திரனும் கும்பகோணத்தில் ஹரனைப்பூசித்து வரங்களைப் பெற்றனன். இதனை—

[illegible]

[illegible] என்றிருத்தலாலுணர்க.

அன்றியும் தேவர் முனிவர் அசுரர் சித்தர் சாரணர் கருடர் இயக்கர் வித்தியாதரர் உரகர் கின்னரர் முதலியவர்களும் ஹரனைப் பூசித்து அநேக வரங்களைப் பெற்றிருக்கின்றார்கள். இதனை—

[illegible]

[illegible] என்றிருத்தலால், தேவாதிகளனைவரும் ஹரனைப் பூசித்தார்கள் என்றறியப்படுகின்றது. தேவர்களிலுயர்ந்த ஹயனும் ஹரனைப் பூசித்திருக்கின்றான்.

[illegible]

[illegible]

என்றிருத்தலால், பிரமன் ஸ்ரீகாழியில் ஹரனைப் பூசித்தான் என்று அறியப்படுகிறது. ஹரியும் ஹரனைப்பூசித்தான் என்றறியப்படுகிறான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

[illegible]

என்று முறையே காட்டிய ஸ்ரீ ஸ்காந்த [illegible] சுலோகங்களாலும், பிறவற்றாலும், மஹாபுராணத்துபதேசகாண்டத்து [illegible] என்பனவாதி வே[illegible] தவசனங்களாலும், ஹரன் ஹரிப்பிரமாதி சகலதேவர்களாலும்பூசிக்க ப்படுபவன் என்றறியப்படுகிறான்.

தாத்பரியம்.

ஹரி இந்திரனுக்குத் தம்பியாக உள்ளவன், ஹரன் இந்திராதி தேவர்களாற் பூசிக்கப்பட்டவன் என்பதாம்.

தாரதம்மியம்.

ஒருவனுக்குத் தம்பியாயிருப்பவனிலும் அத்தம்பியாயிருக்க வேண்டினேன் தம்பியாகவிருந்தவன் முதலியவனைவராலும் பூசிக்கப்பட்டவன் சிறந்தவனேயாம். இம்முறையால் இந்திரனுடைய வேண்டுகோளுக்கிரங்கி யவன் றம்பியான ஹரியினும், இந்திராதி தேவர்களாற் பூசிக்கப்படுகிற ஹரன் சிறந்தவனேயாம். ஆதலால் நாங்கள் இவ்விஷயத்தில் தாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக வொதுக்கிப் பிரதானமான ஹரனைச் சரணாகதியென்று அடைந்து வணங்குகின்றோம்.

[illegible]

ஏகோந்ருஸிம்ஹதநுமேத்யஜகாநதைத்யமந்யஸ்தமேவஹதவாஞ்சரபாவதாரீ। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாமஃ॥

மொழிபெயர்ப்பு.

மின்னே றெழு நரமேனி மேவுஞ் சிங்க வுருவமதாய்
முன்னே ரசுரன் றனையொருவன் முடித்தா னவனை மூதலகிற்
பின்னோர் புருடன் சரபமெனப் பெயர்ந்து படுத்தான் பேசுமிடத்
தின்னோர் தம்மிற் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரின்றஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏகஃ	ஒருவன்
நிருஸிம்ஹதநும்	நரசிங்கவுருவத்தை
ஏத்ய	அடைந்து
தைத்யம்	அசுரனை
ஜகாந	கொன்றான்,
அந்ய:	இன்னொருவன்
சரபாவதாரி	சரபாவதாரியாகி
தமேவ	அந்த நரசிங்கனையே
ஹதவாந்	கொன்றான்;
அநயோ:	இவ்விருவருக்குள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுஸந்தியா	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஸ்ரயாம:	ஆஸ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

பெரியோர்களே! ஒருவன் நரசிங்கவுருவத்தை யடைந்து தைத்தியனைக் கொன்றான், இன்னொருவன் சரபரூபத்தையடைந்து அந்த நரசிங்கத்தைக் கொன்றான்; இவ்விருவருட் சிறந்தவன் யாவ னவனை நீவிர் கூறுமின், கூறினால் நாங்கள் அந்த மஹாபுருஷனைச் சரணமாக வடைகின்றோம்.

விசேஷம்.

ஒருவன் நரசிங்கவுருவடைந்து இரணியனைக் கொன்றானென்றது - ஹரியை, அது அவ்வரி அவ்வாறியற்றியிருத்தலால்.

பூர்வத்திற் காசிபமுனிவன் தன்மனைவியர் பலரிற் றிதியென்பவளுடன் புணர்ந்தனன். இவன் புணர்ச்சியினால் இரணியன் இரணியாக்கன் என்னும் இரண்டு முதன்மை வீரர்களும் மற்றும் பலவசுரர்களும் பிறந்தார்கள். இவர்களில் இரணியன் இறைவனருளாற்சிறந்த வன்மை வின்மையாதிகளைப்பெற்றுத் தன்னிகரில்லாத் தலைவனாய் இருநிலமாண்டான். இவனரசனாகிய வன்று முதல் ஆதித்தியர்முதலிய விபுதர்களுக் கதிக சங்கடங்களுண்டாயின. அதனால் அத்தேவர்கள் நாராயணனை யடைந்து வணங்கி அண்ணலே! இரணியன் செயுங் கொடுமை யாற்றற்பாலதாக வின்மையா லிங்கடைந்தோம். இரக்ஷிக்கவேண்டும் என்று வேண்டிக்கோடலும், ஹரி அமரர்காள் அஞ்சன்மின்! நுங்குறையை விரைவி லகற்றுகின்றோமெனத் தனதமிசத்தை இரணியன் மனைவியின் கருவிற் கலக்கச்செய்தனன். சில தினங்களுக்கெல்லாம் இரணியனுக்கு மகன் பிறந்தான். பிறந்திருகுணமுந் தழுவி யியங்குமோ ருருவினனாதலாற் றந்தையான விரணியன் வழியிலும் தனதமிசமான நாராயணனிடத்தும் அன்புடையவனாக வளர்ந்தனன். வளர்ந்தவனான்று இரணியன் சுக்கிரனைக்கொண்டிவனுக்கு அருமறை யத்தியயனஞ்செய்தான். உடனே சுக்கிரன் தத்காலவழக்கப்படி வித்தியாரம்ப சமயத்தில் ஓம் இரணியாயநமவென்றுரைத்து நீயுமிவ்வண்ண முரைத்தியென்றனன். பிரகலாதனென்னும் அபிதானம் உள்ள அத்தைத்தியகுலபாலன் நானவ்வாறு கூறேனென்றான். சுக்கிரன் இவ்வித மிவனுண்ப்பதை இவன் றந்தைக்கறிவித்தா னவனிவனையழைத்து மைந்த நீயேன் வேதமோதப்பயிலுகின்றாயில்லை என்றனன். அதற்கவன் ஐய வேதமோதுபவரெல்லாம் ஹரி ஓம் என்று உரைத்துரைப்பர். சுக்கிரனவ்வாறு கூறாது ஓம் இரணியாயநமவென்று சொல்கின்றான், அது பிசகு; ஆதலால் அதனை நானுரையேன் என்றனன். உடனே இரணியன் கடுங்கோபங்கொண்டு தன் மைந்தனுக் கனேகந் தீங்குகளைச் செய்வித்தான். அத் தீங்குக ளனைத்தையும் அப்பிரகலாதன் நாராயணத்தியானத்தா னீங்கினான். அதுகண்டவிரணியன் நின் ஹரி எங்குளான் என்றனன். அதற்கவன் என்னரி தூணிலுந் துரும்பிலும் உளன் என்றனன். இரணியன் மைந்த! இத்தூணி லவ்வரி யுளனோ? எனத் தன்காலை நீட்டி யொருதூணை யுதைத்தான். உடனே உதைத்த பொன்னந்தூணி னடுவை பிளந்துகொண்டு ஹரி நரசிங்கரூபமாகத்தோன்றி இரணியனுடன் போர்புரிந்து அவனைக் கொன்றனன். இதனை—

"இடித்ததோரசனியென்னவெறுழ்வலிக்கனகன்சீறி
அடித்ததூணத்தினின்றுமாடகப்பசும்பொனண்டம்
வெடிப்பமால்வரைபனிப்பவெடிபடநகைத்துவெய்தின்
வடித்தபூந்துளவமாலைவாள்ளரிமுளைத்தன்றே. என்றும்,

கழைசுளிகளிறன்னானைக்கவானிடைக்கிடத்திமாலைக்
குழவிவெண்டிங்களன்னகூருகிர்நுதியிற்பைந்தேன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பொழிமலரலங்கன்மார்பம்போழ்ந்துசெங்குருதிபூறி
வழிபசுங்குடர்மென்கண்ணியாளரிவனேந்ததன்றே" என்றும்
வரும் பாகவதத்தாலுணர்க.

ஒருவன் சரபாவதாரியாகி யந்த நரசிங்கத்தை அழித்தானென்றது-ஹரனே, அது அவ்வர னவ்வண்ணம் இயற்றியிருத்தலால்:

ஹரி நரசிங்கமாகி இரணியனைக்கொன்று குடர்மாலைசூடி இரத்தபானஞ்செய்து வெறியேறி இருகரங்களையும் விரித்து உலகங்களிலுள்ள வனைத்துயிர்களையும் உபத்திரவித்தனன். அப்பொழுது தேவர்கள் கொடிய அச்சிங்கத்தின் றன்மையை ஹரனிட முரைத்தார்கள். உடனே ஹரன் சரபரூபத்தையடைந்து நரசிங்க நின்றுழிச்சென்று அதனைக்கொத்தி உருக்குலைத்து வீறழித்துக்கொன்று தோலையுமுரித்தனன். இதனை—

"சரபப்பேருருவெடுத்தனனளவொழிதடக்கை
விரவித்திண்சிறைவெள்ளிடைபுதைத்துறமீப்பாய்ந்
துரவுத்திண்பதமெட்டினுங்கீண்டுவெள்ளுகிராற்
கிரணப்பொற்கிரியெடுப்பினும்கிழங்கெனக்கிழியும்:
கறித்துமிழ்ந்ததுகரங்களைக்கதிர்முடிச்சிரத்தைக்
கொறித்துமிழ்ந்ததுகுருதிகொப்புளித்ததுபஃறேண்
முறித்தமுக்கியதிடிக்குரலெழுப்பியமுழக்கிற்
செறித்தபுன்செருக்கிழந்துயிரிழந்ததச்சீயம்" என்றும் வருங்
காந்தமஹாபுராணத்தாலும், பிறவற்றாலுமுணர்க.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] என்று
சரபோபநிஷத்திலும் வருதலைக்கொண்டுணர்க.

தாத்பரியம்.

ஹரி நரசிங்கமாயினான்; ஹரன் சரபமாகி அந்நரசிங்கத்தைக் கொன்றான் என்பதாம்.

தாரதம்மியம்.

இவ்வுலகிற் கொடியவனைக்கொன்றவனை எவரும் புகழாதிரார். இரணியனாகிய கொடியவனைக்கொன்ற நரசிங்கன் கொடிய இரத்த வெறிகொண்டு நிலைதவறித் தான்செய்த உபகாரமனைத்தும் அபகாரமாக நின்றபோழ்து, ஹரன் சரபவுருவந்தாங்கி அவ்வரியைக்கொன்று உலகத்திற்குபகாரமாக வியற்றினமையால், ஹரியடைந்த நரசிங்கத்தினும் ஹரனடைந்த சரபவுருவஞ் சிறந்ததேயாம். இதனை யாமெடுத்துக் கூறவேண்டுவதில்லை. ஆதலால் நரசிங்கரூபமடைந்த ஹரியை விடச் சரபரூபமடைந்த ஹரன் சிறந்தவனாதலால், நாங்கள் இந்தவிடயத்தி லிழிவடைந்த ஹரியை அப்பிரதானமாகவகற்றி, இந்தவிடயத்தில் உயர்வடைந்த ஹரனைச் சிறந்த புருடனாக வுணர்ந்து அவ்வரனுடைய சரணகமலங்களை யடைகின்றோம்.—எ-று. (சச)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஏகோவந:கபட இத்யகிலரபாஷிவித்யாகுருபரம இத்யபிதீயதே ந்யः। கோவாநயோரதிக இத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துத மிமம்வயமாஸ்ரயாமः॥

மொழிபெயர்ப்பு.

அன்போர் சிறிது மில்லாத வசட்டுக் கபட மாணியென
வன்போ டெவரு முரைசெய்ய வந்தா னொருவன் வரையொருவன்
தன்போ லெவரு மில்லையெனச் சாற்றுங் குருவாத் தானுற்றான்
இன்போ டிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற்பெரியீ ரிறைஞ்சுதுமே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
கபட	கபடமான
வடு:	பிரமசாரி (வாமனன்)
இதி	என்று
அகிலை:	அனைவராலும்
அபாஷி	சொல்லப்பட்டான்,
அந்ய:	மற்றொருவன்
பரம:	சிரேட்டமான
வித்யாகுரு	ஞானகுரு
இதி	என்று
அபிதீயதே	கூறப்படுகின்றான்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன் ?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஸ்ரயாம:	ஆஸ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

பெரியோர்களே! ஒருவன் கபட்டமோணியென வுலகி லனைவருங் கூறுமாறு நின்றான், மற்றொருவன் உயர்ந்த வித்தைக் காசிரியன் என்று அனைவராலும் இசைக்கப்படுகின்றான்; இவ்விருவருக்கு ளுயர்ந்தவனை நீங்கள் சொன்னால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக வடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் கபடமான பிரமசாரி என்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வாறு செய்தமையால். இதனை—

"மைதபுஞானம்னத்திடையொன்றும்
கைதவமாய்மெய்கலந்தவனுங்குச்
செய்தவமாவலிசெய்நவவேள்விக்
கெய்தவுளத்தினிலெண்ணியெழுந்தான்" என்பதனாலுணர்க. கைதவம் - வஞ்சனை.

ஒருவன் சிரேட்டமான வித்யாகுருவென்று கூறப்படுகிறானென்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வாறிருத்தலால்.

ஹரனே ஜகத்குரு என்பதைப்பற்றி ஸ்காந்தபுராணத்து உபதேசகாண்டத்து எண்பத்தாறுவது அத்தியாயமானது இவ்வண்ணமுரைக்கின்றது.

"தேவகாந்தருவ மனிதாதியரனைவர்களுக்கும் குருமார்களிருக்கின்றார்கள். இவ்வனைவருக்கு முதற்குரவன் ஹரனேயாம். எங்ஙனெனின், முன்னாளில் சிரேட்டமான கைலாயத்தில் ஈசனிருந்தஞான்று இறைவி, நந்திகேசுவரன், பிரமன், பகவானாகிய ஹரி, ஸத்தியத்தையே விருப்பமாகக் காக்கின்ற முனிவர்கள் என்னு மிவர்களனைவரும் மிக்க வன்புட னிறைவனை வணங்கி, இறைவனை நோக்கி ஓ ஜகதீசா! நீர் சிருட்டிதோறு முண்டாகலுற்ற காலவரம்பிற் குட்பட்டவர்களான பிரமர்களுக்கெல்லாம் அகண்டசாத்திரங்களை உபதேசித்தருளினவர். ஆதலால், காலவரைக்குள்ளடங்கிய சகல குருமார்களுக்கும் பரமகுருவான சுவாமி இங்கெங்களுக் காகமப்பொருளை உபதேசித்தால் தங்கள் கருணையால் நாங்கள் கிருதார்த்தராவோம் என்று வேண்டிக்கொண்டார்கள். உடனே ஹரன் அக்கைலையின் ஒருசிகரமான புட்பகிரியென்னும் இடத்தை அடைந்து ஞானசாரியனாய் அவ்விடத்தில் பார்வதிதேவி, விநாயகர், சண்முகர், ஹரிஹரபுத்திரன் வைரவன், பூதங்கள் முதலானவர்களுக்கு வேதாகமோபநிடதங் கற்

Center for Shaiva Studies, Pondicherry Collection

பித்தனர். பின்னர் அக்கைலையின் வேறொரு கொடுமுடியான ஆம்ர்த்தனகிரியிலெழுந்தருளி அங்குமொரு குருவுருவத்துடனிருந்து நந்திகேசுவரன் முதலியோர்க்கும், மஹாகாளன்-சோமநந்தி-பிரமதகணங்கள் முதலானவர்கட்கும் வேதாகமோபநிடதார்த்தங்களை உபதேசித்தனர். பின்னரக்கைலாயத்தின் வேறொரு கொடுமுடியான சோளகிரியிலெழுந்தருளி ஹரி ஹயன் முதலிய தேவசிரேட்டர்களுக்கும் சகல வேதோபநிடதார்த்தங்களையும் உபதேசித்தார். பின்னர் பிச்சாடனகிரியென்னும் வேறொரு கொடுமுடியி லெழுந்தருளி அங்கு ஆசாரிய திருக்கோலத்துட னெழுந்தருளியிருந்து அவ்விடத்தில் ஸனகர் ஸனந்தர் முதலிய முனிசிரேட்டர்களுக்கும் வேதாந்தார்த்தங்களையும் ஆகமார்த்தங்களையும் உபதேசித்தனர். இறைவனுருவமான நாலுகுருமார்மன் நாலு கொடுமுடிகளிலும் இருந்தார்கள். அவர்களாலேதான் உலகத்தில்-அநேகர் தீக்ஷை பெற்றார்கள் என்றிருக்கின்றது." இதனை—

"வெள்ளமீகொளும்பிரளயத்தொடுமலர்வேத
னுள்ளிடப்படுதேவர்மற்றியாவருமொடுங்கி
நள்ளிருட்பெயர்காலையிற்றோன்றுவரதுநா
ளெள்ளறீர்த்துபதேசமுற்றளித்தனையெந்தாய்.

குரவனீயெமக்கருமறைக்குலமுழுதுணர்த்தித்
தரவிரும்பினேமென்பதுதிருச்செவிசாத்தி
அரவவார்சடையண்ணலக்கயிலையினருகு
பரவுநீண்முடிப்பனிமலர்ப்பருப்பதமடைந்தான்.

சிகரநீண்முடித்தெக்கிணமூர்த்தமொன்றெடுத்துத்
தகரவார்குழலுமைக்கும்வேன்முருகற்குந்தந்திப்
புகர்முகத்தவன்றனக்குமேர்வடுகேற்கும்புகர்வா
னிகரில்பத்திரன்றனக்குமன்றருளினனிமலன்.

பொய்யில்கேள்வியோர்க்குரியவாமத்தனிப்பொருப்பி
லையனவ்வுருமூர்த்தத்தினினிதெழுந்தருளி

வெய்யதிண்டிறற்காளர்பிங்கிருடிமெய்ப்பொருளாற்
றுய்யசோமநந்திக்குமுற்றுணர்த்தினன்றாய்மை.

கோளமால்வரையுச்சியங்குவட்டெழுந்[illegible]
வாளராவணையவனுக்குமலரயன்றனக்[illegible]
நீளிருஞ்சினைக்கற்பகநாடற்குநிமல[illegible]
மூளநின்றெழுங்கருணையினருளி[illegible]

பெருந்தவத்துளோர்க்குரியபிச்ச[illegible]
னிருந்தவச்சனகாதியர்க்கினி[illegible]
வொருங்குநின்றவேதாகமமுதலி[illegible]
திருந்துகேள்விபெற்றனைவரும்ப[illegible]

திங்களஞ்சடையெம்பிரான்றிருவருள[illegible]
பொங்குநால்வகைப்பொருப்பினோர்தம்மடி[illegible]
அங்கண்மாதவத்தலைவர்மற்றியாவருமடைந்தார்
தங்கடங்குறைகேள்வியினிரம்பினதக்கோர்" என்று உபதேசகாண்டத்துக் குருமான்மியச்சருக்க முரைத்தலாலும், ஹரன் வித்யாகுரு என்றறியப்படுகின்றான்.

[illegible]

என்று சுகரகஸ்யோபநிஷத் ஹரனையே ஜகத்குரு என்று கூறுகின்றது.

தாத்பரியம்.

ஹரி கபட பிரமசாரியாக விருந்தான்; ஹரன் ஞானசாரியனாக இருக்கின்றான் என்பதாம்.

தாரதம்மியம்.

பிரமசாரியாகவிருந்து கபடனென்று பெயரடைந்தவனைவிட, ஞானசாரியனாக விருப்பவன் சிறந்தவனேயாம். ஆதலால் நாங்கள் இவ்விடயத்திற் றாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக வகற்றி இவ்விடயத்தி லுயர்வடைந்த ஹரனையே சரணமாக வடைகின்றோம்.()

ADHINAM LIBRARY

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

𑌏𑌕𑌸𑍍𑌯𑌰𑌾𑌵𑌣𑌵𑌧𑍇𑌹𑌿𑌦𑍃𑌢𑌾𑌹𑌿𑌶𑌕𑍍𑌤𑌿
𑌰𑌨𑍍𑌯𑌸𑍍𑌯𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌲𑌯𑍇𑌚𑌦𑍃𑌢𑌾𑌹𑌿𑌶𑌕𑍍𑌤𑌿𑌃।
𑌕𑍋𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑍃𑌦𑍍𑌧𑌾
𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌂𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁𑌤𑌮𑌿𑌮𑌂𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகஸ்யராவணவதேஹித்ருடாஹிஶக்தி அந்யஸ்யஸர்வவிலயேச த்ருடாஹிஶக்தி| கோவாநயோரதிகஇத்யநுசிந்த்யவ்ருத்தாஸ்ஸத்யம் ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம: ||

மொழிபெயர்ப்பு.

முன்னு ளளகை வேந்துற்ற மூதூ ரார்ந்த விராவணனை
வின்னுண் டெறிந்துக் கோறுமதில் விளங்கு சத்தி யாளொருவன்
பின்னோர் புருட னுலகனைத்தும் பெயர்க்குஞ் சத்தி பெரிதுள்ளான்
இன்னோர் தம்மிற் சிறந்தவன்யா ரிசைத்தாற்பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏகஸ்ய	ஒருவனுக்கு
ராவணவதே	இராவணவதத்தில்
சக்தி:	சாமர்த்தியம்
த்ருடாஹி	அதிகமானதல்லவா,
அந்யஸ்ய	இன்னொருவனுக்கு
ஸர்வவிலயேச	எலலாவற்றையு மழிக்கிறதிலும்
சக்தி:	சாமர்த்தியம்
த்ருடாஹி	அதிகமானதல்லவா;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்தியா:	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

பெரியோர்களே! ஒருவனுக் கிராவணவதத்தில் சாமர்த்தியம் பெரியதானதாக விருந்தது, இன்னொருவனுக்கு எல்லாவுலகங்களையு மழிக்கின்ற சாமர்த்தியம் பெரியதன்றோ! இவ்வகைய சாமர்த்தியருட் சிறந்தோன் யாவன்? நீவி ருண்மையாக வுரைத்திரேல், நாங்களந்த மஹாபுருடனைச் சரணமாகவடைந்து ஆஶ்ரயிக்கின்றோம்.

விதப்பு.

ஒருவனுக்கு இராவணவதத்தில் சத்தி சிறந்ததென்றது - ஹரியை, அது அவ்வரி அவ்வாறு இராவணவதஞ் செய்திருத்தலால்.

ஹரி இராமாவதாரஞ் செய்திருந்தநாளி லவ்ன் மனைவியை இராவண னெடுத்துக்கொண்டுபோனான். அதனிமித்தம் இராம இராவணர்களுக்கு யுத்த நேர்ந்தது. அந்த யுத்தத்தி லிராம னிராவணனைக் கொன்றான். இதனை—

"திசைமுகன்படையெடுத்திராகவன்சினந்தேவித்
தசமுகன்றனைமாய்த்தனன்மாய்த்தலுந்தயங்கும்
குசமுகங்களிற்குங்குமங்கோட்டரம்பையரோ
டிசைமுகமலர்ந்திணர்மழைபொழிந்தனரிமையோர்" என்றும்

வரும் பாகவதத்தாலும்,

"குரைகடலையடவம்பால்மறுகவெய்து குலைகட் டிமறுகரையை யதனாலேறி, எரிநெடுவேலரக்கரொடுமிலங்கைவேந்தனின்னுயிர்கொண்டவன்றம்பிக்கரசுமீந்து, திருமகளோடினிதமர்ந்தசெல்வன்றன்னை த்தில்லைநகர்த்திருச்சித்திரகூடந்தன்னுள், அரசமர்ந்தானடிசூடுமரசை யல்லால்அரசாகவெண்ணேன்மற்றரசுதானே" என்னுங் குலசேக ரிருபன் கூற்றாலுமுணர்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஒருவன் சருவசங்காரஞ் செய்வதனிற் சமர்த்தனென்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வாறு செய்திருத்தலால்.

சதுர்யுகங்கள் ஆயிரமானாற் பிரமனுக்கொரு தினமென்று சொல்லப்படும். அவ்வண்ணம் ஆயிரஞ்சதுர்யுகமானால் அதுவே ராத்திரி. இவ்வண்ணமான தினம் முந்நூற்றறுபதானால் பிரமனுக்கு ஒரு வயதாகும். இத்தகையதீர்க்கவயது ஒருநூறானால் ஒருபிரமனாயுள். இப்படிப்பட்ட ஒருபிரமனுடைய ஆயுள் முடிவான அவன தழிவு தினம் அவன் றந்தையான ஹரிக்கு ஒருபகல். அது அவ்வளவான வொரு இராத்திரி. இவை முறையே யொருதினமாய் இத்தினம் முந்நூற்றறுபதுகொண்டது ஒருவருடமாய் அவ்வருடம் ஒருநூறு கொண்டது ஹரியின் ஆயுள். இவ்வாறு வரு மந்நாளனைத்தையு மரன் தன் நெற்றிவிழியாற் சாம்பராக வாக்குவான். இதனை—

“உலகெலாமீன்றவன்னையுமகேசனுருவிடைமாலொடுங்கரக்கும்
அலகிலாவிளையாட்டாடியவெந்தையமலமாய்நிட்களமாகி
நிலவுதற்பரமாய்ப்பரமமாய்ச்சித்தாய்நித்தியமாய்வெறுவெளியாய்
மலைவறநின்றதன்னுருவெய்தியெங்கணுஞ்சிறந்தொளிவளரும்”

என்று கூர்மபுராணத்திலும்,

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] என்பதாதியாகவரும் ஸ்ரீஸ்காந்தமஹாபுராண வசனங்களாலுணர்க.

தாத்பரியம்.

ஹரி இராவணசங்காரஞ் செய்தவன்; ஹரன் சர்வசங்காரஞ் செய்தவன் என்பதாம்.

தாரதம்மியம்.

ஒரு ஊரிலிருந்த இராவணனைக்கொன்ற ஹரியைவிட, சமஸ்தலோகப்பிராணிகளையும் சங்காரஞ்செய்த மஹா சங்காரமூர்த்தியான ஹரன் சிறந்தவனாதலால், இவ்விஷயத்தி லிழிவடைந்த ஹரியை அப்பிரதானமாக்கவகற்றி, இவ்விஷயத்திற் சிறந்த ஹரனை நாங்கள் சரணமாக அடைகின்றோம்.—எ-று. (௬)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஏக:ப்ரஸித்ததரஏவஹிவாஸுதேவோதேவோமஹாநிதிபரஸ்துதத:ப்ரஸித்த: । கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

மங்க லின்றி யொருபுருடன் மாதவர் வாசு தேவனென
வெங்கும்புகழு மியல்பதனை யேய்ந்தானிவன்போ லெனுமொருவன்
துங்க முறுமா தேவனெனத் தோன்றி யவனிற் சிறப்புற்றான்
இங்கப் பெயரிற் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
வாஸுதேவ:	வாசுதேவன் என்று
ப்ரஸித்ததர ஏவஹி	பிரசித்தமானவனல்லவா,
பரஸ்து	இன்னொருவனானால்
மஹாந்	மஹா

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தேவ:	தேவன்
இதி	என்று
தத:	அவனைக்காட்டிலும்
ப்ரஸித்த:	பிரசித்தியானவன்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன் ?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்தியா:	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

பெரியோர்களே! ஒருவன் வாசுதேவனென்று பிரசித்தியானவனன்றோ, அவன்போன்ற மற்றொருவன் மஹாதேவன் என்று அவனைவிடப் பிரசித்தியடைந்திருக்கின்றான்; இவ்விருவருக்குள் சிறந்தவன் யாவன்? அவனை நீங்க ளுண்மையாகச் சொன்னால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக வடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் வாசுதேவனென்று பிரசித்தியானவன் என்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணம் வாசுதேவனாகவிருத்தலால். வாசுதேவன் என்றால், (வசுதேவஸ்ய அபத்யம்புமாந் வாசுதேவ-வசுதேவனுடைய சந்ததியான பிள்ளையெவனோ வவன் வாசுதேவன்.)

ஒருவன் மஹாதேவனென்று பிரசித்தன் என்றது-ஹரனை, அது அவ்வர னவ்வண்ணம் மஹாதேவனாகவிருத்தலால்.

ஸர்வஜ்ஞதேவஸம்ஹாரோ ஹ்யேவெஷஹாம் ஶைவ புராணத:॥ யாதஷெஹைதிவஜாயாமஹாதேவஸ்தத: ஸ்ம்ருத:॥ என்று சிவபுராணத்தி லிருத்தலால், தேவ ரனைவராலும் மிகவும் பூசிக்கப்படுபவன் மஹாதேவன் என்பது ஸ்பஷ்டம். பெரிய தேவனென்றும் பொருள்.

தாத்பரியம்.

ஹரி வாசுதேவனாக இருந்தவன், ஹரன் மஹாதேவனாக இருப்பவன் என்பதாம்.

தாரதம்மியம்.

வசுதேவனுக்குப் பிறந்து வாஸுதேவனாக விருப்பவனைவிட, சகல தேவர்களாலும் மிகுதியாகப்பூசிக்கப்படுதலால், மஹாதேவனாக விருப்பவன் சிறந்தவனல்லனென்று எவனுமுரையான். இதனால் நாம் இவ்விடயத்திலுயர்வடைந்த ஹரனைப் பிரதானமாகக்கருதி அவ்வரனுடைய சரணயுகளங்களையே சரணமாகஅடைகின்றோம்.—எ-று. (௪௪)

ஏக: பதேநஶகடம்ஸஹஸா நுநோத
சாந்ய: பதாங்குளிநகேந கிரிம் நுநோத।
கோவாநயோரதிக இத்யநுசிந்திய வ்ருத்தா:
ஸத்யம்ப்ருவந்து தமிமம்வயமாஶ்ரயாம:॥

ஏக: பதேநஶகடம்ஸஹஸா நுநோதசாந்ய: பதாங்குளிநகேநகிரிந நுநோத। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

சந்தச் சிறிய சகடத்தைத் தன்கா லுதியாற் றகர்த்தொருவன்
சிந்தச் சுவட்டி யிசையுற்றான் சிறந்த வொருவன் றிருமலையை
முந்தத் தனது கானகத்தான் முற்றுங் கிழக்கே முடுக்கினான்
இந்தத் தகவிற் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
பதேந	காலினல்
சகடம்	சகடத்தை (வண்டியை)
ஸகஹஸா	சீக்கிரம்
நுநோத	உதைத்தான்,
அந்யச	இன்னெருவனும்
பதாங்குளிநகேந	கால்விரனகத்தினல்
கிரிம்	மலையை
நுநோத	கீழே அழுத்தினன்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

பெரியோர்களே! ஒருவன் காலினல் ஒரு சகடத்தை விரைவாக உதைத்தான், இன்னெருவனும் கால்விரனகத்தினல் மலையை விரைவாக உதைத்தான்; (கீழே யழுத்தினன்.) இவ்வாறு புரிந்த இன்னவருட் சிறந்தவன் யாவன்? அவனை நீங்கள் உண்மையாகக் கூறினல், நாங்களந்த மஹாபுருடனைச் சரணமாக வடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் காலினற் சகடத்தைச் சீக்கிரமாக உதைத்தானென்றது - ஹரியை, அது அவ்வரி அவ்வாறு செய்தமையால்.

ஹரி கண்ணவதாரஞ் செய்திருந்த வஞ்ஞான்று ஹரிக்குப்பகையாகவிருந்த கஞ்சனுக்குத் துணையாகவிருந்த அசுரனெருவன், ஹரி இருந்த இடையர்பாடியிற் கதவினருகில் ஹரியைக் கொல்லக்கருதிச் சகடவுருவமாக மாறியிருந்தனன். அதனை உணர்ந்த ஹரி அவனைக் காலா லெட்டியுதைத்துக் கொன்றனன். இதனை—

“சிறந்தமூன்றுந்திங்களின்வாய்ச்செந்தாமரைக்கட்பசுங்குழவி
பிறந்ததிருநாள்விழாவயர்ந்துபிள்ளைப்பிறைவாணுதலன்னை
உறைந்தகாலைப்பசித்தழுதங்கொண்பொன்னடித்தாமரைநீட்ட
மறிந்துசகடம்வீற்றுகிமண்மேலதிர்ந்துவீழ்ந்ததால்” என்று வரும் பாகவதச்செய்யுளா லுணர்க.

ஒருவன் கால்விரனகத்தினல் மலையைக் கீழே தள்ளினன் என்றது-ஹரனை, அது அவ்வர னவ்வாறு செய்தமையால்.

அசுர வருக்கத்தைச் சார்ந்து நின்ற பிராமணனன விராவணன் ஸ்ரீகைலாயமலையையெடுத் தம்மானையாடிய ஞான்று ஹரன் தன் காற்பெருவிரலை யம்மலையின்மீது ஊன்றி அம்மலையைக் கீழே யழுத்தினன். இதனை—

“வைத்தலுந்தசக்கிரீவன்வான்றெடர்கைலைவெற்பை
வெய்தினிலெடுப்பவெந்தைவிரற்றலைநுனியாலூன்றப்
பையுளுற்றழுங்கிமாழ்கிப்பரமனைப்பழிச்சிவெய்யோ
னைதுணர்சாமகானமறிவொடுபாடலுற்றான்” என்று கூர்மபுராணங் கூறுதலைக்கொண்டுணர்க.

தாத்பரியம்.

ஹரி சகடத்தை யுதைத்தான்; ஹரன் மலையையுதைத்தான் என்பதாம்.

தாரதம்மியம்.

ஒரு சகடத்தைக் காலினலுதைத்து விழுத்தினவனும், ஒருமலையைக் காலினலுதைத்து விழுத்தினவனும், உதைத்து விழுத்தியவிஷயத்தில் சமானமானவர்களாக விருக்கினும்,விழுந்த பதார்த்தங்களால்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam- Funding Tattva Heritage Foundation, Kolkatta

தாரதம்மியமான உயர்வு தாழ்வுகளை அடைகின்றார்கள். இம்முறையில் சாமான்யமான வண்டியை யுதைத்துத் தள்ளிய ஹரியைவிட, மிகவும் உயர்ந்த மலையை அலட்சியமாகக் கால்விரலாலூன்றி யழுத்திய ஹரன் நியாயமுறையால் சிறந்தவனாகின்றான். ஆதலால் தாரதம்மிய மாராயவந்த நாங்களும் இவ்விடயத்திற் றாழ்வடைந்த ஹரியையப்பிரதானமாகத்தள்ளி, சிறந்த ஹரனைச் சிறந்தபொருளாகக்கருதி அவ்வரனையே சரணமாகவடைந்து வாழ்கின்றோம்.—எ-று. (௪௫)

𑌏𑌕𑌃 𑌪𑌦𑌤𑍍𑌰𑌯𑌮𑌿𑌤𑌂 𑌤𑍍𑌰𑌿𑌜𑌗𑌚𑍍𑌚𑌕𑌾𑌰 𑌹𑍍𑌯
𑌨𑍍𑌯𑌃 𑌪𑌦𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌿𑌹𑌤𑌂 𑌚 𑌜𑌗𑌚𑍍𑌚𑌕𑌾𑌰।
𑌕𑍋 𑌵𑌾 𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾
𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁 𑌤𑌮𑌿𑌮𑌂 𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏக:பதத்ரயமிதந்திரிஜகச்சகாரஹ்யந்ய:பதாங்குளிஹதஞ்சஜகச்சகார। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஸ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

அதிரா நின்ற கடல்புடைசூ ழவனி முதல வொருமூன்றும்
முதிரா வடிக ளொருமூன்றா லளந்தா னொருவன் முதலொருவன்
எதிரா துலகந் தனையடியா லேய்ந்த விரலா லிறக்கினான்
இதிலார் சிறந்தார் சிறந்தாரை யிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
பதத்ரயமிதம்	மூன்றடிகளா லளக்கப்பட்டதாக
திரிஜகத்	மூன்றுலோகங்களையும்
சகாரஹி	செய்தானல்லவா,
அந்ய:து	இன்னொருவனால்
ஜகத்	லோகத்தை
பதாங்குளிஹதம்	கால்விரனுதியால் அழுத்தப்பட்டதாக
சகார	செய்தான்;

அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன் ?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஸ்ரயாம:	ஆஸ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

பெரியோர்களே! ஒருவன் மூன்றுலகங்களையும் மூன்று அடிகளா லளக்கப்பட்டதாகச் செய்தானன்றோ ? மற்றொருவனால் ஒரு கால்விரனுதியினால் உலகத்தைக் கீழே யழுத்தப்பட்டதாகச் செய்தானன்றோ? இவ்விருவருள் யாவன் சிறந்தவன்? சிறந்தவனை நீவிருரைத்திரேல், நம்மாலுண்மையாக வுரைக்கப்பட்ட அம்மஹா புருஷனை நாங்கள் சரணமாக அடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் மூன்றடிகளா லளக்கப்பட்டதாக மூன்றுலகங்களையும் செய்தானென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணஞ் செய்திருத்தலால்.

இது அவ்வரி வாமனாவதாரஞ்செய்த வந்நாளிற் செய்த தொழில். இதனை—

“மூவடிநானிலம்வேண்டி முப்புரிநூலொடுமானுரியிலங்கு
ஆர்வினிலிருபிறப்பொருமாணாகி, ஒருமுறையீரடிமூவுலகளந்தனை”
என்று திருமங்கையாழ்வானிசைத்த எழுகூற்றிருக்கையாலும் பிறவற்றாலும் உணர்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

ஒருவன் கால்விரனுனியா லுலகத்தைக் கீழேயழுத்தியதாகச் செய்தானென்றது-ஹரனை, அது அவ்வாறு அவ்வரன் செய்திருத்தலால்.

ஹரன் திரிபுரசங்காரஞ் செய்தநாளிற் றனக்கு இரதத்தட்டாக நின்ற பூமியிற் காலெடுத்து வைத்தவுடனே அது கீழே சாய்ந்தழுந்தியது. இதனை—

" மூரிவெள்ளிமிலேறுவிட்டிழிந்தனன்முதல்வன்
மேருமால்வரையொருதனிவில்லொடும்மேவித்
தேரினேர்தனியெடுத்துறமிதித்தலுந்தெறித்துப்
பாருமச்சுமற்றழிந்ததுதேர்த்தடம்பரப்பு" என்றுவரும் உபதேசகாண்டத்தாலுணர்க.

தாத்பரியம்.

ஹரி மூன்றுலோகங்களையும் மூன்றடியா லளந்தான்; ஹரன் ஒரு காலடிநுனியால் உலகைக் கீழேயழுத்தினன் என்பதாம்.

தாரதம்மியம்.

மூன்றடியாக உலகை யளத்தலைவிட ஒரு அடியி னொருவிரனுனியால் உலகையழுத்த லாச்சரியமான விஷயம். ஆதலால் மூன்றுலகங்களையும் மூன்றடிகளாலளந்த ஹரியினும், கால்விரனுனியா லுலகையழுத்திய ஹரன் சிறந்தவனென்பது சொல்லாமே யமையும். இதனை லிவ்விடயத்திற் குறைந்த ஹரியை யப்பிரதானமாக வகற்றி, ஹரனைச் சரணமாக வடைகின்றோம்.—எ-று. (௪௪)

𑌏𑌕𑌸𑍍𑌯 𑌸𑍂𑌕𑌰𑌜𑌨𑌿𑌸𑍍𑌸𑍁𑌲𑌭𑌾𑌸𑍍𑌤𑌿 𑌹𑍀𑌨𑌾
𑌹𑍍𑌯𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑍁 𑌚𑍇𑌤𑍍𑌸𑍁𑌰𑌭𑌿𑌰𑍂𑌪 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌃।
𑌕𑍋 𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌃
𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁 𑌤𑌮𑌿𑌮𑌂 𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகஸ்யஸூகரஜநிஸ்ஸுலபாஸ்திஹீநாஹ்யந்யஸ்துசேத்ஸுரபிரூபஇதிப்ரஸித்த:।கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம் ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

குன்றி யனைய விழியி னொடுங் குலவுமிழிந்த சூகரமா
யொன்றி யொருவ னுற்றான்மற் றொருவன் சுரபி யுருவாகிப்
பொன்றி யழித லில்லாத புகழி னோடு பொலிகின்றான்
இன்றிங் கிவருட் சிறந்தவன்யா ரிலைசற்றாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏகஸ்ய:	ஒருவனுக்கு
ஹீநா	இழிவுபொருந்தியதும்
ஸுலபயா	இலேசானதுமான
ஸூகரஜநி	ஊர்ப்பன்றிப்பிறப்பு
அஸ்திஹி	இருக்கின்றதன்றோ,
அந்யஸ்து	இன்னொருவனுனல்
சித்	பிரகாசிக்கின்ற
சுரபி:	பசுவினுடைய
ரூப	ரூபமானவன்
இதி	என்று
பிரஸித்த:	பிரஸித்தியானவன்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன் ?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்தியா	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	இந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாமஃ	ஆஶ்ரயிக்கின்றோம்.

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பொழிப்பு.

பெரியவர்களே! ஒருவன் இழிவு மிலேசுமான ஊர்ப்பன்றி யுருவுடையோனென்று ஜகத்பிரஸித்தம், இன்னொருவன் சுரபியுருவனென்று ஜகத்பிரஸித்தம்; இத்தகைய பிரசித்தர்களில் எவன் சிறந்தவனோ அவனை நீங்களுண்மையாக வுணர்த்தால், நாங்கள் அந்தப் புருஷனை மஹாபுருஷனாக அடைந்து ஆச்ரயிக்கின்றோம்.

விதப்பு.

ஒருவன் இழிவுபொருந்திய பன்றியுடலடைந்தானென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வாறு இழிந்த பன்றியுருவத்தை யடைந்தமையால். அசுரனான இரணியாக்ஷனுடன் போர்புரியுங்காலத்துத் திருமால் பன்றியுருவடைந்தான். இதனை—

"சிந்தைசெய்திருந்ததிசைமுகன்வதனஞ்சிறந்திடுநாசியாம்புழையில்
சுந்தரப்பரமவரியோரங்குட்டவுருவுடைவராகமாய்த்தோன்றி
அந்தரத்திமைப்பின்முனமொழுந்தண்டமுகட்டினையளாவினனகன்ற
மந்தரவரையின்வளர்ந்தநற்காலின்மணிமுகச்சிலம்பொலியதிர்ப்ப"

என்று வரும் பாகவத முதலியவற்றாலுணர்க.

ஒருவன் பசுரூபமாயிருக்கின்றானென்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வாறு பசுரூபமடைந்திருத்தலால்.

சூரிய வங்கிசவரசனாய் மநுவென்னும் பெயரோடிருந்த மன்னவன்பொருட்டு ஹரன் பசுரூபமடைந்தானென்பது பிரசித்தம்.

" ஈசன்பசுவாகியேமனுகன்றுதி
வீசுபுகழாரூரின்வீதிவந்தாரம்மானை
வீசுபுகழாரூரின்வீதிவந்தாராமாயின்
காசளவுபாலுங்கறவாதோவம்மானை
கன்றையுதைகாவிகறக்குமோவம்மானை" என்பனவாதியாலுணர்க.

பன்றி நிஷித்தமானதென்பதைப் பாமரர்களும் உணர்வார்கள். பன்றியிருக்கும் இடமாதிகளையும் அனைவரு மறியார்கள். பசு உயர்ந்ததென்பதை அநுபவத்தினாலே யனைவரும் உணர்வார்கள். பசு பூசிக்கத்தக்கது; பசுவினவயவமனைத்தும் தேவசொரூபம். இதனை—

"சுந்தரத்துவிடையுறையுமதன்பாங்கர்செய்யநிறச்சுமனைவெள்ளை
அந்தநிறச்சுரபிகாபிலநந்தைகரியசுபத்திரையார்தூம
நந்துநிறச்சுசீலையெனுமைந்துமினிதிருக்குமிங்ஙனவின்றவாவின்
முந்தெழுகோட்டடித்தலத்துமலரவனுந்திருமாலுமுற்றுவாழ்வார்.
கோட்டினுதிச்சராசரமும்பல்வகைத்தீர்த்தமுஞ்சிரத்துக் குழகனெற்
மாட்டமலைமேனாசிவையிலேவேலேமகநாசினாகேச [றி
ரோட்டமதிலுதயவத்தமனசந்திபல்லின்வளியோசைகண்ணில்
காட்டுமிருசுடர்கன்னமிரண்டினசுவனிதேவர்கடலோனாவில்.
கலைமகளுங்காரத்திற்கண்டத்திந்திரனியமன்கருத்திற்கெண்டைத்
தலனியக்கரிமிலருக்கர்சாத்தியர்மார்பிலனிலவாயுத்தாளி [பட்
னிலவுமருத்துவர்முழந்தாள்மேற்குரத்துனிதிநிகழ்பன்னகர்கண்ணுப்
குலவுறுகந்தருவர்கண்டினரமகளிருட்குரத்தினெழுவர்மாதோ.
வாலடியினோகேசர்வான்மயிரினிரவியொளியபானமாமா
தேலவனாப்பலகைதனிற்பிதிரர்வசுதேவர்சந்திதொறுமேர்வாய்ந்த
கோலவுருத்திரர்முதுகின்மாதவர்மெய்ம்மயிரினும்பர்குடிஞைநீரிற்
சாலுமயத்தேமுனைதனைமாதுதரத்துததிபயோதரத்தினெல்லை.
காருகபத்தியமாதிமூன்றழலுமுறைவயிற்றிற்காமர்நெஞ்சிற் [லாஞ்
சீருமிழும்வதனத்திலென்பொடுசுக்கிலந்தன்னிற்செய்மகங்களெல்
சாருமுறுப்பனைத்தினுங்கற்புடைமகளிர்தங்குவரிச்சாதியாகிப்
பாருலவுமானிடத்துமிவ்வாறுதேவரெல்லாம்பயில்வர்மாதோ.
தீண்டினுங்காணினுங்கரிசுசேணகற்றிநல்வினையேசெறிப்பதாகி
யீண்டுமரும்பயனுதவிமறுமையினும்வேண்டுபதமெளிதினுய்க்கும்
காண்டகையவாவினைக்கண்ணின்றியொறுத்துனா யுரப்பிக்கலக்கங்கா
ண்போர், மாண்டகபிலயினறும்பால்வரதனுக்காட்டாதுண்போர்வதி
வார்கும்பி" என்று தணிகைப்புராணத்தில் கோமகிமை கூறியிருத்தலால், பரிசுத்தமானது பசுரூபம் என்றறியப்படுகின்றது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தாத்பரியம்.

ஹரி ஊர்ப்பன்றி உருவடைந்தான்; ஹரன் பசுவுருவடைந்தான் என்பதாம்.

தாரதம்மியம்.

இழிவுபொருந்திய பன்றியை எவனு மங்கீகரிக்கின்றானில்லை. உயர்வுபொருந்திய பசுவை எவனுந் தள்ளினானில்லை. இது உலகவநுபவம். இதனால் இழிவுபொருந்திய பன்றியுருவத்தையடைந்த ஹரியை விட, உயர்வுபொருந்திய பசுவுருவத்தையடைந்த ஹரன் சிறந்தவனாக வறியப்படுகின்றான். இழிந்த பன்றியுருவமடைந்தமையால் தாழ்வடைந்த ஹரியை இந்தவிடயத்தி லப்பிரதானமாக வொதுக்கி, உயர்ந்த பசுவுருவமடைந்த ஹரனை இந்தவிடயத்திற் சிறந்தவனாக வறிந்த நாங்களந்த ஹரனைச் சரணமாக வடைகின்றோம்.—எ-று. (சஎ)

ஏகோ விபாதி ப்ருஶமேகமுகாம்புஜேந
ஹ்யந்யோ விபாதி கலு பஞ்சமுகை: ப்ரஸித்த:।
கோ வாநயோரதிக இத்யநுசிந்த்ய வ்ருத்தா:
ஸத்யம் ப்ருவந்து தமிமம் வயமாஶ்ரயாம:॥

ஏகோவிபாதிப்ருஶமேகமுகாம்புஜேநஹ்யந்யோவிபாதிகலுபஞ்சமுகைப்ரஸித்த:। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம் ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

நறிய கமல மலரென்ன நண்ணு மொருமா முகமதனால்
வெறிய பொழில்சூ முலகத்தில் விளங்கு மொருவன் வியனொருவன்
முறைகொ ளைந்து முகமதனான் மொய்த்த புகழ்சேர் முதன்மையான்
இறலி லிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
ஏகமுகாம்புஜேந	தாமரைமலர்போன்ற ஒரு முகத்தினால்
ப்ருஶம்	மிகவும்
விபாதிஹி	பிரகாசிக்கின்றானன்றோ?
அந்ய:	இன்னொருவன்
பஞ்சமுகை:	ஐந்து முகங்களால்
ப்ரஸித்த:	பிரசித்தமானவனாக
விபாதிகலு	விளங்குகின்றான்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:.	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

பெரியோர்களே! ஒருவன் கமலமலர்போன்ற ஒரு முகத்தினால் பிரகாசிக்கின்றானன்றோ? மற்றொருவன் (கமலமலர்களையனைய) ஐந்து முகங்களாற் பிரகாசிக்கின்றானன்றோ? இவ்விருவரி லிந்த விடயத்திற் சிறந்தவனை இன்னவனென்று நீவிர் கூறுமின்; கூறுதிரேல் நாங்களந்த மஹாபுருடனைச் சரணமடைந்து வாழ்கின்றோம்.

விதப்பு.

ஒருவன் ஒரு முகத்தோடு விளங்குகிறானென்றது - ஹரியை, அது அவ்வரி அவ்வாறொருமுக முள்ளவனாகவிருத்தலால்: இதனை—

“ துதிசெய்செம்பொற்றொடியுமகுடமும்
அதிர்சிலம்பொடுமொடகத்தாடையும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கதிரிளங்குழையுங்கரநான்குமாய்
விதிவணங்கவிமலன்விளங்கினான்" என்று பாகவதத்தும் மற்றிடத்தும் வருவனவற்றைக்கொண்டுணர்க.

ஒருவன் ஐந்துமுகங்களோடு விளங்குகின்றானென்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ணம் ஐம்முகங்களை யுடையவனாக விருத்தலால். இதனை—

பத்³மாஸநஸ்த²ம் பஞ்சாஸ்யம் ப்ரதிவக்த்ரம் த்ரிலோசநம்।
ப்ரக்ருத்யைவ விஶாலாக்ஷம் ஜடாசந்த்³ரகலாந்விதம்।
ப்ரஸந்நவத³நம் ஶாந்தம் த³ஶபா³ஹுஸுஶோப⁴நம்।
க்ருஷ்ணம் கோ⁴ரம் ச ரக்தாப⁴ம் வாமதே³வகம்॥
ஶ்வேதம் ஸத்³யோஜாதம் பீதம் தத்புருஷம் ஸ்ப²டிகம்।
நாநாலங்காரஸம்பந்நம் ஶாந்தம் ஈஶாநம்॥
ஶக்திஶூலகட்வாங்க³வரதா³ப⁴யஹஸ்தகம்।
த³க்ஷிணே வாமஹஸ்தே து ட³மருகம் பீ³ஜபூரகம்।
நாகா³க்ஷஸூத்ரநீலோத்பலம் பி³ப்⁴ராணம் ஹரிம்॥

என்று ஆகமங்களுரைத்தலாலுணர்க.

தாத்பரியம்.

• ஹரி ஏகமுகன், ஹரன் பஞ்சமுகன் என்பதாம்.

தாரதம்மியம்.

ஒன்றுடையவனில் ஐந்துடையவன் உடைமையிற் சிறந்தவன். அதனால் தாமரைமலர்போன்ற ஒரு முகமுள்ள ஹரியைக்காட்டிலும், தாமரைமலர்களையனைய ஐந்துமுகங்களையுடைய ஹரன் சிறந்தவனேயாம். இதனால் இவ்விடயத்தில் தாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாகவகற்றி, இவ்விடயத்தில் உயர்ந்த ஹரனை நாங்கள் சரணமாகவடைகின்றோம்.—எ-று. (சஅ)

ஏக꞉ க்³ரஹீதுமதிவாஞ்ச²தி வித்தஹீநம்
வித்தேஶமேவ குருதே நிஜப⁴க்தமந்ய꞉।
கோ வா நயோரதி⁴க இத்யநுசிந்த்ய வ்ருத்³தா⁴꞉
ஸத்யம் ப்³ருவந்து தமிமம் வயமாஶ்ரயாம꞉॥

ஏகோக்ரஹீதுமதிவாஞ்சதிவித்தஹீநம்வித்தேசமேவகுருதேநிஜபக்தமந்ய: । கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம: ॥

மொழிபெயர்ப்பு.

பொல்லா வறுமை கொண்டவனைப் பொருந்த நண்ப னுவொருவன்
எல்லா வுலகு மறிதருமா றிசைந்தா னொருவ னிணையில்லா
வல்லா சஞ்சேர் நிதிக்கிறையை யுயர்ந்த நண்ப னுவுடையான்
இல்லா வசையா னெவனிவனி லிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
வித்தஹீநம்	தனமில்லாதவனை
க்ரஹீதும்	சேர்த்துக்கொள்வதற்கு
அதிவாஞ்சதி	மிகவும் விரும்புகிறான்,
அந்ய:	இன்னொருவன்
வித்தேசமேவ	தனத்திற்கிறைவனான குபேரனையே
நிஜபக்தம்	தன்னுடையவன்பனாக
குருதே	செய்துகொண்டான்;
அநயோ:	இவ்விருவரில்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

பெரியோர்களே! ஒருவன் மிகவுந் தரித்திரனை நண்பனாக விரும்புகிறான், இன்னொருவன் மிகவும் சம்பன்னனான குபேரனையே நண்பனாகக்கொண்டிருக்கின்றான்; இவ்விருவரி லெவனோ சிறந்தவன்? அவனை நீங்கள் உண்மையாவுரைத்தால், அந்த மஹாபுருஷனை நாங்கள் சரணமாக வடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் தரித்திரனை மிகவும் விரும்புகின்றானென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வாறு விரும்புதலால். அதாவது அரி மிகவு மெளிய பார்ப்பானான குசேலனுக்கும் வேடனான குகனுக்கும் நண்பனாக விருந்தமையாதிய. இதனை—

“அகமகிழ்ந்தெதிர்வந்தடிபோற்றிய
குகனொடுமுவந்துற்றவட்கோதிலாக்
ககனநின்றிழிகங்கைகடந்திட
முகமலர்ந்தொருமூவருமேகினர். என்றும்,
பொன்பிறங்கியபுணர்முலைத்திருமகள்கொழுநற்
கன்பனாகியுமகன்றிலைவறுமைமற்றென்னே
மின்பிறங்கியவிழுமணிமார்பினாற்கண்டு
மன்பெரும்பொருள்வாரினைவருகெனவகுத்தாள்” என்றும்

வரும் பாகவதவசனங்களால், ஹரி வறுமையாளரொடு நண்புடையனென்பதையுணர்க.

ஒருவன் குபேரனைத் தோழனாகவுடையவனென்றது-ஹரனை, ஹரன் அவ்வாறு குபேரனைத்தோழனாகக்கொண்டிருத்தலால். இதனை,

“தனதனற்றோழாசங்கராசூலபாணியேதாணுவேசிவனே, கனகநற்றூணே கற்பகக்கொழுந்தே கண்கண்மூன்றுடையதோர் கரும்பே, யனகனேகுமரவிநாயகசனகவம்பலத்தமரசேகரனே,யுனகழலிணையென்னெஞ்சனுள்ளினிதாத்தொண்டனேனுகருமாறுகரோ” என்று திருமாளிகைத்தேவர் திருவிசைப்பாவிலும், மற்றைய நூல்களிலும் வருதலைக்கொண்டுணர்க.

தாத்பரியம்.

ஹரி வறியனையும், ஹரன் சம்பன்னனையும் தோழர்களாக வுடையவர்களென்பதாம்.

தாரதம்மியம்.

ஏழையைத் தோழனாகக்கொள்பவனைவிடத் தனவானைத் தோழனாகக்கொள்பவன் சிறந்தவனேயாம். ஏழைகளான குசேலாதிகளோடு தோழமையாகப் பழகிய ஹரியைவிடத் தனிகனான குபேரனைத் தோழனாகவுடைய ஹரன் சிறந்தவனேயாம். ஆதலா லிவ்விடயத்திற் றாழ்வடைந்த ஹரியை யப்பிரதானமாகவகற்றி,இவ்விடயத்தி லுயர்வடைந்த ஹரனைச் சரணமாக வடைகின்றோம்.—எ-று. (௪௧)

𑌏𑌕𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌕𑍍𑌯𑌾
𑌮𑌨𑍍𑌯𑍋 𑌭𑍁𑌜𑍈𑌰𑍍𑌦𑌶𑌭𑌿𑌃 𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌕𑍍𑌯𑌾𑌮𑍍 ।
𑌕𑍋 𑌵𑌾 𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾
𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁 𑌤𑌮𑌿𑌮𑌂 𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃 ॥

ஏகச்சதுர்புஜஇதிப்ரதிதஸ்திரிலோக்யாமந்யோபுஜைஸ்துதச்சபி: ப்ரதிதத்ரிலோக்யாம்| கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்யாம:॥

மொழிபெயர்ப்பு.

மலைக ளொருநான் கெனவெழிலை மன்னு மொருநாற் றோளுடனே
நிலைய னொருவன் மற்றொருவன் நீண்ட பத்து மேருவெனக்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குலவு தோள்க ளொருபதொடுங் குறைவின் மாமை யுடனென்று
மிலகு மிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
சதுர்புஜ:	நான்குதோளுடையவன்
இதி	என்று
திரிலோக்யாம்	மூன்றுலோகங்களிலேயும்
ப்ரதே	பிரசித்தியானவன்,
அந்யஸ்து	இன்னொருவனால்
தசபி:	பத்தான
புஜை	கைளால்
திரிலோக்யாம்	மூன்றுலோகங்களிலும்
ப்ரதித	பிரசித்தியானவன்;
அநயோ:	இவ்விருவரில்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஸ்ரயாம:	ஆஸ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

பெரியோர்களே! ஒருவன் நாலுதோள்களுடன் விளங்குகின்றான், மற்றொருவன் பத்துத்தோள்களுடன் பிரகாசிக்கின்றான்; இவ்விருவரில் எவன் அதிக பலமானவன்? நீங்கள் உண்மையாக வுரைத்தால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக வடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் நாலுதோள்களை யுடையவனென்றது - ஹரியை, அது அவ்வரி அவ்வாறு நாலுதோள்களை யுடையவனாக விருத்தலால். இதனை—

"தாமரைக்கரநான்கின்வெண்சங்கொடுத்தழல்வாய்
நேமிவெங்கதைநிரையிதழ்த்தாமரைநிலவத்
தேமலர்த்தொடைமார்பினிற்றிருமலர்சிறப்பக்
காமர்கட்டெழிற்கவுத்துவங்களத்தினிற்கவின" என்று வரும்

பாகவதத்தாலுணர்க.

ஒருவன் பத்துத்தோள்களை யுடையவனாக விருக்கின்றான் என்றது-ஹரனை, அது அவ்வரன் பத்துத்தோள்களை யுடையவனாக விருத்தலால். இதனை—

[illegible]
[illegible]

என்றும்வரும் வசனங்களாலேற்றமான பத்துக்கைகளிருப்பதை யுணர்க.

தாத்பரியம்.

ஹரி சதுர்ப்புஜன்; ஹரன் தசபுஜன் என்பதாம்.

தாரதம்மியம்.

நான்கு அத்தங்க ளுள்ளவனைவிடப் பத்து அத்தங்களுள்ளவன் அந்தவிடயத்திற் சிறந்தவனேயாம். இதனால் நாங்கள் அஸ்தவிஷயத்தி லுயர்ந்த ஹரனைச் சரணமாக அடைகின்றோம்.—எ-று. (௫௦)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பஞ்சாயுதப்ரபலசக்திமுபைதிசைகஸர்வாயுத:ப்ரபலசக்திமுபை திசாந்ய: । கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

பொங்கித் துணிந்து வரும்பகையைப் பொருது கெடுக்கத் தக்கதுவாச்
சங்கு முதல படையைந்தைத் தாங்கி யொருவ னிசைசார்ந்தான்
துங்கம் பெறுசர் வாயுதனுத் துலங்கி யொருவன் தோன்றினன்
இங்கித் திருவிற் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
பஞ்சாயுத:	ஐந்து ஆயுதங்களையுடையவனுய்
ப்ரபலசக்திம்	பிரபல சத்தியை
உபைதி	அடைகிருன்,
அந்ய:	மற்ருெருவன்
ஸர்வாயுத:	எல்லாவாயுதங்களையுமுடையவனுக
ப்ரபலசக்தி:	பிரபலசத்தியை
உபைதி	அடைகிருன் ;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்தியா	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்ருேம்.

பொழிப்பு.

பெரியோர்களே! ஒருவன் பகைவர்களை வெல்லவல்ல பஞ்சாயுதங்களையுடையவனுக விருக்கின்ருன், மற்ருெருவன் சகலாயுதங்களையு முடையவனுக விருக்கின்ருன்; இவ்விருவரிற் சிறந்தவன் யாவன்? அவனை நீங்கள் சொன்னுல், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக வடைகின்ருேம்.

விதப்பு.

ஒருவன் பஞ்சாயுதங்களையுடையவனென்றது - ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணம் பஞ்சாயுதங்களை யுடையவனுக விருத்தலால். இதனை—

“ சங்கசக்ர கதாகட்க கோதண்டபாணினேநம:” என்பதாதி வாக்கியங்களாலுணர்க.

ஒருவன் சர்வாயுதனென்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ண மெல்லாவாயுதங்களையும் தரித்திருத்தலால். இதனை—

[illegible] என்றுவ்ரும் மஹாஸ்காந்தவசனத்தாலுணர்க.

தாத்பரியம்.

ஹரி பஞ்சாயுதன்; ஹரன் ஸர்வாயுதன் என்பதாம்.

தாரதம்மியம்.

ஐந்துஆயுதங்களையுடையவனிலும் அநேக ஆயுதமுடையவன் சிறந்தவன். இதனுல் நாங்கள் ஆயுதவிஷயத்திற் ருழ்வடைந்த ஹரியை இவ்விஷயத்தி லப்பிரதானமாக்கி, சர்வாயுதனுன ஹரனை முறையால் உத்க்ருஷ்டமாகக்கருதி அவன் சரணங்களை யடைகின்ருேம்.—எ-று.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஏக:ப்ரஸித்தஇஹதேநுவதம்விதாயவ்யாக்ரம்நிஹத்யநிதராமித ர:ப்ரஸித்த: । கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம: ॥

மொழிபெயர்ப்பு.

மாதே யொருவன் றேநுவத மருவி யொருவா மாண்புற்றுன்
மீதே புள்ளி பலகொண்டு மீறி வந்த கொடும்புலியைக்
காதா நின்று மிகுமிசையைக் கண்டா னொருவன் காசினியி
லீதே யிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
தேநுவதம்	பசுவந்தயை
விதாய	செய்து
இஹ	இவ்விடத்தில்
ப்ரஸித்த:	பிரசித்தன்,
இதர:	இன்னொருவன்
வ்யாக்ரம்	புலியை
நிஹத்ய	கொன்று
நிதராம்	மிகவும்
ப்ரஸித்த:	பிரசித்தன் ;
அநயோ:	இவ்விருவரில்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன் ?
இதி	இதனை
அநுசிந்திய	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை

வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

பெரியோர்களே! ஒருவன் தேநுவதஞ்செய்து பிரசித்தி பெற்றவன், மற்றொருவன் புலியை வதஞ்செய்து பிரசித்திபெற்றவன் ; இவ்விருவரி லெவன் சிறந்தவன்? அவனை நீவிருண்மையாக வுரைத்தால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக வடைகின்றோம்.

விசேடம்.

ஒருவன் தேநுவதஞ் செய்தவனென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வாறு செய்திருத்தலால்.

ஹரி கண்ணனாகப்பிறந்து ப்ருந்தாவனத்தி லிடைச்சிறுவருடன் பசுக்களை மேய்த்தநாளில், அவ்வரியின் மாமனான கஞ்சனுடைய வேண்டுதலால், ஹரியைக் கொல்லவந்த பகாசுரனென்பவன் அங்குள்ள பசுவின் கன்றுகளுடன் தானுமொரு கன்றாகி நின்றனன். உடனே இதனை உணர்ந்த ஹரி அவனைக் காலைப்பிடித்து அருகினின்ற விளா மரத்தின் மோதியடித்தான். அதனாலவன் இறந்தான். இதனை—

“ இனியதமருடனேகிக்கண்ணன்மேய்க்கு மிளங்கன்றினிளாயுடனேதானுங்கன்றாய்த், துனிகளறுமனத்தினிலனெங்குந்துள்ளித்துயமுகில்வண்ணனைத்தாளுடுங்காலை, வினையமெலாமறிந்துநகைத்தையன்மெல்லவிளையாடியவுணக்கன்றினைக்கால்பற்றிக், கனியுதிரவெறிந்தனனக்கபித்தம்வீழக்கடியவனுங்கருவளாபோல்மடிந்துவீழ்ந்தான்” என்னும் பாகவதத்தாலுணர்க.

ஒருவன் புலியைக் கொன்றவனென்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ணம் செய்திருத்தலால்.

தாருகவன முனிவர் கருமமன்றிக் கருத்தாவில்லையென்று தீர்மானஞ் செய்தவர்களாய் மஹாதேவன் முதலிய் எவரையும் மதியாதவர்களாக விருந்தார்கள். இவர்கள் இவ்வாறிருத்தல் வைதீகவிரோத

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மாதலால், ஹரன் பிச்சாடனவுருவத்துடன் அம்முனிவர் வாழுமிடஞ் சென்றனன். செல்லுதலும் அம்முனிவர்மனைவியர் அவ்வரனுக்குத் தம்மனத்தைப் பறிகொடுத்துக் கற்பில் பெண்டீராயினர்கள். தம்மனைவியர் நிலையைக் கெடுத்தவனைக் கெடுக்குமாறு அம்மோனியர் ஒரு கொடிய யாகஞ்செய்தார்கள். அந்த யாககுண்டத்தினின்றும் ஒரு அசுரன் புலியுருவமாகத்தோன்றி அம்மறையவர்களைப் பார்த்து நீவிரேற்றுக்கென்னை அழைத்தீர்கள் என்றனன். அதற்கவர்களெங்கள் கிரகிணிகளின் கற்பை அழித்தவனை நீ கொல் என்றுரைத்தார்கள். அதுகேட்ட புலியும் வாயைத் திறந்தவண்ணமாக வந்தது. வருதலும் ஹரன் அப்புலியைப் பிடித்துக்கிழித்து அதன் றோலை யெடுத்துக் கொண்டனன். இதனை—

ஶ்ருகாமஜ நமெஜெதஷாதுலெஜ்ஞாகா நிஜாதுமே।
தஊதுமெஶிவம்வ ப்ராவெர்ாஹத்வயநுகா ஷிளா நந:॥
ஹஞாகாமொஷிகம்ப்ராவலிதமெத ப்ராயுஹ்மகாமக்ருயா।
ஶ்ருஹீகாவாமெஜ தவஸுகமெணாஷ்ஷாம்நிஷ்ாம॥
ஹகாகவலஸோஷாயவஹுவதிமெபஶிவ:।

த்ாத்பரியம்.

ஹரி தேநுவதஞ்செய்தவன்; ஹரன் வ்யாக்ரவதஞ்செய்தவன் என்பதாம்.

தாரதம்மியம்.

பசுவைக் கொன்றவனைவிடப் புலியைக் கொன்றவன் சிறந்தவன். ஆதலால் நாங்கள் பசுக்கொலைபுரிந்த ஹரியை அப்பிரதானமாக வகற்றிப் புலிக்கொலைபுரிந்த ஹரனைச் சிறப்பாகக்கொண்டு அவன் சரணங்களையே சரணமாக வடைகின்றோம்.—எ-று. (௫உ)

ஏகொமூர்சஹ்ஸு ஹநேஷிராதபாணா
ஹாஸெநஜஹ்ஸுயதிதஸூத்ரிபுரஷிசாநய:।

கோவாநயோரதிகஇதயநுசிந்திய வ்ருத்தா
ஸத்யம்ப்ருவந்து தமிமம்வயமாஶ்ரயாம:॥

ஏகோமுமூர்ச்சகஹநேஹிராதபாணாத்தாஸேஙமூர்ச்சயதிதத்த்ரிபுரம்ஹிசாந்ய:। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

ககனத் தொருவனிழிபுளிஞன் கணையாற் சாம்பிக் களையுற்றான்
பகனத் தொளிகொள் பருமணிகள் பதித்த கதித்த பதிமூன்றைத்
தகனத் தொடக்கி னுறுசோகஞ் சார வொருவன் றனைத்தான்
இகனத் திவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
கிராதபாணாத்	வேடனம்பினால்
கஹநே	காட்டில்
முமூர்ச்சஹி	மூர்ச்சித்தானல்லவா,
அந்ய:	இன்னொருவனால்
ஹாஸேந	அட்டகாசத்தினாலே
தத்த்ரிபுரம்	அந்த முப்புரங்களை
மூர்ச்சயதிஹி	மூர்ச்சிக்குமாறு செய்தானல்லவா;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வயம் — நாங்கள்
ஆஶ்ரயாம: — ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

பெரியவர்களே! ஒருவன் காட்டில் வேட்டுவ னம்பினாற் சோக முற்றான், மற்றொருவன் தனது நகையாற் றிரிபுர மூர்ச்சையுறச் செய்தான்; இவர்களுட் சிறந்தவன் யாவன்? நீங்கள் உண்மையாக வுரைத்தால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரண்மாக வடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் கிராதபாணத்தான் மூர்ச்சித்தானென்றது - ஹரியை; அது அவ்வரி அவ்வண்ணம் மூர்ச்சையடைந்தமையால்.

இது கண்ணாவதாரமாக ஹரியிருந்தனாளி லொருநாள் காட்டையடைந்து வேட்டையாடி இளைப்பாற ஒருமரநிழலிற்கிடந்தான், கிடந்தவனை ஒருவேடன் மானென்று கருதி அம்பெய்தான், அதேகாரணமாக ஹரி மூர்ச்சித்து இறந்து வைகுந்தமடைந்தான். அவ்வரியினுடலைத் தீயிலிட்டுக் கொளுத்தி அவனுடன் உடன்கட்டையேறி அவன் மனைவியரு மிறந்தார்கள். இதனை—

"தேனென்று துளவோன்றவர்செப்புசாபம்
தானென்றிநிற்பத்தனைசெய்துமயங்கலாலே
கானென்றுவேடன்சரனென்பவன்காட்டின்மேய
மானென்றுதாளிலொருவாளிவழங்கினனல்" என்றுவரும் பாகவதத்தாலுணர்க.

ஒருவன் மந்தஹாஸத்தினால் திரிபுரங்களை மூர்ச்சையாகச்செய்தான் என்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வாறு செய்திருத்தலால்.

ஹரன் மேருவில்லும், வாசுகிநாணியும், நாராயணபாணமும் முடையவனாகப் பகைவர்களான அசுரர்கள் வசிக்கின்ற திரிபுரங்களின் எதிரே சென்று போர்புரியுனாளில் சற்றே நகைத்தனன்; நகைத்தலும் அத்திரிபுர முதலியவனைத்தும் சாம்பராகவாயின. இதனை—

"இடத்திருக்கரமேருமால்வரைச்சிலையேந்தியூன்றியதன்னேன்
மடற்சரோருகவலம்படிமலர்க்கரம்வாளிசுற்றியதாங்கன்
புடைத்தவெம்முலையிமாசலைதிருமுகநோக்கினன்புன்மூரற்
படுத்துநோக்கினனெழுந்ததுபுரமெனுமூன்றினும்படலைத்தீ" என்று கூறும் உபதேசகாண்டத்தாலுணர்க.

தாத்பரியம்.

ஹரி வேடன்விட்ட வம்பினால் மூர்ச்சையடைந்தனன்; ஹரன் மந்தஹாஸத்தால் திரிபுரங்களை மூர்ச்சிப்பித்தான் என்பதாம்.

தாரதம்மியம்.

வேடுவன்விட்ட வம்பினால் மூர்ச்சையான திருமாலைவிட மந்தஹாஸத்தினால் திரிபுரங்களை மூர்ச்சிக்கச்செய்த ஹரன் சிறந்தவனேயாம். ஆதலால் நாங்கள் கிராதபாணத்தால் மூர்ச்சையான ஹரியை அப்பிரதானமாகவகற்றி, மந்தஹாஸத்தாற் றிரிபுர தகனஞ்செய்த ஹரனைச் சிறந்தவனுக்கருதி அவனது சரணங்களையே சரணமாக வடைகின்றோம்—எ-று. (ருரு)

ஏகஸ்துசக்ரமதிகம்யுரரக்ஷலோகா
நந்யஸ்துசக்ரஜநக:ஸ்வபதாங்குளீபி:|
கோவாநயோரதிகஇத்யநுசிந்த்யவ்ருத்தா
ஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:||

ஏகஸ்துசக்ரமதிகம்யுரரக்ஷலோகாநந்யஸ்துசக்ரஜநக:ஸ்வபதாங்குளீபி:| கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:||

மொழிபெயர்ப்பு.

வஞ்சப் பகைஞர் தமதுடலை வாட்டுங் கூர்மை வளராழி
தஞ்சக் கரமே லார்ந் தொருவன் தரணிமுதல தமைக்காத்தான்
அஞ்சக் கரத்தைத் தாளுனியா லமைத்தா னொருவ னகிலத்தி
லெஞ்சி லிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பதப்பொருள்:

ஏகஸ்து	ஒருவனுல்
சீக்ரம்	சக்கரத்தை
அதிக்ம்ய	அடைந்து
லோகாந்	லோகங்களை
ரரக்ஷ	ரக்ஷித்தான்,
அந்யஸ்து	இன்னெருவனுல்
ஸ்வபதாங்குளீபி:	தன் கால்விரல்களாலே
சக்ரஜநக:	சக்கரத்தையுண்டாக்கினவன்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன் ?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்தியா	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்ரேம்.

பொழிப்பு.

ஒருவன் சக்கரத்தையடைந்து உலகத்தை ரக்ஷிக்கின்ருன்; மற்றெருவன் தன் கால்களினுலே அந்தச்சக்கரத்தை உண்டாக்கினுன். இவ்விருவருக்குட் சிறந்தவனைப் பெரியவர்களே நீங்கள் பாரமார்த்திகமாக உரைப்பீர்களானுல்,நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாகவடைகின்ரேம்.

விதப்பு.

ஒருவன் சக்கரத்தையடைந்து உலகத்தை ரக்ஷித்தானென்றது - ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணமே இயற்றியிருத்தலால்.

ஹரி, ஹரன்மாட்டுப்பெற்ற சக்கரத்தினுலேயே அகிலத்தையுங் காக்கின்ருன்.

ஹரி காஞ்சிபுரத்தி லரனை யருச்சித்துச் சக்கரம் பெற்ருனென்று ஸ்ரீஸ்காந்தமஹாபுராண முரைக்கின்றது. காஞ்சிபுராணமும்—

"ஆங்கவனையெதிர்நோக்கிநின்பூசைக்கமகிழ்ந்தேநினக்கின்ஞான்று, தேங்கமலவிழியளித்தேம்பதுமாக்கனெனும்பெயரிற்றிகழ்வாயிவ்வூர், பாங்குபெறத்திருமாற்பேறெனப்பொலிகவென்றருளிப்பாறு கோடி, தாங்குகதிர்ச்சுதரிசனப்பெயராழித்தனிப்படையுமுதவியெங்கோன்" என்றுரைக்கின்றது.

ஶிவார்சநாலப்த விஷ்ணுநேத்ர ஸூத்ர ஸஹஸ்ர சக்ர திவ்ய ரஹஸ்ய ஸ்வப்ன ஹரி ஹராய நமோ நம: என்றுபைப்பலாத சுருதியு முரைக்கின்றது.

இதனுல் ஹரி, ஹரனிடத்துப்பெற்ற சக்கரமுடையவன் என்றறியப்படுகின்ருன்.

ஒருவன் தன் காலவிரலினுல் சக்கரத்தை உண்டாக்கினவன் என்றது - ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ணஞ்செய்திருத்தலால்.

தினந்தினங் கைலைக்குச்சென்று ஸ்ரீகண்டபரமேசுவரனை வணங்கிவரும் இந்திரன் அதிக பரிசயத்தா லரனை அலட்சியமாகக்கருதிய வெண்ணமுடையவனுயினுன்; இவ்வெண்ண முதிர்ந்து இவன் கெடுமுன் இன்றவனெருநாள் இவன் வருவதையுணர்ந்து தானே துவார பாலகனுக நின்றனன். வருமிந்திரன் மௌனமாகச்செல்லாமற் கடைகாப்பாளனைநோக்கி தௌவாரி! இப்பொழுது உள்ளே என்னசமயம் என்ருன்; அதற்கக்கடைகாப்பாளனுன கண்ணுதல் பதிலுரையாதிவனை அச்சுறுத்திப்பார்த்தலும் இந்திரன் கோபங்கொண்டு தன்வச்சிரத்தா லாலோசனையின்றி அடித்தான். அவ்வச்சிரம் பூதன்மீதுபட்டு எதுக்கும் உத்வாமலுடைந்து பல்லாயிரஞ்சுக்கலாகவாதலும் இந்திரன் பிரமித்தான். உடனே இறைவன் உருத்திர உருவத்துடன் தோன்றி நின்று சீற்றங்காட்டலும், அகமடங்கிய மகவான் அண்ணலே!

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அடியேன் அறியாதியற்றிய குற்றத்தை மன்னிக்கவேண்டும் என வேண்டிக்கொண்டான். வேண்டிக்கொண்டமையி லிறைவன் றன்சீற்றத்தைக் கடலிலிறக்கினன். அக்கடலில் விழுந்த சீற்றம் அசுரர்செய்த புண்ணியத்தால் சலந்தரனென்னு மசுரனாகத்தோன்றியது. சீற்றத்திற் பிறந்த சலந்தரன் மிக்கவன்மையாளனாய்த் தேவரனைவரையும்வென்று தேவரா யடக்கியாள்பவனாகவிருந்தும், அவர்களைச் சதா துன்புறுத்தினன். அதனா லரி அச்சலந்தரனொடு எதிர்த்துப் போர்புரிந்து பன்முறை முதுகுகாட்டினன். பின்னர்த்தேவர்கள் சலந்தரன் கொடுமையை ஹரனிடமுரைத்தார்கள்; ஹரன் அச்சலந்தரனெதிரிற்சென்று தன் காலுதியால் ஒரு சக்கரமொன்றமைத்து நீ ஆற்றலுடையையே லிதனைத் தலைமேலாகத் தூக்கென்றனன். அதுகேட்ட சலந்தரன் அவ்வாறே புரிந்து தலைபிளந்து இறந்துபட்டான். சலந்தரன்பொருட்டு உண்டாக்கின சக்கரத்தைத்தான் ஹரி கண்மலரா யருச்சித்துப் பெற்றது. இச்சரித்திரவிரிவை கந்தபுராணத்துத் தக்ஷகாண்டத்துக் காண்க. இச்சரிதத்தா லரன் சக்கரசனகன் என்றழைக்கப்பட்டான். இதனை—

"என்றிவைசலந்தரனிசைப்பயாமுமுன்
வன்றிறல்காணியவந்தனம்மெனாத்
தன்றிருவடியினாற்றரணியின்மிசை
யொன்றொருதிகிரியையொல்லைகீறினன்.

ஆங்கதுதிகிரியொன்றாகவந்தனை
னீங்கிதுசென்னியிலேற்றிவன்மையாற்
றாங்குதல்வல்லையோவென்றுசாற்றலும்
தீங்குறுசலந்தரனினையசெப்புவான்" என்றுவருங் கந்தபுராணத்தாலுணர்க.

தாத்பரியம்.

ஹரி, ஒருவனளித்த சக்கரத்தையுடையவன்; ஹரன் அந்த சக்கரத்தைக் கால்விரனுதியா லுண்டாக்கினவனென்பதாம்.

தாரதம்மியம்.

ஒருவனளித்த சக்கரத்தைக்கொண் டுலகங்காக்கு மவனிலும், ஒருவன் எனக்குத்தா என்று கேட்கத்தக்க சக்கரத்தைக் கால்விரல்

நுதியா லுண்டாக்குபவன் சிறந்தவனேயாம். இதனால் சக்கரவிடயத்தில் தாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாகவகற்றி, சக்கரவிடயத்திலுயர்வடைந்த ஹரனை நாங்கள் சரணமாக வடைகின்றோம்.—எ-று.

ஏகஸ்ஸகார புவி ஶங்கரசாபபங்க
மந்யஸ்ஸகார ஹரிரப்ஜஸுத ஶிரோ விபங்கம்।
கோவாநயோரதிக இத்யநுசிந்த்ய வ்ருத்தா
ஸத்யம் த்ருவந்தமிமமந்வயமாஶ்ரயாம:॥

ஏகஸ்சகாரபுவிஸங்கரசாபபங்கமந்யஸ்சகாரஹரிரப்ஜஸுதஸிரோவிபங்கம் । கோவாயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்த்ருவந்துதமிமம்வயமாஸ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

மன்னு கைலை மலைமீதே மருவு மொருவன் மாதனுவைத்
துன்னு மிரண்டு துணியாகத் தொலைத்தா னொருவன் றாமறைகள்
பன்னு மரிகு நவின்றலையைப் பங்க மாக்கி னானொருவன்
என்னு மிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
புவி:	உலகத்தில்
சங்கர:	சங்கரனுடைய
சாபபங்கம்	வில்லொடித்தலை
சகார	செய்தான்,
அந்ய:	இன்னொருவன்
ஹரிஞுநுசிரோவிபங்கம்	பிரமாவினுடைய சிரசைச் சேதித்தான்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன் ?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

அதஸிந்தியர்	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம் :	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆச்ரயாம:	ஆச்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் சங்கரதநுசைப் பங்கஞ்செய்தான், மற்றொருவன் ஹரியின்மகனான பிரமன்றலையைப் பங்கஞ்செய்தான்; பெரியவர்களே இந்தப் பங்கஞ்செய்தவிஷயத்தில் எவன் சிறந்தவன்? அவனை நீங்களுண்மையாகச்சொன்னால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாகவடைகின்றோம்.

விருப்பு.

ஒருவன் சங்கரசாபபங்கஞ் செய்தானென்றது - ஹரியை, அது அவ்வரி அவ்வாறு செய்திருத்தலால்.

விதேகராஜாவான சனகன், யாகமொன்று செய்வான்கருதி யாகசாலையை யுழுவித்தான், உழுதநாளில் கொழுச்சென்ற வழியிலொரு பெண் கிடக்கக்கண்டெடுத் தவளைச் சீதையென்றழைத்து வளர்த்தான், அவளும் பருவமுடையவளாகவாயினள், இவளைக் கேள்வியுற்ற மன்னவர் பலர் எனக்குனக்கென்று வந்தார்கள். பலர் கேட்கத்தொடங்கினமையால், இனி என்செய்வது என்று சனகன் ஆலோசித்தான்.

முன்னாளில் தக்கனுடைய யாகசாலைக்குச் சங்கரன் சென்றபோழ்து எடுத்ததென்றதும், அநேகநா வென்றதும், யாகபங்கஞ் செய்ததுமான வில்லினை நம்மூதாதையான ஒருவனிடம் அளித்துள்ளதை அன்றுமுத லின்றுவரைக்கும் பாதுகாத்துவைக்கப்பட்டிருக்கின்றதே அதனை எவன் வளைக்கின்றானோ அவனுக்கிவளை மணஞ்செய்துகொடுக்கலாம் என்று தீர்மானித்து, இவ்வில்லினை எவன் வளைக்கின்றானோ அவனுக்கே இச்சனகி யுரியவள்; பிறர்க்குரியளல்லள் என்றான்.

சனகியைக் கருதிவந்த எம்மன்னவனு மதனை வளைத்தானில்லை; இவ்வண்ணம் அனேகம் யாண்டுகளாயின. பின்னர் ஹரி இராமனாகப் பிறந்து விதேகநாட்டிற்கு இராச இருடியான விஸ்வாமித்திரனுடன் சென்றானன்று, விதேகமன்னவனாகிய சனகனாலழைப்பித்துக் காட்டப்பட வதனை யெடுத்து வளைத்தான்; வளைத்தபொழுது அவ்வில் இரண்டு துண்டாக ஒடிந்தது. இதனை—

“ தாளுடைவரிசிலைசம்புவும்பர்தம்
நாளுடைமையினவர்நடுக்கநோக்கியிக்
கோளுடைவிடையனுன்குலத்துட்டோன்றிய
வாளுடையுழவனோர்மன்னன்பால்வைத்தான்.

ஆடகமால்வரையன்னதுதன்னைத்
தேடருமாமணிச்சீதையெனும்பொற்
சூடகவால்வளைசூட்டிடநீட்டும்
ஏடவிழ்மாலையிதென்னவெடுத்தான்.

தடுத்திமையாமலிருந்தவர்தாளின்
மடுத்ததுநாணுதிவைத்ததுநோக்கார்
க்கடுப்பினில்யாருமறிந்திலர்கையா
லெடுத்ததுகண்டனரிற்றதுகேட்டார்” —என்றுவரும் இராமாயணச் செய்யுட்களாலுணர்க.

ஒருவன் ஹரிகுரு சிரோவிபங்கனென்றது-ஹரனை; அது அவ்வரன் அவ்வண்ணம் செய்தமையால்.

ஹரியு மயனுமாகிய இருவர்களும் முன்னொருகாலத்தில் ஒருவருக்கொருவர் தாங்களே பிரமமென வாதுபுரிந்தார்கள். அந்நாளில் ஹரன் சூரியமண்டத்திலிருந்து இறங்கி அவ்விருவர் மத்தியில் வருதலும்; ஹரி, ஹரனைக்கண்டு அஞ்சிஅகன்றனன்; ஹயன் அகங்காரத்தினாலிகழ்ந்துரைத்தனன். உடனே ஹரன் அவ்வயனுடைய உச்சித்தலையைச் சிச்சி யிதுனக்குதவாததென்று கிள்ளியெடுத்தனன். உடனே அவ்வயன் மூர்ச்சிதனானான். பின் ஹரன்செய்த கருணையாலெழுந்து அகமொழிந்தவனானான். இதனை—

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

“உலகம்பூத்ததனிமுதல்வனைந்தாந்தலையையுயர்காரி
யிலகுமுகிரினகழ்ந்திடலுமிறந்தஞேக்கியுளமாழ்கிக்
கலவமஞ்ஞையொருபாகனுவியளிப்பக்கடிக்கமல
மலரோன்றுயிலுற்றவன்போலக்கடிதினெழுந்துவாழ்த்திசைத்தான்”
என்று கூர்மபுராணங் கூறுதலைக்கொண்டுணர்க.

தாத்பரியம்.

ஹரி சங்கரசாபபங்கன்; ஹரன் பிரமசிரோவிபங்கன் என்பதாம்.

தாரதம்மியம்.

ஒருவனுடைய (பழய) வில்லையொடித்தவனையும், ஒருவனுடைய தலையைக் கிள்ளினவனையும் ஒப்பிட்டுப் பார்க்குங்கால் வின்முரித்தவன் சிறந்தவனுகவாகான்; தலையைக் கிள்ளினவனே சிறந்தவனுக ஆவான். இதனுல் சங்கரனுடைய பழயவில்லினையொடித்த ஹரியையும், அவ்வரியின் சிறந்த மகனும், உலகங்களைப் படைத்தவனுமான பிரமனுடைய சிரோபங்கஞ்செய்த ஹரனையும் ஒப்பிடுங்கால், ஹரன் செய்த காரியமே உயர்ந்ததாதலால், ஹரனே சிறந்தவனென்றறியப் படுகின்ருன். அதனுல் நாங்கள் பங்கவிஷயத்தில் தாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக அகற்றி, பங்கவிஷயத்தி லுயர்வடைந்த ஹரனைச் சரணமாகவடைகின்ருேம்.—எ-று. (௬௫)

𑌏𑌕𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌦𑌿𑌤𑌿𑌜𑌗𑌤𑌿𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑍋
𑌹𑍍𑌯𑌨𑍍𑌯𑌸𑍍𑌯𑌸𑍇𑌵𑌕𑌜𑌨𑍋𑌽𑌪𑌿𑌤𑌥𑌾𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑌃।
𑌕𑍋𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌃
𑌸𑌤𑍍𑌯𑌂𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁𑌤𑌮𑌿𑌮𑌂𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகஸ்திரிபாதிதராஞ்ஜகதிப்ரவித்தோஹ்யந்யஸ்யஸேவகஜநோபிததாப்ரவித்த:। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம் ப்ருவந்துதமிமம்வயமாஸ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

சிறந்த மூன்று கால்களுடன் சேர்ந்து துலங்குஞ் சீரொருவன்
சிறந்த பால்கொண் டபிடேகங் கருது மொருவன் காலிணையை
மிறந்த தன்மை யெய்தாதான் மருவு மூன்று காலிவருள்
இறந்த பழிகொள் பவர்யாவ ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
திரிபாத்	மூன்றுகால்களையுடையவன்
இதி	என்று
ஜகதி	உலகத்தில்
ப்ரவித்தோஹி	பிரசித்தியடைந்தவனல்லவா,
அந்யஸ்ய:	இன்னொருவனுடைய
ஸேவகஜநோபி	அடிமையும்
ததாப்ரவித்த:	அப்படியே பிரஸித்தியடைந்தான்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஸ்ரயாம:	ஆஸ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் மூன்றுகால்களை யுடையவனென்று உலகத்திற் கீர்த்தியார்ந்தவன், மற்றொருவனுடைய அடியவன் மூன்றுகால்களுடையவனென்று பிரசித்தமானவன், பெரியவர்களே! இவ்விருவரிற் சிறந்தவனை நீவிருரைமின், உரைத்தால் நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

விசேஷம்.

ஒருவன் மூன்றுகால்கள் உள்ளவனென்று பிரஸித்தியானவனென்றது - ஹரியை, அவ்வரி த்ரிபாத் என்று பிரசித்தியாகவிருத்தலால். இதனை—.

பாதோஸ்ய விஶ்வா பூதாநி த்ரிபாதஸ்யாம்ருதம் திவி என்பனவாதி உபநிஷத்வாக்கியங்களாலுணர்க.

ஒருவனுடைய ஊழியனும், மூன்றுகால்களையுடையவனென்று பிரசித்தனென்றது - ஹரனை, அது அவ்வரன் அவ்வாறான ஊழியனை உடையவனாக விருத்தலால். ஹரனுக்கு ஊழியனான பிருங்கிருடி மூன்றுகால்களை யுடையவனென்று உலகப்பிரசித்தம்.

தாத்பரியம்.

ஹரி மூன்று கால்களுள்ளவன்; ஹரன் மூன்றுகாலுள்ள ஊழியனை உடையவன் என்பதாம்.

தாரதம்மியம்.

மூன்று கால்களின் விஷயத்தில் ஹரன் தனதடிமையை மூன்று காலுள்ளவனாகக் கொண்டிருத்தலால், ஹரனே சிறந்தவன். அதனால் நாங்கள் கால்விஷயத்தி லரனுடனொவ்வா வரியை யப்பிரதானமாகவகற்றி, கால்விஷயத்திற் சிறந்த ஹரனைச் சரணமாக வடைகின்றோம்.—எ-று. (ருசு)

ஏகஸ்யாஸ்ரீ ஹயவக்த்ர இதி ப்ரஸித்தி
ரந்யஸ்ய புத்ர இபவக்த்ர இதி ப்ரஸித்தி: ।
கோவாநயோரதிக இத்யநுசிந்த்ய வ்ருத்தா
ஸத்யம் ப்ருவந்து தமிமம் வயமாஸ்ரயாம: ॥

ஏகஸ்யஸா து ஹயவக்த்ர இதிப்ரஸித்திரந்யஸ்யபுத்ர இபவக்த்ர இதி ப்ரஸித்தி: । கோவாநயோரதிக இத்யநுசிந்த்யவ்ருத்தா ஸ்ஸத்யம்ப்ருவந்து தமிமம்வயமாஸ்ரயாம: ॥

பதப்பொருள்.

ஏகஸ்ய	ஒருவனுக்கு
ஹயவக்த்ர	குதிரைமுகன்
இதி	என்று
ஸாது	நன்றாக
ப்ரஸித்தி	பிரசித்தி,
அந்யஸ்ய	இன்னொருவனுடைய
புத்ரம்	பிள்ளை.
இபவக்த்ர	யானைமுகன்
இதி	என்று
ப்ரஸித்தி	பிரசித்தி இருக்கிறது;
அநயோ:	இவ்விருவரில்
அதிக:	சிறந்தவன்
கோவா.	யாவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஸ்ரயாம:	ஆஸ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் குதிரைமுகனென்று பிரசித்தியானவன், மற்றொருவன் யானைமுகனான பிள்ளையையுடையவன் என்று பிரசித்தியானவன்; பெரியவர்களே! நீங்கள் இவ்விருவருக்குட் சிறந்தவனைக் கூறினால், நாங்கள் அம்மஹாபுருடனைச் சரணமாக அடைகின்றோம்.

விசேஷம்.

ஒருவன் குதிரைமுக முள்ளவனென்று பிரசித்தமானவனென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணம் குதிரைமுக முள்ளவனாக

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இருத்தலால். (இது ஹரியினுருவமான ஹயக்கிரீவனைக் குறிக்கின்றது.) இதனை—

[illegible]
[illegible] ॥

என்னு மயக்ரீவோபநிஷத்தாலுணர்க.

ஒருவனுடைய பிள்ளை யானைமுகமுள்ளவனென்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ணம் யானைமுகமுள்ள பிள்ளையை யுடையவனாக விருத்தலால். (இது ஹரன் மகனான விநாயகன் யானைமுகனாக் விருத்தலை யுணர்த்துகின்றது.) இதனை—

[illegible]।
[illegible]॥ என்பதாலுணர்க.

தாத்பரியம்.

ஹரி குதிரைமுகமுள்ளவன்; ஹரன் யானைமுகமுள்ள மகனையுடையவன் என்பதாம்.

தாரதம்மியம்.

குதிரையினும் யானை சிறந்ததாதலால் குதிரைமுகத்தினும் யானைமுகஞ் சிறந்தது. குதிரைமுகமுள்ள ஹரியினும் யானைமுகமுள்ள விநாயகன் சிறந்தவன். விநாயகனி லவன் றந்தை சிறந்தவன். இதனால் முகவிஷயத்தில் ஹரி தாழ்ந்தவனும், ஹரன் உயர்ந்தவனுமாக நிற்றலால், நாம் குதிரைமுகமுள்ள ஹரியை அப்பிரதானமாக வகற்றி, யானைமுகமுள்ள மகனையுடைய ஹரனைப் பிரதானமாகக்கொண்டு அவன் சரணங்களையே சரணமாகஅடைந்து வணங்குகின்றோம்.—எ-று.

[illegible]
[illegible]।

[illegible]
[illegible]॥

ஏகஸ்யபாதிசதுராநநஏவஸூநு: அந்யஸ்யபாதிஷடாநநஏவஸூநு:। கோவாநயோரதிகஇத்யநுசிந்த்யவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

தருக்கு மிகுதி கொளந்றவைத் தன்வாய் மடுத்துத் தாரளிகள் [ரன்
பெருக்கு மிசையை யுறுமொருவன் பிள்ளை யொருநான் முகப்பெய
மருக்கொள் மாலை யுறுமொருவன் மைந்த னறு மாமுகனு
யிருக்கு மிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதும்ம:

பதப்பொருள்.

ஏகஸ்ய	ஒருவனுடைய
ஸூநு:	பிள்ளை
சதுராநந	நாலுமுகன்
ஏவ	என்று
பாதி	பிரகாசிக்கிறான்,
அந்யஸ்து	இன்னொருவனுடைய
ஸூநு:	பிள்ளை
ஷடாநநஏவ	ஆறுமுகனாகவே
பாதிஹி	பிரகாசிக்கிறானல்லவா;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்தியா	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

தமிமம்	அந்த இவனே
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் நான்முகனுன் மைந்தனோடு பிரகாசிக்கின்றான், மற்றொருவன் ஆறுமுகனுன மைந்தனோடு பிரகாசிக்கின்றான்; பெரியவர்காள்! இவ்விருவர்களில் சிறந்தவன் யாவன்? அவனை நீங்களுரைத்தால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் நான்முகமைந்தனே யுடையவனென்றது - ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணமுடையவனுகவிருத்தலால். இதனை—

“கொங்குவிம்மியகொழுமடற்றாமரைக்குழவி
எங்குவந்தனமெவ்வழியிருந்தனமென்னு
அங்கண்மாதிரமெனைத்தையும்பார்த்ததுபார்ப்பத்
திங்கள்போற்றிகழ்திருமுகன்நான்கெனசிறந்த” என்று வரும் பாகவதத்தாலுணர்க.

ஒருவன் ஆறுமுகமுள்ள பிள்ளையையுடையவனென்றது - ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ணம் ஆறுமுகமுள்ள பிள்ளையை உடையவனுகவிருத்தலால். இதனை—

“நஞ்சுமுகந்தெறிக்குமெயிற்றரவணியுந்தந்தையெனநரலையுண்ட
மஞ்சுமுகங்கவிழமதம்மொழிமுன்னுனெனப்பல்வரத்தான் மாண்டு
விஞ்சுமுகம்பலகண்டகொக்கிறுத்துமிளிரிளவல்வெய்யேம்பாச
மஞ்சுமுகவருள்மொழியுமாறுமுகப்பெருமானையடுத்துவாழ்வாம்”
என்பனவாதிகளாலுணர்க. ஈது பிரசித்தம்.

தாத்பரியம்.

ஹரி நான்முக மைந்தனையுடையவன்; ஹரன் ஆறுமுகமைந்தனை யுடையவன் என்பதாம்.

தாரதம்மியம்.

நான்முகனுகிய புதல்வனைக்காட்டிலும், ஆறுமுகமுள்ள புதல்வன் முகவிஷயத்திற் சிறந்தவன். ஆதலால், நான்முகன் றந்தையினும்

ஆறுமுகன் றந்தை உயர்ந்தவன்; அதனுல் நாங்கள் பிள்ளைகளின் முகவிஷயத்திற் றாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக வகற்றி, உயர்வடைந்த ஹரனைச் சரணுகதியாக அடைகின்றோம்.—எ-று. (௧௮)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஆதாயவேதமதிஸ்ருஷ்டவிததேபுராகோந்யஸ்துவேதநிசயம்விததே த்ரிலோக்யாம்। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

வழியே மறைக ளொருநான்கை வாங்கி யொருவன் வாலன்னம்
இழியா திவரு மொருவனுக்கன் றீந்தா னொருவ னிணையில்லா
மொழியார் மறைக டமையுலக மூன்று முய்ய முனமீந்தான்
எழிலா ரிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
புரா	முன்னர்
வேதம்	வேதத்தை
ஆதாய	வாங்கிக்கொண்டு
விததே	பிரமாவின்பொருட்டு
அதிசத்	கொடுத்தான்,
அந்யஸ்து	இன்னொருவனுனல்
வேதநிசயம்	வேதசமூகத்தை
த்ரிலோக்யாம்	மூன்று லோகத்திலேயும்
விததே	விதியின்பொருட்டு கொடுத்தான்;
அநயோ:	இவ்விருவரில்

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலர்ம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஸ்ரயாம:	ஆஸ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் வேதத்தை வாங்கிக்கொண்டுவந்து பிரமன்பொருட்டு அளித்தான், மற்றொருவன் மூன்றுலோகங்களுக்கு உபகாரமாக வேதங்களைக் கொடுத்தான்; இவர்களிற் சிறந்தவனைப் பெரியவர்களான நீங்க ளுண்மையாக வுரைத்தால், நாங்களந்த மஹாபுருடனைச் சரணமாக வடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் வேதத்தை வாங்கிக்கொண்டு வந்து பிரமன்பொருட்டுக் கொடுத்தான் என்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணம் செய்திருத்தலால்.

அசுரர்களாகிய மதுகைடபர்கள் பிரமனிடமிருந்த வேதபுத்தகத்தைக் கவர்ந்து கடலின் மறைந்தனர். அதனை விருக்கின்றிப் பிரமன் கவலையுற்று ஹரியினிடம் கூறினன். ஹரி உடனே ஒரு மீனுருவுற்றுக் கடலிற்புகுந்து அவர்களோடு போர்புரிந்து அவர்களைக் கொன்று அவர்கள் கவர்ந்துசென்ற வேதபுத்தகத்தை எடுத்துப் பிரமனிடமளித்தனன். இதனை —

" விளாபுனாமலரோனடுங்கவேதத்தைப்பறித்தகல்வீளாயினெய்துஞ்
சுரர்கள்சத்துருவாமதுகைடவர்கடஞ்சிரந்துணித்துயர்மீனாய்
விளாவினிமெனமுந்துசதுமுகக்கடவுள்வினையறமறையினையுதவி
யரிஇவர்பதத்தினடைந்தனனெனுஞ்சொல்யாழ்முனிமலர்மகட்கறைந்தான்" என்னும் பாகவதத்தாலுணர்க.

ஒருவன் மூன்றுலோகங்களின்பொருட்டு வேதங்களை அளித்தானென்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வாறு செய்திருத்தலால். இதனை—

[illegible]
[illegible] என்று

ஹாலாஸ்யமான்மியத்தில் வருதலைக்கொண்டுணர்க.

தாத்பரியம்.

ஹரி பிரமனொருவன்பொருட்டே வேதத்தை வாங்கி யளித்தவன்; ஹரன் மூன்றுலோகங்களின்பொருட்டு வேதங்களை அளித்தவன் என்பதாம்.

தாரதம்மியம்.

ஒருவனிமித்தம் ஒருகாரியத்தைப் புரிபவனையும், பலரினிமித்த மொருகாரியம் புரிபவனையும் ஆராயுங்கால், செய்யுங்காரியம் பயனுடையதேல் பலரையுங்கருதி யியற்றிய காரியத்தை யுடையவனே-சிறந்தவன். அதனால் பிரமாவாகிய ஒருவனிமித்தம் அசுரர்களைக்கொன்று வேதத்தை மீள வாங்கிக்கொடுத்த ஹரியினும் உலோகோபகாரமாக வேதங்களையளித்த ஹரன் சிறந்தவனாதலால், நாங்கள் இந்த விடயத்திற்றாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாகவகற்றி இந்தவிடயத்தி லுயர்வடைந்த ஹரனைப் பிரதானமாகக்கருதி யவனது சரணங்களையே சரணமாக வடைகின்றோம்.—எ-று. (இக)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஏகோஜகாநரகம்ஸாந்தராமிஹைகோஹ்யந்யோஜகாநரகாந்ஸாந்தராமநேகாந் । கோவாநயோரதிகஇத்யநுசிந்த்யவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஸ்ரயாம:॥

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மொழிபெயர்ப்பு.

பொல்லாக் கொடுமை செயுநரகைப் போக்கி யொருவன் புகழுற்ருன்
எல்லா நரகங் களையுமடி யேய்ந்தா ரடையா தேயிருக்க
உல்லா சஞ்சேர் கருணையினு லொழித்தா ஞெருவ னுயர்கொடுமை
இல்லா விவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
நரகம்	நரகனை
ஸுதராம்	மிகவும்
ஜகாந	அழித்தான்;
அந்ய:	இன்னொருவன்
அநேகாந்	அனேகமான
நரகாந்	நரகங்களை
ஸுதராம்	மிகவும்
ஜகாந	போக்கடிக்கிருன்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்தியா	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்ருேம்.

பொழிப்பு.

ஒருவன் நரகனென்பவனைக் கொன்று கீர்த்தியடைந்தவன், மற்ெருருவன் அநேகமான நரகங்களைப் போக்கடிக்கின்ருன்; பெரியவர்

களே! இவர்களிற் சிறந்தவனை நீங்களுரைத்தால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாகவடைகின்ருேம்.

விசேஷம்.

ஒருவன் நரகனைத் தொலைத்தவனென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணம் நரகனைத் தொலைத்திருத்தலால்.

நரகாசுரனென்று பேருள்ள அசுரன் அநேக காலம் வெகு கொடியவனுய் அரசுசெய்துகொண்டிருந்தான். இவன் கொடுமையை இந்திரன் ஹரியினிடமுரைத்தான். ஹரி உடனே கருடத்தேறி நரகாசுரனிருந்தவிடத்தையடைந்து போர்புரிந்து நரகனைக் கொன்ருன். இதனை—

“பெருகாழியிற்குருதிப்புனற்பெருக்கெண்டிசைபிறங்கக்
கருகார்கலிசுவறச்சிலைகால்கோட்டியகண்ணன்
முருகாயிரம்வரிவண்குண்முகைவிண்டலர்தண்டார்
நரகாசுரன்முடிவெங்கதிர்நகுநேமியிற்றடிந்தான்” என்று வரும்.

பாகவதத்தாலுணர்க. இது ஹரி கண்ணனுக விருந்தஞான்று இயற்றியது.

ஒருவன் அநேக நரகங்களை போக்கடிப்பவன் என்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வாறு போக்கடித்தலால்.

கௌதமமுனிவன் ஒருகால் யமபுரியையடைந்து அங்கு கொடிய நரகவாசிகளான பலரைப்பார்த்து இரக்கமுற்று எமனைநோக்கி இவர்கள் என்னபாவஞ் செய்தவர்கள்? இந்நரகர் எத்தனைகாலமாக இவ்வண்ணந் துயரமனுபவிக்கின்ருர்களென, அதற்கெமன் முனிவ! இவர்கள் எனக்கு முன்னமிருந்த எமன்காலத்தவர்கள் என்ருன். உடனே கௌதமன் இவர்களை யெக்காலத்தவரென்றறியுமாறு பிரமன்முதலிய பலரை வினவினன். எவருமவர்களை இன்னகாலத்தினரென் றுரையாமையால் இரக்கங்கொண்டு கைலைக்குச்சென்று பரமேசுவரனை வணங்கி, இவர்களை யெக்காலத்தவரென்று வினவியதற்கு எவரும் இக்காலத்தவரென்று கூருமையையும், அவர்கள் துன்பத்தை யக

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ற்றவேண்டுமென்றும் கூறியிரந்தனன். அதற்கரன் முனியே! நீ நம்மைக் காஞ்சியிற்சென்று தியானஞ்செய், நாமந்நரகர்களை சுகப்படுத்துகின்றோமென்றனன்; உடனே அம்முனிவனும் அவ்வண்ணமே செய்தான். உடனே ஹரன் அந்நரகர்களை நரகங்களினின்றும் விமோசனஞ்செய்தனன். இதனை—

" தடுத்தவைம்பொறியுறுவனேகேண்மதிசார்ந்துநீயெமக்கன்பிற்
றொடுத்தபூசனைப்பேற்றினாற்கும்பியிற்றுயருழந்தவர்யாரு
மடுத்துநம்வயினிதோகணாதராயமர்ந்தனர்காணென்று
மடுத்தகாதலின்மொழிந்துமற்றெத்திறப்பயன்களும்வகுத்திட்டார்"

என்று வருங் காஞ்சிப்புராணத்தாலுணர்க.

தாத்பரியம்.

ஹரி ஒரு நரகனை யழித்தான்; ஹரன் அநேக நரகர்களை நரகங்களினின்றும் விலக்கினனென்பதாம்.

தாரதம்மியம்.

ஒரு நரகனை அழித்தவனுக்கும், அநேக நரகர்களை யழித்தவனுக்குந் தாரதம்மியம் யதார்த்தமாக உண்டன்றோ? அநேக நரகர்களை மோசித்த ஹரனிலும் பெயரான்மாத்திரம் நரகனான ஒருவனையழித்த ஹரி தாழ்ந்தவனாதலால், நாங்களுயர்ந்த ஹரனைச் சரணமாக அடைகின்றோம்.—எ-று. (௬0)

ஏகோ ஹியாஜகபலிம் ஹிபுராயயாசே
ஹ்யந்யோ ததாவிஹபரத்ர ச ஸர்வஸௌக்யம்।
கோவாநயோரதிக இத்யநுசிந்த்ய வ்ருத்தா
ஸ்ஸத்யம்ப்ருவந்து தமிமம் வயமாஶ்ரயாம:॥

ஏகோஹியாஜகபலிம்ஹிபுராயயாசேஹ்யங்யோததாவிஹபரத்ரச ஸர்வஸௌக்யம் । கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம் ப்ருவதுதமிமம்வயமாஶ்ரயாம: ॥

மொழிபெயர்ப்பு.

முதிரா விளமா முலைமடவார் மொய்த்த நகரின் முழுமறைகள்
அதிரா வியற்று மிட்டியிடை யடைந்தே யொருவன் பலியிரந்தான்
முதிரா வொருவ னிகபரத்தின் மொய்த்த பலன்கள் முழுநீவோன்
எதிரா ரிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
புரா	முன்னர்
யாஜகபலிம்	யாகஞ்செய்கின்ற பலியை
யயாசேஹி	யாசித்தானல்லவா;
அந்யஹி	இன்னொருவனானல்
இஹஹிபரத்ரச	இகத்திலும் பரத்திலும்
ஸர்வஸௌக்யம் ததௌ	ஸர்வசௌக்கியத்தை கொடுக்கிறான்;
அநயோ:	இவ்விருவரில்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்தியா	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் முன்னம் பலிச்சக்கரவர்த்தியின் யாகசாலையை யடைந்து அவனை யாசித்தான், மற்றொருவன் எல்லாருக்கும் இகபரசுகங்களை யளிக்கின்றான்; இவ்விருவரிற் சிறந்தவனைப் பெரியவர்களே! நீங்

Center for Shaiva Studies, Pondicherry Collection

களுணாப்பீர்களாஞல், நாங்களந்த மஹாபுருஷனையே சரணமாகவ டைகின்றேம்.

விதப்பு.

ஒருவன் பலியை முன்னம் யாசித்தானென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணம் யாசகஞ்செய்திருத்தலால். இதனை—

" சிந்தையுவந்தெதிரொன்செயவென்றான்
அந்தணன்மூவடிமண்ணருளுண்டேல்
வெந்திறலாயிதுவேண்டுமெனுமுன்
தந்தனனென்றனன்வெள்ளிதடுத்தான்" என்று இராமாயணத்தில் ஹரி மாவலியைப்பார்த்து, நீ என்மீது இரக்கமுள்ளவனுனல் எனக்கு மூன்றடி மண்ணருள்க என்றிரந்தான் என்று கேட்கப்படுதலாலுணர்க. இது பிரசித்த சரிதம். (இது ஹரியின் வாமனரூபத்தில் நிகழ்ந்தது.)

ஒருவன் இகத்திலும் பரத்திலும் சுகமளிப்பவனென்றது - ஹரனை, அது அவ்வரன் அவ்வாறளித்தலால். இதனை—

ஹரன்பெயரான-சம்பு-சங்கராதிவாக்கியங்களே யுணர்த்தும்.

'ஶம்ஸுகம்பவதி' சம்-கரோதி-சங்கர என்று கேட்கப்படுதலாலும்,

" இன்பம்பெருக்கியிருளகற்றியெஞ்ஞான்றுந்
துன்பந்தொடர்வறுத்துச்சோதியாயன்பமைத்துச்
சீரார்பெருந்துறையானென்னுடையசிந்தையே
ஊராகக்கொண்டானுவந்து" என்று வரும் திரவிடவேதத்தாலும்,ஹரன் இகபரங்களி லின்பமளிப்பவனென்று அறியப்படுகிறான்.

தாத்பரியம்.

ஹரி இரந்தவன்; ஹரன் எல்லார்க்குஞ் சுகமளிப்பவனென்பதாம்.

தாரதம்மியம்.

ஒருவனைச் சென்று யாசிப்பவனிலும் பலர்க்குஞ் சுகமளிப்பவன் சிறந்தவனேயாம். ஆதலால் நாங்கள் பலியை யாசித்த ஹரியை அப்பிரதானமாகவகற்றி, சம்புவாகவுள்ள ஹரனை சிறந்தவனாகக்கருதியவனது சரணங்களையே சரணமாக அடைகின்றேம்.—எ-று. (௬௧)

𑌏𑌕𑍋 𑌧𑌤𑍍𑌤𑍇 𑌜𑌲𑌜𑌮𑍇𑌕𑌕𑌰𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑍇𑌨
𑌹𑍍𑌯𑌨𑍍𑌯𑍋 𑌧𑌤𑍍𑌤𑍇 𑌜𑍍𑌵𑌲𑌨𑌮𑍇𑌕𑌕𑌰𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑍇𑌨।
𑌕𑍋 𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾
𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌵𑌨𑍍𑌤𑍁 𑌤𑌮𑌿𑌮𑌂 𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகோ தத்தே ஜலஜமேககராம்புஜேநஹ்யங்யோ தத்தே ஜ்வலந மேககராம்புஜேந। கோவாநயோரதிகஇத்ய நுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

மாதர் சல்ச மதையொருவன் மகிழ்ந்து தரித்தான் மற்றொருவன்
தீதில் கமல மலரொன்னச் சிறந்த வொருநற் றிருக்கரத்திற்
ஓத வரிய வங்கிதனை யொளிர வெடுத்தா னேதுமிடத்
தேதி லிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
ஏககராம்புஜேந	ஒரு கரகமலத்தினலே
ஜல்ஜம்	சங்கத்தை.
தத்தே	தரித்திருக்கிறன்,
அந்ய:	இன்னொருவன்
ஏககராம்புஜேந	ஒரு கரகமலத்தினல்
ஜ்வலநம்	அக்னியை
தத்தே	வகிக்கிறன்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன் ?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்தியா	ஆலோசித்து

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் கரகமலத்தினாற் சலசந்தரித்துக்கொண்டிருக்கின்றான், மற்றொருவன் கரகமலத்தினால் தீயைத் தரித்துக்கொண்டிருக்கின்றான்; பெரியவர்களே! இவர்களிற் சிறந்தவனை நீங்களுரைத்தால், நாங்களெந்த மஹாபுருஷனைச் சரணமாக அடைந்து வாழ்கின்றோம்.

விதப்பு:

ஒருவன் கரகமலத்தாற் சலசந் தாங்கினானென்றது – ஹரியை, அது அவ்வரி சலசமான சங்கத்தைத் தாங்கியிருத்தலால். இதனை—

"நடவரையின்மீதேசரற்காலசந்திரன்
இடையுவாவில்வந்தெழுந்தாலேபோல்நீயும்
வடமதுரையார்மன்னன்வாசுதேவன்கையில்
குடியேறிவீற்றிருந்தாய்கோலப்பெருஞ்சங்கே" என்னும் நாலாயிரப்பிரபந்தத்தாலுணர்க.

ஒருவன் கரகமலத்தால் ஜ்வலனம் தாங்கினானென்றது-ஹரனை, அது அவ்வரன் தீயைத் தாங்கியிருத்தலால். இதனை—

"மையன்மாதொருகூறன்மால்விடையேறியான்மறியேந்தியதடங்
கையன்கார்புரையுங்கறைக்கண்டன்கனன்மழுவா
ளையனாழலாடுவானணிநீர்வயற்றில்லையம்பலத்தான்
செய்யபாதம்வந்தென்சிந்தையுள்ளிடங்கொண்டனவே" என்று திருவிசைப்பாவில் வருதலைக்கொண்டுணர்க.

தாத்பரியம்.-

ஹரி சலசமான சங்கத்தை யேந்தினவன்; ஹரன் ஜ்வலனமான தீயை யேந்தினவனென்பதாம்.

தாரதம்மியம்.

சலசந் தாங்கினவனிலும் தீயைத் தாங்கினவன் சிறந்தவனாதலால், நாங்கள் தீயைத்தாங்கின ஹரனைப் பிரதானமாகக்கொண்டு அவனையே சரணமாக வடைகின்றோம்.—எ-று. (சுஉ)

ஏகோ த்விஜோபி நிஜமாத்ருஶிரச்சிதாவீ
தந்யோ விபாதி நிதராம் த்விஜராஜமௌலி:।
கோவாநயோரதிக இத்யநுசிந்த்ய வ்ருத்தா
ஸ்ஸத்யம் ப்ருவந்து தமிமம் வயமாஶ்ரயாம:॥

ஏகோத்விஜோபிநிஜமாத்ருஶிரச்சிதாவீ தந்யோவிபாதிநிதராம் த்விஜராஜமௌலி:। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

அந்தண் மவுலி கொளுமொருவ னருமா மறையோர் குலத்தினிடை
வந்துங் கொடிய செய்கையனாய் வதைத்தான் றாயை வனையொருவன்
சொந்தங் கொள்ளத் துசராச மவுலி யாகித் துலங்கினான்
இந்த விவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
த்விஜோபி	பிராமணனாகஇருந்தபோதிலும்
நிஜமாத்ருசிரச்சித்	தன்னுடையமாதாவினுடைய தலை அறுத் [தவனாக
ஆவீத்	ஆனான்,
அந்ய:	இன்னொருவன்
நிதராம்	மிகவும்
த்விஜராஜமௌலி:	பிராமணசிரேஷ்டர்கட்குக் கிரீடமாயும் சந்திரனைத் தரித்தவனாயும்
விபாதி	பிரகாசித்துக்கொண்டிருக்கிறான்;
அநயோ:	இவ்விருவருக்குள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையாய்
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவ னந்தணனாக விருந்தபோதிலும், மாதாவின் சிரசை யறுத்தவனாகவாயினான், இன்னொருவன் அந்தணர் திலகனாயும் சந்திரசேகரனாயும் விளங்குகின்றான்; பெரியவர்களே! இவர்களுக்குள் சிறந்தவன் யாவன்? அவனை நீங்களுரைத்தால்; நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் அந்தணனாகவிருந்தும் மாதாவைக்கொலைபுரிந்தவனென்று பிரசித்தியானவனென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணஞ்செய்திருத்தலால். இது ஹரியின் பரசுராமாவதாரத்தில் நடந்தது. இதனை—

"சரிந்திருண்டறவுநீண்டகூந்தலோர்தடக்கைபற்றி
யரிந்தனன்சென்னியீன்றதாதைமுன்னமைத்தலோடும்
புரிந்தபேருவகைவெள்ளம்பொங்கினன்புதல்வற்புல்லி
பரிந்தனன்பரசுராமற்கினையனபகவர்தானன்" என்று ஸ்ரீஸ்காந்த மஹாபுராணத்தும்,

"தாயையாங்கொல்லோமென்று தாழ்த்தனராகத்தாயென்
றேயரோனுகையையிப்போழ்தெம்முனையிகழ்ந்தனின்றன்

நேயமார்துணைவர்தம்மைநீசெகுத்திடுதியென்னத்
தூயமாதவத்தோன்சொல்லத்துணித்தனன்பரசுராமன்" என்று பாகவதத்தும் வருதலைக்கொண்டுணர்க.

ஒருவன் த்வஜராஜமௌலியென்றது-ஹரனை, அது அவ்வர னவ்வண்ணமிருத்தலால். இதனை—

"காப்பாய்படைப்பாய்கரப்பாய்முழுதுமகண்ணார்விசும்பின்விண்ணோர்கெல்லா, மூப்பாய்மூவாமுதலாய்நின்ற முதல்வாமுன்னேயெனையாண்ட, பார்ப்பானேயெம்பரமாவென்றுபாடிப்பாடிப்பணிந்துபாதப், பூப்போதணைவதென்றுகொல்லோவென்பொல்லாமணியைப்புணர்ந்தே" என்று வருந் திரவிடவேதத்தாலும்,

"பிராமணனீயேகடவுளர்தம்முட்பிஞ்ஞகாவேனையர்தம்முட் [வோன்
பிராமணன்யானே பிராமணன்றனக்குப் பிராமணன்கதியுனை யிகழ்
பிராமணனல்லன்" என்னுங் காஞ்சிப்புராணத்தாலும் உணர்க.

தாத்பரியம்.

ஹரி பிராமணனாகியும் கொலைபுரிந்தவன்; ஹரன் பிராமணசிரேஷ்டனாகவேயுள்ளவன் என்பதாம்.

தாரதம்மியம்.

ஒருவன் பிராமணனாகப் பிறந்தும் மாதாவைக் கொலைபுரிந்து (பாவியாயினான்) அபகீர்த்தி யுற்றான், இன்னொருவன் பிறவாமலே பிராமணச்சிரேட்டனாக விருக்கின்றான்; இவர்களில் பிராமணசிரேட்டனே சிறந்தவனாதலால், நாங்கள் இந்த தசராஜவிஷயத்தில் தாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக வகற்றி, இதுவிஷயத்தி லுயர்வடைந்த ஹரனைச் சிறந்தவனாகக்கருதி அவ்வரனுடைய சரணங்களையே அடைகின்றோம்.—எ-று. (௬௬)

ஸ்வாத்மநோதிநிதராம்வ்ருதிரோத்ரூஸேக
ஓங்காரஸேவஹ்ருதயாஸ்தகளாஸுத்ருவ்ருத:।
கொவாநயோரயிகஜந்ருநாவிஜ்ருவந்தா
ஹுந்ரும்ஸ்ருவஞ்தசீமவயஜோஶ்ருயாம:॥

௬௭

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சங்காத்தனோதிநித்ராம்த்வநிமாத்ரமேகஒங்காரமேவஹ்ருதயாத்ஸ
கலார்த்தமந்ய: । கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்
ருவந்துதமிமம்வயமாஸ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

பங்கந் தினியுங் கடனீரிற் பயிலுஞ் சங்கந் தனையொருவ
னெங்கும் புகழ வூதியிசை யேற்று னொருவ னிதையத்திற்
றங்கம்பெறுமெய்ப்பொருளனைத்துந் துலங்கவோங்காரஞ்சொற்றுன்
இங்கன் னவரிற் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
சங்காத்	ஶங்கத்தினுலே
த்வநிமாத்ரம்	த்வனியையே
நிதராம்	மிகவும்
தனோதி	செய்துகொண்டிருக்கிறுன்,
அந்ய:	இன்னொருவன்
ஹ்ருதயாத்	மனசினுலேயே
ஸகலார்த்தம்	சகலார்த்தங்களையுமுடைய
ஓங்காரஏவ	ஓங்காரபிரணவத்தையே
தனோதி	உச்சரிக்கின்றுன்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன் ?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றேம்.

பொழிப்பு.

ஒருவன் சங்கத்தை (அநுத்தரசமின்றி) ஊதினுன், மற்றெருவன் பிரணவத்தை சகலார்த்தங்களுந் துலங்க உச்சரித்தான்; இவ்விருவர் களிற் பெரியவர்களே சிறந்தவன் யாவன்? அவனை நீவிருரைத்தால், நாங்கள் உங்களா லுரைக்கப்பட்ட அந்த மஹாபுருஷனை ஆஶ்ரயிக் கின்றேம்.

விதப்பு.

ஒருவன் சங்கத்தை முழக்கினுனென்றது - ஹரியை, அது அவ் வரி அவ்வண்ணஞ் செய்தமையால். இதனை—

" பின்னும்பிறைவாளெயிற்றந்தகன்வீற்றிருக்கும்
தென்னம்புலத்திற்கதிர்மாமணித்தேர்கடாவிப்
மின்னுந்திரையிற்கவர்சங்குபிறங்கயாவும்
முன்னம்படைத்தமுகனின்றுமுழக்கல்செய்தான்" என்னும் பா
கவதத்தாலுணர்க.

ஒருவன் பிரணவத்தை யுச்சரித்தானென்றது - ஹரனை, அது அவ்வரன் அவ்வாறுச்சரித்தமையால். இதனை—

" கள்ளமுளரிக்குண்முரல்காளையறுகால
புள்ளொலியினுவுமிதழும்புடைபெயர்ந்து
துள்ளவெழுவேதவொலிதொண்டர்செவியாற்று
லுள்ளவயல்புக்குவகையொண்பயிர்வளர்ப்ப" என்றும்,

"ஓதருமகாரமுகாரமேமகாரமுதித்திடும்பிரணவம்" என்றும் வரும் திருவிளையாடலாதிகளாலும்,

"நின்திருவோரும்வலங்கொடுவணங்கிநிலவியேயுயர்தழற்பிழம்பை
யொன்றினரறியவேண்டுமென்றுற்றகாலையிலொலித்ததுகுடிலை
மன்றவவ்வொலியையறிகலராகிமயங்கியபோதின்மற்றதுதான்
அன்றுநல்லகரமுகரமாமகரநாதமாய்ப்பிரிந்ததாலடைவே" என்னும்
வாயுசங்கிதையாலும் உணர்க.

தாத்பரியம்.

ஹ்ரி சங்கத்தொனி செய்பவன்; ஹரன் பிரணவத்தொனி செய் பவன் என்பதாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தாரதம்மியம்.

வீணே, பொருளற்றவோசைப்பான் சங்கத்தொனி செய்பவனி லும், சகலார்த்த ரூபமான பிரணவோச்சாரணஞ் செய்பவன் சிறந்த வனுதலால், நாங்கள் சங்கத்தொனி செய்த ஹரியை இந்தவிடயத்திற் றாழ்ந்தவனுக வகற்றி, இந்தவிடயத்தி லுயர்ந்த ஹரனை அடைக்கல மாக அடைகின்றேம்.—எ-று. (கூரு)

𑌏𑌕𑌸𑍍𑌤𑍁 𑌚𑌕𑍍𑌰𑌸𑌹𑌿𑌤𑍋𑌽𑌪𑌿 𑌤𑌨𑍋𑌤𑌿 𑌰𑌕𑍍𑌷𑌾-
𑌮𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑍁 𑌖𑌣𑍍𑌡𑌪𑌰𑌶𑍁𑌰𑍍𑌵𑌿𑌤𑌨𑍋𑌤𑌿 𑌶𑌿𑌕𑍍𑌷𑌾𑌮𑍍।
𑌕𑍋𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌃
𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌵𑌨𑍍𑌤𑍁 𑌤𑌮𑌿𑌮𑌂 𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகஸ்துசக்ரஸஹிதோபிதநோதிரக்ஷாமந்யஸ்துகண்டபரஶுர்வி தநோதிஶிக்ஷாம்। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்ய ம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாமঃ॥

மொழிபெயர்ப்பு.

தடங்கொள் கமல மலரனைய தன்னெழில்கொள் செங்கரத்தி
னிடங்கொளாழி யதனுலிவ் வுலகை யொருவ னிரக்ஷித் தான்
றிடங்கொள் கண்ட பரசினுய்ச் சிக்ஷை யொருவன் செய்கின்ற
னிடங்கொளிவருட்சிறந்தவன்யா ரிசைத்தாற்பெரியீரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏகஸ்து	ஒருவனுல்
சக்ரஸஹிதோபி	சக்ராயுதத்தோடு கூடினவனுக இருந்த [போதிலும்
ரக்ஷாம்	ரக்ஷையை
தநோதி	செய்துகொண்டிருக்கிறுன்,
அந்யஸ்து	இன்னொருவனுல்
கண்டபரஶு:	கண்டிக்கப்பட்ட பரசையுடையவனுக இ[ருந்தபோதிலும்
ஶிக்ஷாம்	சிக்ஷையை
விதநோதி	செய்கிறுன்;

அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்தியா	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாமঃ	ஆஶ்ரயிக்கின்றேம்.

பொழிப்பு.

பெரியவர்களே! ஒருவன் சக்கரந்தாங்கிக் காத்தற்றெழிலைச் செய்கின்றுன், மற்றொருவன் கண்டபரசைத்தாங்கிச் சிக்ஷையைச் செய்கின்றுன்; இவ்விருவரிற் சிறந்தவனை நீங்களுணாத்தால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக வடைகின்றேம்.

விதப்பு.

ஒருவன் சக்கரந்தாங்கி இரக்ஷிக்கின்றுனென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வாறியற்றலால். இதனை—

“ ஆக்குமாறயனுமுதலாகியவுலகங்
காக்குமாறுசெங்கண்ணிறைகருணையங்கடலாம்
பூக்குமாமுதலெவனவன்பொன்னடிபோற்றி” என்னும்

பாரதத்தாலுணர்க.

ஒருவன் கண்டபரசைத்தாங்கி சிக்ஷிக்கின்றுனென்றது-ஹரனை, அது அவ்வர னவ்வண்ண மியற்றலால். இதனை—

“ வெய்யவனங்கிவிழுங்கத்திரட்டிய
கையைத்தறித்தானென்றுந்தீபற
கலங்கிற்றுவேள்வியென்றுந்தீபற ” என்பது முதலிய

திருமறை மொழிகளாலுணர்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தாத்பரியம்.

ஹரி சக்கராந்தாங்கி உலகை ரக்ஷித்தான்; ஹரன் கண்டபர்ஸைத் தாங்கி உலகைச் சிக்ஷித்தான் என்பதாம்.

தாரதம்மியம்.

இரக்ஷிப்பவனிலும் சிக்ஷிப்பவன் சுவதந்திரனுதலால், சிக்ஷகனு கிய ஹரனே சிறந்தவன். நாங்கள் இந்தவிடயத்திற் குழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக அகற்றி, இந்தவிஷயத்திற் சிறந்த ஹர னைச் சரணமாக அடைகின்றோம்.—எ-று. (சுரு)

𑌏𑌕𑍋 𑌦𑌶𑌾𑌕𑍃𑌤𑌿𑌵𑌿𑌭𑌿𑌨𑍍𑌨 𑌇𑌤𑌿 𑌹𑍍𑌯𑌭𑌾𑌷𑌿
𑌚𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌵𑌭𑌿𑌨𑍍𑌨𑌤𑌮𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌰𑌿𑌤𑌿 𑌹𑍍𑌯𑌭𑌾𑌷𑌿।
𑌕𑍋 𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌃
𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁 𑌤𑌮𑌿𑌮𑌂 𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகோதஶாக்ருதிவிபிந்நஇதிஹிஹ்யபாஷிசாந்யத்வபிந்நதமமூர்த்திரிதிஹ்யபாஷி| கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்ம்ம ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

பத்து வகையாய் வருமுடலைப் படைத்தா னொருவன் பகரோருவன்
ஒத்து வருமோ ருடலன்றி யுடல்வே றடையா வொண்மையனும்
நித்த முறுவ னெனமறைகள் நிகழ்த்தும் பெருமை நியமத்தான்
இத்தன் மையரிற் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏகச்ச	ஒருவனுனல்
தசாக்ருதிவிபிந்ந	பத்துவகையாக வேறுபடுமவன்
இதி	என்று
அபாஷிஹி	சொல்லப்படுகிருனல்லவா,
அந்யஸ்து	இன்னொருவனுனல்
அபிந்நதமமூர்த்தி	மிகவும் வேறுபடாத தேகத்தையுடையவ[ன்

இதிஹி	என்று சொல்லப்படுகிருனல்லவா;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

பெரியோர்களே! ஒருவன் பத்துவகையான வேறுபாடுகளையுடைய பிறவிகளையுடையவன், மற்றொருவன் பிறவியே இல்லாதவன்; இவ் விருவரிற் சிறந்தவனை நீங்களுரைத்தால், நாங்களந்த மஹாபுருஷ னைச் சரணமாக அடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் பத்துவகையான பிறவிகளை யுடையவனென்றது-ஹரி யை, அது அவ்வரி அவ்வண்ணம் பிறந்திருத்தலால். இதனை—

“ மெச்சுபுகழ்வேங்கடவாவெண்பாவிற்பாதியிலென்
இச்சையிலுன்சென்மமெடுக்கவா - மச்சாகூர்
மாகோலாசிங்காவாமாராமாராமரா
மாகோபாலர்மாவாவாய்” என்னும் வெண்பாவாலுணர்க.

ஒருவன் பிறவியே இல்லாதவனென்றது - ஹரனை, அது அவ்வ ரன் பிறவியில்லாதவனுக இருத்தலால். இதனை—

“ எல்லார்பிறப்புமியற்பாவலர்தஞ்
சொல்லாற்றெளிந்தேனஞ்சோணேசே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ரில்லிற்பிறந்தகதையுங்கேளேம்பேருலகில்
வாழ்ந்துண்டிறந்தகதையுங்கேட்டிலேம்” என்னும் வெண்பாவாலுணர்க.

தாத்பரியம்.

ஹரி பத்துப்பிறப்புக்களையுடையவன்; ஹரன் ஒருபிறப்பு மில்லாதவன் என்பதாம்.

தாரதம்மியம்.

பலபிறவிகளையுடையவனைவிடப் பிறவியே இல்லாதவன் சிறந்தவனென்பது உலகவநுபவம். இதனல் நாங்கள் பிறவியிளுலிழிந்த ஹரியை அப்பிரதானமாக வகற்றி, பிறவியின்மையா லுயர்ந்த ஹரனை அடைக்கலமாக வடைகின்ருேம்:—எ-று. (௬௬)

𑌗𑍍𑌰𑌾𑌹𑌨𑍍𑌨𑌿𑌹𑌤𑍍𑌯𑌗𑌜𑌰𑌾𑌜𑌮𑌰𑌕𑍍𑌷𑌦𑍇𑌕𑍋
𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌨𑍍𑌨𑌿𑌹𑌤𑍍𑌯𑌮𑍁𑌨𑌿𑌪𑍁𑌤𑍍𑌰𑌮𑌰𑌕𑍍𑌷𑌦𑌨𑍍𑌯𑌃।
𑌕𑍋𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌃
𑌸𑌤𑍍𑌯𑌂𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁𑌤𑌮𑌿𑌮𑌂𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

க்ராஹந்நிஹத்யகஜராஜமரக்ஷதேகோம்ருத்யுந்நிஹத்யமுநிபுத்ரமரக்ஷதந்ய: । கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

பென்னம் பெரிய வீந்திலெனப் பிறங்கு முதலை தனைச்சிறிய
சின்னம் புரிந்து கரிதன்னைச் சிறந்து காத்தான் சீறியெதிர் [ன்
மன்னந்தகனை வதைத்தொருவன் மறையோன்மகனை மகிழ்ந்தாண்டா
என்னுந் தகவிற் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
க்ராஹம்	முதலையை
நிஹத்ய	கொன்று

கஜராஜம்	கஜேந்திரனை
அரக்ஷத்	காப்பாற்றினுன்,
அந்ய:	இன்னொருவன்
ம்ருத்யும்	எமனை
நிஹத்ய	கொன்று
முநிபுத்ரம்	மார்க்கண்டேயனை
அரக்ஷத்	காப்பாற்றினுன்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா.	யாவன் ?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்ருேம்.

பொழிப்பு.

பெரியோர்களே! ஒருவன் முதலையைக்கொன்று யானையைக் காத்தான், இன்னொருவன் எமனைக்கொன்று மார்க்கண்டேயனைக் காத்தான்; இவர்களிலெவன் சிறந்தவன்? அவனை நீங்கள் உண்மையாக வுரைத்தால்,நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாகஅடைகின்ருேம்.

விதப்பு.

ஒருவன் முதலையைக்கொன்று கசேந்திரனைக் காத்தானென்றது-ஹரியை, அது அவ்வரி கசேந்திரனைப் பீடித்த முதலையைக்கொன்றமையால்,

பாண்டியனொருவன் அருந்தவனுன வகத்தியனைக் கண்டபோது மதயானையைப்போல மதித்து இருந்தமையா லவனை நீ நம்மை மதி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யாமையால் மதயானையாகக்கடவை என்று அகத்தியன் சபித்தனன். அதனாலவன் யானையாகி ஒருதாமரையோடையிற் பெண்யானைக ளோடு புணர்ந்து விளையாடினான். அப்பொழுது அங்கிருந்த முதலை யொன்று அதன்காலைப் பிடித்துக்கொண்டது; அதனாலவ்யானை நா ராயணனைக்குறித்து ஓலமிட்டது; அவ்வொலிகேட்ட வரி யவ்விடஞ் சென்று முதலையைக் கொன்று யானையைக் காத்தனன். இதனை—

" எறிசுடர்விரிக்குநேமியெறிந்தனனெறிதலோடும்
பிறைபுரையெயிற்றுப்பேழ்வாய்பிளந்துவெவ்விடங்கர்துஞ்சி
அறைதருசாபந்தன்னாலடைந்தவவ்வுருவுநீத்து
விறலுடையூகூவென்னும்விஞ்சையனாயிற்றன்றே" என்னும்

பாகவதத்தாலுணர்க.

ஒருவன் முனிபுத்திரனை எமனைக்கொன்று காத்தானென்றது- ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ணம் காத்தமையால்.

ஹரன் மிருகண்டு முனிமகனான மார்க்கண்டமுனி சிவபூசை செய் துகொண்டிருந்த சமயத்து அவன் கழுத்திற் பாசமிட்டிழுத்த எம னைக்கொன்று மார்க்கண்டமுனிக்கு என்றும் பதினாறுவயதீந்தனன். இதனை—

" மதத்தான்மிக்கான்மற்றிவன்மைந்தனுயிர்வாங்கப்
பதைத்தானென்னாவுன்னிவெகுண்டான்பதிமூன்றுஞ்
சிதைத்தான்வாமச்சேவடிதன்னாற்சிறிதுந்தி
யுதைத்தான்கூற்றன்விண்முகில்போன்மண்ணுறவீழ்ந்தான்"

என்னுங் காந்தமஹாபுராணத்தாலுணர்க.

தாத்பரியம்.

ஹரி முதலையைக்கொன்று யானையைக் காத்தான்; ஹரன் எம னைக்கொன்று முனிபுத்ரனைக் காத்தான் என்பதாம்.

தாரதம்மியம்.

ஒரு நீர்வாழ்சாதியைக்கொன்று ஒரு காட்டுவிலங்கான யானை யைக் காத்ததினும், எமனென்பவனைக்கொன்று பிரமவிருடியான

மார்க்கண்டேயனைக் காத்தது விசேடமாதலால், நாங்கள் மிருகத்திற் குபகாரஞ்செய்த ஹரியை அப்பிரதானமாக வகற்றி, பிராமணனுக் குபகாரஞ்செய்த ஹரனைச் சிறந்தவனாக நியாயமுகத்தா லறிந்து அம் மஹாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.— எ-று. (சுஎ)

𑌏𑌕𑌃 𑌪𑌪𑍌 𑌭𑍁𑌵𑌨𑌭𑍀𑌕𑌰𑌕𑌾𑌲𑌕𑍂𑌟-
𑌮𑌨𑍍𑌯𑌃 𑌪𑌪𑍌 𑌸𑍍𑌤𑌨𑌵𑌿𑌷𑌂 𑌖𑌲𑍁 𑌪𑍂𑌤𑌨𑌾𑌯𑌾𑌃।
𑌕𑍋 𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑍃𑌤𑍍𑌤𑌾-
𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁 𑌤𑌮𑌿𑌮𑌂 𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃।

ஏக:பபௌபுவநபீகரகாளகூட மந்ய:பபௌஸ்தநவிஷம்கலு பூத நாயா:| கோவாநயோரதிகஇத்யநுசிந்திய வ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்து தமிமம்வயமாஶ்ரயாம:||

மொழிபெயர்ப்பு.

மண்ணுங் கடலும் மாவானும் மற்று முள்ள மாண்பொருளும்
விண்ணுங் காலு மலறவரும் விடத்தை யொருவன் விழுங்கினான்
நண்ணும் பேயி னகில்விடத்தை நக்கி யொருவ னயந்துற்றான்
எண்ணு மிவருட் சிறந்தவன்யா ரிசைத்தூற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன் [கூடவிஷத்தை
புவநபீகரகாளகூடம்	உலகினுக்குக் பயத்தைத்தருகிற கால
பபௌ	குடித்தான்,
அந்ய:	இன்னொருவன்
பூதநா	பூதனையினுடைய
ஸ்தநவிஷம்	தனவிஷத்தை
பபௌகலு	புசித்தான்;
அநயோ:	இவ்விருவரில்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் அஞ்சத்தக்க காளகூடவிஷத்தைப் பானஞ்செய்தான், மற்றொருவன் பூதனையின் தனத்திற் பூசியிருந்த (குறைவான) விடத்தைப் பானஞ்செய்தான்; பெரியவர்களே! இவ்விருவருக்கு ளிந்த விடயத்திற் சிறந்தவன் யாவன்? நீங்கள் உண்மையாகச் சொன்னால், நாங்களந்த மஹாபுருஷனைச் சர்ணமாக வடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் காளகூடவிஷத்தைப் புசித்தானென்றது - ஹரனை, அது அவ்வரன் அவ்வாறு குடித்தமையால். இதனை—

திருமால் தேவர்கள் நிமித்தம் பாற்கடலை மந்தரமென்னு மத்திட்டுக் கடைவித்தனர்; உடனே அதனிற் கொடிய ஆலால விடமுண்டாகியது. அதனைக்கண்ட வமராதிய ரஞ்சி யோடினார்கள். திருமால் நானிருக்கின்றேன், அஞ்சாதீரென்றுரைத்துத் தன்னதாழியுடன் விடத்தினருகி லெய்திக் கருகி இனி யென்செய்வதென விண்ணவருடன் கலந்து ஓடி ஸ்ரீகைலையையடைந்து இறைவனை வணங்கி அண்ணலே! கொடிய விடம் கடல்கடைந்தபோழ் துண்டாகியது. அதனை மிர்த்துஞ்சயரான தேவரீரோ அங்கீகரிக்க வேண்டுமென்றனர். உடனே அனைவரையு மஞ்சுமாறு செய்த அவ்விடத்தை இறைவனுண்டனன். இதனை—

" மாழையுண்கணிநோக்கலுந்திருவுளமகிழ்ந்து
பாழிமால்விடைக்கொடிமிசையுயர்த்தருள்பகவ

னேழைவானவர்க்கிரங்கியேயினிதுகண்ணோடி
யாழிவல்விடம்பருகினனகிலமுமுய்ய" என்று காஞ்சிப்புராணத்தும்,

" கோலாலமாகிக்குரைகடல்வாயன்றெழுந்த
வாலாலமுண்டானவன்சதுர்தானென்னேடீ
யாலாலமுண்டிலனேலன்றயன்மாலுள்ளிட்ட
மேலாயதேவரெல்லாம்வீவர்காண்சாழலோ" என்று திருவாசகத் திருமுறையினும் வருதலைக்கொண்டுணர்க.

ஒருவன் பூதனையின் றனவிடபானஞ் செய்தானென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணம் செய்தமையால்.

ஹரி கண்ணனாக வவதரித்த ஞான்று அவ்வரிக்குப் பகைவனாகவும், மாமனாகவுமிருந்த கஞ்சனென்பவ னனுப்பிய பூதனையென்னும் பிசாசி, தனது தன்னியத்தில் விடத்தைத்தடவினவளாக மாய்வுருவத்துடன் வந்து பாலூட்டினாள். ஹரி அப்பாலையுண்டு அவளைக்கொன்றான். இதனை—

" செஞ்சுடர்மணிக்கலைசிலம்பொடுசிலம்ப
வஞ்சியெனநின்றொசிமருங்குறமோற
நஞ்சுபொதிவெம்முலையருத்துறநடந்தாள்
அஞ்சுவருபூதனையணங்குருவெடுத்தே. என்றும்,

அறிந்துநகையாடிமுலையங்கைகொடுபற்றி
மறங்குலவுவஞ்சமகண்மாமுலைமணிக்கண்
திறந்தொழுகுபாலினொடுசெய்யதளிரென்னப்
பிறங்குகனிவாய்முகில்பிழிந்துயிர்குடித்தான்" என்னும் பாகவதத்தாலுணர்க.

தாத்பரியம்.

ஹரி பூதனையின் தனவிடமுண்டவன்; ஹரன் ஆலாலமுண்டவன் என்பதாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தாரதம்மியம்.

திருமால் முதலியவனைவரையும் பின்றொடர்ந்து வந்ததுவும், திருமாலைக் கரியவனாகச் செய்ததுவுமான கொடிய ஆலாலவிஷத்திற் கும், பூதனையின் தனத்தையே ஒன்றும் ஊறுபுரியாத சாமான்யவிடத் திற்கும் வித்தியாசமிருப்பதுபோன்றே அவைகளைப் பானஞ்செய்த வர்களுக்கும் தாரதம்மியம் இருக்குமென்று கூறவேண்டுவதின்றாம். இதனால் நாங்கள் குறைவான தனவிடபானம் செய்த ஹரியை அப்பி ரதானமாக அகற்றி, மிகுதியான காளகூட விஷபானஞ்செய்த ஹர னைச் சரணமாக அடைகின்றோம்.—எ-று. (௬அ)

ஏகஸ்ய ஸப்தஜலதீந் பிபதிஸ்ம பக்த:
தஸ்யைகதேஸமிதரஸ்து பபந்த யத்நாத்।
கோவாநயோரதிக இத்யநுசிந்த்ய வ்ருத்தா:
ஸத்யம் ப்ருவந்து தமிமம் வயமாஸ்ரயாம:॥

ஏகஸ்யஸப்தஜலதீந்பிபதிஸ்மபக்ததஸ்யைகதேஸமிதரஸ்துபபந் தயத்நாத்। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந் துதமிமம்வயமாஸ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

ஈரோன் றியவக் கடலேழி லேய்ந்த நீரை யெழிலொருவன்
பேரோன் றியசிந் தையனைப் பிறங்கு மடியன் பிடித்துண்டான் [ன்
தாரோன்றியதோ ரினியொருவன் தனியோர்கடலைமுயன்றடைத்தா
ஏரோன் றிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏகஸ்ய	ஒருவனுடைய
பக்த:	பக்தன்
ஸப்த	ஏழுவகையான
ஜலதீந்	கடல்களை
பிபதிஸ்ம	பானஞ்செய்தானே,

இதரஸ்து	மற்றொருவன்
தஸ்ய	அந்த கடலினுடைய
ஏகதேசம்-யத்நாத்	ஒருபாகத்தை பிரயத்தினத்தோடே
பபந்த	கட்டினான்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்தியா	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஸ்ரயாம:	ஆஸ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

பெரியவர்களே! ஒருவனுடைய பத்தனே எழுவகையினதான கடல்களையும் பானஞ்செய்தான், இன்னொருவன் தானே கடலின் ஒருபாகத்தை வெகு கட்டத்துடன் கட்டினான்; இவரிற் சிறந்தவன் யாவன்? அவனை நீங்களுண்மையாக வுரைத்தால் நாங்களவனை ஆஸ் ரயிக்கின்றோம்.

விதப்பு.

ஒருவனுடைய பத்தன் எழுவகையினதான கடல்களையும் குடித்தானென்றது - ஹரனை, அது அவ்வரனுக்கன்பன் அவ்வாறு குடித் தமையால்.

விருத்திரனென்னு மசுரனை இந்திரன்போரிற் கொல்லச்சென்றனன். உடனே விருத்திரன் இனி நாமிருந்தாற் கெடுதி சம்பவிக்குமென ஓடிக் கடலிற் புகுந்தொளித்தான். இந்திரன் கடனீரினுட் புக்க, விருத்திரனைக் கொல்லுமாறு சிவபத்தனான விந்தமடக்கிய குறு

Center for Shaiva Studies, Pondicherry Collection

முனியையடைந்து வணங்கி ஐயனே! என்பகைஞன் கடலிற் புக்கொளித்திருக்கின்ருன். அவனைக் காட்டித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுதலும் அம்முனிவன் சிவத்தியானத்துடன் கடலினருகிலாகிக் கடனீரை அள்ளி ஆச்மனஞ்செய்தனன். உடனே கடனீரனைத்தும் அகத்தியமுனியின் வயிற்றினிடத்தாயின. பின்னர் நீரற்ற கடற்குட் காணப்பட்ட விருத்திரனை இந்திரன் கொன்ருன். இதனை—

“ என்றவனிடுக்கண்டீர்ப்பானிகல்புரிபுலன்களைந்தும்
வென்றவ்னெடியோன்றன்னைவிடையவன்வடிவமாக்கி
நின்றவனறிவானந்தமெய்மையாய்நிறைந்தவெள்ளி
மன்றவனூழிச்செந்தீவடிவினைமனத்துட்கொண்டான்.

கைதவன்கரந்துவைகுங்கடலைவெற்படக்குங்கையிற்
பெய்துமுந்தெல்லைத்தாக்கிப்பருகினன்பிறைசேர்சென்னி
யையனதருளைப்பெற்ருர்க்கதிசயமிதென்கொன்மூன்று
வையமுத்தொழிலுஞ்செய்யவல்லவரவரோயன்ருே” என்று வரும் திருவிளையாடலாதிகளாலுணர்க.

ஒருவன் அந்தக்கடலினுடைய ஒருபாகத்தைப் பிரயாசைப்பட்டுக்கட்டினனென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணஞ் செய்திருத்தலால்.

ஹரி இராமனாகவந்த ஞான்று அவன் மனைவியை இராவணனெடுத்து இலங்கையில் சிறைவைத்தனன். இராமன் கடலினடுவிலுள்ள இலங்கைக்குச்செல்ல வழியின்றி விபீடணன் முதலியோருடன் ஆலோசித்துப் பின்னர் குரங்குகளையும் வருணனையும் ஆதரவாகக்கொண்டு அணைகட்டி இலங்கைபுக்கானென்பது இராமாயணம். இதனை—

“ அளவிகந்தவரிக்குலத்தோரெழில்
வளரநின்றவளாக்குழுவுய்த்திட
உளமுவந்துநூறேசனையாமணை
நளன்விளைந்தவணன்கமைத்தானரோ” என்னும் பாகவதத்தாலுணர்க.

தாத்பரியம்.

ஹரனுக்கன்பன் ஏழுகடனீரையுங் குடித்தான்; ஹரி கடலினொருபாகத்தை வெகு வருத்தப்பட்டு அடைத்தான் என்பதாம்.

தாரதம்மியம்.

ஒருவனுடைய ஊழியன் செய்யுமளவுகூட இன்னொருவன் செய்யானாகிற் குறிப்பிட்ட வவன் இவனுக் கிணையாகானுதலால், சமுத்திரவிஷயத்திற் ருழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக வகற்றி, உயர்ந்த ஹரனைச் சரணமாக அடைகின்ருேம்.—எ-று. (௬௧)

𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑌤𑍍𑌵𑌮𑌯𑌤𑍇𑌖𑌲𑍁𑌤𑌤𑍍𑌰𑌚𑍈𑌕𑍇
𑌵𑌿𑌶𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌤𑍍𑌵𑌪𑌦𑌵𑍀𑌮𑌯𑌤𑍇𑌤𑌥𑌾𑌨𑍍𑌯𑌃।
𑌕𑍋𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌤𑍍
𑌸𑌤𑍍𑌯𑌂𑌪𑍍𑌰𑌬𑍁𑌦𑍍𑌧𑌤𑌮𑌮𑌿𑌮𑌂𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

விஶ்வாத்மகத்வமயதேகலுதத்ரசைகே விஶ்வேஶ்வரத்வபதவீம யதேததாந்ய:। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

மன்னும் விச்சு வாத்துமனு மருவு மொருவன் மாநிலத்திற்
துன்னும் விச்சு வேச்சுரனுத் துலங்கு மொருவன் றுகளில்லாப்
பொன்னு மணியு முதலபல பொருந்து மியலிற் குறைவில்லா
ரொன்னு மிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

தத்ரச	அவர்களுக்குள்ளேயும்
ஏக:	ஒருவன்
விஶ்வாத்மகத்வம்	விசுவசொரூபமாகின்றதை
அயதேகலு	அடைந்திருக்கின்ருனல்லவா,
ததா	அப்படியே
அந்ய:	இன்னொருவன்

விஶ்வேஶ்வரபதவீம்	ஜகதீசுவரபதவியை
அயதேகனு	அடைந்திருக்கின்றனல்லவா;
அநயோ:	இவ்விருவரில்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன் ?
இதி	இதனை
அநுசிந்த்யா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

பெரியோர்களே! ஒருவன் விசுவரூபமானவனாக இருக்கின்றான், இன்னொருவன் விசுவேசனாக விருக்கின்றான்; இவ்விருவர்களி லெவன் சிறந்தவன்? நீங்களுண்மையாக வுரையுங்கள். உங்களாற் சிறந்தவனாகச் சொல்லப்பட்ட அவனை நாங்கள் சரணமாகவடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் விசுவாத்மகனென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணமிருத்தலால். இதனை—

" மருவியமாயை மகத்தகங்கார மதிபொறிபுலன்குணஞ்சீலம்,
தரைபுனல்கனல்கால்வான்முதலெவையுஞ்சாற்றுநாமாயினுந்தருமம்,
திருவருளெழில்சீர் திகழ்வலம்பொறுமை தெளிவுமெய்கொடைசிறப்
பார்ந்த, அரசவெங்குறையுமவனேலாநீமற்றறிதியெங்கலைப்பிரிவென
வே" என்று பாகவதத்தும்,

ௐ நமோ விஶ்வரூபாய விஶ்வஸ்தித்யந்தஹேதவே ॥

என்று கோபாலதாபனியுபநிடதத்தும் வருதலைக்கொண்டுணர்க.

ஒருவன் விசுவாதிகனென்றுரைத்தது - ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ணம் விசுவாதிகனாக் விருத்தலால். இதனை —

விஶ்வாதிகோ ருத்ர: என்றுவரும் சுருதிவாக்கியத்தாலும்,

" விச்சுவன்சிறைப்புள்ளரசுயர்த்தவன்விளம்பும்
விச்சுவாதிகனெறற்ழ்வலிச்சினவிடையூர்தி
யெச்சமேசுரும்புளர்துழாயலங்கலானென்ப
வெச்சநாயகன்பொலந்துணரிதழிமாலிகையான்" என்னுங் காஞ்சிப்புராணத்தாலும் உணர்க.

தாத்பரியம்.

ஹரி விசுவரூபன்; ஹரன் விச்வேச்வரன் என்பதாம்.

தாரதம்மியம்.

மன்னவனிற் சக்கரவர்த்தி சிறந்தவனுமாறுபோல, விசுவனான ஹரியினும் விச்வேசனான ஹரன் சிறந்தவனாயினான்; இதனால் நாங்கள் இந்தவிஷயத்திற் றாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக வகற்றி, இதுவிஷயத்தி லுயர்ந்தவனாக அறியப்படுகின்ற ஹரனுடைய சரணங்களைச் சரணமாக வடைகின்றோம்.—எ-று. (௭0)

ஏகோ புஜங்கஶயநே நத நாகதேவ: ஸ்தௌதி
அந்ய: கரோதி புஜகேந்த்ர விபூஷணாநி।
கோவாநயோரதிக இத்யநுசிந்த்ய வ்ருத்தா:
ஸத்யம் ப்ருவந்து தமிமம் வயமாஶ்ரயாம:॥

ஏகோபுஜங்கஶயநேதநுதேதிஸம்ப்திமந்ய:கரோதிபுஜகேந்த்ரவிபூஷணாநி। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

ஆடு மரவ சயனத்தை யடைந்து தூங்கு மாலொருவன்
ஓடு மரவி லிந்திரரா யுறுவோர் தம்மை யுயர்கரத்தி ... .

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

னீடு மெழில்கொள் கங்கண்மா நிறைத்தா னொருவன் நிகழுலகி
லீடி லிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
புஜங்கசயநே	சர்ப்பசயனத்தில்
அதிஸுப்திம்	மிகவுந் தூங்குதலை
தநுதே	செய்கின்றான்,
அந்ய:	இன்னொருவன்
புஜகேந்திரவிபூஷணாநி	சர்ப்பேந்திர பூஷணங்களை
கரோதி	செய்கிறான் (அணிகின்றான்);
அநயோ:	இவ்விருவரில்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன் ?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஸ்ரயாமஃ	ஆஸ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் அரவசயனத்திற் றூங்குகின்றான், மற்றொருவன் நாகேந்திராபரணங்களை அணிந்திருக்கின்றான்; பெரியவர்களே! இன்னவருட் சிறந்தவன் யாவன்? நீங்களுரைத்தால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக வடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் சயனத்தை அரவமாகவுடையவனென்றது - ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணம் அரவசயனத்தை யுடையவனாக விருத்தலால். இதனை—

" அரவணையாயவோ ரேயம்மமுண்ணத்துயிலெழாயே " என்னு நாலாயிரப்பிரபந்தத்தா லுணர்க.

ஒருவன் அரவபூடணனாக விருக்கின்றானென்றது - ஹரனை, அது அவ்வர னவ்வண்ண மணிந்திருத்தலால். இதனை—

"புற்றில்வாளரவார்த்தபிரானைப்பூதநாதனை" என்னுந் திரவிட வேதத்தாலுணர்க.

தாத்பரியம்.

ஹரி அரவசயனன்; ஹரன் அரவாபரணன் என்பதாம்.

தாரதம்மியம்.

மிகவும் பெரிய அரவத்தின்மீது கிடப்பவனிலும், நாகேந்திரர்களை பெருஞ்சுமையாகக்கருதாது ஆபரணமாகப்பூண்டவன் சிறந்தவனாதலால், நாங்கள் இதுவிஷயத்திற் றாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக வகற்றி, இதுவிடயத்திற்சிறந்த ஹரனைச் சரணமாக வடைகின்றோம்.—எ-று. (எக)

𑌏𑌕𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑍍𑌯 𑌜𑌯𑌤𑌃 𑌖𑌲𑍁 𑌸𑍂𑌤𑌭𑌾𑌵𑌾
𑌦𑌨𑍍𑌯𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑍍𑌯 𑌜𑌯𑌤𑍋 𑌭𑌵𑌤𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑌦𑌾𑌨𑌾𑌤𑍍।
𑌕𑍋𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌃
𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁 𑌤𑌮𑌿𑌮𑌂 𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகோர்ஜுநஸ்யஜயத:கலுஸூதபாவா தந்யோர்ஜுநஸ்யஜயதோபவதஸ்த்ரதாநாத்। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருதத்ாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஸ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

வில்லிற் சிறந்த பற்குனன்றன் வியன்றே ரோட்டி விசயத்தை
ஒல்லை யவனுக் கேயளித்தா னொருவ னொருவ னுயரம்பைச்
சொல்லிற் சிறந்த பார்த்தனுக்கே தூக்கி யளித்துச் சுகமீந்தான்
எல்லி லிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
அர்ச்சுநஸ்ய	அருச்சுனனுக்கு
ஸூதபரவாத்	சாரதியாய் இருந்ததனலே
ஜயத:கலு	வெற்றியை கொடுத்தவனல்லவா,
அந்ய:	இன்னெருவன்
அர்ச்சுநஸ்ய	அருச்சுனனுக்கு
அஸ்திரதாநாத்	அஸ்திரங்களைக் கொடுக்கிறதினலே
ஜயத:	ஜயத்தை கொடுத்தவனக
அபவத்	ஆனன்;
அநயோ :	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்த்யா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆச்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

பெரியோர்களே! ஒருவன் பார்த்தனுக்குச் சாரதியாகவிருந்து அவனுக்கு வெற்றியையளித்தான், மற்றொருவன் பார்த்தனுக்குப் பாணமளித்ததனலே அவனுக்கு வெற்றியை யளித்தான்; இவ்விருவரிற் சிறந்தவன் எவன்? அவனை நீங்களுரைத்தால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக வடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் பார்த்தனுக்குச் சாரதியாகி வெற்றியளித்தானென்றது-ஹரியை, அது ஹரி அவ்வண்ணஞ் செய்திருத்தலால். ஹரி பாரத யுத்தத்தி லருச்சுனனுக்குச் சாரதியாகி வெற்றியளித்தான். இதனை—

" அடற்சிலைவிசயனிவ்வாறுரைத்தலுமமலன்வஞ்சப்
படவரவுயர்த்தவென்றிப்பார்த்திபன்றன்னைநோக்கி
நடையுடைப்புரவித்திண்டேர்நானிவற்கூர்தலன்றி
மிடைபடையேவிநும்மோடமர்செயேன்வேந்தேயென்றான்" என்

னும் பாரதத்தாலுணர்க.

ஒருவன் பார்த்தனுக்கு அம்பினைக்கொடுத்து வெற்றியளித்தானென்றது-ஹரனை, அது அவ்வண்ண மரனியற்றியிருத்தலால். இதனை—

" பரியதோர்பாம்பரைமேலார்த்தார்போலும்
பாசுபதம்பார்த்தற்களித்தார்போலும்" என்னும் தமிழ்வேதத்

தாலுணர்க.

தாத்பரியம்.

ஹரி, பார்த்தனுக்குச் சாரதியாக விருந்து வெற்றியளித்தவன்; ஹரன் பார்த்தனுக்குப் பாணமளித்து வெற்றியைக் கொடுத்தவன் என்பதாம்.

தாரதம்மியம்.

தேர்ப்பாகனுகவிருந்து வெற்றியளித்தவனிலும், அம்புகளை யளித்து வெற்றியளித்தவன் சிறந்தவனுதலால், நாங்கள் இந்தவிஷயத்தி லிழிவடைந்த ஹரியை அப்பிரதானமாகவகற்றி யுயர்ந்த ஹரனைச் சரணமாக அடைகின்றோம்.—எ-று. (எஉ)

ஏக: பார்த்தஸ்ய ஸூதத்வாஜ்ஜயதோ
யோ(அ)ந்யஸ்த்வஸ்த்ரதாநாத் ஜயதோ(அ)ஸ்ய
கோ வாநயோரதிகஇத்யநுசிந்த்ய வ்ருத்தா:
ஸத்யம் ப்ருவந்து தமிமம் வயமாஶ்ரயாம:॥

ஏக:புமாநிதிபரோதயிதேதி புத்ரஸ்ஸாஸ்தாதயோரிதிசஸர்வஜகத்ப்ரவித்தி: । கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம: ॥

மொழிபெயர்ப்பு.

சோதிக் கமல வாண்முகத்துத் தோகை வடிவத் தோன்றலென
வோதிக் களிக்கு மிவ்வுலக மொருவன் றன்னை யொருவனையோ

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நீதிப் புருட னென்பார்கள் நிகழ்த்து மிவர்தம் மகன்சாத்தன்
ஈதி லிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
புமாந்	புருஷன்
இதி	என்றும்,
பர:	மற்றொருவன்
தயிதா	மனைவி (பெண்)
இதி	என்றும்,
தயோ:	அவர்களுக்கு பிள்ளை
சாஸ்தா	சாத்தன்
இதிச	என்றும்
ஸர்வஜகத்ப்ரஸித்தி:	எல்லாவுலகங்களிலும் பிரசித்தி;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன் ?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்தியா	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் மனைவியென்றும், ஒருவன் புருஷனென்றும், அவ்விருவர் சம்பந்தத்தாலுண்டான மைந்தன் ஹரிஹரபுத்திரனென்றும் ஸகலலோகப்பிரசித்தம். பெரியவர்களே! இவ்விருவரிற் சிறந்தவன் யாவன்? அவனை நீங்களுரைத்தால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் பெண்ணுருவானவனென்றது - ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணம் பெண்ணுருவடைந்திருத்தலால். இதனை—

" விழுந்தொருகோடிவண்டுமிதிப்பவாய்நெகிழ்ந்துபைந்தேன்
வழிந்தபூங்கடுக்கைமார்பன்வாள்விழிபரப்பிநோக்க
எழுஞ்சுடர்ப்பரிதியென்னவிலங்குசூராழிமாலோன்
பிழிந்துகொள்வனையசெவ்விப்பெண்ணுருவெடுத்துநின்றான்" என்னும் பாகவதத்தாலுணர்க.

ஒருவன் அந்தப்பெண்ணை யணைந்த புருஷனென்றது - ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ணம் செய்திருத்தலால்.

கைலாயபதியான ஹர னொருதினம் ஹரியைப்பார்த்து, மாலே! நீ முன்ன மசுரரை மயக்கக்கொண்ட பெண்ணுருவத்தைக் காட்டுதி என்றனன். மாலும் அவ்வண்ணமே நல்லழகுடையதாயுள்ள ஆடை நெகிழ இருதனந்தோன்றப் பெண்ணுருவாய்ப் பாடியுமாடியு முலாவிநின்றனன். உடனே அவ்வுருவினைக்கண்ட வரன் பின்றொடர்ந்து பிடிப்பான் றுணிந்தனன்; துணிந்ததை யுணர்ந்த மால் இனி இங்கு நிற்பது உசிதமன்றென் றோடினான்; ஓடினவனை இவன் பின்றொடர்ந்து நாவலந்தீவிலுள்ள ஒரு மாதவிச்சோலையிற் கூடினான். ஹரன்செய்த கலவிக்காற்றாத ஹரியான மோகினி வார்த்தியுற்றனள்; பின்னர் இருவரும் கலவியை நிறைவேற்றினார்கள்; உடனே மோகினியொரு பிள்ளையைப் பெற்றாள்; அந்த மகனுக் கரிக்ரபுத்திரனென்று பெயர். இதனை—

" மையல்செய்மோகினிவடிவுகாட்டுபு
வெய்தெனநடந்தனன்வேலைவென்றகோ
னையெனவெழுந்துசென்றுற்றுப்புல்லவுங்
கையகன்றோடினன்கரியமேனியான்" என்று காஞ்சிப்புராணத்திலும்,

" அத்தகுந்திருமைந்தற்கரிகர - புத்திரனெனுநாமம்புனைந்துபின்
னுத்தபான்மையுருத்திரர்தம்மொடும் - வைத்துமிக்கவரம்பலநல்கியே" என்று கந்தபுராணத்தும் வருதலைக்கொண்டுணர்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தாத்பரியம்.

ஹரி மனைவி; ஹரன் புருடன். இவரிருவர் கூட்டுறவிற் றேன்றின மகன் ஹரிஹரபுத்திரன் என்பதாம்.

தாரதம்மியம்.

மனைவியினும் புருடன் சிறந்தவனாகவிருத்தலும், பெண்ணினும் ஆண் சிறந்ததாகவிருந்தலும் உலகில் அநுபவம். இதனுந் பெண்ணுருவடைந்த ஹரி தாழ்ந்தவனும்,பெண்ணு நவமான ஹரியைப் புணர்ந்த ஹரன் சிறந்தவனு மாகின்றூர்கள்; ஆதலால் நாங்களிந்த விஷயத்திற் றாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாகவகற்றி, சிறந்த ஹரனைப் பிரதானமாகக்கொண்டு அவன் சரணங்களை ஆஸ்ரயிக்கின்றேம்.—எ-று.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஏகஸ்சகாரசரணாப்ஜநகாஞ்சலேந பௌலஸ்த்யபங்கமிதரஸ்துரணேதிக்ருச்சிரராத் । கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஸ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

அன்பற் றகந்தை கொளுங் கொடிய வரக்கனை விராவணனைத்
துன்புற் றலசக் கானுதியாற் றெலைத்தா னெருவன் றேள்வலியால்
வன்புற் றமரி லிராவணனை வாட்டி யொருவன் வாழ்வுற்றான்
இன்புற் றிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
சரணாம்புஜநகாஞ்சலேந	காற்கமலச் சிறுவிரனுனியினுலே
பௌலஸ்த்யபங்கம்	இராவணனவமானத்தை
சகார	செய்தான்,

இதரஸ்து	இன்னெருவனுல்
ரணே	யுத்தத்தில்
அதிக்ருச்சிராத்	வெகு கஷ்டத்தில்
பௌலஸ்த்யபங்கம்	இராவணபங்கத்தை
சகார	செய்தான்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்தியா	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஸ்ரயாம:	ஆஸ்ரயிக்கின்றேம்.

பொழிப்பு.

ஒருவன் பதகமல நகத்தினுல் இராவணனுக்கு அவமானத்தையுண்டாக்கினுன், இன்னெருவன் யுத்தத்தில் வெகு கஷ்டப்பட்டு இராவணபங்கத்தைச் செய்தான்; பெரியோர்களே! இவ்விருவரி லெவன் சிறந்தவன்? நீங்களுரைத்தீராயின், நாங்கள் அந்த மஹாபுருஷனைச் சரணமாக வடைகின்றேம்.

விதப்பு.

ஒருவன் பதகமல நகநுனியினுல் இராவணபங்கஞ் செய்தானென்றது-ஹரனை, அது அவ்வர னவ்வண்ண மியற்றலால். இதனை—

“ அரக்கனைவிரலாலடர்த்திட்டனீர்
இரக்கமொன்றிலீரெம்பெருமானீரோ” என்னுந் தமிழ்வேதத்தாலுணர்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஒருவன் போரிற் கஷ்டத்துட னிராவணபங்கஞ் செய்தானென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணஞ்செய்திருக்தலால். இதனை,

"கோடிவான்கணைகொண்டெமாற்றியகொடியவன்றனையக்கணை
யோடிமார்புருவிப்புறந்தனிலுயிரையுங்கொடுபோயதால்
வீடினனுயர்தேரினின்றுவிழுந்துளான்புவிமீதிலே
நாடிவானவராடியாசிநவின்றுசிந்தைகளித்தனர்" என்னும் பாரதத்தாலுணர்க.

தாத்பரியம்.

ஹர னிராவணனைக் கால்விரனுதியாற் பங்கப்படுத்தினன்; ஹரி போர்புரிந்து பங்கப்படுத்தினன் என்பதாம்.

தாரதம்மியம்.

கானகத்தா லொருவனைப் பங்கஞ்செய்தவ னெதிரில் போரில் முன்பங்க மடைந்தவனைப் பிரயாசையினாற் பங்கஞ்செய்தவன் சிறந்தவனாகான். இந்த முறையினாற் றாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாகவகற்றிச் சிறந்த ஹரனை நாங்கள் ஆஶ்ரயிக்கின்றோம்.—எ-று.()

𑌏𑌕𑍋 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑌿𑌮𑌖𑌿𑌲𑍇𑌷𑍁 𑌸𑍁𑌰𑍇𑌷𑍁 𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌰𑌂 𑌪𑌰𑌨𑍍𑌤𑍁 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌗𑌿𑌰𑍋 𑌗𑍃𑌣𑌨𑍍𑌤𑌿।
𑌕𑍋 𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌸𑍍
𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁 𑌤𑌮𑌿𑌮𑌂 𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகோத்விஜாதிமகிலேஷுஸுரேஷுமத்யே க்ஷாத்ரம்பரந்துபரமார்த்தகிரோக்ருணந்தி। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ் ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம: ॥

மொழிபெயர்ப்பு.

சிந்தை கபட மில்லாத திருமா மறையோர் தேவரிடை
முந்த மறையோ னொருவன் முன்ன நின்றான் மூதறிஞர்
விந்தை யரச னொருவன் விளங்கு மென்பர் வியனுலகில்
இந்த வியல்பிற் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

பரமார்த்தகிர:	யதார்த்தபண்டிதர்கள்
ஏகம்	ஒருவனை
அகிலேஷு	எல்லாருமான
ஸுரேஷுமத்யே	தேவதைகளின் நடுவில்
த்விஜாதிம்	அந்தணனாக
க்ருணந்தி	எண்ணுகிறார்கள்,
பரந்து	மற்றொருவனை
க்ஷாத்ரம்	க்ஷத்திரியனாக
க்ருணந்தி	நினைக்கின்றார்கள் (கிரகிக்கின்றார்கள்);
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்திய	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

மனதிற் கபடமென்பதில்லாத பண்டிதர்கள் தேவர் நடுவில் ஒருவனைப் பிராமணனென்பார்கள், மற்றொருவனை க்ஷத்திரியனென்பார்கள்; இவ்விருவருள் சிறந்தவன் யாவன்? அவனைப் பெரியவர்களே! நீங்களுண்மையாக வுரைத்தால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

விதப்பு.

பண்டிதர்களொருவனை பிராமணனென்பார்களென்றது-ஹரனை, அவ்வரன் அவ்வண்ண மிருத்தலால். வேதியர்க்குள்ள சடையுந் தோ

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வுடைய முப்புரிநூலுமே ஹரனை மறையவனென்று விளக்கும். அன்றியும்; இதனை—

"வேதியாவேதகீதாவிண்ணவரண்ணவென்றன்
ருேதியேமலர்கவேியொருங்கினின்கழல்கள்காணப்
பாதியோர்பெண்ணைவைத்தாய்படர்சடைமதியஞ்சூடும்
ஆதியேயாலவாயிலப்பனேயருள்செய்யாயே" என்னுந் திராவிட வேதத்தாலும் உணர்க.

மற்றெருவனை க்ஷத்திரியனாக எண்ணுகின்றார்கள் என்றது — ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணமிருத்தலால். இது ஹரியின் பீதாம்பரம் பஞ்சாயுதம், மகுடாதிகளுமே க்ஷத்திரியனாகவிளக்கும். அன்றியும். இதனை—

"முன்னெருநாள்மழுவாளிசிலைவாங்கியவன்தவத்தைமுற்றுஞ் செற்றாய்,உன்னையுமுன்னருமையையுமுன்போயின்வருத்தமுமொன் றுணக்கொள்ளாது,என்னையுமென்மெய்யுரையும்மெய்யாகக்கொண்டுவ னம்புக்கவெந்தாய், நின்னையேமகனுகப்பெறப்பெறுவேனேழ்பிறப்பு நெடுந்தோள்வேந்தே" எனக் குலசேகரநிருபன் கூறியதனாலுமுணர்க.

தாத்பரியம்.

பண்டிதர்கள் ஹரனைப் பிராமணனாகவும், ஹரியை க்ஷத்திரியனாகவும் நினைக்கின்றார்களென்பதாம்.

தாரதம்மியம்.

அரசனிலும் அந்தணன் சிறந்தவன். ஆதலால் அரசனான திருமாலை நாங்க ளப்பிரதானமாக வகற்றி, அந்தணனான ஹரனை ஆஸ்ரயிக்கின்றோம்.—எ-று. (௭௫)

𑌏𑌕𑍋𑌜𑌘𑌾𑌨𑌰𑌿𑌪𑍁𑌮𑍀𑌕𑍍𑌷𑌣𑌤𑌃𑌕𑍍𑌷𑌣𑍇𑌨
𑌯𑌤𑍍𑌨𑌾𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌂𑌚𑌨𑌿𑌜𑌘𑌾𑌨𑌨𑌖𑍇𑌨𑌚𑌾𑌨𑍍𑌯𑌃।
𑌕𑍋𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑍃𑌦𑍍𑌧𑌾
𑌃𑌸𑌤𑍍𑌯𑌂𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁𑌤𑌮𑌿𑌮𑌂𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகோஜகாநரிபுமீக்ஷணத:க்ஷணேந யத்நாத்ரிபும்சநிஜகாநநகேந சாந்ய| கோவாநயோரதிகஇத்யநுசிந்த்யவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துத மிமம்வயமாஶ்ரயாம:||

மொழிபெயர்ப்பு.

மன்னுங் கொடிய வம்பலனை மருவும் விழியான் மாநிலத்திற்
றுன்னுஞ் சாம்ப ராவொருவன் றெலைத்தா னெருவன் றுகடேற்ற
தன்னெண் பகையைப் போர்முனையிற் றனதுநகத்தாற் றலையழித்தா
னென்னுமிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற்பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
ரிபும்	பகைவனை
ஈக்ஷணத:	பார்வையினாலே
க்ஷணேந	கணப்பொழுதில்
ஜகாந	கொன்றான்,
அந்யச	இன்னெருவனால்
ரிபும்ச	பகைவனையானால்
நக்கேந	நகத்தினலே
நிஜகாந	கொன்றான்;
அநயோ:	இவ்விருவரில்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பொழிப்பு.

பெரியவர்களே! ஒருவன் றனது பகைவனைக் கண்பார்வையினுற் சாம்பராகச்செய்தான், மற்ருெருவன் றனது பகையை வெகு கஷ்டத்துடன் நகத்தா லழித்தான்; இவ்விருவரி லெவன் சிறந்தவன்? அவனை நீங்களுணர்த்தால், நாங்கள் அந்த மஹாபுருஷனைச் சரணமாக அடைகின்ருேம்.

விதப்பு.

ஒருவன் றன் பகைவனைக் கண்பார்வையினுற் சாம்பராக்கினுனென்றது - மன்மதனை எரித்த ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ணமெரித்தமையால். இதனை—

"நறைசேர்மலரைங்கணையானைநயனத்தீயாற்பொடிசெய்த
விறையாராவாரெல்லார்க்குமில்லையென்னுதருள்செய்வார்" என்னுந் தமிழ்வேதத்தாலுணர்க.

ஒருவன் தன் பகைவனைப் பிரயாசத்துடன் நகத்தால் வதைத்தான் என்றுரைத்தது - இரணியனைக்கொன்ற ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணம் கொன்றிருத்தலால். இதனை—

"தளையவிழ்கோதைமாலையிருபால்தயங்கவெரிகான்றிரண்டுதறுகண்
அளவெழவெம்மைமிக்கவரியாகியன்றுபரியோன்சினங்களவிழ [ற்
வளையுகிராளிமொய்ம்பில்மறவோனதாகம்மதியாதுசென்ருெருகிரா
பிளவெழவிட்டகுட்டமதுவையமூடுபெருநீரில்மும்மைபெரிதே"

என்னு நாலாயிரப்பிரபந்தத்தாலுணர்க.

தாத்பரியம்.

ஹரன் றன் பகைவனை கண்பார்வையினு லழித்தான்; ஹரி தன் பகைவனை நகத்தா லழித்தானென்பதாம்.

தாரதம்மியம்.

பகைவனைக் கண்பார்வையினுற் கொன்ற ஹரனிலும் பகைவனை வெகு கட்டத்துடன் நகத்தாற் கொன்றவன் தாழ்ந்தவனுதலால், நாங்கள் இவ்விஷயத்திற் ருழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக வகற்றி, இவ்விஷயத்தி லுயர்வடைந்த ஹரனைச் சரணமாக வடைகின்ருேம்.—எ-று.

(எ௪)

வ்ருந்தாவநே சரதி கோபிருபேத்ய சைக:
ஸ்த்வந்யோ ப்ருஹம்பித்ருவநே சரதீஹ பூதை: |
கோவாநயோரதிக இத்யநுசிந்த்ய வ்ருத்தா:
ஸத்யம் ப்ருவந்தமிமம் வயமாஸ்ரயாம: ||

ப்ருந்தாவநேசரதிகோபிருபேத்யசைகஸ்த்வந்யோப்ருஹம்பித்ருவநேசரதீஹ பூதை:|கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்தமிமம்வயமாஸ்ரயாம:||

மொழிபெயர்ப்பு.

நறுவீ முல்லை நிலமதனி னண்ணுங் குல்லை நறுங்காட்டி
லுறுமா கோபி மாருடனே யுற்ற ெனருவ னுளையொருவன்
குறுமா பூதம் பலகோடி குழும விடுகாட் டிடைக்குனித்தான்
இறுமா லிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
கோபி:	கோபிகளோடே
உபேத்ய	கூடிக்கொண்டு
ப்ருந்தாவநே	விருந்தாவனத்தில்
சரதி	சஞ்சரிக்கின்ருன்;
அந்ய:	இன்னெருவன்
ப்ருஹம்பூதை:	மிகவும் பூதங்களாற் சூழப்பெற்றவனுய்
இஹ	இப்பொழுதும்
பித்ர்வநே	சுடுகாட்டில்
சரதி	சஞ்சரிக்கிருன்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

கோவா	யாவன்?
இஹ	இதனை
அநுசிந்த்யா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் நறுமணங்கமழும் பலமலர் துன்றிய முல்லைநிலத்திலுள்ள துளவக்காட்டில் (பிருந்தாவனத்தில்) கோபிகளோடே உலாவினான், இன்னொருவன் பூதகூட்டங்களுடனே அநவரதம் சுடுகாட்டினிற் சஞ்சரிக்கின்றான்; இவ்விருவரி லுயர்ந்தவன் யாவன்? அவனைப் பெரியவர்களான நீங்களுரைத்தால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் கோபிகளுடன் விருந்தாவனத்தி லுலாவுகின்றான் என்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணம் உலாவுதலால். இதனை—

“ பட்டிமேய்ந்தோர்காரேறுபலதேவர்க்கோர்கீழ்க்கன்றாய்
இட்டறிட்டுவிளையாடியிங்கேபோதக்கண்டீரோ
இட்டமானபசுக்களையினிதுமறித்துநீரூட்டி
விட்டுக்கொண்டுவிளையாடவிருந்தாவனத்தேகண்டோமே”என்

று நாலாயிரப்பிரபந்தத்தாலுணர்க.

ஒருவன் பூதங்களுடனே பிதிர்வனத்தில் வசிக்கின்றானென்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ண மிருத்தலால். ஹரன் பூதங்களுடனே உலாவுவதைப் பாரதநு லிவ்வண்ண முரைக்கின்றது.

அதிபயங்கரமான பூதங்களுடனே ஹரன் எவ்விடத்திலுஞ் சஞ்சரிப்பதைப்பார்த்து அயன்வணங்கி,சுவாமி! தங்களுருவத்தைப்பார்க்க

அஞ்சுகின்றேன். என்பொருட்டு பிதிர்வாசஞ் செய்யவேண்டுமென அடிபணிந்து வேண்டிக்கொண்டனன்; அவன் வேண்டுகோளுக்கிரங்கிய ஹரன் அவ்வண்ணமே செய்தானென்பதாம். காந்தமும் ஹரி பிரமேந்திராதிகளின் மரணநாளிலுண்டாகிற மசானத்தில் தானொருவனே மிகுந்தவனாக நிற்றலால் பிதிர்வனவாசியாவன்; அப்பொழுது பாவகர்மயுக்தர்களும் சிவத்துரோகிகளும் பிசாசுகளாக வவர்களுடனிருப்பானென்றும் உரைக்கின்றது. இதனை—

[illegible]
[illegible]
[illegible]
[illegible] என்று ஸ்கா

ந்தமஹாபுராணத்தும்,

“விரைசரோருகத்தனோர்நாள்விரிந்தபல்லுயிர்களெல்லாம்
கரையறமுடிக்குப்பூதகணங்களைக்கண்டேயஞ்சி
நிரைபடுகருணைமேனிநிமலனேபுறத்தினூடுந்
தரைபடுமயானத்தூடுஞ்சரித்தெமையளிப்பாயென்றான்.

அவ்வரமவனுக்கீந்தேயகிலத்துமயானத்தூடுஞ்
செவ்வியினிருப்பனென்னைத்தெளிந்தவர்புனிதமாவ
தவ்விடமென்பர்தேறாரசுசியென்றகல்வாரென்றான்
கொவ்வைவாயணங்குமீளக்குறித்தொன்றுபுகலுற்றாள்” என்

று பாரதத்தும் வருதலைக்கொண்டுணர்க.

தாத்பரியம்.

ஹரி விருந்தாவனத்திற் கோபிகளோடுலாவினான்; ஹரன் பிதிர்வனத்திற் பூதங்களோடுலாவினானென்பதாம்.

தாரதம்மியம்.

கோபிகளுட னுலாவுவதனிலும் பூதங்களுடனுலாவுத லரிய காரியமாதலாலும்,அனைவரு மிறந்தவிடமே சுடுகாடாக ஹரன் அவ்விடத்தி

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta
Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

லிருக்கின்ருனென்று சாத்திரங்கள் கூறலால், ஹரனிருப்புச் சிறந்த தும்; ஹரியிருப்புத் தாழ்ந்ததுமாயிற்று. இதனுல் நாம் இந்தவிஷயத் திற் ருழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக அகற்றிச் சிறந்த ஹர னைச் சரணமாக அடைகின்ருேம்.—எ-று. (எஎ)

𑌏𑌕𑍋 𑌭𑍁𑌜𑌙𑍍𑌗𑌶𑌯𑌨𑍇 𑌸𑍁𑌪𑍍𑌤𑌿 𑌹 𑌨𑌿𑌤𑍍𑌯
𑌮𑌨𑍍𑌯𑍋 𑌭𑍁𑌜𑌙𑍍𑌗𑌕𑌟𑌕𑍋 𑌨𑌟𑌤𑍀𑌹 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍍।
𑌕𑍋 𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾
𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁 𑌤𑌮𑌿𑌮𑌂 𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகோபுஜங்கஶயநேஸுப்தீஹநித்யமந்யோபுஜங்ககடகோநட தீஹநித்யம் । கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ரு வந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

தூங்கு மரவ சயனத்திற் ருெடர்ந்தே யொருவன் றவரவந்
தாங்கு கடக மாக்கொண்டு தகுதி குறையாத் தண்ணுமைகள்
ஏங்க வொருவன் னடனமதை யென்று மியற்றி யிலங்கிடுவான்
ஈங்கின் னவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
புஜங்கசயநே	சர்ப்பசயனத்தில்
இஹ	இவ்விடத்தில்
நித்யம்	எப்பொழுதும்
சுப்தி	தூங்குகின்ருன்,
அந்ய:	இன்னெருவன்
புஜங்ககடக:	புஜங்ககடகத்தையுடையவனுகி
இஹ	இவ்விடத்தில்
நித்யம்	எப்பொழுதும்
நடதி	நடிக்கிருன்;

அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:,	சிறந்தவன்
கோவா	யாவன் ?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்ருேம்.

பொழிப்பு.

ஒருவன் அரவசயனத்திற் கிடக்கின்ருன், மற்றொருவன் அரவா பரணத்தையுடையவனுக நடனஞ்செய்கின்ருன்; இவர்களிற் சிறந்த வன் யாவன்? அவனை நீங்க ளுரைத்தால், நாங்கள் அந்த மஹாபுரு ஷனைச் சரணமாக வடைகின்ருேம்.

விதப்பு.

ஒருவன் அரவசயனத்திற் றூங்குவோனென்றது - ஹரியை, இது அவ்வரி அவ்வண்ண மனந்தசயனனுக விருத்தலால். இதனை—

"சலசலோசனனனந்தசயனன்" என்னும் நிகண்டாலுணர்க.

ஒருவனரவாபரணனுக நடிக்கின்ருனென்றது - ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ணந் தரித்து நடித்தலால். இதனை—

"பொங்கரவணிந்தமூர்த்தி" என்றும்,

"அந்திவண்ணன்முக்கண்ணனழலாடிபாண்டரங்கன்" என்றும் வரும் நிகண்டாலுணர்க.

தாத்பரியம்.

ஹரி அரவிற்றூங்குவோன்; ஹரன் அரவகடகமணிந்து நடிப் போனென்பதாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

தாரதம்மியம்.

பாம்பிற் கிடப்பவனிலும் அப்பாம்பை யாபரணமாகக்கொண்டு நடிப்பவன் சிறந்தவனாதலால், நாங்கள் இந்தவிஷயத்திற் றாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக அகற்றி, இதுவிஷயத்திற் சிறந்த ஹரனைச் சரணமாக அடைகின்றோம்.—எ-று. (எஅ)

ஏகஸ்யஜாதஇதிஸந்ததலோகவார்த்தா
நாந்யஸ்யதாத்ருஶவிதூஷிதலோகவார்த்தா।
கோவாநயோரதிகஇத்யநுசிந்த்யவ்ருத்தா
ஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

ஏகஸ்யஜாதஇதிஸந்ததலோகவார்த்தா நாந்யஸ்யதாத்ருஶவிதூஷிதலோகவார்த்தா। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

ஒன்றும் பிறவி யநேகமதைத் தொக்கோ னென்னச்சொலுநிந்தை
தன்னை யொருவ னிவ்வுலகிற் சார்ந்தா னொருவன் றனிப்பிறவி
யென்னு மதனை யாராதா னென்ன வுரைக்கு மிசையுற்றான்
இன்னார் தம்மிற் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

அயம்	ஒருவனுக்கு இவன்
ஜாத:	பிறந்தவன்
இதி	என்று
ஸந்ததலோகவார்த்தா	எப்பொழுது முண்டான லோகநிந்தை (இருக்கின்றது,)
அந்யஸ்ய	இன்னொருவனுக்கு
தாத்ருஶவிதூஷிதலோக	அப்படிப்பட்ட தூஷிக்கப்பட்ட
வார்த்தாநஅஸ்தி	லோகநிந்தையானது இல்லையே;
அநயோ:	இவ்விருவருக்குள்

அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் பிறந்தவனென்னும் உலோகநிந்தையை உடையவன், இன்னொருவன் அப்படிப்பட்ட அபக்யாதி இல்லாதவன்; பெரியவர்களே! இவ்விருவரி லெவன் சிறந்தவன்? நீங்களுண்மையாக வுரைத்தால், நாங்களவனையே அடைக்கலமாக வடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் பிறந்தவன் என்றுரைக்கும் நிந்தையையுடையவனென்றது - ஹரியை, இது அவ்வரி அவ்வண்ணம் பிறந்திருத்தலால். இதனை—

"வண்ணமாடங்கள்சூழ்திருக்கோட்டியூர்
கண்ணன்கேசவன்நம்பிபிறந்தநாள்" என்னு நாலாயிரப்பிரபந்தத்தாலுணர்க.

ஒருவன் அப்படிப்பட்ட அபக்கியாதியை அடையாதவனென்றது - ஹரனை, அது அவ்வரன் அவ்வாறு பிறவாமையால். இதனை—

"பிச்சன்பிறப்பிலிபேர்நந்தியுந்தியின்மேலசைத்த
கச்சினழகுகண்டாற்பின்னைக்கண்கொண்டுகொண்பதென்னே"
என்னுந் தமிழ்வேதத்தாலும்,

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

[illegible]
[illegible]
என்று சிவாரதன ஸம்வாதத்திலும் வருதலைக்கொண்டுணர்க.

தாத்பரியம்.

ஹரி பிறந்தவன்; ஹரன் பிறவாதவன் என்பதாம்.

தாரதம்மியம்.

பிறந்தவனைவிடப் பிறவாதவன் சிறந்தவனுதலால், நாங்கள் பிறந்த ஹரியை அப்பிரதானமாக வகற்றி, பிறவாத ஹரனைச் சரணமாக வடைகின்றோம்.—எ-று. (௭௧)

ஏகஸ்ஸுராணாமுபஹ்வரே ஹிமவதஸ் தபஶ்சசார
தஸ்மை ததௌ ஸுதமதிக்ஷிதி ஸாம்பமந்ய:।
கோவாநயோரதிக இத்யநுசிந்த்ய வ்ருத்தா
ஸ்ஸத்யம் ப்ருவந்து தமிமம் வயமாஶ்ரயாம:॥

ஏகஸ்ஸுராணாருபகிரம்ஹிதபஶ்சகார தஸ்மைததௌஸுதமதிக்ஷிதிஸாம்பமந்ய:। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

மாடம் பொலியுஞ் சுவணநகர் மருவும் விபுதர் குழுக்களுடன்
கூட வொருவ னருந்தவத்தைக் குயிற்றி யிருந்தான் குலவொருவன்
நீடன் னவற்குச் சாம்பனென நிலவு மகனை நினைந்தளித்தான்
ஈடன் னவரிற் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
ஸுராணா:	தேவர்களாலே சூழப்பெற்றவனாய்
உபகிரம்	மலைச்சாரலில்
தப:	தபஸை
சகார ஹி	செய்தானல்லவா,
அந்ய:	இன்னொருவன்
அதிக்ஷிதி	பூலோகத்தில்
ஸாம்பம்	ஸாம்பனென்கிற
ஸுத:	பிள்ளையை
ததௌ ஹி	கொடுத்தானல்லவா;
அநயோ:	இவ்விருவரில்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் தேவர்களுடன் மலைச்சாரலில் தவஞ்செய்தான், அவ்வண்ணஞ் செய்தவனுக்கு இன்னொருவன் சாம்பனென்னும் மகனையளித்தான்; இவ்விருவரிற் பெரியவர்களே! எவன் சிறந்தவன்? நீங்களுரைத்தால், நாங்கள் அந்த மஹாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் விபுதர்களுவுடன் மலைச்சாரலிற் றவஞ்செய்தானென்றது - ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணம் தவஞ்செய்திருத்தலால். இதனை கீழ்வருஞ் சரிதத்தாலுணர்க.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஒருவன் அவ்வண்ணந் தவஞ்செய்தவனுக்குச் சாம்பனென்னும்
பிள்ளையை யளித்தானென்றது - ஹரினை, அது அவ்வரன் அவ்வண்
ணம் அளித்தமையால்.

ஹரி கண்ணனாகவிருந்தகாளில் அவனுக்கு பதினாயிரத்தொருநூற்
றெட்டு மனைவியர் இருந்தார்கள்; அவர்களுக்குட் சாம்பவதி நீங்கலா
கச் சத்தியபாமை யுருக்குமணி முதலிய அனைவருக்கும் ஒவ்வொருத்
தியும் பத்துப்பத்துப்பிள்ளைகளை யுடையவர்களாயினார்கள். இதனால்
கண்ணன் நூற்றறுபத்தோராயிரத்தெண்ணூறு பிள்ளைகளையுடையவ
னாகவிருந்தான். இவ்வண்ணம் லக்ஷக்கணக்கான பிள்ளைகளையுடைய
ஹரியின் மனைவியரி லொருத்தியான சாம்பவதி ஹரியை வணங்கி,
நாதா! தங்கள் மனைவியர்களான பதினாறாயிரத்தெழுநூற்றேழு பெண்
கள் என்னை மலடியென்றுரைக்குமாறு யான் உயிர்வாழத்துணியேன்
என்று கூறினாள். உடனே ஹரி மானே! அஞ்சாதே நான் உனக்குப்
புத்திரர் பிறக்குமாறு செய்கின்றேனென்றுரைத்து மகரிஷியான உப
மன்னியருடைய ஆசிரமத்திற்குச்சென் றவரை வணங்கி, என்மனைவி
சாம்பவதி பிள்ளைப்பேறின்றி வருந்துகின்றாள். குருநாத! அவட்கும்
புத்திரபாக்கிய முண்டாகுமாறு அருள்செய்யவேண்டுமென் றுரைத்
தலும், அம்முனிவன் கண்ண! நீ சங்கரனைநோக்கித் தவஞ்செய்வையா
கில், நினக்கு மக்கட்பேறுண்டாகும். அருந்தவஞ் செய்யாதவர்கண்மு
ன் அவ்விறைவன் வெளிப்படையாகத்தோன்றானென்றுரைத்து அவ்
வரிக்குப் பாசுபத தீக்ஷைசெய்து பஞ்சாக்ஷரோபதேசஞ்செய்தனன்.
உபதேசம்பெற்ற ஹரியும் விபூதி ருத்ராக்ஷாதிகளா லலங்கரிக்கப்பட்
ட சரீரியாய்க் கைலைமலைச்சாரலி லருந்தவஞ்செய்தனன். இவன் தவ
த்துக்குகந்த ஹரன் பார்வதிதேவி ஸ்கந்தன் முதலானவர்களுடன்
ப்ரத்தியக்ஷமாய் நின்று, ஹரியே! நின் தவத்தை மெச்சினேன்; நீ தவ
த்தை நிறுத்தி, நினக்கு வேண்டிய வரத்தைக் கேள் என்றலும், ஹரி
ஹரனது சரணகமலங்களில் சாஷ்டாங்கமாக வணங்கித்துதித்து எம்
பெருமானே! அடியேற்கு நின்றிருவடியை மறவாத வன்பும் ஒரு
பிள்ளையும் வேண்டுமென்று வாய்புதைத்து நின்று கூறினான்; ஹர
னும் அவ்வண்ணமே வரமளித்தனன். இதனை—

"வார்சடைகட்டித்துயமருங்கினிற்சீரைசுற்றிக்
கார்நிறத்தண்ணல்செய்யுந்தவத்தினைக்கருதிநோக்கி
யேர்குடியிருந்துவீங்குமிளமுலைக்கவுரியோடும்
போர்விடையிவர்ந்துமுக்கட்புனிதன்முன்றோன்றினானே.

அடுத்தடுத்தன்பினோடும்வணங்குமாய்துளவினானை
யெடுத்திருகையானீவிவீழ்ந்ததென்னியம்புகென்னாந்
கடுத்திகழ்மிடற்றொன்கூறக்கண்ணன்வாய்புதைத்துநின்மேல்
விடற்கருமன்பும்மற்றோர்சிறுவனும்வேண்டுமென்றான்.

மழகதிர்ப்பரிதியேய்க்குங்கவுத்துவங்கிடந்தமார்ப
விழைவினீகேட்டவெல்லாம்விருப்பொடுமளித்தோமென்னாக்
குழவிவெண்டிங்கட்கண்ணிமிலைச்சியகூத்தன்கூறக்
கழையிசைவடித்தகண்ணன்கவுரிதாண்மலரிற்றாழ்ந்தான்" என்
றுவருங் கூர்மபுராணத்தாலுணர்க.

தாத்பரியம்.

ஹரி ஹரனைக்குறித்துத் தவஞ்செய்தான்; ஹரன் ஹரிக்கு வர
மளித்தான் என்பதாம்.

தாரதம்மியம்.

அருந்தவஞ் செய்பவனிலும் அருந்தவஞ் செய்பவனுக்கு வரங்
கொடுத்த பெருந்தகை சிறந்தவனாதலால், நாங்கள் ஹரியை இது
விஷயத்தி லப்பிரதானமாக வகற்றி, இதுவிஷயத்திற் சிறந்த ஹர
னைச் சரணமாக அடைகின்றோம்.—எ-று. (அ௦)

ஏகஸ்துபாணகதிமேத்யக்ரம்வ்ருணோதி
சாந்யோக்ஷித்புரஜயாயதமேவபாணம்।
கோவாநயோரதிகஇத்யநுசிந்த்யவ்ருத்தா
ஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

ஏகஸ்துபாணகதிமேத்யக்ரம்வ்ருணோதி சாங்யோக்ஷித்புரஜயாய தமேவபாணம் । கோவாநயோரதிகஇத்யநுசிந்திய வ்ருத்தாஸ்ஸத்யம் ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மொழிபெயர்ப்பு.

சந்தக் கரனைப் பாணகம னத்தா லொருவன் சாடினன்
அந்தக் கரனை யழித்தானை யரிய வேதி யாக்கொண்டு
சிந்திப் புரத்தை முன்னொருவன் செகுத்தானென்னுந் திருமறைகள்
இந்தத் தொழிலிற் சிறந்தவன்யா ரிசைத்தாற்பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏகஸ்து	ஒருவனுனல்.
பாணகதிம்	பாணகமனத்தை
ஏத்ய	அடைந்து
கரம்	கரனை
வ்ருணோதி	சேதிக்கிறான்,
அந்ய:	இன்னொருவன்
புரஜயாய	புரஜயத்தின்பொருட்டு
தமேவ	அவனையே
பாணம்	அம்பாக
அக்ஷிவத்	பிரயோகித்தான்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் பாணகமனத்தால் கரனைக் கொன்றான், மற்றொருவன் பாணகமனஞ் செய்தவனையே பாணமாகக்கொண்டு புரஜயமடைந்தான்; பெரியவர்களே! இவ்விருவரிற் சிறந்தவன் யாவன்? நீவிருண்மையாகவுரைத்தால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

விசேஷம்.

ஒருவன் பாணகமனத்தையடைந்து கரனை வதைத்தானென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணம் செய்திருத்தலால். இது ஹரியின் இராமாவதாரத்தில் நிகழ்ந்தது. இதனை—

"ஆள்வலியுங்கரிவலியுமயவலியுந்தேர்வலியுமமரஞ்சுந், தோள்வலியுந்தவவலியுந்தோற்றமுறக்கருதரும்போர்தொடுத்தபோதில்,வாள்வலிதோளிராகவனும்வாங்கியவிற்பகழிகளான்மாற்றிவிட்டா, னுள்வலியையுணராதாரொருகணத்தினுயிர்தொலைந்தார்நவில்வதென்னே"

என்னும் பாரதத்தாலுணர்க.

ஒருவன் அந்தக் கரசங்காரனையே பாணமாகக்கொண்டு புரஜயமடைந்தானென்றது - ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ண மியற்றியிருத்தலால். இதனை—

"தன்மனையிரதமாகத்தன்மகன்வலவனாகத்
தன்மகன்பேரனோடுதனக்குமைத்துனன்காலாகத்
தன்மலரணைநாணாகத்தானெடும்பகழியானான்
றன்மனமிடங்கொண்டேற்றசங்கரன்றனக்குமாயன்" என்னுங்

கூர்மபுராணத்தாலுணர்க.

தாத்பரியம்.

ஹரி பாணகமனத்தாற் கரனை வதைத்தான்; ஹரன் ஹரியையே பாணமாகக்கொண்டு புரசயமுற்றான் என்பதாம்.

தாரதம்மியம்.

தன்னதான ஒருபாணத்தாற் பகைவனைக் கொன்றவனினும், அந்தப் பாணகமனஞ் செய்தவனைப் பாணமாகவுடையவன் சிறந்தவனாகின்றான். ஆதலால் நாங்கள் பாணகமனவிஷயத்திற் றாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக வொதுக்கி, பாணகமனவிஷயத்தி லுயர்ந்த ஹரனை ஆஶ்ரயிக்கின்றோம்.—எ-று. (அக)

Center for Shaiva Studies, Pondicherry Collection

𑌏𑌕𑌸𑍍𑌸𑌦𑌾𑌸𑌵𑌿𑌤𑍃𑌮𑌣𑍍𑌡𑌲𑌮𑌧𑍍𑌯𑌵𑌰𑍍𑌤𑍀
𑌚𑌾𑌨𑍍𑌯𑌸𑍍𑌸𑌦𑌾𑌸𑌵𑌿𑌤𑍃𑌦𑌨𑍍𑌤𑌭𑌿𑌦𑌾𑌵𑌰𑍀𑌯𑌾𑌨𑍍।
𑌕𑍋𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑍃𑌦𑍍𑌧𑌾
𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌂𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁𑌤𑌮𑌿𑌮𑌂𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகஸ்ஸதாஸவித்ருமண்டலமத்யவர்த்தீசாந்யஸ்ஸதாஸவித்ருதந்தபிதாவரீயாந்। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

சந்தப் பாநு மண்டலத்திற் றவிரா தொருவன் சார்ந்துற்றான்
அந்தப் பாநு வெனுஞ்சிறந்த வண்ண லெழில்கொ ளணிவாயிற்
றந்தத் தன்மை யில்லாமற் றகர்த்தா னொருவன் றாரணியில்
இந்தச் சீரிற் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
ஸதா	எப்பொழுதும்
ஸவித்ருமண்டலமத்யவர்த்தீ	சூரியமண்டலநடுவில் இருக்கிறவன்,
அந்ய:	இன்னொருவனானால்
ஸதா	எப்பொழுதும்
ஸவித்ருதந்தபிதா	சூரியனுடைய பல்லை
வரீயாந்	பேதிக்கிறதினாலே சிறந்தவன்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன் ?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்திய	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.

தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவ னழகிய சூரியமண்டலத்தி லிருக்கின்றான், இன்னொருவ னந்தச் சூரியனுடைய தந்தங்களைப் பின்னஞ்செய்தவன்; பெரியவர்களே! இவர்களுக்குட் சிறந்தவன் யாவன்? அவனை நீங்களுண்மையாக வுரைத்தால்,நாங்களந்த்மஹாபுருஷனைச் சரணமாக வடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் சூரியமண்டலத்தி லிருப்பவனென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வண்ண மிருத்தலால். இதனை—

“வளம்பொருந்தும்வசுக்களிலக்கினி
விளங்குகின்றவாதித்தரின்விட்டுணு
துளங்கிரும்புனல்தோன்றிறையாகில
உளந்தவறிவுற்றவருளானும்” என்று பாகவதத்தும், மண்டலப்பிரமாண உபநிடதத்திலும் சூரியமண்டலமூர்த்தியான நாராயணன் யாக்கிய வல்கியனுக்கு யோகோபதேசஞ் செய்தானென்றிருக்கின்றது. ‘ஸஹோவாசநாராயண’ என்பனவாதிகளாலும் சூரியமண்டலவாசி ஹரியென்றறியப்படுகின்றான்.

ஒருவன் சூரியனுடைய பற்களை யுடைத்தவனென்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ணஞ் செய்தமையால்.

ஹரனையன்றிப் பரனை யுண்டாக்கக்கருதிய தக்கனென்பவன் செய்த யாகத்தி லவிற்பாகத்திற்காக வந்திருந்த சூரியனுடைய பற்களை ஹரனடித்துடைத்தனன். இதனை—

“ சூரியனார்தொண்டைவாயினிற்பற்களை
வாரிநெரித்தவாறுந்தீபற
மயங்கிற்றுவேள்வியென்றுந்தீபற ” என்று திரவிடவேதமுரைத்தமையாலுணர்க.

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தாத்பரியம்.

ஹரி சூரியமண்டலவாசி; ஹரன் சூரியனுடைய தந்தங்களை யுடைத்தவன் என்பதாம்.

தார்தம்மியம்.

சூரியமண்டலவாசியினும் சூரியனுடைய பற்களையுடைத்தவன் வீரியத்திற் சிறந்தவனாதலால், நாங்கள் சூரிய மண்டலவாசியான ஹரியை இங்கு அப்பிரதானமாக அகற்றி, சூரியனுடைய பற்களை யுடைத்த சிறந்தஹரனைச் சரணமாக அடைகின்றோம்.—எ-று.(௮௨)

𑌏𑌕𑌸𑍍𑌤𑍁𑌮𑌾𑌧𑌵𑌇𑌤𑌿𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑌃𑌸𑍍𑌵𑌨𑌾𑌮𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌨𑍍𑌯𑍋
𑌹𑍍𑌯𑍁𑌮𑌾𑌧𑌵𑌇𑌤𑌿𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑌃𑌸𑍍𑌵𑌨𑌾𑌮𑍍𑌨𑌾।
𑌕𑍋𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌃
𑌸𑌤𑍍𑌯𑌂𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁𑌤𑌮𑌿𑌮𑌂𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகஸ்துமாதவஇதிப்ரதித:ஸ்வநாம்நாத்வந்யோஹ்யுமாதவஇதி ப்ரதித:ஸ்வநாம்நா । கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

மன்னு மெழில்கொண் மணிமோலி மருவு மொருவன் மாதவனாய்ப்
பன்னு முரிமை தனையெய்திப் பலரும் புகழ விருக்கின்றான்
உன்னு மொருவ னுமாதவனென் றுரைக்கு முனையா லுயர்வுற்றான்
என்னு மிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதமே.

பதப்பொருள்.

ஏகஸ்து	ஒருவனானால்
மாதவ:	மாதவன்
இதி	என்று
ப்ரதித:	பிரஸித்தியடைந்தவன்,
அந்ய:-	இன்னொருவன்
உமாதவ:	உமாதவன்

இதி	என்று
ஸ்வநாம்நா	தன் பெயரினாலே
ப்ரதித:	பிரஸித்தியடைந்தவன்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்தியா	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

பெரியவர்களே! ஒருவன் மாதவனென் றழைக்கப்படுகின்றான், மற்றொருவ னுமாதவனென்று அழைக்கப்படுகின்றான்; இவர்களுக் குட்சிறந்தவன் யாவன்? அவனை நீங்களுரைத்தால், நாங்களந்த மஹா புருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

விதப்பு.

மாதவனென்றது-ஹரியை, உமாதவனென்றது-ஹரனை, இவை இவர்க ளவ்வண்ணமிருத்தலால் வந்த பெயர்.

தாத்பரியம்.

ஹரி மாதவன்; ஹரன் உமாதவன் என்பதாம்.

தார்தம்மியம்.

மாதவனென் றுரைப்பதினும் உமாதவனென் றுரைப்பதில் ஒரெழுத்ததிகமாதலாலும், அருத்தவிசேட மிருத்தலாலும், நாம் இதுவிஷயத்திற் றாழ்ந்த ஹரியை அப்பிரதானமாக அகற்றி, உயர்ந்த ஹரனைச் சரணமாக அடைகின்றோம். (௮௩)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

கோபாலகைஸ்த்வநுஸ்ருதஸ்ஸஹதராமிகைகோ திக்பாலகைஸ்த்வநுஸ்ருதஸ்துதிகம்பரோந்ய। கோவாநயோரதிகஇத்யநுசிந்த்யவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஸ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

உவலைக் கூரைக் குடில்கடொறு முற்றுக் கிடக்கு முயர்வில்லாச்
சவலை யிடையர் குழுவுடனே சார்ந்தா னொருவன் றனியொருவன்
கவலை யின்றித் திசைவிபுதர் களுல வமர்ந்தான் கடலுலகி
லிவர்க டம்மிற் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
இஹ	இவ்விடத்தில்
கோபாலகைஸஹதராம்	இடையர்களால் மிகவும்
அநுஸ்ருத:	அநுசரிக்கப்பட்டவன்,
திகம்பர	திகம்பரனாகிய
அந்ய:	அன்னியன்
திக்பாலகைஸ்து	திக்குப்பாலர்களாலே
அநுஸ்ருத:	அநுசரிக்கப்பட்டவன்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்த்யா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்

ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஸ்ரயாம:	ஆஸ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் இடையர்களுடன் மிகவுஞ் சகவாசஞ் செய்கின்றான், இன்னொருவன் திக்குப்பாலர்களுடனே சகவாசஞ் செய்கின்றான்; பெரியவர்களே! இவ்விருவரிற் சிறந்தவன் யாவன்? இவனை நீங்களுரைத்தால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

விதப்பு.

ஒருவனிடையர்களோடு சகவாசஞ் செய்பவனென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணங் கண்ணவதாரத்திற் செய்தமையால்.

ஒருவன் திக்குப்பாலர்களுடனே சகவாசஞ்செய்கின்றானென்றது-ஹரனை, அது அவ்வரன் ஈசான குபேராதிகளோடு சதா சகவாசஞ் செய்தலால்.

தாத்பரியம்.

ஹரி இடையர்களுடைய ஸஹவாசமுள்ளவன்; ஹரன் திக்குப்பாலகர்களின் ஸஹவாசமுள்ளவன் என்பதாம்.

தாரதம்மியம்.

திக்குப்பாலர்களுக்கு இடையர்கள் தாழ்ந்தவர்களாதலால், தாழ்ந்த சகவாசத்தையுடைய ஹரி உயர்ந்த சகவாசனன் ஹரனுக்குத் தாழ்ந்தவனுயினன்; ஆதலால் நாங்கள் இதுவிஷயத்திற் ருழ்ந்த ஹரியை அப்பிரதானமாக வொதுக்கி, உயர்ந்த ஹரனைச் சரணமாக அடைகின்றோம்.—எ-று. (அச)

[illegible]
[illegible]

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

𑌕𑍋 𑌵𑌾𑌽𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾
𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁 𑌤𑌮𑌿𑌮𑌂 𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃 ॥

ஏகோகளத்யநுதிநந்நவநீதமேவ மந்யோகளத்யதிபயங்கரகாளகூடம் | கோவாநயோரதிகஇத்யநுசிந்திய வ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம: ||

மொழிபெயர்ப்பு.

கிள்ளைமொழிகொளிடைமடவார் கிட்டிக்கடைந்த கிளர்வெண்ணெய்
தொள்ளை யுறுகா திடையணிந்த தோன்றி யசையத் தொட்டுண்ட
கள்ள னொருவன் மற்றொருவன் காளகூடங் கலந்துண்டான்
எள்ளி லிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
அநுதிநம்	பிரதிதினமும்
நவநீதம்	வெண்ணெயை
களதி	பக்ஷிக்கிறான்,
அந்ய:	இன்னொருவன்
அதிபயங்கரகாளகூடம்	மிகவும் பயங்கரமான காளகூடவிஷத்தை
களதி	பக்ஷிக்கிறான்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்தியா	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் கிளிமொழி மடவார் கிட்டிக்கடைந்த வளமுறுவெண்ணெயை வாரி யுண்கின்றான், மற்றொருவன் கொடிய காளகூடவிஷத்தை எடுத்தயின்றான்; பெரியவர்காள்! இன்ன விருவருட் சிறந்தவன் யாவன்? இவனை நீவீருண்மையாக வுரைத்தால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் வெண்ணெய் உண்பவனென்றது - ஹரியை, அது அவ்வரி கண்ணவதாரத்தி லவ்வண்ணம் வெண்ணெய் அயின்றமையால்.

ஒருவன் காளகூடவிஷ மயின்றானென்றது-ஹரனை, அது அவ்வரன்பாற் கடலிற்பிறந்த விடத்தை யுண்டமையால்.

தாத்பரியம்.

ஹரி வெண்ணெய் உண்போன்; ஹரன் காளகூட விஷம் உண்போன் என்பதாம்.

தாரதம்மியம்.

வெண்ணெய் உண்டு வாழ்பவனிலும் விடமுண்டு வாழ்பவன் சிறந்தவனாதலால், நாங்கள் சாமான்யமானவர்களாலும் உண்ணக்கூடிய வெண்ணெயையுண்ட திருமாலை யப்பிரதானமாக வகற்றிப் பிறரால் உண்ணமுடியாத காளகூட விஷமுண்ட ஹரனைச் சரணமாக அடைகின்றோம்.—எ-று. (௮௫)

𑌏𑌕𑌸𑍍𑌤𑍁 𑌶𑍈𑌲𑌨𑌿𑌚𑌯𑍈𑌰𑍍𑌜𑌲𑌧𑌿𑌂 𑌬𑌬𑌨𑍍𑌧
𑌤𑍍𑌵𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌮𑍇𑌵 𑌜𑌲𑌧𑌿𑌂 𑌶𑌰𑌧𑌿𑌂 𑌚𑌕𑌾𑌰 ।
𑌕𑍋 𑌵𑌾𑌽𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾
𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁 𑌤𑌮𑌿𑌮𑌂 𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃 ॥

ஏகஸ்துஶைலநிசயைர்ஜலதிம்பபந்தத்வந்யஸ்தமேவஜலதிம்ஶரதிஞ்சகார | கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம: ||

Center for Shaiva Studies, Pondicherry Collection

மொழிபெயர்ப்பு.

குன்றுங் கிரியு மரநிரையுங் கூட்டி யொருவன் குரைகடலி
லன்று சேது வென்றொன்றை யமைத்தா னம்ம வதுநிற்கத்
தன்றுங் கடலைத் தூணியெனச் சோராதொருவன் றெருகுத்திட்டான்
இன்றி னவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏகஸ்து	ஒருவனானல்
ஶைலநிசயை:	மலைகளினுடைய கூட்டங்களாலே
ஜலதிம்	கடலை
பபந்த	கட்டினான்,
அந்ய:து	மற்றொருவனானல்
தமேவஜலதிம்	அக்கடலையே
ஶரதிம்	அம்புக்கூடாக
சகார	செய்தான்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்தியா-	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் கடலில் மலைகளாலே அணைகட்டினான், மற்றொருவன் கடலை யம்புக்கூடாகக்கொண்டான்; இவ்விருவரில் எவன் சிறந்தவன்? நீங்களுண்மையாக வுரைத்தால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக வடைகின்றோம்.

விதப்பு.

கடலை மலைகளா லணைகட்டினவன் ஹரி, கடலை யம்புக்கூடாகக்கொண்டவன் ஹரன்.

தாத்பரியம்.

ஹரி கடலை மலைகளாற் கட்டினான்; ஹரன் கடலை அம்புக்கூடாகக்கொண்டோன் என்பதாம்.

தாரதம்மியம்.

கடலை யணையாகச்செய்வதிலும் கடலை யம்பறாத்தூணியாக்குதல் அரிய காரியம். ஆதாலால் இதுவிஷயத்திற் றாழ்வடைந்த ஹரியை நாங்க ளப்பிரதானமாக அகற்றி, உயர்ந்த ஹரனைச் சரணமாக அடைகின்றோம்.—எ-று. (அசு)

𑌏𑌕𑍋 𑌵𑌿𑌵𑍇𑌶 𑌸𑌰𑌯𑍂𑌸𑌲𑌿𑌲𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌳𑍇
𑌹𑍍𑌯𑌨𑍍𑌯𑍋 𑌦𑌧𑍌 𑌤𑍍𑌰𑌿𑌪𑌥𑌗𑌾𑌂 𑌕𑌟𑌵𑌜𑍍𑌜𑌟𑌾𑌯𑌾𑌮𑍍।
𑌕𑍋 𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌃
𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁 𑌤𑌮𑌿𑌮𑌂 𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகோவிவேஶஸரயூஸலிலாந்தராளேஹ்யந்யோததௌத்ரிபதகாம்கடவஜ்ஜடாயாம்। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாமஃ॥

மொழிபெயர்ப்பு.

வரையுங் கரியு மிழுத்தேகும் வலிய சரயு வரநதியிற்
புரையொன் றின்றி யேயொருவன் புகுந்தா னென்ப புகலொருவன்
குரைகொள்கங்கைதனைச்சடையிற்கொண்டானென்னக்குலமறைகள்
இரையு மிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
ஸரயூஸலிலாந்தராளே	சரயூநதியினுடைய நீரின் நடுவில்
விவேஶஹி	பிரவேசித்தானல்லவா,

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அந்ய:	இன்னொருவன்
ஜடாயாம்	ஜடையில்
த்ரிபதகாம்	கங்கையை
கடவத்	குடத்தைப்போல
தத்தௌ	தரித்திருக்கின்றான்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன் ?
இதி	இதனை
வ்ருத்தா:	பெரியவர்கள்
அநுசிந்தியா	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் சரயுநதியில் மூழ்கினான், மற்றொருவன் கங்கையைத் தலையில் வைத்தான்; இவர்களுட் சிறந்தவனை நீங்களுரைத்தால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் சரயுநதியில் மூழ்கினானென்றது – ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணம் மூழ்கினமையால். ஹரி இராமனாகவிருந்து வைகுந்தம் போகுநாளில், அயோத்தியி னருகிலுள்ள சரயுவின்முழுகி விண்ணுலகடைந்தான்: இதனை—

" தடமலிசரயுத்தண்டுறையிற்றாழ்புனல்
அடியுறச்செல்வுறச்செல்வுழியலரினான்முகன்
மிடன்மிகுகணக்கிலாவிம்பவூர்திக
ளுடனணிவானகத்துச்சிதோன்றினான் " என்றுவரும் இராமாயணத்தாலுணர்க.

ஒருவன் கங்கையைச் சடையில் அணிந்திருக்கின்றானென்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ணம் அணிந்திருத்தலால். இதனை—
" கங்கையைச் சடையில்வைத்தாய் " என்னுந் தமிழ்வேதத்தாலுணர்க.

தாத்பரியம்.

ஹரன் கங்காதரன்; ஹரி சரயுவின் மூழ்கினோன் என்பதாம்.

தாரதம்மியம்.

சரயுவினும் கங்கை சிறந்ததாதலால்,கங்காசம்பந்தமுள்ள ஹரன் சிறந்தவனும்,சரயுசம்பந்தியான ஹரி தாழ்ந்தவனுமாகின்றார்கள். இதனால் நாங்கள் சிறப்பிலா ஹரியை அப்பிரதானமாக அகற்றிச் சிறந்த ஹரனைச் சரணமாக அடைகின்றோம்.—எ-று. (௮௭)

𑌏𑌕𑌸𑍍𑌯 𑌰𑍂𑌪𑌮𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌤𑌾𑌮𑌸𑌤𑍍𑌵𑌂
𑌅𑌨𑍍𑌯𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌤𑍍𑌵𑌂।
𑌕𑍋𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌃
𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁 𑌤𑌮𑌿𑌮𑌂𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகஸ்யரூபமதிகச்சதிதாமஸத்வமந்யஸ்வரூபமதிகச்சதிஸாத்விகத்வம்। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

தங்கு மியலை மிகவுடைய தொன்மைத் தமசாந் தற்குணத்தைத்
தாங்கி யொருவன் விளங்கினான் தரணி தன்னிற் சத்துவத்தை
நீங்க லின்றி யேயொருவ னிசமா யடைந்து நிலவுற்றான்
ஈங்கின் னவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏகஸ்ய	ஒருவனுடைய
ரூபம்	ரூபமானது
தாமஸத்வம்	தாமஸத்தன்மையை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அதிகச்சதி	அடையும்,
அந்யஸ்ய	இன்னொருவனுடைய
ரூபம்	ரூபமானது
ஸாத்விகத்வம்	சாத்துவிகத்தன்மையை
அதிகச்சதி	அடைகின்றது;
அநயோ:	இவ்விருவரில்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஸ்ரயாம:	ஆஸ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் தாமசகுணத்தை யடைந்தவன், இன்னொருவன் சத்துவகுணத்தன்மையை யுடையவன்; இன்னவரிற் சிறந்தவன் யாவன்? பெரியவர்களே! நீங்களுண்மையாக வுரைத்தால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக அடைகிறோம்.

விதப்பு.

ஒருவன் தாமசத்தன்மையை யடைந்தவனென்றது - ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணந் தாமசகுணதிக்கமே யுடையவனாக விருத்தால். இதனை—

ஹரிக்கு நித்திரையிற் பிரியமிருத்தலாலும், கறுத்திருத்தலாலும், அரவிற் கிடத்தலாலும், தயிர்முதலிய தமோகுணவஸ்துக்களை விரும்புதலாலும் தாமசகுணனென்றுணர்க.

ஒருவன் சத்துவகுணனென்றது-ஹரனை, அது அவ்வர னவ்வண்ணஞ் சத்துவகுண மேலிட்டவனாகவிருத்தலால். இதனை—

வெண்ணிறம் படைத்திருத்தலாலும், ஞானசாரியனாக விருத்தலாலும், வெள்ளிய மலையிலிருத்தலாலும் சத்துவகுணதிக்யனென்றுணர்க.

தாத்பரியம்.

ஹரி தமோகுணதிக்கன்; ஹரன் சத்துவகுணதிக்கன் என்பதாம்.

தாரதம்மியம்.

தாமசகுணத்தை விரும்புவோனும், சத்துவகுணத்தை வெறுப்பவனும் சாமான்யனிலுமிரான். ஆதலால் நாங்கள் தாமசகுணனான ஹரியை யப்பிரதானமானவனாக வகற்றிச் சத்துவகுணனான ஹரனைச் சரணமாக அடைகின்றோம்.—எ-று. (அஅ)

𑌨𑍀𑌲𑍋𑌽𑌪𑌿 𑌨𑍀𑌲𑌯𑌮𑍁𑌨𑌾𑌜𑌲𑌮𑌙𑍍𑌗𑌕𑌾𑌨𑍍𑌤𑍍𑌰
𑌶𑍁𑌭𑍍𑌰𑍋𑌽𑌪𑌿 𑌶𑍁𑌭𑍍𑌰𑌤𑌰𑌦𑌿𑌵𑍍𑌯𑌧𑍁𑌨𑍀𑌧𑌰𑍋𑌽𑌨𑍍𑌯
𑌕𑍋 𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾
𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁 𑌤𑌮𑌿𑌮𑌂 𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

நீலோபிநீலயமுநாஜலமங்ககாந்த்ரஸ்ஸோப்ரோபிஸோப்ரதரதிவ்யதுநீதரோந்ய। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருதத்ராஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஸ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

கோலக் கரிய காசாவின் குலமா மலர்போ னிறத்தொருவன்
சாலக் களிந்தி நீரினிடைத் தாழ்ந்தா னொருவன் றனிவெண்மை
மேலுற் றுயர்ந்த கங்கைதனை மிளிரச் சடையி னுட்கொண்டான்
ஏல விவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
நீலோபி	நீலநிறமானவனாக விருந்தபோதிலும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நீலயமுநாஜலமக்நகாத்ர:	நீலநிறமான யமுனாஜலத்திலே முழுகின காத்திரத்தையுடையவன்,
அந்ய:	இன்னொருவன்
சுப்ரதரதவ்யதுநீதர:	வெண்மையுடையவனாக விருந்தபோதிலும் மிகவும் வெண்மையான தேவகங்கையாகிற சுமையையுடையவன்;
அநயோ:	இவ்விருவரில்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன் ?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் அழகிய காயாமலர்போன்ற கருநிறமுள்ளவனாகவிருந்தும் கரிய நிறமான யமுனையாற்றின் மூழ்கிக்கிடக்கின்றான், மற்றொருவன் வெண்ணிறமுடையவனாக விருந்தும் மிகவும் வெண்மையான தேவகங்கையைச் சுமந்துகொண்டிருக்கின்றான்; இவ்விருவருக்குள் பெரியவர்களே! சிறந்தவன் யாவன்? நீங்களுரைத்தால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக வடைகின்றோம்.

விதப்பு.

கறுப்பாகவும் வெளுப்பாகவும் இருக்கின்றார்கள் என்றும், யமுனையையும் கங்கையையும் உடையவர்களாக விருக்கின்றார்களென்றும் உரைத்தது-ஹரி ஹரர்களை, அதுஅவர்களவ்வண்ணமிருத்தலால்.

தாத்பர்யம்.

ஹரி கரியனும், யமுனாசம்பந்தமானவனும்; ஹரன் வெண்மையானவனும், கங்காசம்பந்தமானவனும் ஆக இருக்கின்றார்கள் என்பதாம்.

தாரதம்மியம்.

யமுனையினும் கங்கை சிறந்ததாகலானும், கறுப்பினும் வெளுப்புச் சிறந்ததாகலானும்; இதுவிஷயத்தில் ஹரனிலும் ஹரி தாழ்ந்தவனேயாம். நாங்கள் தாழ்ந்த ஹரியை அப்பிரதானமாக அகற்றி, உயர்ந்த ஹரனைச் சரணமாக வடைகின்றோம்.—எ-று. (௪௧)

𑌏𑌕𑍋 𑌵𑌰𑌾𑌹𑌤𑌨𑍁𑌮𑍇𑌤𑍍𑌯 𑌭𑍁𑌵𑌂 𑌵𑌿𑌲𑍇𑌖
𑌹𑍍𑌯𑌨𑍍𑌯𑍋 𑌭𑍁𑌵𑌂 𑌪𑍁𑌰𑌜𑌯𑌾𑌯 𑌰𑌥𑌞𑍍𑌚𑌕𑌾𑌰।
𑌕𑍋 𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾
𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁 𑌤𑌮𑌿𑌮𑌂 𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகோவராஹதநுமேத்யபுவம்விலேகஹ்யந்யோபுவம்புரஜாயாய ரதஞ்சகார। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

வன்றி யுருவந் தனையடைந்திவ் வையந் தன்னை முனமொருவன்
ஒன்றி யெழுதி யியல்புற்றா னொருவன் புரங்க ளொடுபொருங்கால்
வென்றி யுறுநல் விரதமென வியன்பார் கொண்டு விளங்கினான்
இன்றிவ் னவரிற் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
வராகதநும்	பன்றி உடலை
ஏத்ய	அடைந்து
புவம்	உலகத்தை
விலேகஹி	எழுதினானன்றோ,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அந்ய:	இன்னொருவன்
புரஜயாய	திரிபுரஜயத்தின்பொருட்டு
புவம்	பூமியை
ரதம்சகாரஹ	இரதமாகச்செய்தானல்லவா;
அநயோ:	இவ்விருவரில்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன் ?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஸ்ரயாம:	ஆஸ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் பன்றியுருவடைந்து பூமியை எழுதினான், மற்றொருவன் புரதகனகாலத்திற் பூமியை இரதமாகக்கொண்டான்; இவர்களுட் சிறந்தவனைப் பெரியவர்களே நீங்களுரைத்தால், நாங்களந்த மஹா புருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

விதப்பு.

பன்றியுடலெடுத்துப் பூமியை யெழுதினானென்றது-ஹரியை, புரசயத்தின்பொருட்டு பூமியை இரதமாகக்கொண்டானென்றது - ஹரனை, அது அவ்வர னவ்வண்ணம் செய்தலால்.

தாத்பரியம்.

ஹரி பூமியைப் பன்றியாகிக் கிளறினான் ; ஹரன் இரதமாகக் கொண்டான் என்பதாம்.

தாரதம்மியம்.

பூமியை இருவரும் உபயோகப்படுத்தினும் ஹரி பன்றியுருவடைந்து கொம்பாற் கிளறினான், ஹரன் இரதமாகக்கொண்டான்; இங்கு

இந்த விஷயத்தில் ஹரன் செய்கை உயர்ந்ததும், ஹரியின் செய்கை தாழ்ந்ததுமாக இருத்தலால்; நாங்கள் தாழ்ந்த ஹரியை அப்பிரதானமாக அகற்றி, உயர்ந்த ஹரனை அடைக்கலமாக அடைகின்றோம்.(௯0)

𑌏𑌕𑌶𑍍𑌚𑌲𑌾𑌂𑌨𑍍𑌨𑌿𑌜𑌵𑌧𑍂𑌂𑌨𑌶𑌶𑌾𑌕𑌰𑍋𑌦𑍍𑌧𑍁𑌮𑍍
𑌅𑌨𑍍𑌯𑌶𑍍𑌚𑌕𑌾𑌰𑌵𑌨𑌿𑌤𑌾𑌂𑌸𑍍𑌫𑍁𑌟𑌮𑌰𑍍𑌧𑌗𑌾𑌤𑍍𑌰𑍇 ।
𑌕𑍋𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌸𑍍
𑌸𑌤𑍍𑌯𑌂𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁𑌤𑌮𑌿𑌮𑌂𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃 ॥

ஏகஸ்சலாந்நிஜவதூநஶஶாகரோத்து மந்யஸ்சகாரவநிதாம்ஸ்புடமர்த்தகாத்ரே । கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம் ப்ருவந்துதமிமம்வயமாஸ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

அலையு மியல்பு கொண்டவளாய் யமர்ந்த மனைவி தனையொருவன்
நிலையின் னிறுத்த மியல்பின்றி நின்று னொருவன் நேரிழையை
நலதன் னுடலிற் பாதியதா நல்கி யமர்ந்தான் நானிலத்தில்
இலகின் னவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
சலாம்	சலிக்கிற
நிஜவதூம்	தன் மனைவியை
ரோத்தும்	தடுக்கிறதற்கு
நஶஶாக	சக்தியில்லாதவனானான்,
அந்ய:	இன்னொருவன்
அர்த்தகாத்ரே	பாதியுடம்பில்
வநிதாம்	பெண்ணை
ஸ்புடம்	நன்றாக
சகார	வைத்தான்;
அநயோ:	இவ்விருவருக்குள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் சஞ்சலமான மனைவியை ஒருவிடத்தில் நிறுத்துமாற்ற லற்றவனாக விருக்கின்றான், மற்றொருவன் தன் மனைவியை பாதியுடம்பாகக்கொண்டிருக்கின்றான்; இவ்விருவரிற் சிறந்தவனை பெரியவர்களே! நீங்களுரைத்தால், நாங்களந்த மஹா புருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

விதப்பு.

சஞ்சலமான மனைவியை யுடையவனென்றது-ஹரியை, மனைவியைப் பாதியுடலி லுடையவனென்றது - ஹரனை, ஹரியின் மனைவியான திருவொருவிடத்தி விராளென்பது பிரசித்தம்.

தாத்பரியம்.

ஹரி சலனமான மனைவியையுடையவன்; ஹரன் சலித்தலில்லாத மனைவியையுடையவன் என்பதாம்.

தாரதம்மியம்.

சலனமுள்ள மனைவியைச் சலிக்காதிருக்கச் செய்யாதவனிலும், சலனமற்ற மனைவியை ஒருபுறத்திலுடையவன் சிறந்தவனாதலால், நாங்கள் இதுவிஷயத்திற் றாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக அகற்றி, உயர்ந்த ஹரனைச் சரணமாக அடைகின்றோம்.—எ-று. (௧௧)

𑌏𑌕𑌂𑌵𑌦𑌨𑍍𑌤𑌿𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤𑌵𑌚𑌾𑌂𑌸𑍍𑌯𑌧𑍀𑌶𑌂
𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑌿𑌤𑌰𑌂𑌤𑍁𑌵𑌦𑌨𑍍𑌤𑌿𑌤𑌾𑌨𑌿।
𑌕𑍋𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌃
𑌸𑌤𑍍𑌯𑌂𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁𑌤𑌮𑌿𑌮𑌂𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகம்வதந்திநிகமாந்தவசாம்ஸ்யதீஶம் விஶ்வஸ்யவிஶ்வமிதரந்து வதந்திதாநி। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

அழியா நிகமாந் தத்துறுநல் லரிய மொழிக ளகிலத்திற்
கொழியா வீச ஞெருவ னுற்று னென்னு மொருவனையோ
மொழியா நிற்கும் விசுவனென முறையே முதன்மை யென்னுமதில்
இழியா விவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் [illegible] சுதுமே.

பதப்பொருள்.

ஏகம்:	ஒருத்தனை
நிகமாந்தவசாம்ஸி	வேதாந்த வாக்கியங்கள்
விஶ்வஸ்ய	உலகத்திற்கு
அதீஶம்	பிரபுவாக
வதந்தி	சொல்லுகிறதுகளோ,
இதரந்து	மற்றொருவனையாகும்
தாநி	அந்த வாக்கியங்களே
விஶ்வம்வதந்தி	விசுவம் என்று சொல்லுகின்றன;
அநயோ:	இவ்விருவரில்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்

DHARMAPURA ADHINAM LIBRARY. DHARMAPURAM. தருமபுர ஆதீனம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாமஃ	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

பெரியவர்களே! ஒருவனை வேதாந்தவாக்கியங்கள் உலகத்திற்குப் பிரபுவாகச் சொல்லுகிறதுகளோ, மற்றொருவனை அதேவேதாந்த வாக்கியங்கள் விசுவமென்றுரைக்கின்றன. இவர் இருவரிலெவர் சிறந்தவர்? நீங்களுரைத்தால், நாங்கள் அந்த மஹாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

விதப்பு.

உலகத்திற்கு பிரபு என்றது-ஹரனை, உலகமென்றது-ஹரியை.

தாத்பரியம்.

ஹரி உலகமாக இருப்பவன்; ஹரன் உலகாதிபனாக இருப்பவன்.

தாரதம்மியம்.

உலகமாயிருப்பவனிலும் உலகாதிபனாக இருப்பவன் சிறந்தவன் ஆதலால், நாங்கள் இதுவிஷயத்தில் தாழ்ந்த ஹரியை அப்பிரதானமாக அகற்றிச் சிறந்த ஹரனைச் சரணமாக அடைகின்றோம்.—எ-று.

𑌏𑌕𑌂𑌯𑌜𑍁𑌶𑍍𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌰𑌶𑍇𑌷𑌫𑌲𑌾𑌵𑌳𑍀𑌨𑌾
𑌨𑍍𑌦𑌾𑌤𑌾𑌰𑌮𑌾𑌹𑌫𑌲𑌕𑍋𑌟𑌿𑌨𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌮𑌨𑍍𑌯𑌂।
𑌕𑍋𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑍃𑌦𑍍𑌧𑌾
𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌂𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁𑌤𑌮𑌿𑌮𑌂𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகம்யஜுஶ்ஶ்ருதிரஶேஷபலாவளீநாந்தாதாரமாஹபலகோடிநிவிஷ்டமந்யம்। கோவாநயோரதிகஇத்யநுசிந்த்யவ்ருத்தாஸ்ஸத்யம் ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாமஃ॥

மொழிபெயர்ப்பு.

சீர்கொ ளிரண்டா மறையொருவன் செறிந்த சகல பலன்களையும்
பேர்கொள் கருணை யுடனல்கிப் பிறங்கு மெல்லும் பிறனொருவன்
நார்கொ ளன்பர்க் கநேகபல நல்கு மென்னு நானிலத்தி
லேர்கொ ளிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏகஃ	ஒருவனை
யஜுஶ்ஶ்ருதிஃ	எசுர்வேதம்
அஶேஷபலாவளீநாம்	சமஸ்தமான பலங்களுடைய சமுகங்களை
தாதாரம்	கொடுக்கிறவனாக
ஆஹ:	சொல்லுகிறது,
அந்யம்	இன்னொருவனை
பலகோடிநிவிஷ்டம்	பலங்களுடைய அநேகங்களிலே பிரவேசித்தவனாக
ஆஹ:	சொல்லுகிறது;
அநயோஃ	இவ்விருவருக்குள்
அதிகஃ	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
வ்ருத்தாஃ	பெரியவர்கள்
அநுசிந்தியா	ஆலோசித்து
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாமஃ	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவனை எசுர்வேதமானது சமஸ்தமான பலங்களுடைய சமூகங்களையுங் கொடுக்கிறவனாக உரைக்கின்றது, மற்றொருவனை அநேக

Center for Shaiva Studies, Pondicherry Collection

பலங்களிலே பிரவேசித்தவனாக உரைக்கின்றது; பெரியவர்களே! இவ்விருவரிற் சிறந்தவனை நீங்களுரைத்தால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

விதப்பு.

ஒருவனை எசுர்வேதமானது ஸமஸ்த பலன்களையு மளிப்பவனென்றுரைக்கின்றதென்றது - ஹரனை, அது அவ்வர னவ்வண்ண மளித்தலால்.

ஒருவன் பலங்களுடைய அநேகங்களிலே பிரவேசித்தவனாகவிருக்கின்றானென்றது-ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணம் பிரவேசித்தலால்.

தாத்பரியம்.

ஹரன் எல்லாப்பலன்களையும் அளிப்பவன், ஹரி அந்தப்பலன்களி லநேக கோடிகளை யடைந்தவன் என்பதாம்.

தாரதம்மியம்.

எல்லாப்பலன்களையு மளிப்பவனில் அநேக பலப்பிரவேசி தாழ்ந்தவனாதலால், நாங்கள் இந்தவிஷயத்திற் றாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக வகற்றிச் சிறந்த ஹரனைச் சரணமாக வடைகின்றோம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

க்ராஹாஸ்திதம்ஸிஸுமஜீவயதேகதாஸோகத்வாபரஃபுரவரம்ஸ்வயமந்தகஸ்ய| கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஸ்ரயாம:||

மொழிபெயர்ப்பு.

முன்ன மொருவ னெழிலன்பன் முதலை யுண்ட மகவீந்தான்
பின்னை யொருவ னந்தகனூர் பேணி யவனை வேண்டியே
துன்னு முதலை யுண்டசிசுத் துன்பை யொழித்தான் துகளில்லா
வின்னர் தம்மிற் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏகதாஸ:	ஒருவனுடைய தாசன்
க்ராஹாஸ்திதம்	முதலையினால் பக்ஷிக்கப்பட்ட
ஸிஸும்	சிசுவை
அஜீவயத்	பிழைப்பித்தான்,
பர:	இன்னொருவன்
ஸ்வயம்	தானே
அந்தகஸ்ய	எமனுடைய
புரவரம்	நகரசிரேஷ்டத்தை
கத்வா	அடைந்து.
க்ராஹாஸ்திதம்	முதலையினாற் பட்சிக்கப்பட்ட
ஸிஸும்	சிசுவை
அஜீவயத்	பிழைப்பித்தான்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோர்வா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஸ்ரயாம:	ஆஸ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவனுடைய தாசன் முதலையுண்ட பிள்ளையை எழுப்பிக்கொடுத்தான், மற்றொருவன் முதலையுண்டபிள்ளையை எழுப்பும்பொருட்டு எமலோகஞ்சென்று எமனைக்கேட்டு எழுப்புவித்தான். இவர்களிற் சிறந்தவன் யாவன்? பெரியவர்களே! நீங்கள் உண்மையாக வுரைத்தால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விதப்பு.

ஒருவனுடைய தாஸன் முதலையுண்டபிள்ளையை எழுப்பினனென்றது - ஹரனுக்குத் தாஸனான தம்பிரான்றோழனே.

நிலமகளுடைய முககமலம்போல பலவளங்களு நிரம்பியது
முடுநாடிய பொழில்புடைசூழ்ந்த நடுநாட்டிலுள்ளதுமான கோவிலின்
மிக்க நாவலூரினில் உடையவ னடிபணி சடையவனென்ன வுரைக்
கும் அந்தணற்குரிய மனைவியும், வசையறு ஞானிகள் திசையெணித்
தொழூஉம்,இசைஞானியென்னு மெழிலந்தணியும் செய்த அரும்பெ
ருந்தவத்தில் வரும்பொருளான நம்பியாரூர், மணப்பருவமடைந்து
கனிப்பருங்காதலிற் ருட்சியின்றி யானைமீதிவர்ந்து வானவர் பழிச்ச
நத்துரும் வயல்புடைசூழ்ந்த புத்தூருக்குட்சென்று சடங்கவியென்
னும் சைவவேதியனீன்ற மடம்படுமான்விழி மாதர்வல்லியைக் குடம்
படுகொங்கையக் கோலக்கருங்குழலைத் திருமணம்புரியுஞான்று தேவ
தேவன்ஆதிநாதன் சிதம்பரமதனிற் பதம்பெயர்த்தாடும் சிவபெருமான்
கானல்போல் நிறத்ததாய்க் காணுறுகேசமும், கோணன் முதுகும்,
குறைபெறுவாயும்,திரைபெறு முடலும் உடையராய்த் தளர்ந்த நடை
யுடன் எழுந்தருளி,நம்பி! நம்மடிமையான நீ இம்மாதரி மணஞ்செய்
தல் குணஞ்செய்தற்கேதுவன்றும். ஆதலால் நீ நந்தஞ் சொந்தமான
வேலைகளைச் செய்யுமாறு வுறுதியெனக் கழறிய விழிவறுமொழியைப்
பழியெனக்கருதி, அந்தணராவார் அடிமையாதல் குவலயவிருத்
தம் நினக்கென்ன பித்துளதோ! நீ யாவன்? என்றற்கு யானின்
குலதெய்வம், நின் தந்தைநாட்டொட்டுக் கொத்தடிமையராய் முறி
யெழுதி நெறியே யளித்திருக்கின்றனர். வேண்டுமாகில் காண்டி
ஆண்டவெழுதிய வோலையை ஈண்டன்றெடுத்துக்காட்டிய முறி
யைத் தடுத்துப் பிடுங்கி மறித்துக் கிழித்துப் பழித்தேசுதலும்,
நின்னை விடேனென் றன்னவன் உடனே பெண்ணை புடைசூழ்ந்த
வெண்ணெயம்பதியை நண்ணி மண்ணிலுற்ற மறையோரின் மிக்க
வெண்ணை யந்தணீர் இவனைப் பாருங்கள்! எமக்கிவனடிமை என்ற
லும், அவ்வூருறைமறையோர் பிறைமுடி யண்ணலென்றுணராது

மறைவலீ ரந்தணர் பிறர்க்கடிமையாதல் யாண்டுங் கேட்டிலேம், நீவி
ரென்ன புதுமை கூறுகின்றீர் என்றனர். என்றற்கு முறையின்றே
னும் நிறைவேறிய வனுபவத்துடன் நிற்பதனாலும், இன்றிவன் கிழி
த்த வோலை காட்டோலையாக்கொண்டமையாலும், மூலவோலை வே
றொன்றெம்மாட்டிருத்தலாலும், இவனெம தடிமையென்றலே சாலு
ம்; என்று மூலவோலைகாட்டி உடன்படுத்தி நாமிந் நெடிய மதில்சூழ்
வெண்ணெயிலுற்றேமென்று கூறி மறைந்ததைக் கண்ட மறையவர்க
ளும் நம்பி யாரூரரும் இன்றிங்குவந்து அடிமையோலை காட்டி நம்மை
யெல்லாம் மெய்ப்பித்துச்சென்ற மறைக்கிழவோன் 'குன்றவில்லி
யே' எனக்குறித்துக் கோவிலெய்தியவுடனே,கோடிகணநாதர் புடை
சூழ வாறணி சடைமுடியண்ணல் எறிவர்ந்தெய்தி நம்பியாரூரனைப் பா
ர்த்து நின்னை யாமடிமையாகக்கொண்டோம். இனி நீ யெமக்கே
தொண்டுபுரியக்கடவை என்றுரைத்து, நீ நம்மைப் பித்தனென்றமை
யால்,பித்தனென்று துவக்கி, நம்புகழ் பாடுவாயென்று உரைத்து, நம்
பியாரூரரைத் தம்மடிமையாக்கி, அவர் திருவாய்மலர்ந்தருளிய 'பித்
தா'வென்பது முதலிய பாமாலைகளைக் கோமான் ஏற்றுச்சென்ற
அன்றுமுதல் நம்பியாரூரர் பல சிவதலங்களிலுஞ்சென்று சிவபெரு
மானைத்துதித்துத் திருவடிதீக்ஷை முதலியனவும் பெற்று, தம்பிரான்
தோழராய், சுந்தரமூர்த்தியாய் இருந்தனரொன்று தெண்டிரையுவளும்
செழுங்கரையுடைய மண்டனில் வாழ்வோர் மாருதறிவர். இன்ன
பெருந்தகையார் முன்னொருகாலத்தில் படிபுகழடியவர் முடிமிசைக்
குவித்த கரங்களுடன் அருகிற்சூழ்ந்துவர, அவநாசியான அவிநாசி
யண்ணலை அடிபணிவான் சென்றனர்; செல்லும் வழியி லாங்கோர்
அகரத்தில் மேளமுழங்குதலையும், அழுகுரல் கேட்பதையும் அறிந்து
வியப்புற்று, இன்பமும் துன்பமுமான இருவகைய வேதுக்களைச் சு
ட்டி இங்குண்டாயிருக்கும் தொனிகளின் வரலாறென்னை என்றனர்.
என்றற்கு, அங்குற்றோர் பெருமானே! சுமங்கலத்தொனியானது
உபநயனத்தைச்சுட்டியது. மற்றொன்று சின்னாட்குமுன் இறந்த மக
னைச் சுட்டியது என்றனர். இதற்குள் நம்பியாரூரரது நல்வருகையை
யுணர்ந்த இறந்த மகன் தந்தையும், தாயுமான பார்ப்பானும் பார்ப்ப

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

னியும் நம்பியாரூரர் முன்னெய்தி, அவர் சரணகமலங்களில் விழுந்து வணங்கியெழுந்து, கண்ணீருடனும் விம்முதலுடனும் கருணாகரரே உபநயனஞ் செய்துக்கொள்ளுஞ் சிறுவனும், எங்கள் மைந்தனும் ஏரியில் நீராடச்சென்றார்கள். சென்றவர்களில் எங்கள் மகனை ஏரியிலுள்ள முதலை விழுங்கியது. விழுங்கியும் சில காலங்களாயின; உபநயனம் நடக்கும் வீட்டில் உண்டான மங்கலத்தொனியினால் இறந்த மகன் மீது எண்ணமுண்டானவர்களாய் எஞ்சிறுவனு மிருப்பனேல், இன்றுபநயனஞ் செய்துவைக்கலாமே என்று துன்புற்ற யாங்கள் செய்த நற்றவவிசேடத்தால் பெற்றமிவர்ந்த கற்றையஞ்சடையண்ணற்குற்ற தோழரான தேவரீர் ஈண்டெழுந்தருளினீர்; இனி மாண்ட மகனை மீண்டும் பெற்றவர்களாயினேம் என்று கூறிக் கலுழ்ந்த மறைமுழுதுணர்ந்த முதுபெரும் பார்ப்பான்பொருட்டுத் தம்மனமிரங்கிய செம்மலான தம்பிரான்றோழர் இறந்த மகனை யெழுப்புவான் கருதி நீங்களஞ்சாதேயுங்கள், நும்மகனை அழைத்துத் தருகின்றோம் என்றுரைத்து, உடன்வந்தாருடன் ஏரியின் கரையையடைந்து அவ்வேரியில் அப்பொழுது நீரின்மையும் முதலையின்மையும் கண்டு அங்கு நின்றவண்ணமே 'பிள்ளைதரச்சொல்லு காலனையே' என்னும் மகுடமுள்ள பதிகமொன்று பாடுதலும், நீரற்ற ஏரியில் நீர்நிறைந்து முன்னிலா முதலையும் பின்னர்த்தோன்றி கரையையடைந்து, பன்னாண் முன்னர் கொன்று தின்ற சிறுவனையும் உயிருடன் கக்கிச்சென்றது; பின்னர் நம்பியாரூரர் அச்சிறுவனை அவன் தந்தைதாயர்களுடன்சேர்த்து இல்லம் புகுத்தி அந்நல்லவோரையிலேயே உபநயனமுஞ் செய்துவைத்தனர். இதனை—

" உரைப்பாருரையுகந்துள்கவல்லார்தங்களுச்சியா
யரைக்காடரவாவாதியுமந்தமுமாயினாய்
புரைக்காடுசோலைப்புக்கொளியூரவிநாசியே
கரைக்கான்முதலையைப்பிள்ளைதரச்சொல்லுகாலனையே" என்

னும் திரவிடசுருக்கத்தாலும்,

" பெருவாய்முதலைகரையின்கண் கொடுவந்துமிழ்ந்தபிள்ளைதனை"
என்னும் பெரியபுராணத்தாலும் உணர்க. எஞ்சிய விச்சரிதத்தை திருத்தொண்டர் புராணத்தாலுணர்க..

ஒருவன் இறந்த மகனை எமபுரஞ்சென்று எமனைக்கண்டு கேட்டு வாங்கிக்கொடுத்தானென்று கூறியது-ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணம் செய்தமையால்.

ஹரி கண்ணனாகப்பிறந்து இடையர் வீட்டில் வளர்ந்து சின்னாட்கழித்து மன்னவர்குலத்தை யடைந்து, சாந்தீபனென்னும் மறையவனை வித்யாகுருவாகக்கொண்டு வேதமாதி கலைகளையெல்லாம் பயின்றனன். பயின்று தங்குருவை வணங்கி தக்கணையென்னை என்றனன். என்றாற்கு அம்மாதவன் இம்மாதவனைநோக்கி, மாலே! என் சிறுவர்களைக் கடலாடுங்காலை வன்மீன் மிழுங்கியது; அவ்விறந்த மக்களை எழுப்பித்தருதலே எமக்கு நீ யளிக்கும் குருதக்கணை என்றனன். உடனே மால் கருடத்தேறி எமபுரமடைந்து எமனைக்கண்டு எங்குருமக்களை யளித்தி என்றான். என்றாற்கு எமன் அளிக்கின்றேனென்று தம் ஆளுகைக்குள்ளிருந்த மைந்தரை அழைத்தளித்தான். எமனா லளிக்கப்பெற்ற மைந்தரை ஹரி குருவுக்குத் தக்கணையாக அளித்தனன். இதனை—

" வருணன்றெருமந்தெதிர்வந்தெவன்வந்ததென்னாப்
பரவும்பொழுதைப்படர்வெண்டிரைப்பட்டுமாய்ந்த
குரவன்புதல்வன்றனைவல்லைகொடுத்தியென்றான்
அரவஞ்சுமந்தவகன்கோலமளந்தவண்ணல்" என்றும்,

" தெரிவுற்றதாக்கிச் சிறுவற்றரவொல்லைமீளா" என்றும் வரும் பாகவதத்தாலுணர்க.

தாத்பரியம்.

ஹரனுக்குத் தாஸனாகவுள்ளவன் முதலையுண்ட மைந்தனை எழுப்பினான்; ஹரி தானே முதலையுண்ட பிள்ளையை எமபுரஞ்சென்று எமனை வேண்டி எழுப்பினான் என்பதாம்.

தாரதம்மியம்.

ஒருவனுடைய தாஸன் செய்த காரியத்தை வெகு கஷ்டத்துடன் செய்த மற்றொருவன் தாழ்ந்தவனன்றி உயர்ந்தவனாகான்; ஆதலா லிதுவிஷயத்திற் றாழ்ந்த ஹரியை அப்பிரதானமாக அகற்றி, உயர்ந்த ஹரனை நாங்கள் ஆஶ்ரயிக்கின்றோம்.—எ-று. (௯௪)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

𑌏𑌕𑌸𑍍𑌤𑍁 𑌕𑍇𑌶𑌵 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑌸𑍍𑌤𑍁 𑌲𑍋𑌕𑍇
𑌨𑍍𑌯𑍋 𑌵𑍍𑌯𑍋𑌮𑌕𑍇𑌶 𑌇𑌤𑌿 𑌯𑌾𑌤𑌿 𑌜𑌗𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂।
𑌕𑍋 𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌃
𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁 𑌤𑌮𑌿𑌮𑌂 𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகஸ்துகேஶவஇதிப்ரதிதஸ்துலோகே ந்யோவ்யோமகேஶஇதி யாதிஜகத்ப்ரஸித்திம் । கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸ த்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

கேடி லொருவன் பெயரதனைக் கிளப்பர் கேச வனென்று
நாடி லொருவன் றனையென்றும் நல்ல வியோம கேசனெனத்
தேடி மறைக ளுரைசெய்யுந் திறத்த னென்பர் செழுமறையோ
ரீடி லிவருட் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏகஸ்து	ஒருவன்
லோகே	உலகத்தில்
கேஶவஇதிப்ரஸித்தி:	கேசவனென்று ப்ரஸித்தனானவன்,
அந்ய:	இன்னொருவன்
வ்யோமகேஶஇதி	வ்யோமகேசனென்று
யாதி	(ப்ரஸித்தி) அடைகிறான்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் உலகத்தில் கேசவனென்று பிரசித்தமானவன், மற்றொருவன் வியோமகேசனென்று பிரசித்தியானவன்; பெரியவர்களே! இவ்விருவருக்குட் சிறந்தவன் யாவன்? நீங்களுரைத்தால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

விசேஷம்.

ஒருவன் கேசவனென்று பிரசித்தமானவனென்றது - ஹரியை, கேசவன்-கேசமுள்ளவன். அல்லது கேசியென்பவனைக் கொன்றவன்.

ஒருவனை வ்யோமகேசனென்றது - ஹரனை, அது அவ்வரன் வ்யோமகேசனாக விருத்தலால். வ்யோமகேசன்-வியோமமாகிய கேசத்தினையுடையவன். வியோமம்-ஆகாசம்.

தாத்பரியம்.

ஹரி கேசவன்; ஹரன் வ்யோமகேசன் என்பதாம்.

தாரதம்மியம்.

கேசவன் என்னுஞ் சத்தத்திற்கும், வியோமகேசனென்னும் சத்தத்திற்குமுள்ள ஏற்றத்தாழ்வுகளை ஆயுங்கால், வெறுங்கேசனை விட வியோமகேசன் சிறந்தவன் ஆதலால், நாங்களிந்த விஷயத்திற் றாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக அகற்றிச் சிறந்த ஹரனைச் சரணமாக அடைகின்றோம். (௧௫).

𑌏𑌕𑍋 𑌬𑌭𑍂𑌵 𑌰𑌥𑌿𑌕𑌸𑍍𑌤𑌿𑌸𑍃𑌣𑌾𑌂 𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌂
𑌸𑌂𑌹𑌾𑌰𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌪𑌰𑌃 𑌪𑍃𑌤𑌨𑌾𑌙𑍍𑌗𑌮𑌾𑌸𑍀𑌤𑍍।
𑌕𑍋 𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌃
𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁 𑌤𑌮𑌿𑌮𑌂 𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகோபபூவரதிகஸ்திஸ்ருணாம்புராணாம்ஸம்ஹாரகர்மணிபர:ப்ருதநாங்கமாஸீத் । கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம் ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம: ॥

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மொழிபெயர்ப்பு.

இந்த வுலக விரதனு விருந்தா னொருவ னிசைையொருவ
னந்த விர்த னங்கமா யமைந்தா னொருவ னகிலத்திற்
சந்த வியலிற் குறையாத தனிமா மறைக ணனிகூறு
மிந்த விவரிற் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
திஸ்ருணும்	முன்னே
புராணும்	பட்டணங்களுக்கு
ஸம்ஹார்கர்மணி	ஸம்ஹாரகர்மத்தில்
ரதிக:	ரதிகனுக
பபூவ:	ஆனுன்,
பர:	மற்றொருவன்
ப்ருதநாங்கம்	ஸேநாங்கம்
ஆஸீத்	ஆனுன்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்.
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் புரதகநகாலத்தில் ரதிகனுக இருந்தான், மற்றொருவன் ஸேநாங்கமாக இருந்தான்; பெரியவர்களே! இவ்விருவரிற் சிறந்தவனை நீங்களுரைத்தால், நாங்கள் அந்த மஹாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

விசேஷம்.

ஒருவன் புரஸம்ஹாரகர்மத்தில் ரதிகனுகவிருந்தானென்றது - ஹரனை, ஸேநாங்கமாக இருந்தானென்றது-ஹரியை, இது இவர்க ளிவ்வண்ண மிருந்தமையால்.

தாத்பரியம்.

ஹரன் இரதிகன்; ஹரி ஸேநாங்கன் என்பதாம்.

தாரதம்மியம்.

ஸேநாங்கமானவனைக்காட்டிலும் இரதிகன் சிறந்தவனுதலால், நாங்கள் இந்தவிஷயத்திற் றாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக வகற்றி,உயர்ந்த ஹரனைச் சரணமாக அடைகின்றோம்.—எ-று.(கசு)

𑌏𑌕𑌸𑍍𑌤𑍁 𑌕𑍈𑌟𑌭𑌵𑌧𑍇 𑌨𑌿𑌪𑍁𑌣𑍋 𑌬𑌭𑍂𑌵
𑌹𑍍𑌯𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑍁 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌹𑌨𑌨𑍇 𑌨𑌿𑌪𑍁𑌣𑍋 𑌬𑌭𑍂𑌵।
𑌕𑍋 𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌃
𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁 𑌤𑌮𑌿𑌮𑌂 𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகஸ்துகைடபவதேநிபுணோபபூவ ஹ்யந்யஸ்தும்ருத்யுஹநநேநிபுணோபபூவ|கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம:||

மொழிபெயர்ப்பு.

இருளு மூலக மதிற்றோன்றி யிடரோ புரிந்த கைடபனை
வெருள வதைக்கு நிபுணனென விளங்கு மொருவன் வேறொருவன்
கரள மனைய மிருத்துவுயிர் கழற்று நிபுணன் காசினியி
லிருளி லிவரிற் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
கைடபவதே	கைடபவதத்தில்
நிபுண	சாமர்த்தியமுள்ளவனுக

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பபூவ:ஹி	ஆனனல்லவா,
அந்யஸ்து	இன்னொருவனால்
ம்ருத்யுஹனநே	மிர்த்யுவைக்கொல்வதில்
நிபுண	நிபுணனாக
பபூவ	ஆனான்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோர்வா	யாவன் ?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் கைடபவதத்தில் நிபுணன், இன்னொருவன் மிர்த்தியுவதத்தில் நிபுணன்; பெரியவர்காள்! இவரிற் சிறந்தவனை யுரைத்தால், நாங்கள் அந்த மஹாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

விதப்பு.

ஒருத்தன் கைடபவதத்திற் சிறந்தவனென்றது - ஹரியை, அது அவ்வரி அவ்வண்ணங் கைடபவதஞ் செய்தமையால், தன்னிடம் பிறந்த கைடபவனை ஹரிதானே கொன்றானென்பது இதிகாசம்.

ஒருவன் மிர்த்யுவதத்தில் நிபுணனென்றது-ஹரனை, அது அவ்வரன் அவ்வண்ணஞ் செய்தமையால்.

தாத்பரியம்.

ஹரி கைடபவத நிபுணன்; ஹரன் மிர்த்யுவத நிபுணன் என்பதாம்.

தாரதம்மியம்.

ஸாமான்யனான கைடபனை வதைத்த ஹரியினும், கொடுமையினைப்புரியும் மிர்த்துவைக்கொன்றவன் சிறந்தவனாதலால், நாங்கள் இவ்விஷயத்திற் றாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக அகற்றி, உயர்ந்த ஹரனைச் சரணமாக அடைகின்றோம்.—எ-று. (௧௭)

𑌏𑌕𑌸𑍍𑌤𑍁 𑌦𑍀𑌨𑌗𑌜𑌰𑌕𑍍𑌷𑌣𑌦𑌤𑍍𑌤𑌬𑍁𑌦𑍍𑌧𑌿
𑌰𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑍁 𑌮𑌤𑍍𑌤𑌗𑌜𑌶𑌿𑌕𑍍𑌷𑌣𑌦𑌤𑍍𑌤𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃।
𑌕𑍋𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾
𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁 𑌤𑌮𑌿𑌮𑌂𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகஸ்துதீநகஜரக்ஷணதத்தபுத்தி ரங்யஸ்துமத்தகஜஶிக்ஷணதத்தபுத்தி। கோவாநயோரதிகஇத்யநுசிந்தியவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்து தமிமம்வயமாஶ்ரயாம:॥

மொழிபெயர்ப்பு.

ஆவ வென்ன வழுதிளைத்த வந்த வழுவை தனையொருவன்
காவல் புரிந்து நனிகாத்தான் கரையு மொருவன் காசினியில்
மாவல் வழுவை தன்செருக்கை மாற்றி நின்றான் மற்றிவருள்
ஏவர் சிறந்தோ ரவர்தம்மை யிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏகஸ்து	ஒருவனானல்
தீநகஜரக்ஷணதத்தபுத்தி	இளைத்த யானையை ரக்ஷிக்கிறதின்பொருட்டுக் கொடுத்த புத்தியையுடையவன்
அந்ய:து	இன்னொருவன்
மத்தகஜஶிக்ஷணதத்தபுத்தி	மதித்த யானையை சிக்ஷிக்கிறதில் வைக்கப்பட்ட புத்தியையுடையவன் ;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன் ?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து

வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாமஃ	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் இளைத்த யானையை ரக்ஷித்தான், மற்றொருவன் மதித்த யானையைச் சிக்ஷித்தான் ; இவ்விருவரி லெவன் சிறந்தவன்? பெரியவர்களே ! நீங்களுண்மையாக வுரைத்தால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் இளைத்த யானையை ரக்ஷித்தானென்றது-ஹரியை, மற்றொருவன் மதித்த யானையைச் சிக்ஷித்தானென்றது - தாருகாவனத்து முனிவர் அநுப்பிய மந்திரயானையின் கொடுமையை அடக்கிய ஹரனை.

தாத்பரியம்.

ஹரி இளைத்த யானையைக் காத்தவன் ; ஹரன் மதித்த யானையைச் சிக்ஷித்தவன் என்பதாம்.

தாரதம்மியம்.

இளைத்த யானையைக் காப்பதிலும் மதித்த யானையைச் சிட்சித்தலரிய காரியமாதலால், நாங்கள் இந்த விஷயத்திற் றாழ்வடைந்த ஹரியை அப்பிரதானமாக அகற்றி, உயர்ந்த ஹரனைச் சரணமாக அடைகின்றோம்.—எ-று. (௧௮)

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌮𑌾𑌪 𑌨𑌿𑌜𑌨𑌾𑌭𑌿𑌜 𑌸𑍂𑌨𑍁𑌮𑍇𑌕𑍋𑌽𑌨𑍍𑌯𑍋
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨𑌖𑌮𑍁𑌖𑍇𑌨 𑌶𑌿𑌰𑌶𑍍𑌚𑌕𑌰𑍍𑌤।
𑌕𑍋 𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌃
𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁 𑌤𑌮𑌿𑌮𑌂 𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ப்ரஹ்மாணமாபநிஜநாபிஜஸூநுமேகோந்யோ ப்ரஹ்மணோநகமுகேநஶிரஶ்சகர்த்த। கோவாநயோரதிகஇத்யநுசிந்த்யவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாமஃ ॥

மொழிபெயர்ப்பு.

நந்திற் சிறந்த வெள்ளொளிசேர் நாபிக் கமல நன்மகனாய்
அந்தப் பிரமன் றனையொருவ னடைந்தா னொருவ னவன்றலையைக்
கந்தக் கமல கரோருகத்தாற் களைந்தா னிந்தக் காசினியி -
லிந்தத் தகவிற் சிறந்தவன்யா ரிசைச்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
ப்ரஹ்மாணம்	பிரம்மாவை
நிஜ	தன்னுடைய
நாபிஜ	நாபியிலுண்டான
ஸூநும்	பிள்ளையாக
அவாப	அடைந்தான்,
அந்ய:	இன்னொருவன்
ப்ரஹ்மணோ	பிரமாவினுடைய
ஶிர:	தலையை
நகமுகேந	நகநுனியினால்
சகர்த்தா	சேதித்தான்;
அநயோ:	இவ்விருவருக்குள்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வய்ம்	நாங்கள்
ஆஶ்ரயாமஃ	ஆஶ்ரயிக்கின்றோம்.

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பொழிப்பு.

ஒருவன் பிரமனை உந்திக்கமலத்தில் மைந்தனாக வடைந்தான், மற்றொருவன் அந்தப் பிரமனுடைய தலையை நகத்தினாற் கிள்ளினான்; இவ்விருவரிற் சிறந்தவனைப் பெரியவர்கள் உரைத்தால், நாங்களந்த மஹாபுருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

விதப்பு.

ஒருவன் பிரமனை யுந்தித்தாமரையில் மைந்தனாக அடைந்தானென்றது - ஹரியை, ஒருவன் பிரமன் றலையை நகத்திற் கிள்ளினானென்றது-ஹரனை.

தாத்பரியம்.

ஹரி பிரமனைப் பெற்றான்; ஹரன் ஹரி மைந்தனான பிரமன் றலையை நகத்தாற் சேதித்தான் என்பதாம்.

தாரதம்மியம்.

உந்தித்தாமரையிற் பிரமனை மைந்தனாகப் பெறுவதிலும் நகத்தாலப்பிரமன் றலையைக் கிள்ளி யெறித லரியகாரியமானதால், நாங்கள் இந்தவிஷயத்திற் றாழ்ந்த ஹரியை அப்பிரதானமாக வகற்றி, உயர்ந்த ஹரனைச் சரணமாக அடைகின்றோம்.—எ-று. (௧௧)

𑌏𑌕𑌸𑍍𑌸𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑍁𑌦𑌹𑌰𑌨𑍍𑌨𑌿𑌜𑌮𑌕𑍍𑌷𑌿𑌪𑍁𑌷𑍍𑌪𑌮𑍍
𑌅𑌨𑍍𑌯𑍋𑌽𑌮𑍍𑌬𑍁𑌜𑌂 𑌨𑌯𑌨𑌮𑌸𑍍𑌯𑌦𑌦𑍌𑌸𑌚𑌕𑍍𑌰𑌮𑍍।
𑌕𑍋𑌵𑌾𑌨𑌯𑍋𑌰𑌧𑌿𑌕𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑍃𑌦𑍍𑌧𑌾
𑌸𑌸𑍍𑌤𑍍𑌯𑌂𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑍁𑌤𑌮𑌿𑌮𑌂𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃॥

ஏகஸ்ஸபக்த்யுதஹரந்நிஜமக்ஷிபுஷ்ப மந்யோ:ம்புஜந்நயநமஸ்யத தௌஸசக்ரம் । கோவாநயோரதிகஇத்யநுசிந்த்யவ்ருத்தாஸ்ஸத்யம்ப்ருவந்துதமிமம்வயமாஶ்ரயாம: ॥

மொழிபெயர்ப்பு.

மன்னு மொருவன் கமலமென மருவும் நயன மலரினாற்
றன்னுமொருவன்றான் மலரைத்தொழுதானொருவன்றலங்கலர்போன்
மன்னு விழியு மாழிப்பேர் மருவு படையு மவற்கீந்தா
னென்னு மிவரிற் சிறந்தவன்யா ரிசைத்தாற் பெரியீ ரிறைஞ்சுதுமே.

பதப்பொருள்.

ஏக:	ஒருவன்
ஸ்பக்தி	பக்திபூர்வமாக
நிஜம்	தன்னதான
அக்ஷிபுஷ்பம்	கண்மலரை :
உதஹரத்	கொடுத்தான்,
அந்ய:	இன்னொருவன்
ஸசக்ரம்	சக்கரத்தையும் அதனுடன்
அம்புஜ:	தாமரைமலர்போன்ற
நயநம்	கண்ணையும்
அஸ்ய	இவனுக்கு
ததௌ	கொடுத்தான்;
அநயோ:	இவ்விருவரில்
அதிக:	சிறந்தவன்
கோவா	யாவன்?
இதி	இதனை
அநுசிந்தியா	ஆலோசித்து
வ்ருத்தா:	பெரியவர்கள்
ஸத்யம்	உண்மையை
ப்ருவந்து	சொல்லலாம்.
தமிமம்	அந்த இவனை
வயம்	நாங்கள்
ஆஶ்ரயாம:	ஆஶ்ரயிக்கின்றோம்.

பொழிப்பு.

ஒருவன் கண்மலரினா லருச்சித்தான், மற்றொருவ னவ்வருச்சகனுக்குச் சக்கரமும் பதுமாக்கமு மளித்தான்; இவ்விருவரிற் சிறந்தவனைப் பெரியவர்களுரைத்தால், நாங்களந்த மஹா புருஷனைச் சரணமாக அடைகின்றோம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விதப்பு.

ஒருவன் கண்மலரா லருச்சித்தானென்றது - ஹரியை, ஒருவன் அவற்காழியு மடூர்விழியு மீந்தானென்றது - ஹரனை, இது ஹரி கண் மலராரருச்சித்தமையாலும், ஹரன் ஹரிக்கு மலரனையகண்ணும் யாண்புடைய வாழியு மளித்தமையாலும் உரைக்கப்பட்டது.

தாத்பரியம்.

ஹரி கண்மலரா லருச்சித்தான், ஹரன் மலர்க்கண்ணும் ஆழியும் ஹரிக்களித்தான் என்பதாம்.

தாரதம்மியம்.

கண்மலரா லருச்சித்தவனில் அருச்சித்தவனுக்கு வரமளித்தவன் சிறந்தவனாதலால், நாங்களிந்தவிஷயத்திற் றாழ்ந்த ஹரியை அப்பிரதானமாகஅகற்றி, உயர்ந்த ஹரனைச் சரணமாக அடைகின்றோம். (௧00)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

எல்லாந் தன்னை யல்லாம லிலங்க நிற்குமெழி லிறையை
எல்லாந் தன்னை யல்லாம லில்லா தாகு மெம்பரனை
எல்லாந் தன்னை யல்லாம லிலங்கா வேழை பங்கனை
யல்லா தெனது சிந்தைபுகுந் தறியா திந்த வகிலத்தே.

வேண்பா.

முன்னோர் மொழிந்த முதுநூற் பொருளதனை
என்னு லியன்றவள வேயுரைத்தே - னென்னுயா
னென்றுமுரை யேன்கண்டீ ரொல்லா மிறையியற்றே
அன்றியிலை யென்னுமத னால்.

ஹரிஹரதாரதம்மியம்

சம்பூரணம்.

சுபமஸ்து.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection